Koviloor Digital Library

# இந்தியச் சிற்பங்கள்

ஸுபா



5704
ND

Koviloor Digital Library

Koviloor Digital Library

6-5

# இந்தியச் சிற்பங்கள்

தொகுத்து எழுதியவர்

ஸுபா

கோவிலூர் மடாலய...
கோவிலூர் - 630
சிவகங்கை மாவட்...

பண்மொழி பதிப்பகம்

அடுக்கக எண். 2, பெத்தலா ஹவுசிங்
12/59 வைத்தியர் அண்ணாமலை தெரு,
மயிலாப்பூர், சென்னை – 600 004.
தொலைபேசி – 044 – 24959778
e-mail: pannmozhi@hotmail.com

Koviloor Digital Library


## Bibliographical Data

| | | |
|---|---|---|
| Title | : | INDIYA CHIRPPANGAL |
| Author | : | 'SUBA' |
| Language | : | Tamil |
| Edition | : | First. Dec' 2004 |
| Paper | : | White Printing 11.6 Kg. |
| Size | : | Crown 18.5 X 12.5 CMs |
| Type | : | 12 Point |
| Pages | : | 224 |
| Copies | : | 1000 |
| Printed at | : | Zion Printers<br>Chennai - 28. |
| Binding | : | Section Stitching |
| Price | : | **Rs. 75.00** |
| Subject | : | **Tamil articles on Indian Sculptures** |
| Publisher | : | PANNMOZHI PATHIPPAGAM<br>Flat No.2, Betala Housing,<br>12/59 Vaithiar Annamalai St,<br>Mylapore, Chennai - 600 004<br>Phone: 044 - 24959778<br>e-mail : pannmozhi@hotmail.com |

Koviloor Digital Library

6-5

## அணிந்துரை

*"ஆடுதல், பாடுதல், சித்திரம் – இவை*
*ஆதி இனைய கலைகளில்"...*

என்றும் ஈடுபட்டுள்ளம் களிப்பவர், பண்பாட்டு வளர்ச்சிக்குப் பாதை அமைப்பவர்கள், சித்திரக்கலை ஒரு அருங்கலை. சித்திரத்தின் முப்பரிமாண வடிவம் சிற்பக்கலை எனலாம்.

பாரத நாட்டின் சிற்பக்கலையின் படிப்படியான வளர்ச்சியை விவரிக்கும் நூலான 'இந்தியச் சிற்பங்கள்' என்ற நூலை எழுதும் அவாவை நண்பர் 'ஸூபா' வெளியிட்டார். ஆங்கிலத்தில் கலைகளை விவரிக்கும் நூல்கள் பல இருந்த போதிலும், தமிழ் மொழியில் அத்தகைய நூல்கள் வரவேற்கப் படவேண்டியவை என்பதால் இந்த நூலை எழுதி முடிக்க நானும் ஒரு தூண்டுகோலாக இருந்தேன்.

கூடிய வரை வரலாற்றுக் கால வரிசையைப் பின்பற்றியும், பாரதநாட்டின் பல்வேறு பகுதிகளில் சிற்பக்கலையின் வளர்ச்சி பற்றியும், இந்த நூல் விவரிக்கிறது. நண்பர் 'ஸூபா' நல்ல ஓவியர் என்பதுடன், ஓவியம், சிற்பம் பற்றி தமிழ் மக்களுடன் தமது கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளும் ஆர்வமும் கொண்டவர் நமது நாட்டுக் கலைச் செல்வங்களைப் பற்றி பல அரிய செய்திகளையும் நூல்களையும், ஓவியங்களையும் திரட்டி வைத்துள்ளார். இந்தியச் சிற்பங்களைப் பற்றி எழுதும் தகுதிபடைத்தவர்.

Koviloor Digital Library



பாரத நாடு ஆசியக் கண்டத்தின் ஒரு பகுதியாக இருந்தாலும், தனித்து நிற்பது. மூன்று திசைகளில் கடல் சூழ்ந்தும், வடதிசையில் இமயமலை என்ற வானளவிய பனிமலைச் சிகரங்கள் சூழ்ந்த தாகவும் தனித்த வடிவம் கொண்ட நிலப்பரப்பு. சிந்து கங்கை, நர்மதை, கோதாவரி, காவிரி போன்ற பல்வேறு நதிகள் பாயும் மிதமான தட்ப வெப்பம் கொண்ட பூமி. வட மேற்கே இமயத் தொடர்களிலே அமைந்த கணவாய்களின் வழியே, மத்திய ஆசியாவிலிருந்தும் மேற்கு ஆசியாவிலிருந்தும், பல்லாயிரம் ஆண்டுகளாகப் பல்வேறு இனமக்கள் இந்த நாட்டில் வந்து குடியேறியுள்ளனர். இந்த நாட்டில் வாழ்ந்த மக்களின் பண்பாட்டுடன் பல்வேறு இனமக்களின் பண்பாடுகள் சங்க மித்து பாரதப் பண்பாடாக உருவாகி இருக்கிறது.

கலைகளும் இலக்கியமும் ஒரு சமுதாய வளர்ச்சியின் வெளிப்பாடுகள். சமுதாயத்தின் பரிணாம வளர்ச்சியை அவைகள் மூலம் கண்டு கொள்ள முடியும். பாரத சமுதாயத்தின் பண்பாட்டு வளர்ச்சிகளை பாரதத்தின் சிற்பக்கலை வளர்ச்சிகளினும் காண முடியும்.

கலைகளின் வளர்ச்சி சமுதாய வாழ்க்கை முறையைச் சார்ந்திருக்கிறது. சமயமும், வழிபாட்டு முறைகளும் அதற்கு வழிவகுத்திருக்கின்றன. வேலன் ஆட்டம், பல்வகைத் தமிழ்க் கூத்துக்கள், அவற்றில் பிறந்த நாட்டியம், இசை இவை யாவும் வழிபாட்டு முறைகளில் பிறந்தவை.

மனித ஆசாபாசாங்களை மட்டும் வெளியிடும் கலைகளை மதச்சார்பற்ற கலை என்றும், தெய்வீகக் கற்பனைகளுக்கு இடம் கொடுக்கும் கலைகளை சமயம் சார்ந்த கலைகள் என்றும் வகைப்படுத்தலாம். பாரத நாட்டின் சிற்பக்கலை பெரும்பாலும் சமயம் சார்ந்தே உள்ளது. என்றாலும் கோயில்களிலும் கலைக் கூடங்களிலும்

Koviloor Digital Library



பார்க்கும் சிற்பங்களில் சமயம் சாராத தன்மைகள் மலிந்து கிடக்கின்றன.

## *கலைக் கொள்கைகள்*

இந்து சமயத்தின் வேதாந்தக் கருத்துக்கள் இறைவனுக்கு உருவம் இல்லை என்பதை வலியுறுத்திய போதிலும், இந்து மதம் இஷ்ட தெய்வம் என்ற கொள்கையையும், உருவ வழிபாட்டு முறையையும் முக்தி நிலைக்கு சாதனமாக ஏற்கின்றது. இதனால் ஈஸ்வரன், விஷ்ணு, துர்க்கை, போன்ற பல தெய்வங்கள் சிற்பங்களாக வடிவெடுத்துள்ளன.

கிரேக்க ரோமானிய மத நம்பிக்கைகளினும், கிறிஸ்துவ மதத்திலும் உருவ வழிபாட்டிற்கு இடம் உள்ளது. ஜைன மதமும் உருவ வழிபாட்டை ஏற்று வளர்ந்துள்ளது.

புத்தர், அறிவு சார்ந்து நின்றவர். உருவ வழிபாட்டை ஏற்காதவர். இசை, கலைகள் இவை யாவும் உணர்வுகளைத் தூண்டிப் புலனடக்கத்திலிருந்து நழுவ வழிவகுக்கும் என்பதால் அவற்றைஏற்கவில்லை. என்றாலும் மகாயானா பௌத்த மதம் மக்களைக் கவரும் நோக்கில், புத்தரையே கடவுளாக்கி, ஜாதகக் கதைகளையும் படைத்து இந்தியச் சிற்பக்கலை வளர்ச்சிக்கு உந்து சக்தியாக இருந்ததே பௌத்த மதம் தான்.

இஸ்லாம் உருவ வரிபாட்டைக் கறாராகப் புறக்கணிப்பதால், இஸ்லாமியக் கலை வளர்ச்சியில் மனித அல்லது தெய்வ உருவங்களுக்கு இடமில்லை. நுண்ணிய பூவேலைப்பாடுகள், கட்டிடக் கலை இவைகள் முதலிடம் பெறுகின்றன. பதினாறாம் நூற்றாண்டு முதல் முகலாய ராட்சி பர்சிய இந்திய கலைப்பாணிகளை இணைய வைத்தது. கட்டிடக்கலையும் பளிங்குக்கல்லைப் பயன்படுத்தும்

Koviloor Digital Library



வளர்ச்சியையும் தாஜ்மகாலில் காண்கிறோம். ராஜஸ்தானி, பஹாடி, காங்க்ரா ஓவியங்களில் இஸ்லாமிய இந்து சமயப்பாணிகளின் சங்கமத்தைக் காணமுடிகிறது. பாரசீக புத்தக ஓவியப் பாணி முகலாயருடன் வந்தது. அதில் இந்து மதப் படிவங்களான ராதா கிருஷ்ண லீலைகள், ராக, ராகினிகளின் சித்தரிப்பு. இவை இடம் பெறுகின்றன. அக்பர் பல இந்து ஓவியங்களை ஊக்குவித்து மொகலாய சித்திரக்கலையை வளர்த்தார்.

கலை வரலாற்றுப் பேரறிஞர் ஆனந்த குமாரஸ்வாமி கலைகளில் இயற்கையின் உருமாற்றம் (The Transformation of Nature in Art) என்ற தனது நூலில் ஆசிய, ஐரோப்பிய கலைக் கொள்கைகளை விரிவாக ஒப்பிடுகிறார். 'கலை வெறும் மனித உணர்ச்சிகளின் வெளிப்பாடே' என்ற தற்காலக் கலைக் கொள்கைகளிலிருந்து இவை முற்றிலும் மாறுபட்டவை என்கிறார்.

காலப் போக்கில் பல கலைக் கொள்கைகள் உருவாகி இருக்கின்றன. இந்தியக்கலைக் கொள்கையும் இந்திய தத்துவத்தில் எழுந்தது. இதை உபநிடதங்கள் கோடிட்டுக் காட்டுகின்றன. எழுத்தாளனின் பாத்திரப் படைப்பு, எப்படி அவனது சிந்தனையில் உருவானதோ, அப்படியே சிற்பி தனது சிற்பத்தை முதலில் தனது அகக் கண்களால் காண்கிறான். பார்க்கும் கலைஞனும், பார்க்கப்படும் பொருளும் ஒன்றிச் சங்கமமாகின்றன. அதில் பிறப்பது கலை. சிற்பமும் மற்ற கலைகளும் ஒரு யோகம் – லயம் – இசைவு, இரண்டறக் கலத்தல், என்பது இந்தியக் கலைக்கொள்கை.

உருவ வழிபாடு கூட வெறும் பொம்மை விளையாட்டல்ல. பக்தனின் உள் மனத்தில் காட்சிதரும் உருவத்தைச் சிலையில் நிறுத்தி வழிபடுகிறான். இது ஆவாஹனம் பிறகு அதைக் கைவிட்டுவிடுதல்

Koviloor Digital Library



விஸர்ஜனம். சிலையே கடவுள் அல்ல. நம்மனதிலுள்ள தெய்வம் அதில் தங்கி இருக்கும் வரை அது கடவுள். பின்னர் வெறும் சிலைதான்.

“தன்னிலிருந்து வேறுபட்டதாக, தான் வேறு அவன் வேறு என்று கருதி தெய்வத்தைத வழிபடுபவன், அந்த தெய்வத்தை அறிய மாட்டான்” என்கிறது பிருஹதாரண்யக உபநிஷத் அதாவது ‘ஆத்மா’ வேறு, ‘பிரம்மம்’ வேறு என்று கருதுபவன் தெய்வத்தை அறியமாட்டான். இந்தக் கருத்தே அத்வைதம் – இரண்டற்ற ஒருமை. இறைவனின் படைப்புகளில், தெய்விகத்தைக் காண முடியாதவனின் படைப்பில் உயிர்ப்பு இராது. படைப்பாளிகளின் தலைவன் இறைவன் அவனே நிர்மாண காரகன்’ என்கிறது இந்து மதம். அந்த மகா நிர்மாண காரகனையே ‘முஸவ்விர்’ என்கிறது இஸ்லாம்.

காண்பவனும், காணும் பொருளும் இரண்டறக் கலந்து விடுதலே ‘யோகம்’ தியானம் செய்பவன் தியானிக்கும் பொருளுடன் ஒன்றாகி விடுதலே ‘யோக ஸமாதி’. ஒரு கலைஞன் அப்படி ஒன்றிவிடும் பொழுதுதான் சிறந்த கலைவடிவம் பிறக்கிறது. ஒரு ஒவியன் மனதை ஒருமுகப்படுத்தாது, ஓவியம் தீட்டுவதை, ‘சிதில ஸமாதி’ (கலைந்த சமாதி) என்று குறிப்பிடுகிறது ‘மாளவிகாக்னி மித்ரம்’ என்ற வடமொழிக் காவியம் கலைஞனின் மனத்திரையில் படிந்த காட்சியே, சிற்பமாகவோ, ஓவியமாகவே வெளிப்படுகிறது. சிற்பி தானே தெய்வ வடிவில் கலந்து அந்த உணர்வுடன் தெய்வச் சிலையைப் படைக்கிறான்.

‘தானே அதுவாகாமல், சித்திரம் தீட்டும் ஒருவன், அதை வரைய முடியாது” என்பது மேல் நாட்டு அறிஞர் ‘தாந்தே’யின் கலைக் கொள்கையுமாகும்.

Koviloor Digital Library



## சிற்பக் கலையில் பரிணாம வளர்ச்சி

சிற்பக்கலையின் வளர்ச்சிகளை, ஆரியர்களுக்கு முந்தைய, மொஹஞ்சதாரோ, ஹரப்பா, நாகரீக காலத்திலிருந்தே இந்த நூல் தொடங்குகிறது. ஹரப்பா அச்சுகளில் சிற்பக்கலையின் கூறுகளை ஆசிரியர் சுட்டிக் காட்டுகிறார்.

ஆரியர்களுடன் இந்த நாட்டின் ஆதி குடிகளான திராவிட இன மக்களின் கலப்பிற்குப்பின், பழைய கடவுள்களும், வேதம் குறிப்பிடும் கடவுள்களும் சங்கமித்து புதிய கோயில்களும் வழிபாட்டு முறைகளும் பிறந்திருக்கலாம். கலைப்படைப்புகளும் உருவாகி இருக்கலாம்.

களிமண்ணைச் சுட்டு மண்பாட்டம் செய்யும் முறையில்தான் கலைப்படைப்புகளும் அமைந்திருக்கும். மரச்சிற்பங்களும் உருவாகி இருக்கும். காலவெள்ளத்தில் இவை அழிந்துவிட்டதால் சான்றுகள் கிடைக்கவில்லை.

அடுத்த கட்டடமாகக் கற்களில் செதுக்கிய சிலைவடிவங்கள் உருவாக்கப்பட்டன. கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் சிற்பக்கலை 'கற்காலத்தில்' நுழைந்தது! முதலில் இந்தச் சிற்பக்கலைக்கு அடி கோலியவர்கள் பௌத்த மதத்தினர். மரம், மண், ஆகிய சாதனங்களை விட்டு கல்லால் செதுக்கும் முறை நடைமுறைப் படுத்தப் பட்டது. இதன்பிறகுதான் நமது சிற்பக்கலைபற்றி நம்மால் அறிய முடிகிறது.

ஹீனயான பௌத்த மதம் புத்தரின் பாதம் போன்ற குறியீட்டுச் சிற்பங்களைத் தான் படைத்தது. மக்களைக் கவரும் உருவ வழிபாட்டை ஏற்ற பௌத்தம் 'மகாயானா'வாகப் பிரிந்த பிறகு புத்தர் கடவுளாகவும், போதி சத்துவர்கள், ஜாதகர் கதைகள் எல்லாம் சிருஷ்டிக்கப் பட்டபின் சிற்பக்கலை வளர்ச்சிக்குப் பல்வேறு படிவங்கள் கிடைத்ததன.

Koviloor Digital Library



கிரேக்க நாட்டுச் சிற்பக் கலையுடன், இந்தியக் கலைக் கருத்துக்களின் சங்கமத்தில் காந்தாரச் சிற்பக்கலை பிறந்தது.

கி.மு. முதல் நூற்றாண்டின் சிற்பக்கலை ஸாஞ்சியில் ஓரளவு பாதுகாக்கப்பட்டு இருக்கிறது. அசோகர் காலத்து ஸ்தூபிகளும் கல்வெட்டுகளும், புத்தரின் உடற்கூறுகளுக்கு மேல் எழுந்த ஸ்தூபிகளும்-சிற்பக்கலை வளர்ச்சிக்கு வழிவகுத்தன. பெரும் பாலும் அவை ஹீனயான பௌத்தச் சின்னங்களே. அலங்கார வளைவுகள், வேலைப்பாடுகள், புத்தபீடம், ஆழமாகச் செதுக்கப் பெறாத புத்தர் ஜனனக்கதை இவற்றைக் காணலாம். புத்த கயா, நாகபுரி, அமராவதி போன்ற இடங்களிலும் இந்தக் கால கட்டச் சிற்பங்கள் காணப்படுகின்றன.

சிற்பக் கலையின் அடுத்த கட்டவளர்ச்சியில் மகாயான பௌத்தப்பின்னணியில், அஜந்தா, எல்லோரா குகைக் கோயில்கள் உருவாக்கப்பட்டன. வாகாடக மன்னர் ஹரிஸேனரின் மறைவுக்குப் பின் அரசியல் குழப்பங்களால் கலைப் படைப்புகள் ஸ்தம்பித்து நின்றன. இதுவரை கற்கோயில் முறைகளைக் கடைப்பிடிக்காமலிருந்த இந்துக்கள் பௌத்தர்களைப் பின்பற்றி கல்லில் கோயில்கள் அமைக்கத் தொடங்கினார்கள். அதன் முதல் சான்று. எலிபெண்டா குகைக் கோயில் கி.பி. 500ல் அமைக்கப்பட்ட பரமேஸ்வரனின் கற்கோயில்.

அஜந்தாவில் கலைச் செயல்பாடுகள் நின்றுவிட அதே சிற்ப பரம்பரை எலிபெண்டாவில் தமது சிற்பக்கலைக்கு ஆதரவைக் கண்டது. சிற்பங்கள் மதம் சார்ந்து எழுந்த போதிலும், சிற்பிகள் மதச் சார்பற்ற தம் கலைத்திறனை வெளிப்படுத்தினார்கள்.

அஜந்தா போன்ற பௌத்த குகைக் கோயில்களுக்கு ஒரே ஒரு நுழைவாயில்தான். எனவே உட்பகுதி இருண்டிருக்கும். எலிபெண்டா

Koviloor Digital Library



குகைக் கோயில் அமைப்பில், மலைச்சரிவு தவிர மற்ற மூன்று பக்கங்களிலும் நுழைவாயிலமைந்த மண்டபங்கள் மூன்று திசையிலிருந்தும் வெளிச்சம் நன்றாகப் பரவும் முறையில் அமைந்திருக்கிறது. இது ஒரு முன்னேற்றம் பௌத்தக் கோயில்களில் சைத்யம் என்ற கோயில் பகுதியும் விஹாரம் என்ற பிக்ஷுக்கள் தங்கும் பகுதியும் இருக்கும். இந்துக் கோயில்களில் வழிபடும் பகுதியான கோயில்மட்டுமே அமைந்திருக்கும் இது ஒரு மாற்றம்.

எலிபென்டாவில் சிவனை மையமாகக் கொண்ட பத்துச் சிற்பங்கள் உள்ளன. ஒவ்வொன்றும் பீடத்திலிருந்து 15 முதல் 18 அடி உயரமாக வடிக்கப்பட்டுள்ளன. அர்த்த நாரீஸ்வரர், சிவபார்வதி கல்யாணம், ஆகாய கங்கையை முடியில் தாங்கும் கங்காதரர், அந்த காஸுர வதம் புரியும் 'அந்தகாரி' இவைகள்.

வடக்கு நுழைவாயிலுக்கு நேர் எதிரில் கடைசியில், திருமூர்த்தி சிற்பம், எல்லாவற்றையும் விடக் கம்பீரமாகக் காட்சி அளிக்கிறது. மன்றடிப் பீடத்தின்மேல் அமைந்த இந்த திருமூர்த்தி 18 அடி உயரம் எழுந்து நிற்கிறது. குகையின் ஆழம் பத்தரை அடி மகேஸ்வரனின் 'தத்புருஷம்' என்ற தலை நேர் எதிரிலும், இடப்புறம் மண்டை ஓட்டுத்தலையுடன் அகோர பைரவரின் தலையும், வலது புறம் அருள் பாலிக்கும் பார்வதி தேவியின் தலையுடனும் இந்தச் சிற்பம் காட்சியளிக்கிறது.

அடுத்த நூற்றாண்டில் எல்லோராவில் அமைக்கப்பட்ட 'தூமர் லேனா' குகைக் கோயில் வளர்ச்சியின் அடுத்த கட்டம். இதுவும் சிவன் கோயில் பாறையை 150 அடி குடைந்து ஒரு மண்டபத்தில் கருவரையும் சுற்றிவலம் வரப் பிரகாரமும் அமைந்துள்ளது. இடதுபுறமும் வலது புறமும் இரு மண்டபங்களும் நுழைவாயில்களும் சேர்ந்து 150 அடி நீளம்.

Koviloor Digital Library



மூன்று திசைகளிலிருந்து வெளிச்சம் வரும் ஏற்பாட்டுடன் கருவறை பாறையோடு ஒட்டி இருக்காமல் சற்று முன்னே அமைக்கப்பட்டுச் சுற்றுப் பாதையும் உள்ளது. தூண்கள் ஐந்தடி விட்டத்துடன் பதினைந்தடி உயரத்துடன் குடையப்பட்டிருக்கின்றன. பாறையின் உட்பகுதிகளில் சிவ புராணத் தொடர்பான காட்சிகள் சிற்பங்களாக வடிக்கப்பட்டிருக்கின்றன.

சிறிய இருண்ட குகைக் கோயில்களிலிருந்து, படிப்படியாக விசாலமான மண்டபங்களுடன் வெளிச்சம் நிறைந்த மண்டபக் கோயில்கள் பரிணமித்து வளர்ந்தன.

அடுத்த கட்டம் எல்லோரா கைலாஸ நாதர் கோயில். இங்கே பெரிய மலையின் பகுதியை மேலிருந்து குடைந்தெடுத்து ரதம் போன்ற கற்கோயிலாக நிறுத்தி இருக்கிறார்கள். கற்கோயில் வடிக்கும் கலையின் உச்ச கட்டம் இது. கி.பி. எட்டாம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த ராஷ்டிர கூட மன்னர் கிருஷ்ணாவின் ஆட்சிக்காலத்தில் இது உருவாயிற்று.

குகைகளைக் கோயிலாக்கும் கலை சுமார் ஆயிரம் ஆண்டுகளில் பரிணமித்த ஒன்று. பாறைகளை ரதமாக்கும் பரிசோதனைகளை மாமல்ல புரத்தில் காண முடிகிறது. இந்த வளர்ச்சிகள் மேற்கு இந்தியாவிலும், தென் இந்தியாவிலும் காணப்படுகின்றன. கருத்துப் பரிமாற்றங்களும், சிற்பக் கலைஞர்களின் பரிமாற்றமும் நிச்சயம் நடந்திருக்க வேண்டும்.

கற்கோயில் கலையின் அடுத்த கட்டம் சிற்பிகள் மலைகளைத் தேடிக் கொண்டு போகாமல், கற்களைத் துண்டுகளாக்கி இணைத்து எந்த இடத்திலும் கற்களால் கோயில் எழுப்பும் அளவு சிற்பக்கலை வளர்ச்சி அடைந்தது. மலையே இல்லாத சோழநாட்டின் தஞ்சையிலும் கங்கை கொண்ட சோழபுரத்திலும் அமைந்த பிரம்மாண்டமான கற்கோயில்கள் இந்த வளர்ச்சியின் சின்னமாக விளங்குகின்றன.

Koviloor Digital Library



கி.பி. 10 முதல் 11ம் நூற்றாண்டிற்குள், சுமார் ஒரு நூற்றாண்டுக் காலத்தில் சந்தேலர் ஆட்சிக் காலத்தில், மத்யபிரதேச கஜுராஹோவிலும் இத்தகைய கற்கோயில்கள் அமைக்கப்பட்டன.

கஜுராஹோ சிற்பங்களிலுள்ள ஆண்பெண் காதல் நிலைகள், ஆண் பெண் உறவுகள் பற்றிய சமுதாயக் கருத்துகளின் வெளியீடாகவோ, கலையின் மதச் சார்பற்ற, உணர்வுகளின் வெளிப்பாடாகவோ கருதலாம்.

அடுத்த நூற்றாண்டுகளில் கங்கர்களின் ஆட்சியில், சிற்பக்கலை வளர்ச்சிகளை ஒரிஸ்ஸாவில் காணலாம். புவனேஸ்வரிலுள்ள பரசு ராமேஸ்வரர் கோயில் மிகவும் பழைமையானது. ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்தது. பூரி, கோனாரக் போன்ற இடங்களும் புகழ்பெற்றவை. புவனேஸ்வரில் உள்ள லிங்கராஜ் கோயில் இவற்றில் காலத்தால் முந்தியது. சைவம் தழைத்த அந்தப் பகுதியில் வைணவ ஆலயமான ஜகன்னாதர் ஆலயத்தை 1197ல் கங்க மன்னன் அனங்கபீமன் எழுப்பினான். அதன்பின் 100 ஆண்டுக்குள் கோனாரக்கில் சூரியன் கோயில் எழுந்தது.

நுட்ப வேலைப்பாடுகள் மிகுதியான ஹொய்சாலர் காலச் சிற்ப வளர்ச்சிகளை ஸோம நாத்புர், பேலூர், ஹளயபீடு ஆகிய கன்னட நாட்டுக் கோயில்களில் பார்க்கலாம்.

சோழர்கள் காலத்தைச் சிற்பத்தின் உலோக காலம் என்றழைக்கலாம். உலோகத்தில் சிலைகள் வடிக்கும் கலை சோழ நாட்டில் உன்னத நிலையை அடைந்தது. அதன் அற்புத வடிவம் ஆடவல்லான் நடராஜனின் உலோக வார்ப்புச் சிலை பெரிய பஞ்ச லோகச் சிலைகள் வடிக்கும் முறையை ராஜ ராஜ சோழன் கொண்டு வந்தார்.

Koviloor Digital Library



பதினைந்தாம் நூற்றாண்டுக்குப்பின் விஜய நகர ஆட்சியிலும் பின்னர் நாயக்கர் ஆட்சியிலும் சிற்பக்கலைப் பாரம்பரியம் தொடர்ந்தது.

கோயில் கட்டும் கலைகளில் திராவிட நாகர, வேசர என்ற பாணிகள், தென் இந்திய, வட இந்திய மற்றும் கலப்பு பாணிகளைக் குறிக்கின்றன.

சிற்பக்கலையிலும் ஓவியக் கலையிலும் உலகப் போக்குகளின் பரிமாற்றம் இன்றைய கால கட்டத்தில் விரைவாக நடந்து வருகிறது. இந்தியப் பாணிக் கோயில்கள் மற்ற நாடுகளிலும் கட்டப்படுகின்றன. கருவிகளின் மாற்றமும் சமுதாய மாற்றங்களும் சிற்பக்கலை வளர்ச்சியிலும் மாற்றங்கள் கொண்டுவரும்.

மலைகளிலேயே பிரம்மாண்டமாகத் தலைவர்களின் தலைகளை அமெரிக்க ராக்கி மலைகளில் வடிததுள்ளார்கள் (மவுன்ட் ரஷ்மோர்) அரசியல் தலைவர்களின் உருவச்சிலைகளும் வடிக்கப்படுகின்றன. லண்டனிலுள்ள மேடம் துஸார் கலைக்கூடத்தில் மெழுகுச்சிலைகள் வடிக்கப்பட்டுள்ளன.

'இந்தியச் சிற்பங்கள்' என்ற இந்த நூல் நமது நாட்டில் வளர்ந்த சிற்பக்கலையை அறிமுகப்படுத்துவதுடன் கலை உள்ளம் கொண்டோரின் ஆர்வத்தைத் தூண்டலாம். தமிழ் கூறும் நல்லுலகிற்கு இது ஒரு புதிய வரவு.

சென்னை – 04. *சித்தார்த்தன்*

Koviloor Digital Library

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | பாரத நாட்டு கவின் பெறும் சிற்பங்கள் | ... | 19 |
| 2. | சாதவாகன, காந்தாரச் சிற்பங்கள் | ... | 25 |
| 3. | குஷாணர் காலத்துச் சிற்பங்கள் | ... | 29 |
| 4. | குப்தர் காலத்துச் சிற்பங்கள் | ... | 31 |
| 5. | வாகாடகர் காலத்துச் சிற்பங்கள் | ... | 33 |
| 6. | சாளுக்கியர் காலத்துச் சிற்பங்கள் | ... | 43 |
| 7. | பல்லவர் காலம் | ... | 52 |
| 8. | காஞ்சியின் கலைப் படைப்புகள் | ... | 69 |
| 9. | ராஷ்டிர கூடர் சிற்பங்கள் | ... | 80 |
| 10. | கஜுராஹோ | ... | 92 |
| 11. | சோழர் காலம் – கலைகளின் பொற்காலம் | ... | 127 |
| 12. | ஆந்திரர் கலைச் செல்வங்கள் | ... | 139 |
| 13. | பாண்டியர் காலக் கலைப் படைப்புகள் | ... | 150 |
| 14. | ஹொய்சாளர் காலத்துச் சிற்பங்கள் | ... | 156 |
| 15. | கங்கர்களது சிற்பங்கள் | ... | 165 |
| 16. | விஜயநகர ஆட்சி | ... | 179 |
| 17. | நாயக்கர் காலம் | ... | 192 |
| 18. | சேர நாட்டுச் சிற்பக்கலை | ... | 197 |
| 19. | எழுத விடுபட்ட கலைக் கூடங்கள் | ... | 206 |
| 20. | இந்தியக் கலையின் சிறப்பு | ... | 220 |

Koviloor Digital Library





# நுழைவாயில்

நூலைப் படிப்பதற்கு முன் நுழைவாயிலாக அமைகிறது இந்த முன்னுரை. பாரதநாட்டுச் சிற்பக்கலையைப் பற்றி ஓரளவு வரலாற்றுடன் படிக்கவும், படங்கள்மூலம் காணவும் உதவும் இந்த நூல்.

இந்திய கலைகளைப்பற்றி ஆங்கிலத்தில் பல பிரபல ஆராய்ச்சியாளர்கள், கலை வல்லுநர்கள் நிரம்ப நூல்கள் எழுதியுள்ளார்கள். தமிழில் ஒரு சில நூல்களே உள்ளன. அதுவும் பாரதமெங்கும் பரவிக்கிடக்கும் கலைச் செல்வங்களைப் பற்றி முழுமையான நூல்களை பல இடங்களில் தேடிப்பார்த்தேன். தமிழகத்தின் கலைச்செல்வங்களைப்பற்றி பல தமிழ் நூல்கள் உள்ளன. ஒரு முழுமையான, அதேசமயம் சுருக்கமாகவும், பாரத கலைச்சிற்பங்களைப்பற்றி ஒரு நூல் எழுத வேண்டும் என்ற ஆவல் எனக்கு ஏற்பட்டது. இந்த நூல் உருவாக்க ஊக்கம் அளித்தவர் என் அருமை நண்பர் திரு. சித்தார்த்தன் அவர்கள்தான். அவர் பெரிய எழுத்தாளர், கவிஞர், பாடகர் என்று பல பரிணாமம் கொண்டவர்.

ஒரே நூலில் பாரத சிற்பங்களைப் பற்றி முழுமையாக எழுத இயலாது. காரணம், பாரதத்தில் எண்ணற்ற கலைக்கூட ஆலயங்கள் உள்ளன. சிற்பக் குகைகள் ஏராளம். எனினும் ஒரே நூலில் சுருக்கமாகவாவது நம் அற்புத சிற்பங்களைப்பற்றி எழுதத்துணிந்தேன்.

Koviloor Digital Library



இந்நூலைப் படித்துவிட்டு, பிறகு விரிவான வரலாற்றுடன் கூடிய பாரதக் கலைச்செல்வங்களைப்பற்றிய நூல்களைப்படிக்கலாம். பல பாகங்கள் கொண்ட நூல்களாக நம் பாரத கலைச் செல்வங்கள் அனைத்தையும் விவரிக்கும் நூல்கள் வரவேண்டும்.

## அழிந்துவரும் சிற்பச் செல்வங்கள்

பண்டைய அரசர்களுக்கிடையே போர்கள் மூண்டதாலும், அந்நியர் படையெடுப்பாலும் பல கலைக்கூடங்கள், சிற்பம் நிறைந்த ஆலயங்கள் எல்லாம் பின்னப்படுத்தப்பட்டன. சோமநாதர் ஆலயம் போன்ற முழு கலைக்கூடங்களும் அழிக்கப்பட்டன, தரைமட்டமாக்கப்பட்டன. மற்றும் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னுள்ள கலை சிற்பங்கள் கால மாறுதலாலும், இயற்கையின் சீற்றத்தாலும் தம் பொலிவை இழந்து வருகின்றன.

நாற்பது ஆண்டுகளுக்கு முன் சித்தன்ன வாசலில் பாண்டியர்காலத்து ஓவியங்களைக் காணச்சென்றேன். அப்போது அந்த ஓவியங்கள் அழிந்த நிலையில்தான் இருந்தன. ஆனால் ஓரளவு ஓவியத்தைக் காணமுடிந்தது. நடன மாதர்களின் எழிலை ஓரளவு காண முடிந்தது. சமீபத்தில் பார்க்கச் சென்றபோது நடனமாதர்களின் ஓவியங்கள் அநேகமாக அழிந்துவிட்டன எனக்கூறலாம். போதிய கவனத்தை அரசு செலுத்தாத காரணத்தாலும், அங்கு வருபவர்களின் செயலாலும் சிதிலம் அடைந்துவிட்டன. எஞ்சியிருக்கும் பகுதிகளையாவது காப்பாற்ற வேண்டும். நம் நாட்டிற்குப் பெருமை அளிப்பவை நம் கலைச் செல்வங்கள்தாம்.

மாமல்லபுரத்துக்கும் போதிய பாதுகாப்பு தேவை. நானும், நண்பர் திரு விக்ரமனும் மாமல்லபுரம் சென்று, அன்று பார்த்த

Koviloor Digital Library


சிற்பங்களின் பொலிவு இப்போது குறைந்துவிட்டது. இயற்கையின் சீற்றத்தாலும், மக்களின் தீய செய்கையாலும், சிற்பங்களின் அழகுத் தன்மை குறைந்து வருகிறது. இதேபோன்று ஹம்பி நகரமும், விஜயநகர ஆட்சிக் காலத்தில் சீரும் சிறப்புமாக இருந்த நகரம், முகலாய படையெடுப்பால் பாழயிற்று.

முழு நகரத்தையும் சின்னாபின்னமாக ஆக்கிவிட்டனர். இன்று எஞ்சியுள்ள கலைச் சின்னங்களே அவர்களது உன்னத ஆட்சியை வெளிப்படுத்தி வருகின்றன. தக்க பாதுகாப்பின்மையினால் பல கலைவடிவங்கள் திருடு போகின்றன. பராமரிப்புக்கு போதிய நிதி பற்றாக்குறையும் ஒரு காரணமாகும்.

அஜந்தாவில் டூரிஸ்டுகளால் அழகான ஓவியங்கள் மங்கிவருகின்றன. இன்னும் சில ஆண்டுகளில் சித்தன்ன வாசல் கதிதான் அஜந்தாவிற்கு வரும். புதைபொருள் ஆராய்ச்சிக் காரர்(ASI) களின் போதிய கவனம் தேவை. வரும்நபர்களை முறைபடுத்த வேண்டும்.

இப்படியாக கலைச் சின்னங்களின் சிதைவுகளை எழுதிக்கொண்டே போகலாம். பாரத கலை பொக்கிஷங்களை பாதுகாக்க மக்களும் ஒத்துழைக்க வேண்டும். அதற்கு மக்களுக்கு நாட்டுப்பற்று தேவைப்படுகிறது. ஒரு சிற்பம் அமைக்க எவ்வளவு நாள் ஆகும் என்பதை மாமல்லபுர சிற்பக் கூடத் தலைவரைக் கேளுங்கள். சிற்பிகளும் சித்திரகாரர்களே! ஓவியம் வரையத் தெரியவேணும். பாறையில் முறையாக ஓவியக் கோடுகள் வரைந்த பிறகே சிற்பம் உருவாக பாறையைச் செதுக்குவார்கள்.

பாரதநாட்டின் அருமையான கலைப்படைப்புகளை மக்கள் தெரிந்துகொள்ளவேண்டும் என்ற அவாவினால் எழுந்த நூலே இது.

இங்கு கூடியவரை சிற்பங்களின் படங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. பதிப்பகத்தாருக்கும் நன்றி கூற

Koviloor Digital Library



வேண்டும். அழகான அச்சமைப்பு, கலைகளில் ஆர்வம் கொண்ட பதிப்பகத்தார் இந்நூலை எழுத ஊக்குவித்தார்கள். இம்மாதிரியான கலை நூல்கள் பல தமிழ் மொழியில் வரவேண்டும் – எழுதுவதற்கு நிறைய விஷயங்கள் நம் பாரதக்கலைகளில் உள்ளன. இந்நூலை படித்துபார்த்து, எனக்கு ஊக்கம் அளிக்க வேண்டுமாய் வாசகர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஸுபா



காஞ்சி கைலாஸநாதர் கோயில்

Koviloor Digital Library

# 1. பாரதநாட்டு கவின் பெறும் சிற்பங்கள்

நம் பாரதத்தின் சிற்பங்களைக் கண்டு ரசித்தவன் நான். மேலும் நான் ஒரு ஓவியன், அதனால் சிற்பக்கலையின் அழகான தோற்றத்தை அமைப்பைப்பற்றி அறிய ஆவல் கொண்டவன். நம் நாட்டின் ஒவ்வொரு சிற்பத்தையும் பார்த்து ரசிக்க நமக்கு ஆயுள் போதாது. பாரதத்தில் சிற்பக்கலைக்கூடங்களான ஆலயங்கள் அதிகம். அவற்றின் வரலாறு, சிற்பியின் திறமை, எண்ணிக்கை இவற்றைப் பற்றி எழுதப் புகுந்தால் பலபாகங்கள் கொண்ட பெரும் நூல்களாகிவிடும். சிற்பங்களில் தான் எத்துணை விதம், ஒவ்வொரு மாநிலத்திலும் தனித்தன்மையுள்ள



Koviloor Digital Library



சிற்பங்கள் கொண்ட ஆலயங்கள். இமயம் முதல் குமரி வரை பலவிதமான சிற்ப அமைதிகளைக் காணலாம். இதற்கு காரணம் நம் நாட்டை பல அரசுகள் ஆண்டு வந்துள்ளன. ஆண்ட அரசர்கள் அவரவர்களுடைய நாகரிகப் பாணியை தங்களது கலைப் படைப்புகளில் புகுத்தியுள்ளனர். அதனால்தான் பல தரப்பட்ட சிற்பங்களைக் காணமுடிகிறது.

நம் நாட்டு சிற்பங்களின் தோற்றத்தை பழங்காலத்திலிருந்து இன்றுவரை வரலாற்றுடன் எழுத உள்ளேன். ஆராய்ச்சி, வரலாறு இவற்றை ஓரளவு குறைத்துக்கொண்டு, சிற்பங்களின் சிறப்புக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

## பண்டைய சிற்பங்களின் தோற்றம்

பழம் பெரும் சிற்பக் கலைக்கு மொகஞ்சதாரோ, ஹரப்பா' நகர்களைக் குறிப்பிடலாம். இன்று அந்நகர்களின் சிதிலமான சுவர்களைத்தான் காணமுடிகிறது. அங்கு நடத்திய அகழ்வராய்ச்சியின் பயனாக சில மட்பாண்ட பொருள்கள், சின்னங்கள் பொறித்த களிமண் காசுகள் (சில்லுகள்), மற்றும் சில மண் உருவங்கள்தான் கிடைத்துள்ளன. அங்கு அகழ்வாராய்ச்சிகள் இன்றும்

Koviloor Digital Library



நடந்துவருகின்றன. வரலாற்று ஆசிரியர்கள் இன்றும் பல கருத்துக்களை கூறி வருகிறார்கள். அங்கு கிடைத்த களிமண்ணால் செய்த உருவங்கள், விளையாட்டுப் பொருள்கள், மற்றும் சின்னங்கள் முதலியவற்றை நோக்கும்போது, அவர்கள் நாகரிக வாழ்வைக் கொண்டவர்கள் எனத் தோன்றுகிறது. இங்கு மொகஞ்சதாரோ – ஹரப்பா களிமண் பொம்மைகள் மற்றம் சில பொருள்களின் படங்களைக் காணலாம்.

அவற்றுள் ஒன்று முரட்டுக் காளையின் சிற்பம். உயிர்த்துடிப்புடன் காளையின் உருவம் மிக நேர்த்தியாக உள்ளது.

மற்றொன்று நின்று கொண்டிருக்கும் மங்கையின் நடனசிற்பம். குறுந்தாடியுடன், பூப்போட்ட சால்வையை போத்திக்கொண்டிருக்கும் ஆணின் உருவம் எல்லாம் அந்நாள் மக்களின் வாழ்க்கையையும் கலைத்திறனையும் காட்டுகிறது.

பழைய கற்காலம், புதிய கற்காலம் என்று உலகெங்கும் வாழ்ந்த குகை வாழ் மக்களைப்பற்றி கூறுகிறார்கள். அவர்கள் தீயைக் கண்டுபிடித்தார்கள். விலங்குகளைக் கொல்ல பல கூர்மையான பாறை கற்களை பயன்படுத்தினார்கள். குகையில் கரிக்குச்சியால் கோட்டு ஓவியங்களை வரைந்தார்கள். வேட்டையாடுதல், மான், போன்றவற்றை தீவட்டியின் ஒளி கொண்டு வரைந்தார்கள். பிறகு பல ஆண்டு காலத்திற்குப்பிறகு நாகரிக வாழ்வை கடைபிடித்தனர். சிந்து நதிக்கரையில் மக்கள் நாகரிகமாக வாழ்ந்தார்கள் என்பதை மொகஞ்சதாரோ, ஹரப்பா அகழ்வாராய்ச்சியின் மூலம் அறிய முடிகிறது. இந் நகரங்களைப் பற்றி பல ஆராய்ச்சியாளர்கள் நூல்கள் எழுதியுள்ளனர்.

Koviloor Digital Library



# வேதகால கலை படைப்புகள்

சிந்து வெளி நாகரிகத்திற்கும், வேதகால நாகரிகத்திற்கும் தொடர்பு ஏதும் இல்லை. ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் வேதகால மக்கள் இருந்தனர்.

வேதகாலத்தில்தான் தெற்கு ஆசியாவிலிருந்து 'ஆரியர்' நம் நாட்டுக்கு வந்தனர் என சில ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். இக்காலத்திற்கு முன்பே திராவிடர் தென்னகத்தில் வாழ்ந்து வந்தார்கள் என்றும் சிலர் கருத்து தெரிவிக்கின்றனர்.

வேதகால சிற்பக்கலையைப் பற்றி சிறிது தெரிந்துகொள்ளலாம். குறிப்பிடும் படியாக சிற்பங்கள் ஏதும் கிடைக்கவில்லை. ஹோமகுண்டங்கள், ஹோம பொருட்களான மரப்பாத்திரங்கள், கிண்டிகள் எல்லாம் வேதகால கலையாக அறிய முடிகிறது. வேதத்தில் 'அக்னி'யின் உருவத்தைபபற்றி விரிவாக விளக்கப்பட்டுள்ளது. வடமொழி எனக் கூறப்படும் சம்ஸ்கிருத மொழி பல சிற்ப சம்பந்தமான, மற்றும் பிற கலைகளைப்பற்றிய நூல்களும் சுவடிவடிவில் வந்துள்ளன. அதனால் வேதகால மக்கள் நல்ல கலை உணர்வோடு வாழ்ந்தனர் எனத் தெரிகிறது. 'விஷ்ணுதர்மோத்ரம்' எனும்

Koviloor Digital Library



கலை நூல் மிகப் புகழ்பெற்றது.

கலைகளைப் பற்றி ஒரு சில நூல்கள் உள்ளன. பெரும்பாலான தமிழ் கலை நூல்கள் கால வெள்ளத்தில் மறைந்துவிட்டன. தமிழில் இருந்திருக்க வேண்டும் என்பதை தமிழ் இலக்கியங்கள் மூலமும், சங்ககாலப் பாடல்களின் மூலமும் அறிய முடிகிறது.

குறிப்பாக சங்ககாலப் பாடல்களிலிருந்து ஓவியம், சிற்பம் தொடர்பான பல கருத்துகள் இருப்பதைக் காண முடிகிறது.

'சிலப்பதிகாரம்' காவியத்தில் கலைகளைப்பற்றி யவிவரங்களைக் காணலாம். மணி மேகலையிலும் கலைகளைப்பற்றிய விவரங்களைக் காணலாம்.

தமிழகத்து சிற்பிகள் படைத்த சிற்பங்களின் எழிலை வடபாரதத்திலுள்ள கலைச் சின்னங்களில் காணமுடியாது.

## தமிழகத்து சிற்பங்கள்

நம் ஆலயங்களில்காணும் சிற்பங்கள், குகைக்கோயில் காணும் சிற்பங்கள் எல்லாம் உலகப் புகழ்பெற்றவை. வடபாரதத்திலும் எழில் வாய்ந்த கலைப்படைப்புகள் உள்ளன.

நம் தமிழகத்து நடராஜர் படிமம் உலகமே வியக்கும் திருமேனியாகும். அதுவும் ஆன்மீக தத்துவம் நிறைந்த வடிவமாகும். நடனத்திற்காகவே சிதம்பரம் ஆலயம் ஏற்பட்டது. இங்கு வெளிநாட்டுப் பயணிகள் வந்து எழில்மிக்க கோபுரங்களையும், நடன சிற்பங்களையும் கண்டு வியந்து போகிறார்கள். சிற்பங்களும் பெரிதாக இருந்தாலும், சிறியவையாக இருந்தாலும் பாவ உணர்ச்சியுடன் அழகுடன் உள்ளன. தமிழகத்து சிற்பிகளின் கைத்திறன் சிறந்து விளங்குகின்றது.

Koviloor Digital Library



இவர்களுடைய கைவண்ணத்தைப்பற்றி இந்நூலின் தமிழக சிற்பப் பகுதியில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

பொதுவாக பாரத கலை வடிவங்கள் பலவிதங்களில் புகழ்பெற்றவையாகும்.

## மொகலாய கட்டிடக்கலை

மொகலாயரின் படையெடுப்புகளால் பாரதத்தில் பல சிற்பக் கூடங்கள் பாழாயின. அவர்களின் படையெடுப்பால் சில நன்மைகளும் ஏற்பட்டன. அவர்களுடைய கலையம்சம் இந்து சமய கலைகளில் கலந்தன. உதாரணமாக ராஜஸ்தான் சிற்றோவியங்கள் பர்சிய நாட்டுப் பாணியுடன் கலந்து உருவாயின. மொகாலாயர்கள் சிற்பங்கள் ஏதும் படைக்க வில்லை. அவர்களுக்கு உருவவழிபாடு கிடையாது. பெரும் அரண்மனைகள், கோட்டைகள், மாளிகைகள் போன்ற கட்டிடக் கலைப் படைப்புகள், பெரிய மசூதிகளில் உருவம் ஏதும் இருக்காது. ஆனால் மசூதிகள் மினார்களுடன் அழகாக காணப்படும். பளிங்கு கற்களில் நுண்ணிய பூவேலைப்பாடுகள் அவர்களது கட்டிங்களில் காணப்படும். அவர்களைப் பின்பற்றி இந்துக்களும் பெரிய அளவில் மாளிகைகள், அரண்மனைகள், கோட்டைகளை பல இடங்களில் அமைத்தார்கள். ஜெய்பூர், உதய்பூர், டில்லி, பதேபூர் சிக்ரிபோன்ற இடங்களில் மொகலாய கலை அம்சங்களைக் காணலாம். டில்லி குதுப்மினார் புகழ்பெற்ற கட்டிட அமைப்பாகும். ஆக்ராவில் உள்ள தாஜ்மகால் பாரதத்திற்கு புகழ்சேர்க்கும் மொகலாய கலை படைப்பாகும்.

இப்படியாக பாரதம் முழுதும் பௌத்தம், ஜைனம், சைவம், வைணவம், மொகலாயர் கலைப்படைப்புகள் ஆங்காங்கு பரவியுள்ளன. இந்த கலை சங்கமத்தை நம் பாரதநாட்டில்தான் காணமுடியும்.

இனி இந்திய சிற்பங்களின் கலைப் படைப்புகளை அறிவோம், காண்போம்.

Koviloor Digital Library

கோவிலூர் ஆண்டவர் நூலகம், கோவிலூர்
A. No. 5704
ND

## 2. சாதவாகன காந்தாரச் சிற்பங்கள்

கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து – இறுதிவரை தக்காணத்து வல்லரசுகள் சாதவாகனர்கள்தான். இவர்காலத்தில் பெரும்பாலும் மேற்கு இந்தியாவின் மிகவும் புகழ்பெற்ற சில பௌத்த குகைகள் குடையப் பட்டன. நாசிக், பேட்சா, பாஜா, கார்லா, கொண்டானே குகைகள், அஜந்தாவின் மிகவும் முற்பட்ட குகைகளும் சிறந்தவையாக கருதப்படுகின்றன. அஜந்தாவில் சாதவாகனரின் முற்காலச் சிற்பங்களைக் காணலாம். இச்சிற்பங்கள் அஜந்தாவின் (சாதவாகனரின்) ஓவியங்களை ஒத்தவையாக உள்ளன. 9, 10, ம் குகைகளில் இத்தகைய சிற்பங்களைக் காணலாம். இக்குகைகளில் காணும் கல்வெட்டுகள் இந்த விவரங்களைத் தெரிவிக்கின்றன.

சாஞ்சி, பாஜா, ஜக்கய்ய பேட்டை, ஆகியவற்றுடன் அமராவதியின் ஆரம்பகாலப் பகுதி சிற்பங்களுடன் நெருங்கிய தொடர்புடன் காணப்படுகின்றன சாதகவாகன சிற்பங்கள். இவ்விடங்களில் காணும் சிற்பங்கள் அஜந்தாவின் 9–10 குகைகளில் காணப்படுகின்றன. கல்வெட்டுகள் கிமு. இரண்டாம் நூற்றாண்டு பிராமி எழுத்துகளால் ஆனவை. அதாவது சாதவாகனரின் ஆரம்ப காலத்தவை.

சாஞ்சி தோரணவாயிலின் கல்வெட்டு ஒன்றில்கூட இந்த செய்தியைக் காணலாம். பாரத மெங்கும் உள்ள குப்த, வாகாடக இடைக்கால கலைக்கு முன்னோடியாக இச்சிற்பங்கள்

Koviloor Digital Library



அமைகின்றன. சாஞ்சியில் காணப்படும் தோரண 'சாலபஞ்சி' என்ற சிற்பத்தில் விசிறி போன்ற தலை அணியின் அழகு புதுமையாக உள்ளது. இதேபோன்ற சிற்பத்தை அமராவதியிலும், மதுராவிலும் மற்றும் கர்லா குகையிலும் பார்க்கலாம். இந்த விதமான சிற்ப ஒற்றுமைகளைச் சில நூற்றாண்டுகளாக பாரத மெங்கும் காணலாம். இது நாடு முழுதும் ஏற்பட்ட கலை வளர்ச்சியின் விளைவாகும். இவ்வாறான பொதுமைக் கருத்தின் ஒப்புமைக்கு இந்திய கலையின் ஒருமைப்பாடு காரணமாக விளங்குகிறது.

அஜந்தா 9ம் எண்ணுள்ள குகையின் நடுவே ஒரு ஸ்தூபம் இருக்கிறது. கி.மு. 2ம் நூற்றாண்டுச்சிற்பக் குகையின் ஆரம்பத் தனிச் சிறப்பை இங்குள்ள தூண்களும் ஸ்தூபமும் காட்டுகின்றன.

அஜந்தா 10ம் எண் குகையின் முகப்பு பசிதபுத சிற்பி என்பவரால் உருவாக்கப்பட்டசெய்தியைத் தாங்கிய கி.மு. இரண்டாம் நூற்றாண்டு கல்வெட்டு ஒன்று இக்குகையில் காணப்படுகிறது. தவிர ஜாதகக் கதை ஓவியங்களும் இக்குகையில் உள்ளன.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் இறுதிச் சாதவாகனச் சிற்பங்களைப் போன்ற ஓவியத்துணுக்குகள் 'பேட்சா' குகையில் பிரஞ்சுகலை ஆராய்வாளர் 'மூவோ துப்ரா' யால்' கண்டுபிடிக்கப்–பட்டன. இங்கே உள்ள ஓர் இள நங்கையின் உருவம் அழகானது. ஒற்றைவட முத்து மாலையை அணிந்து, நேர்த்தியாக நெளிந்து நிற்கும் இந்த உருவம் அமராவதியிலும், கார்லாவிலும் உள்ளது. கிருஸ்து சகாப்தத்தின் ஆரம்பத்திலேயே இந்தியக் கலைக் குறிக்கோள்கள் பரவ ஆரம்பித்துவிட்டன என்பது கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து தெரியவருகிறது.

இப்பகுதியில் கூறப்பட்ட குகைகளில் காணும் சிற்பங்கள் கிருஸ்து பிறப்பதற்கு முன் தோன்றி புகழ்பெறத் தொடங்கிவிட்டன.

Koviloor Digital Library



ஓவியங்களும் அந்த விதமாகத்தான் அற்புதமாகவும், அழகாகவும் அமைந்துள்ளன.



ஸாஞ்சி ஸ்தூபம்

## காந்தார சிற்பக்கலை

மாவீரன் அலெக்சாண்டர் பஞ்சாபில் விட்டுச்சென்ற கிரேக்க வீரர்கள் சிறிது காலத்துக்குள்ளாக மௌரிய பேரரசனான சந்திர குப்தனால் துரத்தியடிக்கப்பட்டனர். பாக்டீரியாவில் (வடக்கு ஆப்கனிஸ்தான்) எஞ்சிய கிரேக்க வீரர்கள் ஒரு சாம்ராஜ்ஜியத்தை அமைத்துக்கொண்டு முதலில் காந்தாரத்தையும் பின்னர் பஞ்சாபையும் கைப்பற்றினர். இதன் விளைவாக கிரேக்க கலையும் பண்பாடும் இப்பகுதியில் பரவலாயின. பௌத்த மதம் இங்கு பரவியது. கிரேக்கருக்குப் பின்னர் 'சாகர்'களும், 'க்ஷத்ரபர்'களும் இப்பகுதியை ஆண்ட போதிலும் இக்கலை தொடர்ந்து போற்றப்பட்டு வந்தது.

Koviloor Digital Library



இக்கலையை 'காந்தாரக் கலை' என்றும் கூறுவர். குஷாணர்களாலும் இக்கலைப்போற்றப்பட்டு கி.பி. சுமார் 300ல் அவர்களது ஆட்சி வீழும் வரை விளங்கிவந்தது.

தெய்வப் பிறவிகளான கடவுளரையும், தசைகளாலும், உடற்கட்டுக்களாலும் மிக அழகு வாய்ந்த மனிதர்போல் உருவகப்படுத்தி மகிழ்ந்தனர் மேல் நாட்டு சிற்பிகள். உடல்வனப்பை மறைத்து ஆன்மீக ஒளி வீசும் தெய்வச் சிலையாக, மனிதராகிய புத்தரையும் படைத்தனர் இந்திய சிற்பிகள். மனிதன் தெய்வமாக மாற வேண்டும் என்பது இவர்களின் குறிக்கோளாகும்! காந்தார சிற்பங்களில் மனித உருவிலேயே முதலிலிருந்து புத்தர் காண்பிக்கப்பட்டார். இந்திய ஸ்தூபங்கள் போல் அன்றி இங்கு சுற்று வேலிகள் கிடையாது.



மொகஞ்சதாரோ – கட்டிட அமைப்பு

Koviloor Digital Library

# 3. குஷாணர் காலத்துச் சிற்பங்கள்

## (கி.பி. 1-3ஆம் நூற்றாண்டுகள்)

வட பாரத்தில் 'கங்கர்' காலத்திற்குப் பிறகு மிகவும் வலுவான அரசர்கள் குஷாணரே. அவர்களது பேரரசு இந்தியாவின் பெரும் பங்கை ஆக்கிரமித்தும், அதற்கப்பாலும் பரவியிருந்தது. மத்திய ஆசியாவிலிருந்து குஷாணர்கள் பாரதத்திற்கு வந்தபின் தங்கள் பேரரசை – மத்திய ஆசியாவிலிருந்து தொடங்கி இன்றைய ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் வழியாக இந்தியாவின் மதுராவுக்கு அப்பால் வரை, விஸ்தரித்தனர்.

மதுராவை மையமாகக் கொண்டு தனித்த கலைப்பாணி ஒன்றும், வடக்கு எல்லையில் இன்னொன்றுமாக வளர்ந்தது. பாரத,

குஷாணர்காலம் ஸாங்கோல் (பஞ்சாப்)

Koviloor Digital Library



கிரேக்க, ரோம, ஈரானிய அடிப்படையாகக் கொண்டு சீன உறவுகளின் விளைவுகளால் கவர்ச்சிஊட்டும் கருத்துக்களை அளிக்கும் புதுமையான கலவையாக ஒரு கலைப்பாணியை உருவாக்கினர். பல பாரதக்கலைப் பண்புகள் மத்திய ஆசியாவில் உள்ள சிற்பத்திலும், ஓவியத்திலும் எவ்வாறாக கலந்தன என்பது வியப்பாக இருக்கிறது. புத்தரை ஒரு மஹா புருஷராக சித்தரித்த ஓவியம் ஒன்று 'பல வஸ்தே' என்ற இடத்தில் இருந்தது. அவ்வோவியம் இன்று தில்லி அருங்காட்சியகத்தில் உள்ளது. புதுமையான இவ்வோவியம் குஷாணர் காலத்து ஓவியம் என்று அறிஞர்கள் கூறுகிறார்கள். குஷாணர்கள் காலத்து சிற்பங்கள் பாரத பண்பாட்டுடனும், புதுமையான முறையிலும் காணப்படுகின்றன. சில சமயம் அமராவதி சிற்பங்களையும் ஒத்து உள்ளன.

Koviloor Digital Library

# 4. குப்தர் காலத்துச் சிற்பங்கள்

## கி. பி. 4-6 நூற்றாண்டுகள்

குப்த பேரரசர்கள் கலை, இலக்கியம் போன்றவற்றிற்கும் பேராதரவு தந்து புகழ்பெற்றவர்கள். குப்த அரசர்களுள் சந்திரகுப்தர் கலைகள் மூலம் மிகவும் புகழ்பெற்றவர். கவிதைத் திறமையுள்ளவர் என்று அவரது கல்வெட்டுத் தெரிவிக்கின்றது.

குப்தர் காலத்து நாணயங்களில் அவர்களது கலைத் திறனை நன்கு அறியலாம். சந்திர குப்தரின் கல்வெட்டு ஒன்றில் யாழ் வாசிக்கும் நிலையில் உள்ள அவரது காசு இதை உறுதிப்படுத்துகிறது. அவர் மகன் இரண்டாம் சந்திரகுப்தரின் காசு அற்புதமானது. கையில் தாமரை மலர் தாங்கிக் கட்டிலில் வீற்றிருப்பவராக அது அவரைக் காட்டுகிறது. அவரது கலைத் திறமை எத்தகையது என்பதை தெரிவிக்கும் காசு அது. இதற்கு ஏற்றவாறு இந்த நாணயத்தில் 'ரூபா கிருதி' எனப் பொறிக்கப்பட்டுள்ளது. இப்படி பல நாணயங்கள் கலைத்திறனுடன் விளங்குகின்றன. இப்படிப்பட்ட குப்த அரசர்கள் கலை வளர்த்ததில் வியப்பொன்றும் இல்லை. பாரத நாட்டின் கலையின் பொற்காலம் எனப் பொதுவாக பல கலை வல்லுனர்கள் கூறுகின்றனர்.

குப்த நாணயங்கள் மிகவும் அழகானவை, அவர்கள் அமைத்த உயர் சிற்பம் போன்றே விளங்குகின்றன.

குவாலியர் சமஸ்தானத்தில் 'பாக்'' என்னும் ஒரு சிற்றூரில் குப்தர்காலத்து கலைக் குகைகள் உள்ளன. இக்குகைகள் 'பாக்'

Koviloor Digital Library



நதிக்கு நூற்றைம்பது அடி உயரத்துக்கு மேலே விந்திய குன்றுகளின் சரிவுகளில் குடையப்பெற்றுள்ளன. மொத்தம் ஒன்பது குகைகள் உள்ளன. அவற்றுள் முக்கியமானவை 2, 4, 5, குகைகள், இக்குகைகளைக் கண்டுபிடித்தவர் 1818ல் லெப்டினென்ட் டேஞ்சர் பீல்டால்.

கைகளில் கவரி தாங்கிப் பணிபுரியும் இரு போதி சத்துவர்கள் புடை சூழக் காட்சிதரும் புத்தரின் மிகச் சிறந்த சிற்பங்கள் ஆகும். இந்த இரண்டாம் குகையில் உள்ள ஸ்தூபம் தொடக்க கால எளிய வகையைச் சார்ந்தது. இங்கு குப்தர் கால சிற்பக் கலையின் சிறந்த மரபில் செதுக்கப்பட்ட போதி சத்துவ உருவங்களும் கிடைக்கின்றன.

இங்குள்ள ஸ்தூபத்தில் குப்தர் கால சிற்பக் கலையின் சிறந்த மரபில் செதுக்கப்பட்ட போதி சத்துவ உருவங்களும் காணத் தகுந்தன. நான்காம் குகையின் முதன்மையான வாயிலின் மேல் பக்கத்தின் இரு பக்கங்களிலும் மகரங்கள் (தெய்வீக மீன்கள்) மீது நதி தேவதைகள் ஆரம்பகால குப்த பாணிக்குச் சிறந்ததொரு விளக்கமாக உள்ளன. நதிகளின் சிற்பங்கள் இரண்டும் நிற்கும் நிலை கங்கை, யமுனாவை குறிப்பிட்டனவாக இருக்கும்.

குகையின் தாழ்வாரப்பகுதி சிதிலமடைந்தது. அதைத்தாங்கி நிற்கும் கனமான தூண்கள் இப்போது அழிந்து, கூரையும் விழுந்துவிட்டது. இக்குகைகளில் குப்த கால ஓவியங்களும் சிதிலமடைந்த நிலையிலும் குகைகளின் ஓவியங்கள் இன்றும் பொலிவுடன் பல வண்ணங்களுடன் இருப்பது, குப்தர் கால ஓவிபக் கலைக்கு எடுத்துக்காட்டாகும்.

Koviloor Digital Library

# 5. வாகாடகர் சிற்பங்கள்

### கி. பி. 4-6 ஆண்டுகள்

## அஜந்தா சிற்பங்கள்

சாதவாகனரை அடுத்து 'வாகாடகர்' வந்தனர். ஆற்றல்மிக்க அரசர்கள். பர்சியர்களுடனும், குப்தர்களுடனும் திருமண உறவு கொண்டிருந்தனர். அமராவதியிலிருந்து கிடைக்கும் கி. பி. 2ம் நூற்றாண்டு கல்வெட்டுகளில், முதன் முதலாக வாகாடகர் என்ற சொல் குறிப்பிடப்படுகிறது.

கிருஷ்ணா பள்ளத்தாக்கிலிருந்து இடம் பெயர்ந்து வந்து தோற்றுவித்த இவர்களின் அரசு, பிந்திய ஆண்டுகளில் மெதுவாக வளர்ந்துள்ளது எனத் தோன்றுகிறது. வாகாடக அரசர் பிரவரசேனர் மிகுந்த இலக்கியப் புலமை மட்டுமல்லாமல் கலைக்கும், அழகின் எல்லா தோற்றங்களுக்கும் பரவலாக இருந்தார் எனத் தெரிகிறது. அஜந்தாவில் உள்ள சில குகைகளில் வாகாடகர் காலத்து கல்வெட்டுகள் உள்ளன. இவற்றின் உதவி கொண்டு வாகாடகர் காலத்தை சேர்ந்தவை எனக் கூறி விடலாம்.

தொன்மையான குகைகள் சாதவாகனர் காலத்து கட்டமைப்பின் மிகத் தொன்மையான கூறுகளைக் காட்டுகின்றன. சாதவாகனர் காலத்தன வற்றை ஒத்த இங்குள்ள தூண்களும், வெளிப்புறத்தை அலங்கரிக்கும் வேலியும், சேதிய சாளரங்களும் அக்காலத்தில் புத்தரை மனித உருவில் தோற்றுவிப்பது இழுக்கு என்ற

Koviloor Digital Library




அஜந்தா

Koviloor Digital Library



கருத்து நிலவியதால் இங்குள்ள ஸ்தூபத்தில் புத்தர் மனித உருவில் காண்பிக்கப்பட்டதும், காலச் சான்றுகளாகின்றன. காலத்தால் சற்று பிந்திய குகைகளில் குப்த – வாகாடக காலத்தைச் சார்ந்த வேலைப்பாடமைந்த தூண்களும், போதிகைகளும், சாளர அமைப்பின் சிற்ப முதிர்ச்சியும், அதிகமான சிற்ப அலங்காரங்களும் சேதியத்தில், ஸ்தூபத்தின் பக்கங்களில் தெளிவாக மனித உருவில் செதுக்கப்பட்ட புத்த உருவமும் உள்ளன.

அஜந்தாவில், முக்கியமாகப் பிந்திய குகைகளில் உள்ள சிற்பங்கள் வாகாடக காலத்து முழு வளர்ச்சியின் உயர்ந்த நிலையைக் காட்டுகின்றன. வடக்கேயிருந்த குப்தக் கலைக்கு சம காலத்தால் ஆன தக்காணத்தின் வாகாடகக் கலையை ஆராய, இவற்றைவிட சிறந்த சான்றுகள் இல்லை எனலாம்.

அஜந்தாவில் காணப்படும் வாகாடக மரபுகள் ஓவியத்துறைமட்டும் அல்லாமல் சிற்பங்களை அமைப்பதிலும், முந்திய சாதவாகன காலத்தினின்று பெறப்பட்டவையாகும், அமராவதிச்சிற்பங்களில் காணும் சிற்ப அமைதியை இங்கு சிற்பத்திலும் ஓவியங்களிலும் காணலாம்.

பிற்காலச் சிற்பத்தில் வாகாடக தொடர்பு, மரபுகள் தொடர்ந்து காணப்படும் ஒரே மாதிரி நிலைகளில் உள்ள உருவங்களிலிருந்து இதை அறிந்து கொள்ளலாம். அஜந்தா சிற்பங்கள் அவற்றிற்கும் முந்திய அமராவதி சிற்பங்களை நினைவுபடுத்துகின்றன. அஜந்தாவிலும் மாமல்லபுரத்திலும் காணப்படும் சிற்பங்கள் ஒரே நிலயையில் உள்ள, நிற்கும் நிலை, வளைவு எல்லாவற்றிலும் ஒரு ஒற்றுமையைக் காணமுடிகிறது. இது பற்றி பல கலை வல்லுனர்கள் இன்றும் ஆராய்ந்து வருகின்றனர்.

Koviloor Digital Library



வாகாடகர் காலத்து அஜந்தா ஓவியங்களில் புத்த பிரானின் பல ஜாதக கதைகள் நன்கு சித்தரிக்கப்பட்டுள்ளன. அதே போன்று புத்தர் காலத்து வாழ்க்கையை சிற்பங்களாக வடித்துள்ளார்கள்.

ஒரு குகையின் தாழ்வாரத்துச் சுவரில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டில் கூறியிருப்பதுபோல வாகாடக அரசனான அரிசேனரது சிற்றரசன் ஒருவனால் 17ம் குகை குடையப்பட்டுள்ளது. இதற்கு அழகிய பூவேலைப்பாடுடன் கூடிய விரிவான முறையில் செதுக்கப்பட்ட வாயில் உண்டு. வாயிலின் பக்க நிலைகளில் உள்ள கங்கை யமுனையின் சிற்பங்கள் அழகாக செதுக்கப்பட்டுள்ளன.

அஜந்தா குகைகளைப்பற்றி சில பொதுவான விவரங்கள் அங்கு செல்பவர்களுக்கு உதவும் வகையிலும் மேலும் அவற்றின் சிறப்பைப் பற்றியும் சிறிது தெரிந்துகொள்ளலாம்.

6ம் நூற்றாண்டிலிருந்து 7ஆம் நூற்றாண்டுவரை அன்றைய சீன யாத்ரிகர் ஹுயன்–ஸுவாங் என்று அழைக்கப்படும், இவர் அஜந்தாவைப்பற்றி குறிப்பிடுகிறார்.

'வட்டவடிவான மலைச் சரிவில்' சங்கராமா' குகைகள் அடர்ந்த காட்டின் நடுவே அமைந்துள்ளன. பெரிய வாயில்கள் கொண்ட குகைகள் உள்ளன, என்று குறிப்பிடுகிறார்.

7ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு பௌத்த மதம் ஒதுக்கப்பட்ட காரணத்தால் அஜந்தா குகைகளும் பொலிவை இழந்து, சிறப்பையும் இழந்தன.

19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சில ஆங்கிலேய சிப்பாய்கள் அந்த இடத்திற்கு வேட்டை ஆட வரும்போது அவர்களுள் ஒருவர், மலையின் உயரப்பகுதியிலிருந்து அரை வட்ட வடிவில் அமைந்துள்ள குகைகளைக் கண்டார். ஆர்வம் மிகுதியால் தன் சகாக்களுடன்

Koviloor Digital Library



மலை பள்ளத்தாக்கில் இறங்கி குகைகளைக் கண்டு அதிசயித்தனர். தாவரங்களால் மறைக்கப்பட்டு பல குகைகளைக் கண்டனர். ஏதோ ஓரிரு குகைகளை ஆடு மேய்ப்பவர்கள் தங்குவதற்காக பயன் படுத்திக் கொண்டனர்.

அவர்கள் அஜந்தா குகைகளை கண்டு பிடித்ததை அரசுக்கு தெரிவித்தனர். பிறகு புதைபொருள் இலாக்காவால் குகைகளை சுத்தப்படுத்தி உலகுக்கு தெரியும்படி செய்தனர். இதற்காக அவர்கள் 50 ஆண்டுகள் கடும் உழைப்பில் குகைளை சீர்படுத்தினர்.

உலகமே வியக்கும்படியான கலைக்கருவூலமாக விளங்க ஆரம்பித்தன, அஜந்தா குகைகள். குகைகளின் உள்ளே உள்ள ஓவியங்களும், வெளியே, தூண்களில் உள்ள சிற்பங்களும் கலைஞர்களை வெகுவாகக் கவர ஆரம்பித்தன.

அஜந்தா ஓவியங்கள், சிற்பங்களைப்பற்றி எழுத வேண்டுமானால் பல தொகுதிகள் கொண்ட நூல்களாகிவிடும். இங்கு நாம் அஜந்தா சிற்பங்களைப்பற்றிதான் தெரிந்துகொள்கிறோம்.

'அஜந்தா' என்றால் ஓவியங்கள்தான் நினைவிற்கு வரும். சிற்பங்களுக்கு அவ்வளவு முக்யத்வம் இல்லையென்றாலும், அஜந்தாவில் சிற்ப செல்வங்களுக்கும் குறைவில்லை. அஜந்தா தவிர பிற பௌத்த குகைகளில் ஓவியங்கள் ஏதும் அதிகமாக இல்லை எனலாம். குகை அமைப்பு, பிட்சுகள் வாழும் விஹாரங்கள் மற்றும் புத்தரின் வாழ்க்கையை தெரிவிக்கும் சில சிற்பங்கள் தான் இருக்கும்.

அஜந்தா, கட்டிடக்கலை, சிற்பக்கலை ஓவியக்கலை இம் மூன்றுக்கும் பிரபலமாகத் திகழ்கிறது. எல்லா குகைகளும் பௌத்த மதத்தைச் சார்ந்தவை.

Koviloor Digital Library



அரை வட்ட வடிவமான அமைப்புக் கொண்ட கட்டிட அமைப்புக்கு 'ஸ்தூபம்' என்று பெயர். சாஞ்சிஸ்தூபம் நாகார்ஜுன கொண்டாஸ்தூபம் எல்லாம் பௌத்த ஸ்தூபங்களே. புத்தரின் உடலின் ஏதேனும் ஒரு சிறு பாகத்தை நடுவில் அமைத்து அதன் மீது அரைவட்ட வடிவில் ஸ்தூபத்தை எழுப்புவார்கள். பிற்காலத்தில் புத்தரின் நினைவுச் சின்னமாகக் கருதி ஸ்தூபம் ஆங்காங்கு எழுப்பினார்கள்.

அடுத்து 'விஹாரம்' என்பது, பிட்சுக்கள் தங்கும் இடங்களாக அமைத்து குகைகளை குடைவார்கள். இங்கு பல அறைகள் இருக்கும் விஹாரத்தில் பெரிய புத்தர் சிலைகள், போதி சத்துவர் சிற்பங்கள் இருக்கும் துவார பாலகர்கள் தாரா சிற்பங்களும் இருக்கும். அஜந்தாவில் 28 குகைகள் இருக்கின்றன. இவற்றில் ஒரு சில குகைகளைத் தவிர மற்றவை முழுதும் முற்றுபெற்ற அழகான குகைகள்.

பிரபல கலை ஆராய்ச்சியாளர் பேராசிரியர். D. D. கோசாம்பி அவர்களின் கூற்றுப்படி, மேற்கு தொடர்ச்சி மலைச்சரிவுகளில்தான் பல பௌத்த குகைகள் உள்ளன. சுதாகர் முதல் கர்லா, பாஜா, நாசிக், பித்தல்கோரா தொடர்ந்து அஜந்தா வரை அமைந்துள்ளன.

பௌத்த சன்யாசிகள் நகரங்களில் வசிப்பதில்லை. காடு, மலை போன்ற இடங்களில் குகைகளில்தான் வாழ்ந்து வந்தார்கள். நகர்ப்புறம் சென்றாலும் இரவுக்குமுன் குகைகளுக்குத் திரும்பி விடுவார்கள். அவர்கள் அமைதியை விரும்பியும், தியானத்திற்கு தனிமை ஏற்றதாக இருக்கும் என்ற எண்ணத்தால் காடுகள் அடர்ந்த மலைக் குகைகளில் வாழ்ந்துவந்தார்கள். இந்துமதத்திலும் ரிஷிகளும் அந்த விதமாக ஊருக்கு வெளியே குடிசை அமைத்து வாழ்ந்து வந்தார்கள்.

Koviloor Digital Library



அஜந்தா ஓவியங்கள், சிற்பங்கள் எல்லாம் பௌத்த மதத்தை சார்ந்தவை. மகான் புத்தர் உருவ வழிபாட்டை வெறுத்தார். இக்கருத்தையே அவருடைய சிஷ்யர்கள் பின்பற்றினர். தவிர புத்தர் வண்ண ஆடைகளை உடுத்த விரும்பாதவர். பெண்களை சிஷ்யைகளாக ஏற்க விரும்பாதவர். இதெல்லாம் வாழ்க்கையை புனிதப்படுத்தக் கூடியவை அல்ல என்பது அவரது கருத்து.

'புத்தரின் மரணத்திற்கு பிறகு அவருடைய கருத்தைப் பின்பற்றி வாழ்க்கையை நடத்த முடியாத மக்கள். வேறு வழி ஏதாவது உள்ளதா? என்று பிட்சுக்களைக் கேட்க, அவர்கள் புத்தரையே கடவுளாக நினைக்கும்படி மக்களைத் தூண்டினர். வேதாந்த கருத்துக்கள் புரியக்கூடிய நிலையில் அக்காலத்து மக்கள் இல்லை; காரணம் போதிய படிப்பு இல்லாததால்தான் என்று அறிஞர்கள் கூறுகிறார்கள்.

தியானத்தின் மூலம் உயர்நிலையை அடையலாம் என்ற புத்தரின் கருத்து பாமர மக்களுக்குப் புரியவில்லை. புத்த பிட்சுக்கள் (புத்தர் வாழ்ந்த காலத்தில்) புத்தரின் கருத்தைக் நன்கு புரிந்து கொண்டு தியான வழிபாட்டில் இருந்தனர். இதனால் பௌத்த மதம் மக்களளவில் பரவவில்லை. இதற்கு ஹீனயான முறை என்று பெயர் அப்போது இருந்தது.

புத்தரின் மறைவுக்கு பிறகு 'மஹாயானா' முறை வந்தது. அதில் உருவ வழிபாடு, புத்தரின் முன் பிறப்பின் கதைகள், கோட்பாடுகள் எல்லாம் மக்களிடம் பரவி வளர்ந்தன. புத்தரை தெய்வமாகவே கருதினர். பெண்களும் சிஷ்யைகளாக சேர்ந்தனர். பிறகு பௌத்த மதம் வளரத் தொடங்கியது. அதன் காரணமாக பல பௌத்த விஹாரங்கள், ஸ்தூபங்கள் கலைக்குகைகள், ஓவியங்கள் சிற்பங்கள் எல்லாம் வளர்ந்தன. மக்களும் பௌத்தத்தை மிகவும் விரும்பினார்கள். அந்த காலத்தில்தான் அஜந்தா, நலாந்தா,

Koviloor Digital Library



எல்லோரா, எலிபெண்டா போன்ற சில குகைக் கோயில்கள் தோன்றின.

அஜந்தா போன்ற சைத்யங்கள் (பிரார்த்தனை கூடம்) மேற்கு மலைகளின் சரிவுகளில் 'பாஜா – பேட்சா – கர்லா – கன்ஹரி' குகைகள் குடையப்பட்டன. எல்லாமே பிரார்த்தனை கூடங்கள். அஜந்தாவில் (8,9,1012,13) எண்கள் உள்ள குடைவரை தலங்கள், எல்லாம் பிட்சுகள் தங்குவதற்கும், பிராத்தனை கூடங்கள்தாம். குகையின் நடுவில் புத்தரின் நினைவுச் சின்னமாக ஸ்தூபங்கள் இருக்கும். 'விஹாரம்' என்ற வலை குகைகள் பௌத்த பிட்சுகள் வாழும் இடங்களாகும்.

அஜந்தா குகைகள் ஔரங்காபாத் என்ற ஊரிலிருந்து சுமார் 106 கி. மீட்டர் தூரத்தில் உள்ளன. அங்கு செல்ல பஸ், டாக்ஸி, அரசு பேருந்துகள் எல்லாம் கிடைக்கும். அஜந்தாவில் தங்குவதற்கு சுற்றுலாத்துறையின் தங்கும் விடுதிகளை கட்டியுள்ளார்கள்.

'ஹீனயானா' முறையிலிருந்து 'மஹாயானா' முறைக்கு வந்த பிறகுதான் பௌத்த மதத்தில் கலைகள் வளர்ந்தன. கட்டிடக்கலையில் மாற்றம், ஓவியம், சிற்ப கலைகளில் ஒரு சிறப்பான வடிவமைப்பு போன்றவை இடம் பெற்றன. இந்த மாற்றங்கள் இந்துமத வழிபாட்டு முறைகளை பின்பற்றியதால் ஏற்பட்ட மாற்றங்கள்.

புகழ்பெற்ற சிற்பங்கள் கொண்ட 1, 4, 17, 19 24 எண்கள் கொண்ட குகைகளில் மிக அழகான சிற்பங்களைக் காணலாம்.

கி.பி இரண்டாம் நூற்றாண்டில் குடையப்பட்ட குகைகள் 'ஹீனயான' முறைப்படி அமைந்த குகைகள், நீண்ட இடைவெளிக்குப்பிறகு கி. பி. 5–6ம் நூற்றாண்டில் குடையப்பட்ட குகைகள் 'மஹாயான' முறையைப்படி அமைத்த குகைகள் அரைவட்ட

Koviloor Digital Library





அஜந்தா

Koviloor Digital Library



வடிவில் அமைந்த அஜந்தா குகைகளின் பள்ளத்தாக்கில் 'வஹீரா' நதி ஓடுகிறது. அஜந்தா போகும் போது ஒரு மலை முகட்டில் உள்ள பாதையிலிருந்து கீழே பார்த்தால் மொத்த குகைகளின் தோற்றம் அழகாக இருக்கும்.

மூன்று சிறப்பு அம்சங்களை ஒருங்கே கொண்ட ஆஜந்தா குகைகளில் அமைந்த ஓவியம், சிற்பம், கட்டிடக்கலை எல்லாம் மனத்தை கவருவனவாக அமைந்திருக்கும்.

26ஆம் எண் உள்ள குகையில் புத்தர் படுத்துள்ளார் 'ஒருபக்க வாட்டில். அருகே சில பிட்சுக்கள். படுத்திருக்கும் புத்த பிரானின் 'பரிநிர்வாண' (ஜீவசமாதி) நிலை, பார்க்க மிகவும் அழகாக இருக்கும். சிற்பத்தின் முகபாவம் நேரில் பார்த்தால்தான் புரியும். இப்படியாக அஜந்தா சிற்பங்களைப் பற்றி எழுதிக்கொண்டே போகலாம்.

அஜந்தா குகைச் சிற்பத் தோற்றம்

Koviloor Digital Library

# 6. சாளுக்கியர் காலத்துச் சிற்பங்கள்

தக்காணத்தில் வாகாடகருக்குப்பின் மேலைச் சாளுக்கியர் மிகவும் ஆற்றல் வாய்ந்த அரசவம்சத்தினராக இருந்தனர். முதலாம்



பதாமி—மேல்கட்டி சிவாலயம்

புலிகேசிக்குப் பிறகு போர் ஆர்வங்கொண்ட அவன் மகன் கீர்த்திவர்மன் வந்தான்.

இவனே புகழ்மிக்க இரண்டாம் புலகேசியின் தந்தை. கீர்த்திவர்மனுக்குப்பின் அவன் தம்பி மங்களேசன் அரியணை ஏறினான். இவன் கலைப்பிரியன் தலைநகரான வாதாபியில் மிகச்

Koviloor Digital Library



சிறந்த குகைகளையும், கோயில்களையும் ஆக்கினான். வாதாபியில் அழகுமிக்க குகை வைணவ குகை எனப்படும் நான்காம் குகை. திரிவிக்ரிமன், நரசிம்மன், விராட், வராகன் போன்ற விஷ்ணுவின் உருவங்களை சமைத்தான். அவை கம்பீரமான சிற்பங்கள். வராகம் சாளுக்கியரின் இலைச்சினையாகச் சிறப்பாக காட்டப்பட்டுள்ளது.

கடலில் மூழ்கிய பூமியை எவ்வாறு வராகம் தூக்கியதோ, அவ்வாறே உலகில் அவன் ஆட்சியின் கீழுள்ள பரந்த பேரரசின் சுமையை எளிதாகத் தாங்கினான் என்பது குறித்துப் பெருமைப்பட அரசனுக்கும் காரணம் இருந்தது என்பதை அது சுட்டுகிறது.

கி.பி. 578–இல் இவன் பன்னிரண்டாம் ஆட்சியாண்டில், குறிக்கப்பெற்ற கல்வெட்டு ஒன்றில் இக்குகைக்கோயிலைக் கட்டுவதும், இதில் விஷ்ணு விக்ரகத்தைப் பிரதிஷ்டை செய்வதும் விவரிக்கப்பட்டுள்ளன. வராக சிற்பத்திற்குப் பக்கத்தில் உள்ள கல்வெட்டும் பல விவரங்களைத் தருகிறது. மங்களேசனின் சிற்பிகளின் அலங்கார சிற்பங்களையும் சுற்றிப் பார்க்கத் தூண்டும் விவரங்களை அக்கல்வெட்டு, குகைக்கு வருகிறவர்களுக்குத் தெரிவிக்கின்றன. வாதாபிச் சாளுக்கியர்கள். வாகாடக மரபு முறையைத் தொடர்ந்து பின்பற்றியதை வாதாபி சிற்பங்கள் நன்கு பிரதிபலிக்கின்றன.

வாதாபி குகையில் வராகச் சிற்பத்தின் அமைப்பு மாமல்லபுர வராக சிற்பத்துக்கு இணையாக உள்ளது. வாதாபி வராக சிற்பம் மாமல்லபுர வராக சிற்பத்தை அமைக்க தூண்டுதலாக இருக்கும் என்று அறிஞர்கள் கூறுகிறார்கள். மாமல்லபுரத்தில் நரசிம்ம வர்மனின் பாட்டனான சிம்மவிஷ்ணுவும், தந்தையான மகேந்திரவர்மனும் தங்கள் தேவியரோடு வராக சிற்பத்திற்கு அருகே புடை சிற்பங்களாக (Bas - Relief) செதுக்கப்பட்டிருப்பது கவனத்திற்கு உரியது.

Koviloor Digital Library



வாதாபியில் உள்ள சிற்பங்கள் முற்கால சாளுக்கியரின் கலைத்திறனை ஆராய நல்லதொரு கருவூலமாக, அமைந்துள்ளன.

தக்காணத்தில் அக்காலச் சிறந்த சிற்பங்கள், சாளுக்கியரின் கலைத் திறமைக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.

கி.பி. 606 இல் ஹர்ஷவர்த்னர் 'தானேசா'வையும், கனோஜையும் ஆண்டார். அவர் குப்தர்காலத்துப் பெருமையையும், புகழையும் புதுப்பித்தார்அவருடைய எல்லை தெற்கே நர்மதை வரை பரவியிருந்தது. முதலாம் புலிகேசியால் நிறுவப்பட்ட சாளுக்கிய பேரரசு, அப்போது இரண்டாம் புலிகேசியின் கீழிருந்தது. இப்புகழ் வாய்ந்த மன்னன் ஹர்ஷவர்த்தனரை நர்மதைக்குத் தெற்கே வரவிடாமல் தடுத்து நிறுத்தினார். இரண்டாம் புலிகேசி, காஞ்சியைத் தலைநகராகக் கொண்ட மகேந்திரனின் மகனான நரசிம்மனால் தோற்கடிக்கப்பட்டு யுத்தகளத்திலேயே மாண்டார். இக்காலத்துச் சிற்பங்களை குப்தர்கால சிற்பமாகவே கருதலாம். ஹர்ஷரும், சாளுக்கியர்களும் குப்தர்களது சிற்பக் கலையையே தொடர்ந்து போற்றி வந்தமையின் இவ்விரு கலைகளுக்கிடையே வேறுபாடுகள் கிடையாது. 'ஆய் ஹோல் கோயிலில் உள்ள சிற்பங்கள் சாளுக்கியரது சிற்பங்களாகும். 'தேவ்கர்' ஆலயத்தைப் போல இருக்கும் கண்ணனது சிலை மிகப் புகழ்பெற்றது. எல்லோரா குகைக் கோயில்களில், 'துமார்லேனா', ராவண்–கா–காய்', 'தெசாவதார', 'ராமேஸ்வரா' முதலியவற்றில் உள்ள சிற்பங்கள் சாளுக்கியர்கால கலைத்திறனை வெளிப்படுத்துகின்றன.

தசாவதார குகைக் கோயிலில் உள்ள பைரவர் சிற்பம், பயங்கர உருவுடன் காணும் ஆண்டவனின் சிற்பம். சூலம், மண்டையோடு தாங்கும் கரங்களுடன் காட்சி தரும் இச்சிற்பம் மிக வேலைப்பாடுகளுடன் கலையம்சத்துடன் விளங்குகிறது. அற்புதப்

Koviloor Digital Library



படைப்பு. இதே குகையில் உள்ள மார்க்கண்டனைக் காக்க காலால் காலனை உதைத்த காலகாலனின் (சிவபிரான்) சிற்பம் சிறப்பு வாய்ந்தது. இக்குகையின் மற்றொரு பக்கத்தில் உமையவளின் வேண்டுகோளுக்கு இணங்கி வேதரிஷிகள் பாட, விண்ணவர் கொண்டாட ஆனந்தத் தாண்டவம் புரியும் அண்ணலின் சிற்பமும், எலிபெண்டா குகையில் உள்ள மற்றோர் தாண்டவச் சிற்பமும் மிக நேர்த்தியானவை.

பாதாமி (வாதாபி) குகைக் கோயில்களும், ஔரங்காபாத் குகைக்கோயில்களும் முந்திய சாளுக்கிய காலத்தவையாகும்.

சாளுக்கியர்கள் வடக்கே குப்தர்களினின்றும், தெற்கே பல்லவர்களினின்றும் தங்கள் கலை படைப்புகளில் ஒரு கலை கலவையைச் சேர்த்துக் கொண்டார்கள்.

## பாதாமி (வாதாபி)

கர்நாடகா மாநிலத்திலுள்ள பீஜபூர் மாவட்டத்தில் ஒரு கிராமமாக அமைந்துள்ளது பாதாமி. வாதாபி என்றும் அழைக்கப்படுகிறது. கிராமத்தின் நடுவே மக்களால் உருவான பெரிய குளம் உள்ளது. அதைத்தான் இன்றைய மக்கள் குளிப்பது, துணிகள் துவைப்பது, ஆடு, மாடுகளைக் குளிப்பாட்டுவது போன்ற வேலைகளுக்கு பயன்படுத்தி வருகிறார்கள். சுற்றிலும் மலைக் குன்றுகள். இந்த குளம் வற்றாத குளம், மழைக்காலத்தில் அருகேயுள்ள குன்றுகள் மூலமாக நீர் குளத்துக்கு வருகிறது. இக்குளம் இன்றைய அரசால் கட்டப்பட்டதல்ல. பல நூற்றாண்டுகளுக்கு முன் சாளுக்கிய மன்னர்களால் உருவாக்கப்பட்ட குளம். இக்குளம் இன்றும் மக்களுக்கு பயன்படுகிறது. அன்றைய பாதாமி குடிசைகள், சிறுவீடுகள், தூசி

Koviloor Digital Library



பறக்கும் சிறு சாலைகள் கொண்ட இடமாக விளங்கியது. பிறகு சாளுக்கியரின் தலைநகராக இருந்தது. முன்பு இவர்கள், ஹர்ஷனை வென்ற இடம். கானோஜை ஆண்ட அரசன் ஹர்ஷன் ஆவான். பெரிய சைன்யத்துடன் இங்கு வந்துபோரிட்டு ஹர்ஷன் படையை விரட்டி, இவ்வூரை கைபற்றி தலைநகராக ஆக்கிக்கொண்டார்கள் சாளுக்கிய அரசர் புலிகேசி (இரண்டாம்) பாதாமியிலிருந்து பஸ் அல்லது கார் மூலமோ பட்டடக்கல் என்ற சாளுக்கிய கலைக்கோயில்களை அடையலாம். மல்லபிரபா என்ற நதியின் கரையில் அமைந்துள்ளது. பாதாமியை விட இந்த ஊர் கிராமம் என்று சொல்ல முடியாபடி சிறு ஊராக இருக்கிறது. அங்கிருந்து ஒரு மணி பயணித்தால் 'அய்ஹோலே' என்ற சாளுக்கிய கலைக் கோயில்களை அடையலாம். இங்கு பழமையானதும், புதுமையானதுமான சாளுக்கிய ஆலயங்கள் உள்ளன. கர்நாடக மாநிலத்தில் சாளுக்கிய சின்னங்களும் ஆலயங்களும் நிரம்ப உள்ளன. இவற்றுள் இந்து சமய ஆலயங்களும், ஜைன மத கோயில்களும் உண்டு. எல்லாமே அழகு வாய்ந்த கலை அமைப்புகள்.. மேலை சாளுக்கியர்களின் கலைபடைப்புகளும், சிற்பவேலைப் பாடுடைய ஆலயங்களும் அபாரமான படைப்புகளாகும்.

'அய்ஹோல்' கல்வெட்டு ஒன்று இரண்டாம் புலிகேசி ஒரு மாபெரும் சாளுக்கிய மன்னன் என்று தெரிவிக்கிறது.

பாதாமியில் உள்ள மற்றொரு கல்வெட்டு முதலாம் புலிகேசியைப் பற்றியது. இந்த அரசனே சாளுக்கிய அரசை உருவாக்கியவன். பாதாமியில் உள்ள இண்டாம் குகைக்கோயில் மங்களேஸன் என்ற அரசனால் உருவாக்கப்பட்டது.

பாதாமி குகைக் கோயில்கள் எல்லாம் அஜந்தா, எல்லோரா குகைகளை ஒத்து உள்ளன. ஓவியங்களும், சிற்பங்களும், குகை

Koviloor Digital Library



அமைப்பு எல்லாம் அஜந்தா, எல்லோரா குகைகளிலிருப்பதுபோல் அழகாக உள்ளன. பாதாமியில் உள்ள நான்கு குகைகளில் இரண்டு இந்து சமயத்தைச் சாந்தும், ஒரு குகை வைஷ்ணவ பிரிவைச் சார்ந்தும், மற்றொன்று ஜைன சமயத்தைச் சார்ந்தும் உள்ளன.

மூன்று இந்து சமய குகைக்கோயில்களும் ஒரே சாயலாக உள்ளன. பாதாமி குகைகளை அடைய சில படிகட்டுகளில் ஏறி சென்றால் மாபெரும் முற்றத்தில் மூன்று குகைகளையும் காணலாம். அலங்காரத்தூண்கள் கொண்ட குகைகள். இரண்டாம் குகை வைணவ பிரிவைச் சார்ந்தது. இதுவே இங்குள்ள பெரிய குகை, அழகான சிற்பங்கள் கொண்ட குகையாகும். தூண்களின் மேல்பக்கங்களில் எல்லாம் அழகான தம்பதிகளின் சிற்பங்களைக் காணலாம். பலவித நிலைகளில் காதலர்களின் சிற்பங்கள். இக்குகைக்கு இச்சிற்பங்கள் புகழ் தருவனவாகும். குகையின் சுவர்களில் புடை சிற்பங்கள் (Bas - Relief) மிக நேர்த்தியானவையாகும். பாதாமியில் உள்ள இந்து சமய தெய்வ உருவங்கள் பாரதத்தில் உள்ள மற்ற சிற்பங்களைவிட பெரிய அளவில் உள்ளவையாகும். குகையின் உள்ளே நுழையும் போதே எங்கு நோக்கினும் சிற்பங்கள்தான். வியப்பாக இருக்கும் நாம் நம்மை மறந்து அச்சிற்பங்களின் அருகில் ஈடு பட்டுவிடுவோம்.

மூன்றாம் குகையில் உள்ள விஷ்ணு ஆதிசேஷன் மீது அமர்ந்திருக்கும் கோலம் மிகவும் அற்புதம். சாதாரணமாக சயன கோலத்தில்தான் விஷ்ணுவைப் பார்த்திருக்கிறோம். இங்கு விஷ்ணு ஆதிசேஷன் மீது கம்பீரமாக அமர்ந்திருக்கும் கோலம் சிற்பியின் அபாரத்திறனைக் காட்டுகிறது. அதேபோன்று வாமனாவதார சிற்பத்தொகுதியும் பெரிய அளவில் அற்புதத் தோற்றத்துடன் விளங்குகிறது.

Koviloor Digital Library



இந்து சமய கோயில் குகையின் முகப்பில் உள்ள நடராஜர் சிலை மிக அழகு வாய்ந்தது. நடராஜரின் நடனத் தோற்றம் இங்கு புதுமையாக உள்ளது. 16 கரங்களுடன் பெரிய அளவில் கம்பீரமாகவும், அழகாகவும் இருக்கும் இச்சிற்பம் ஒரு புதுமையான படைப்பாகும்.

சாளுக்கிய சிற்பங்களும் சரி, ஆலயங்களும் சரி எல்லாமே புதுமையாகவும், பெரிய அளவிலும் காணப்படுகின்றன.

பதாமியின் மலைக்குன்றுகள் ஒன்றின் மீது கட்டுமான கோயில் (மேலகட்டி) இருக்கிறது. மலகிரி சிவாலயா' என்ற பெயருள்ள இக்கோயில் விமானம் நாகர, திராவிட கலையம்சங்களைக் கொண்டது.

'அய்ஹோலே' யில் உள்ள கோயில்கள் பலதரப்பட்ட அமைப்பில் உள்ளன. சிற்பங்களும் அக்கோயில்களில் மிக அழகான தோற்றத்தில் அமைந்துள்ளன. 'லாட்கான்' கோயில் முஸ்லீம் பெயருள்ளதாக இருக்கிறது. ஒரு முஸ்லீம் துறவி இக்கோயிலில் வாழ்ந்து வந்ததாகத் தெரிகிறது. ஆனால் இது ஒரு இந்து சமயக் கோயிலே! 6 அல்லது 7ஆம் நூற்றாண்டில் உருவான சாளுக்கிய கோயிலாகும். சதுர வடிவில் முகமண்டபத்துடன், பன்னிரண்டு தூண்களுடன் உள்ள கோயில் உள் மண்டபத்தில் நான்கு தூண்களுடன் கூடிய கருவரை உள்ளது. எல்லாத் தூண்களும் சிற்ப வேலைப்பாடுகளுடன் அழகாக உள்ளன.

இக்கோயிலுக்கு அருகே துர்கா தேவி ஆலயம் இருக்கிறது. பார்ப்பதற்கு பௌத்த சைத்தியம் போல் காணப்படுகிறது. பிற ஆலயங்கள் போல் மேல் தளத்தில் விமானம் கிடையாது. இங்கு சில அழகுச் சிற்பங்கள் உள்ளன.

Koviloor Digital Library



'அய்ஹோலே' தலத்தில் பல வித்யாசமான சிகரங்களுடன் ஒரே இடத்தில் பல கோயில்கள் உள்ளன. இது ஒரு புதுமையான கோயில்களின் அமைப்பாகும். இவையெல்லாம் 550 – 800ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட கோயில்கள்.

இவற்றுள் 'விருபாக்ஷா' கோயில் முக்யமானதாகும். திராவிட கலாசாரத்தை பின்பற்றி எழுந்த கோயில் தமிழக கோயில் மாதிரி இருக்கும். அருகே 'மல்லிகார்ஜுனா கோயில் உள்ளது. இதுவும் விருபாக்ஷா கோயில் அமைப்பைக் கொண்டது. சாளுக்கியர்கள் இம்மாதிரியான புது அமைப்பைக் கொண்ட ஆலயங்களை ஆங்காங்கு நிர்மாணித்துள்ளார்கள். எல்லா ஆலயங்களுமே அபார சிற்ப அழகுடன் விளங்குகின்றன.

விருபாக்ஷர் கோயிலும், மல்லிகார்ஜுன ஆலயமும், இரண்டாம் விக்கிரமாதித்யனின் இரு ராணிகளால் அலங்கார வேலைப் பாடுகளுடன் கட்டப்பட்டுள்ளன. இரு அரசிகளும் சகோதரிகள். விக்கிரமாதியன் காஞ்சிக்கு சென்று வந்தவன். காஞ்சியிலுள்ள ஆலயங்கள் இவனைக் கவர்ந்ததால், இரு கோயில்களும் திராவிட, சாளுக்ய முறைகளைக் கலந்து உருவான கோயில்களே.

விருபாக்ஷபர் ஆலயத்தின் உள்ளே உள்ள மண்டபத்தில், ராமாயண, பாரதக் கதைகள், அங்குள்ள தூண்களில் சிற்பங்களாக செதுக்கப்பட்டுள்ளன.

இதேபோன்று மல்லிகார்ஜுன ஆலயத்திலும் பாகவத புராணத்திலிருந்து கருத்துக்களை எடுத்து சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன.

இவ்விரு ஆலயங்களும் பாபநாதர் கோயிலும், காசி விஸ்வநாதர் ஆலயமும் நாகர, மற்ற வடபாரத முறையில் அமைந்துள்ள

Koviloor Digital Library

துர்கை கோயில் அயிஹோல்

கோயில்களாகும். சாளுக்கிய கட்டட அமைப்பு 'அய்ஹோலே' யிலிருந்து ஆரம்பித்து, பாதாமி, பட்டடக்கல் வரை பரவியுள்ளது. தென்னகத்தையும், வடபரதத்தையும் கலைகள் மூலம் கலந்து 'சாளுக்கிய' கலையை உருவாக்கினார்கள் என்ற கலை வல்லுனர்கள் கூறுகிறார்கள்.

பல்லவர்கள் தங்களுக்கென ஒரு தனி முறையை (பாணியை) உருவாக்கினார்கள்.

வடக்கே இருந்த குப்தர் மற்றும் பல அரசுகள் பல தரப்பட்ட கலைகளைக் கலந்து உருவாக்கினார்கள். சாளுக்கியர்களும் ஒரு கலப்பு கலை முறையைத்தான் கடைபிடித்தார்கள். ஆனால் அவர்களது கலைபடைப்புகள் உலகப் புகழ்பெற்றவை.

Koviloor Digital Library

# 7. பல்லவர் காலம்

பல்லவர்களின் தோற்றம்பற்றி ஆராய்ச்சியாளர்களுக்குள் கருத்து வேற்றுமை நிலவி வருகிறது. ஆந்திரர்களின் சிற்றரசர்களாக இருந்து பின்னர் பிரிந்து தனியரசு கொண்டவர் எனச் சிலர் கருத்து கூறுகின்றனர். மற்றொரு சாரார் மணிபல்லவம் என்ற தீவிலிருந்து தோன்றியவர் எனக் கூறுகின்றனர். இவர்களது ஆட்சி கி.பி. சுமார் 600லிருந்து 850 வரை தென்னாட்டில் மிகப் பிரசித்திப் பெற்று விளங்கியது, பல்லவ மன்னர்களில் முதலாம் மகேந்திர வர்மனும், நரசிம்ம வர்மனும் மிக முக்கியமானவர்கள். இயல், இசை, நாடகம், கோயில் சிற்பம் முதலிய கலைகள் அனைத்திலும் தேர்ச்சி பெற்று விளங்கிய மகேந்திர வர்மன் காலத்தே

காஞ்சி கைலாஸநாதர் கோயில்

Koviloor Digital Library



தென்னாடு பொன்னாடாக விளங்கிற்று. பல கலைக் கோயில்களைத் தென்னாட்டில் தோற்றவித்தவன் இவனே. நரசிம்மவர்மன் காலத்தில்தான் மாமல்லபுரத்தில் ஒற்றைக்கல் கோயில்கள் தோற்றுவிக்கப்பட்டன.

புகழ்பெற்ற மகிஷாஸுர மர்தனி சிற்பம்

பல்லவர் காலத்து சிற்பங்களில் திருச்சிராப்பள்ளி குகைக் கோயிலில் உள்ள சிற்பமும், மாமல்லபுரத்துள்ள சிற்பங்களும் மிகப் புகழ்வாய்ந்தவை. வஜ்ரம் போன்ற உடல், பளுவான கதை, எருமையின் முகம், வரம்தன்னை அழிக்க முடியாத என்ற இறுமாப்பு, இவற்றை உடைய அரக்கன் கையில் அகப்பட்டு உலகம் அலறியது. தேவர்கள் அஞ்சி ஓடினர். மூவுலகிற்கு அன்னை தன் மக்கள் படும் அல்லல் கண்டு வெகுண்டு எழுந்தனள். சிங்கத்தின் மீது அமர்ந்து சீறிப் பாய்ந்தனள். தாயுள்ளம் படைத்த தெய்வம், வில்லும் அம்பும் கொண்டு

Koviloor Digital Library



அரக்கனுடன் சமர்தொடுத்தாள். அன்னையின் தோற்றமே அரக்கன் மனத்திலே அச்சத்தை ஊட்டியது. போர் மூண்டது. அசுரன் தோற்று பின் வாங்கினான். இந்த காட்சியை மாமல்லபுரத்திலுள்ள மகிஷாசுரமர்த்தினி மண்டபக் குகை அழகாகச் சித்தரிக்கிறது. அற்புதமான கலை படைப்பு! வெளி நாட்டுப் பயணிகள் மாமல்லபுரம் வந்து அங்குள்ள பல்லவச் சிற்பங்களைப் பார்த்து அதிசயித்துப் போவார்கள். ஆனால் மகிஷாசுரமர்த்தனி சிற்பத்தின் முன்பு வந்தவுடன், எப்பேர்ப்பட்ட சிற்பம் என மெய்மறந்து அப்படியே உட்கார்ந்து விடுவார்கள். அருகில் இருப்பவரும் பேச மாட்டார்கள். சில நிமிடங்களாவது மெய் மறந்து அங்கம் அங்கமாகப் பார்த்து ரசிப்பார்கள். இதற்கு இணையான சிற்பம் உலகில் வேறு எங்குமே இல்லை என்பார்கள். பிறகுதான் சிற்பத்தின் விவரத்தைக் கேட்பார்கள். அவர்களுக்கு கதை தெரியாது, சமயம் தெரியாது, காலம் தெரியாது, இருப்பினும் அதன் அழகைக் கண்டு ரசித்து மகிழ்ந்து போவார்கள்.

வலப்புறம் திருமால் பாற்கடலில் அனந்தன் எனும் பாம்புமீது அரிதுயிலில் இருக்கிறார். இங்கு மகிஷாஸுர மர்த்தினியின் சிற்பந்தான் எல்லோர் மனத்தையும் கவர்ந்துள்ளது. அதனால்தான் இக்குகை 'மகிஷாஸுரமத்தினி குகை' என்று அழைக்கப்படுகிறது. மகிஷன் தேவர்களையும் மக்களையும் துன்புறுத்தி, உலகை துவம்சம் செய்ய ஆரம்பித்தான். தேவர்கள் விஷ்ணுவையும், சிவபெருமானையும் அணுகினர். சிவனும், விஷ்ணுவும் தன்னை அழிக்கமுடியாதபடி வரம் பெற்றவன். தேவர்களின் வேண்டுகோளுக்கு சிவவிஷ்ணுவால் அசுரனை அழிக்க முடியவில்லை. கோபம் கொண்டார்கள். தேவர்களின் கோபமும் சேர்ந்துகொண்டது. இதுவே மாபெரும் சக்தியாக தேவியாக தோன்றியது. அத்தேவியே கொற்றவையாக, துர்க்கையாக அவ்வசுரனுடன் போர்தொடுத்தாள்.

Koviloor Digital Library



அசுரனோ பயங்கரமான எருமை வடிவினன். அகங்காரத்தின் உச்சநிலையை எட்டிப்பிடித்த எருமை தனது கால் குளம்புகளின் கீழ்பட்டவற்றை எல்லாம் அழுத்தி உடைத்து நொறுக்கும் வலிமை மிக்கது. அவனுக்கு உதவ ஓர் அசுரப்டை வேறு. பல உருவங்களை எடுக்கும் மாயாஜாலன். இவ்வசுரனுடன் போர் புரிய வருகிறாள் மென்மையே உருவான பெண் தெய்வம் துர்க்கை. அசுரனுக்கும், தேவிக்கும் கடும் போர் நடக்கிறது. இப்போர் விவரத்தை இன்றும் விவரமாக 'தேவி மகாத்மியம்' எனும் நூல் எடுத்துக்கூறுகிறது.

தேவி சிம்மத்தின் மீதமர்ந்து போரிடுகிறாள். அவளுடைய படையில் சிறுசிறு குள்ள கணங்கள். கத்தியும் கேடயமும் ஏந்தி போரிடுகின்றனர். அசுரன் பூமிக்கும் விண்ணுக்கும் எட்டும் வகையில் ஓங்கிய சரீரம் உடையவன். அவன் தலைமேல் குடைபிடித்து அவனது கொற்றமும், சீற்றமும் வருகிறது.

சிற்பத்தைக் காணும்போது சிற்பத்தின் நடுவே மேல்கீழாக ஒரு மையக்கோடு வரைந்தால், இடப்புறம் தேவியும் அவளது படையும், அவளும் களத்தில் முன்னேறும் வேகத்தையும் – வலப்புறம் மகிஷனும் அவனது படையும் பின்னேறும் காட்சியையும் பிரித்துப்பார்க்கலாம். அசுரனின் காலின் கீழ் வீழ்ந்து கிடக்கும் உயிரற்ற ஒரு அசுர வீரன், தேவிக்கும் அசுரனுக்குமிடையே மற்றோர் அசுரன் துண்டிக்கப்பட்டு தலை குப்புற வீழ்கிறான். மேலே ஓர் அசுரன் கால் மடித்து கரம் கூப்பி உயிர்ப்பிச்சை கேட்கிறான். மேலே ஒரு அசுரன் பின்புறம் புறமுதுகிட்டுத் திரும்பி தப்பலாமா என சமயம் பார்த்து இருக்கிறான். மற்ற ஒரு அசுரன் கீழே விழுந்து ஒரு கரத்தால் தன்னைப் பூமியில் தாங்கி, மறுகரத்தால் பயந்து நடுங்கி யாசிக்கிறான். ஒருவன் மற்றவனைப் பார்த்து கீழே விழப்போகிறான் என்ற இறுதிகட்டத்தை எதிர் நோக்கியுள்ளான்.

Koviloor Digital Library



தன் படை முழுதும் வீழ்ந்து மடிந்து, துண்டித்து, யாசித்து மடியும் தோல்வியின் சின்னங்களாகத் திகழ்ந்த போதும், தனது மூர்க்கத்தலை பின் சாய்ந்தபோதும், தனது உடலே வெட்டுண்டு சாய்ந்து வீழும் மரம்போல்பின் சாய்ந்தபோதும், எந்த கதையை ஒரே கரத்தால் சுழற்றி உலகையே நடுங்க வைத்தானோ, அந்த கதையை இரு கரத்தாலும் தாங்கி நின்று மேலும் கொக்கரிக்கிறான். தேவியின் எழிலை சிற்பத்தில் பாருங்கள். கர்ஜித்துப் பாயும் சிங்கத்தின் மீது ஏறிவந்தாலும் எழில் கொடியாகத்தான் தோன்றுகிறாள். வில்லும், அம்பும் எய்திப் போரிட்ட போதும் அதிலும் ஒரு எழில் தோன்றுகிறதே தவிர சீற்றம் இல்லை, எண் கரத்தில் சங்கும், சக்கரமும் எந்திய இரு கரங்கள், மணியும் பாசமும் ஏந்திய இரு கரங்கள், வாளும், கேடையமும் ஏந்திய இரு கரங்கள், காலில் சிலம்பு ஆர்ப்ப போரிடுகிறாள். அவளது குள்ளச் சிறுகணங்கள் வேகமாக குதித்து முன்னேறுகின்றன. ஒவ்வொன்றும் வெற்றி நடை போடுகின்றன.

போரின் இறுதிகட்டம். 'இறுமாப்புடன் எதிர் நிற்கும் மூடனே! நன்றாகக் கொக்கரி! இன்னும் ஒரு வினாடியில் அடிபட்டு சம்ஹரிக்கப்பட்டு விழப்போகும் உன்னைக் கண்டு அமரர்கள் ஆரவாரிக்கப்போகிறார்கள். அழிவின் இறுதிக் கோட்டில் நிற்கிறாய், கண்டுகொள்' எனக்கூறியதாக 'தேவி மகாத்மியம்' கூறும். இங்கு ஓர் காப்பியம் சிற்பவோவியமாக உள்ளது.

இம்மாபெரும் சிற்பத் தொகுதியில் மகிஷனின் அழிவைக் காட்டவில்லை. இறுதி கட்டத்தை மட்டும் ஓர் ஒப்பரும் காப்பியமாகப் படைத்து முடிவை, பார்ப்போர் உணர்ந்து கொள்ளவிட்டுவிட்டான் சிற்பி. இதுவே மாமல்லபுர 'மகிஷாசுரமர்த்தினி' சிற்பத்தின் சிறப்பு. இச்சிற்பத்தைப் பற்றி தனி நூலாகவே எழுதலாம். கலையெனில் இதுவே கலை.

Koviloor Digital Library



கொற்றவை பற்றி ஏராளமான பாடல்கள் தமிழில் உள்ளன. இரண்டாயிரம் ஆண்டுகளாக தமிழகத்தில் கொற்றவை வழிபாடு சிறந்துள்ளது. இவற்றில் இச்சிற்பத்திற்கேற்ப சிலப்பதிகாரத்தில் வேட்டுவ வரியில் காணப்படும் பாடல்களே ஒப்பற்றவையாகும் (சிற்பக் கருத்து: டாக்டர் இரா. நாகசாமி அவர்கள்)

அடுத்து மாமல்லபுர ஆதிவராஹ மண்டபத்தைக் காணலாம். இது ஒரு முக்கியமான குகைக் கோயில். குகையில் நடுவில் செல்வத்திருமகள் வீற்றிருக்கும் சிற்பக்காட்சி மிக அழகுள்ளது. பணிப்பெண்கள் சுற்றிலும் நிற்கின்றனர். அலை வீசும் கடலிலிருந்து அள்ளி உண்ட நீரைத் தன்னுள் அடக்கி விண்ணகத்தை மறைத்து வரும் கார்காலத்து மேகம் போல் இரு மத்தகஜங்கள் துதிக்கையில கொண்டுள்ள குடங்களிலிருந்து நீரை அலை மகளின் மீது மழையென கொட்டுகின்றன. செல்வத்திருமகள் தெய்வீக ஒளியுடன் அமர்ந்திருப்பது கண்களுக்கு ஒரு அருமையான காட்சியாகும். மற்றொரு பகுதியில் மன்னன் மகேந்திரனையும், அவனது மனைவியரையும் காணலாம்.

மாமல்லபுரத்து சிற்பங்கள் யாவும் தென்னகத்துக்குப் பெருமை தரும் சிற்பங்களாகும். 90 அடிநீளமும், 25 அடி உயரமும் உள்ள கற்பாறை. நடுவிலே ஒரு பிளவு. இப்பாறையில் அர்ஜுனன் தவம் செய்யும் காட்சியை சிற்பமாக அமைக்க நினைத்தான் ஓர் சிற்பி. அதன் முடிவுதான் அர்ஜுனன் தவம் என்ற அழியாத கல்லிலே செதுக்கிய காரியம். இதை பகீரதன் தவம் என்று கூறுவோரும் உண்டு. இங்கு ஒரு சிறு கோயிலின் முன்பு எலும்புக் கூடாக மெலிந்து தவம் புரியும் யோகி (அர்ஜுனனாக இருக்கலாம்) காண்பிக்கப்பட்டுள்ளார். வழியிலே இந்திரனால் தடுக்கப்பெற்று பின்னர் அவன் அருள்பெற்று கயிலை சென்று தவம் புரிகிறான். இக்காட்சிமேலே சித்தரிக்கப்பட்டுள்ளது. ஒரு காலை கீழே ஊன்றி

Koviloor Digital Library



மற்றொரு காலைமடித்து இரு கைகளையும் உயரத் தூக்கி கடும் தவம் புரிகிறான். தங்கள் பகையை மறந்து காடு வாழ் மிருகங்கள் இக்காட்சியைக் கண்டு வியக்கின்றன. துள்ளி குதித்து ஒடுகிறது ஒரு புள்ளிமான் – தக்க சமயமெனக்கருதி போலித்தவம் புரிகிறது ஒரு பூனை. அதன் காலடியில் விளையாடுகின்றன சுண்டெலிகள். இவ்வரிய காட்சியைக் காண யானைகள் வந்து நிற்கின்றன. யக்ஷர்கள், கின்னரர்கள், வித்தியாதரர் முதலிய விண்ணவர்கள் இக்காட்சியைக் காண சுற்றம் சூழ வந்துள்ளனர். கீழிலிருந்து நாக தேவதைகள் தோன்றுகின்றன. கணங்கள் சூழக் கயிலையங்கிரி நாதன் காண்டீபனை தடுதாட்கொள்ளும் காட்சி மிக அழகாக அமைந்துள்ளது. காண்போர் கண்முன் கல் மறைந்து காவியந்தான் தோன்றுகிறது.

பொறாமை தீக்கு பலியான இந்திரன் கல் மாரி பொழிந்தான். கோகுலத்து மக்கள் அலறினர். கோவர்த்தன மலையைத் தூக்கி கோகுல மாந்தரை காத்தான் கண்ணன். பசுக்கள் எல்லாம் பயமின்றி உலவின. கழுத்தை வளைத்து தன் கன்றை தடவிக் கொடுத்தது ஓர் கறவைப்பசு. நிமிர்ந்து நடைபோட்டது ஒரு காளை. உரியிலே தயிர் கொண்டு சென்றனள் ஒரு கோபி. இக்காட்சி 'அர்ஜுனன் தவம்' சிற்பங்களுக்கு அருகே உள்ள பாறை சிற்பமாகும். அண்மையில், குட்டிகளுக்கு பால் கொடுக்கும் பெண் குரங்கிற்கு பேன் பார்க்கும் ஆண் குரங்கு சிற்பம் அருமையான கலைபடைப்பாகும். "அர்ஜுனன் தவம்' சிற்பங்களில் காணும் யானைகளின் சிற்பங்கள் உயிருள்ள ஓவியங்களாகக் காட்சி தருகின்றன.

திருச்சிராப்பள்ளி குகைக் கோயிலிலும் பல்லவர் கலைத் திறனைக்காணலாம். முயலகன் தலைமீது காலமர்த்தி நிற்கும் சிவபெருமானின் சிற்பமும், மற்ற உருவங்களும் மிக நேர்த்தியான வேலைப்பாடுகள்.

Koviloor Digital Library



காஞ்சியில் உள்ள கைலாச நாதர் கோயிலை ராஜசிம்மன் கட்டுவித்தான். இக்கோயிலில் உள்ள திருச்சுற்றுகளில் உள்ள அறைகளில் சிவபிரானின் பல்வேறு தாண்டவங்கள் மிக அழகாக செதுக்கப்பட்டுள்ளன. மாமல்லபுரத்து தலசயன பெருமாள் கோயிலும் இக்காலத்து கோவிலாகும். இங்கு பல அடுக்குக் கற்களில் ஒரு சிலை செதுக்கப்பட்டுள்ளதைப் பார்க்கலாம். இம்முறை மற்ற காலங்களில் கையாளப்படவில்லை. இதுபோன்ற பல சிற்பங்கள் இங்கு உள்ளது ஒரு தனிச் சிறப்பாகும்.

பல்லவர் காலத்து சிற்பங்கள் நிலையிலும். உருவிலும் எளிமையாகக் காணப்படுகின்றன. முகம் அகலமின்றி சிறிது நீண்டு காணப்படுகின்றன. மகுடம் உருண்டையாகவும், உயரமாகவும் தோற்றமளிக்கின்றது. மூக்கு சப்பையாகவும் கன்னங்கள் சிறிது பருத்தும், உடலின் முன்பகுதி தட்டையாகவும் காணப்படும். பூனூல் தட்டையாக ரிப்பன்போல் காணப்படும். இடது மார்பின் மேல் ஒரு முடிச்சும் சில சமயம் வலது கையின்மேல் எடுத்து செல்லப்பட்டுமிருக்கும். அரையாடை மிகப்பளுவாகவும், இரு கால்களுக்கும் இடையே பெரிய வளைவுடையதாகவும் காணப்படுகிறது. அநேகமாக பல்லவர்களது சிற்ப அமைதி மேலே சொன்னது போல்தான் இருக்கும்.

சிம்ம விஷ்ணுவின் பேரனான முதலாம் மகேந்திரவர்மன், தாய்வழியில் விஷ்ணுகுண்டினரிடம் இருந்து வந்தவன். இளவரசனாக இருந்த மகேந்திரவர்மனின் மனத்தில் விஜய வாடாவில உள்ள விஷ்ணு குண்டினரின் கலை நன்கு பதிந்தது. மொகல்ராஜபுரத்து குடைவரைக் கோயில்களுக்கும், தமிழ்நாட்டில் மகநேந்திரவர்மன் காலத்திய குடைவரை கோயில்களுக்கும் பெரும் ஒப்புமைக்கு இதுவே காரணம். மண்டகப் பட்டில் உள்ள புகழ்வாய்ந்த அவன் கல்வெட்டு செங்கல், மரம், உலோகம் அல்லது சுண்ணாம்பு

Koviloor Digital Library



இவற்றின் துணையுடன் கோயில் கட்டும் கட்டாயம் இன்றி முதன்முறையாக குடைவரைக் கோயில் கட்டப்பட்டது என்பதைத்தொவிக்கிறது. விசித்ரச் சித்தன்,சித்திரக்காரப்புலி, மத்தவிலாசன், சைத்யகாரி போன்ற விருதுகளை அரசன் மகேந்திரன் கொண்டிருந்தான். அவனது விருதுகள் அவன் கலை ஆர்வத்தைக் சுட்டிக்காட்டுகின்றன. அவன் கட்டடக்கலை வல்லுநன், பொறியாளன், கவி, கலைஞன், சகல கலா வல்லுநன். அவன் மகன் முதலாம் நரசிம்மன் அவன் காலத்து மாபெரும் வெற்றி வீரர்களுள் ஒருவனாகவும், அக்காலத்துசிறந்த மன்னர்களில் இருவரான புலிகேசி, ஹர்ஷனுடன் சரி இடம்பெற்றவனாகவும் இருந்து, இன்றும் வியப்புடன் உற்று நோக்கப்படும் நினைவுச்சின்னங்களை நிறுவினான். 7ஆம் நூற்றாண்டின் இறுதியில் இராஜசிம்மன் என்னும் இன்னொரு பெரிய பல்லவ அரசனால் காஞ்சிபுரம் கைலாச நாதர் கோயில் கட்டப்பட்டது. இதில் கலையுள்ளம் கொண்ட அவன் அரசி ரங்கபதாகை அவனுக்கு உறுதுணையாக இருந்தாள்.

## மாமல்லபுர குகை மண்டபங்கள்

மாமல்லபுரத்தில் பாறைச் சரிவுகளில் சுமார்10 குகைக் கோயில்கள் உள்ளன– 'சேதகாரி' என்ற விருதைப் பெற்ற மகேந்திரவர்மன் தான் முதன்முதலாக குகைகளைக் குடைந்து கோயில்களை அமைத்தான். இவன் காலத்து குகைகளின் தோற்றம் ஆடம்பரமற்றதாக உள்ளது. அவன் காலத்துக்கு முன்பு தமிழகத்தில் குகைக் கோயில்கள் ஏதும் இல்லை. இவனது முதல் குடைவரைக்கோயில் 'தளவனூர்' என்ற இடத்தில் உள்ளது.

பிறகு பல முன்னேற்றங்களோடு மாமல்லன் குடைவரைக் கோயில்களை அமைத்தான். மாமல்லபுரத்தில் மகேந்திரனது

Koviloor Digital Library



குகைக்கோயில்கள் மூன்றும், மாமல்லன் காலத்து குகைக்கோயில்கள் பத்தும் உள்ளன.

சென்னைக்கு அடுத்த பல்லாவரத்தில் மகேந்திரன் குகை மண்டபம் உள்ளது. மேலும் மண்டகப்பட்டு, வல்லம், தளவனூர், மகேந்திரவாடி, திருச்சிராப்பள்ளி, திருக்கழுக்குன்றம், சீயமங்கலம், மாமண்டூர், மலைச்சேரி, சிங்கவரம் முதலிய தமிழகத்து ஊர்களிலும், கிருஷ்ணா நதிக் கரையில் சில இடங்களிலும் உள்ளன.

சில குகைகள் இன்றும் சிற்பச் சிறப்புடன் விளங்குகின்றன. மாமல்லபுரம் 'திருமூர்த்தி மண்டபம் மூன்று கருவறைகளுடன் விளங்குகிறது. முறையே திருமால் சிவன், நான்முகனும் காட்சி தருகின்றனர். பக்கத்தே ஒரு எருதின்தலைமீது துர்க்கை நிற்கிறாள். பல்லவ சிற்பிகள் துர்க்கை சிற்பங்களை அமைப்பதில் கைதேர்ந்தவர்கள்.

இம் மண்டபத்துக்கு சிறிது தூரத்தில் 'கொடிக்கல் மண்டம்' இருக்கிறது. வாயில் காப்பாளராக இரு பெண் துவார பாலிகைகள் நிற்கின்றன. அடுத்து வராகமண்டபம். மண்டபத்தின் இருபுறச் சுவர்களில் திருமாலின் வராகாவதார சிற்பம் உள்ளது. இலக்குமியை வராஹ மூர்த்தி எடுத்து தன் தொடைமீது தாங்கிநிற்கும் காட்சி ஒரு அற்புத கலைப்படைப்பாகும். வராஹ மூர்த்தி சுமார் ஆறு அடி உயரமுள்ள சிற்பமாகும். எதிரே உள்ள சுவரில் வாமனாவதார சிற்பம் உள்ளது. எல்லாமே சிற்ப ஓவியமாக உள்ளன. இம்மண்டப கருவறையில் தாமரை மலர்மீது இருபுறம் செடிகள் கையில் குடங்களுடன் நீராட்ட யத்தனிக்கும் வகையில் மஹாலட்சுமி அழகுடன் விளங்குகிறாள். இச்சிற்பத்தின் வலதுபுறத்தில் குடையின் கீழ் துர்க்கை வனப்புடன் விளங்குகிறாள். கலங்கரை விளக்கத்துக்கீழே ராமானுஜ மண்டபக் குகை உள்ளது. அழிந்த

Koviloor Digital Library



நிலையில் உள்ள இம்மண்டபத்திற்கு போகும் வழியில் தருமர் மண்டபம் என்ற குகை மகேந்திரவர்மன் காலத்தது.

பழைய கலங்கரை விளக்கத்திற்குக் (Old light house) கிழே 'மகிஷாஸுர மண்டபம்' உள்ளது. இந்த குகையியைப் பற்றி முன்பே பார்த்தோம். இந்த குகைகளுக்கு பின்னே ஒதுப்புறமாக உள்ள குகைக்கோயில் 'வராகப் பெருமாள்' குகைக் கோயிலாகும். நித்யபூஜை நடந்துவருகிறது. வெளிச்சம் அதிகம் இல்லாத இக்குகை மிக முக்கியமான குகையாகும். உள்ளே சென்று ஒரு நிமிஷம் கழித்தால் சற்று வெளிச்சமாக இருக்கும். அப்போது ஒரு சுவர்க்கம் எனத் தோன்றும் வகையில் பெருமாள் காட்சி தருகிறார். கருவறையில் இடப்புறச் சுவரில் பிரம்மாவும், சிவனாரும் காட்சி தருகிறார்கள். பல்லவ அரசனான சிம்மவிஷ்ணு பக்கத்துக்கு ஒருவராக இருக்கும் தேவியருடன் சிம்மாசனத்தில் அமர்ந்துள்ள சிற்பம் உள்ளது. வலப்புறச்சுவரில் மகேந்திர வர்மன் தன் தேவியர்க்கு ஏதோ ஒன்றை காட்டுவது போன்ற சிற்பம் உள்ளது. இந்த அரசனும் தேவியரும் நின்ற நிலையில் உள்ளனர். தன் பாட்டனாரின் சிற்பத்தையும், தன் தந்தையின் சிற்பத்தையும் செதுக்கிய மாமல்லன் தன் உருவத்தையும் செதுக்கும்படி செய்யாதது அவனது ஆடம்பரமற்ற அடக்க நிலையை அறியமுடிகிறது. ஒதுக்குப் புறமாக உள்ள குகையைப்பார்க்க யாரும் அநேகமாக வருவதில்லை.

மாமல்லபுர கடற்கரை யோரமாக வடக்கு நோக்கி மூன்று மைல் தூரம் சென்றால் 'சளுவன் குப்பம்' என்ற தொரு ஊர் உள்ளது. அங்கு கடற்கரையோரம் மகேந்திர வர்மனது குகை ஒன்று உள்ளது. 'பிலக்குகை' என்று கூறுவர். குகையின் முகப்பில் அரைவட்ட வடிவில் சிங்க முகங்களை வரிசையாக அமைத்துள்ளான் சிற்பி. புலி முகங்கள் என்றும் கூறுவர்.

Koviloor Digital Library



# மாமல்லபுரத்து ரதங்கள்

பாறையைக் குடைந்து குகை மண்டபங்கள் அமைப்பதைப் போல, ஒரே பாறையை 'ரதம்' எனப்படும் கோயிலாக மாற்றும் கலையில் பல்லவர்கள் வல்வர்களாக இருந்தார்கள். மல்லையில் இதுபோன்று ஒன்பது ரதக்கோயில்கள் இருக்கின்றன. ஊருக்குள் நுழையும் போதே (செங்கல்பட்டு பக்கமாக) பிடாரிரதம், வளையன் குட்டைரதம் என்றும் இரு கல் ரதங்களைக் காணலாம். சிற்பங்கள் ஏதும் இல்லை. பூர்த்தியாகாத நிலையில் அவை நிற்கின்றன.

அர்ஜுனன் தவப் பாறைக்கு அருகே 'கணேச ரதம்' இருக்கிறது. தெற்கு திக்கு நோக்கியுள்ள இந்த ரதத்தின் சிற்ப வேலைப்பாடுடைய விதானமும், இரண்டு அடுக்குகளும், குதிரை லாட வடிவுள்ள மேல்விதானமும், உச்சியில் ஏழு கலசமும் சூலாயுதவடிவத்துடன் கூடிய இந்த ரதத்திலுள்ள தூண்களை, அமர்ந்திருக்கும் சிங்கங்கள் தாங்குகின்றன. கூடுகளில் சந்திரனின் முகம் கொண்டது. அழகான வேலைப்பாடுடன் கூடியரதம்.

அடுத்து பஞ்சபாண்டவர் ரதங்கள் அல்லது ஐந்து ரதங்கள் எனப் புகழ்பெற்ற ரதங்கள். இந்த ரதங்களைக் காணாமல் யாரும் திரும்பிச் செல்வதில்லை. ஐந்தென்றதும் பஞ்ச பாண்டவர்கள் நினைவுவரும். அதனாலோ என்னமோ ஐந்து ரதங்களும் பாண்டவ ரதங்கள் என்று அழைக்கிறார்கள். ஒவ்வொரு ரதமும் தனித்தனி விதமாக உள்ளது. நரசிம்மன் காலத்தில் தொடங்கிய இந்த சிற்ப ரதங்கள் பல்லவரின் கடைசி அரசன் பரமேஸ்வரன் காலத்திலும் முற்றுப் பெறவில்லை. காரணம் சரியாகத் தெரியவில்லை. இவற்றில் நான்கு கோயில்கள் ஒர வரிசையிலும், ஒன்று தனித்து மிருக்கின்றன. முதலில் நம்மை வரவேற்பது ஒரேகல்லால் ஆன சிங்கம் ஆறடி உயரத்திற்கு கம்பிரமாக நிற்கிறது. சிங்க உருவத்திற்கு அருகே ஒரு

Koviloor Digital Library



ரதம் உள்ளது. இதுதான் முதல்கோயில். அதை 'திரௌபதி ரதம்' என்று அவ்வூர் மக்கள் அழைக்கின்றனர். ஆடம்பர சிற்பமேதும் இன்றி, விதானம் வரை வடிவில் அழகாகக் காணப்படுகிறது. கோயிலின் காப்பாளர்களாக இரு பெண் துவார பாலகர்கள் காணப்படுகின்றனர். அவர்கள் வில்லும் கத்தியும் எந்தி அழகான நிலையில் நிற்கிறார்கள். இரண்டாவது ரதம் 'அர்ஜுன ரதம்' இக்கோயிலின் பக்கங்களில் சிற்பங்கள் உள்ளன. ஜீவனுடன் விளங்கும் தேவதேவிகள் பலருள்ளனர். பெண்ணும் பெண்ணும், ஆணும் பெண்ணும், தலைவன் தலைவியுமாக – பல சிற்பங்கள் அழகுடன் நின்ற கோலத்தில் காணப்படுகின்றனர். அடுத்தது 'பீமரதம்' பெயரைப்போலவே பெரிதாக உள்ளது. பௌத்த சைத்தியங்கள் வடிவில் உள்ள இக்கோயில் முற்றுப்பெறாத நிலையில் உள்ளது. நான்காவதாக 'தருமர் ரதம்' இது ஒன்றுதான் முடிவடைந்த நிலையில் காணப்படுகிறது. இரண்டு மாடிகள் உள்ள கோயில். மேலே செல்ல அந்த ரதத்திலேயே படிகளை அமைத்தான் சிற்பி. அற்புதமான சிற்பங்களுடன் இரண்டு மாடிகள் உள்ளன. முதல் மாடிக்குச் சென்றோமானால் பிரகாரம் போன்று சுற்றிவருவதற்கான பாதை, ஓரங்களில் சிற்பங்களுடன் காணப்படுகிறது. இரண்டாவது மாடிக்குச் செல்ல பாறைப்படிகள் அமைக்கப்பட்டுள்ளன. பிரகாரச் சிற்பங்களின் அடியில் ப்ராகிருதமொழியில் பல பெயர்கள் காணப்படுகின்றன. இரண்டு மாடிகளிலுமாக மொத்தம் முப்பத்தொன்பது சிற்பங்கள் உள்ளன. சூரியதேவன் முதல் காளிங்க நர்த்தனம் வரை பலதரப்பட்ட சிற்பங்கள் உள்ளன. இந்த ரதக் கோயிலைப் பற்றி விரிவாக எழுத பல பக்கங்கள் கொண்ட தனி அத்தியாயமே தேவைப்படும்.

அடுத்து ஒதுங்கி நிற்கும் சகாதேவர் ரதத்திற்கு வருவோம். தெற்கு திக்கை நோக்கியுள்ள இக்கோயிலுக்கு சகாதேவரதம் என்று

Koviloor Digital Library



எக்காரணத்திற்காகவந்தது என்பது தெரியவில்லை. ஒருவனுக்கு ரதம் இல்லையா! ஒரே பாறையில் செதுக்கப்பட்ட பெரிய யானை சிற்பமும், சிங்க சிற்பமும், திரௌபதி ரதத்திற்கு அருகே பெரிய நந்தியின் சிலையும். கண்களுக்கு விருந்தாக காட்சி அளிக்கின்றன. அர்ஜுன தவப் பாறைக்கு அருகேயுள்ள கிருஷ்ண மண்டபத்தை முன்பே பார்த்தோம்!

ஐந்து ரதத்திலுள்ள பெரிய யானைசிற்பமும், அர்ஜுன தவப்பாறையில் உள்ள யானைகளின் சிற்பமும் மறக்கமுடியாத கலைப்படைப்புகளாகும். யானை அளவிலேயே அமைந்த சிற்பங்கள் பார்ப்போரை ஈர்க்கும்.

## கடற்கரைக்கோயில்

மாமல்லபுரத்துக்கு புகழும், அழகும் தரும் கடற்கரை கோயில் உலகப்புகழ்பெற்ற கலைப்படைப்பாகும்.

*"பிணங்களிடு காடதனுள் நடமாடு பிஞ்ஞகனோடு*
*இணங்கு திருச் சக்கரத் தெம் பெருமானார்க் கிடம் – விசும்பில்*
*கணங்க வியங்கு மல்லைக் கடன் மல்லைத் தலசயனம்*
*வணங்கு மனத்தாரவரை வணங்கென்றன் மடநெஞ்சே"*

என்று திருமங்கை யாழ்வார் சிறப்பித்துப் பாடி ஜலசயனம், தலசயனம் எனப்படும் கடற்கரை கோயிலைப் போற்றியுள்ளார்.

நரசிம்ம வர்மனுக்குப் பிறகு இரண்டு அரசர்கள் ஆண்டனர். அவர்களுக்குப் பிறகு பட்டத்திற்கு வந்தவன் இரண்டாம் நரசிம்ம பல்லவன். அவனுக்கு ராஜசிம்மன் என்ற பெயரும் உண்டு. கொள்ளுத்தாத்தாவைப்போல புகழ்பெற்ற அரசனாக விளங்கினான் அவன். அவன் காலத்திலேதான் இந்த கடற்கரைக் கோயில் கட்டப்பட்டது. மாமல்லையிலிருக்கும் மற்ற கோயில்களை போல,

Koviloor Digital Library



மண்டபங்களைப் போலவும் ஒரே பாறையில் அமைக்கப்பட்ட கோயிலல்ல இது. பல்வேறு பெருங்கற்கள் அமைத்து சிற்பங்களுடன் அமைக்கப்பட்ட கோயில். இரு கோபுரங்கள் கொண்டது. சைவ வைணவ ஒற்றுமைக்கு அடிகோலுகிறது.

பிணங்களிடும் காடதனள் விளங்கும் சிவனும், திருச்சக்கரத்துடன் திருமாலும் ஒன்றாய் இருக்கின்றனர். கலை வளர்ந்த இந்த இடத்தில் சமய ஒற்றுமையும் வளர்ந்தது.

இக்கோயிலை மூன்று விதமாகப் பிரிக்கலாம் கிழக்கு திக்கு நோக்கியுள்ள சிவன் கோயில் ஒரு பிரிவு; நடுவே பள்ளி கொண்டிருக்கும் திருமால் உள்ள இடம் இரண்டாவது பிரிவு; மேற்கு நோக்கி யிருக்கும் சோமஸ்கந்தருள்ள இடம் மூன்றாவது பிரிவு.

கிழக்குத் திக்கு நோக்கியுள்ள சிவலிங்கம் சாதாரண பாறையால் ஆனதல்ல. கடப்பை கருங்கல் போன்ற ஒரு வித கறுப்பு வர்ண கல்லாலான இந்த லிங்கம் பட்டை பட்டையாகவும் சுற்றி இருப்பது புதுமையாக உள்ளது. நடுப் பாகத்தில் உள்ள பிரகாரத்திற்குள் யோக நித்திரை புரியும் திருமாலைக் காணலாம். சுமார் எட்டடி நீளத்தில் துயிலுறும் அரங்கனின் முகத்திலே தோன்றும் அமைதி என்னவென்போம்!

பல்லவர்கள் சைவ வைணவ பக்தர்கள் என்பது பிரசித்த மானது ஜைன மதத்திருந்து மீண்டும் சைவ சமயத்தில் சேர்ந்ததற்காக நாவுக்கரசரை கல்லோடு கட்டிக் கடலிலிட்ட மகேந்திர வர்மர் காலந்தொட்டு ராஜசிம்மன் காலத்திற்குள்ளாகச் சைவ வைணவ சமயங்கள் வெகுவாக வேரூன்றி விட்டன. கடற்கரை கோயில் போன்று இன்னும் ஆறு கோயில்கள் இயற்கை சீற்றத்தால் கடலில் ஆழ்ந்துவிட்டதாகக் கூறுகிறார்கள். ஏழு கோயில்கள் இருந்த

Koviloor Digital Library



காலத்தில் அயல் நாட்டு மாலுமிகள் தங்கள் கப்பல் களிலிருந்து கரையில் தென்படும் ஏழு கோயில்களை "ஏழு கோபுங்கள் (Seven Pagodas) என்ற அழைத்தார்கள் அதனால் மாமல்லபுரத்தை ஏழு கோயில் பட்டினம் என்று அழைத்தாக ஒரு கதையும் உண்டு.

தனித்தனியே கண்டெடுத்த நந்திகளை எடுத்து சேர்த்து ஒரு பிரகாரச் சுவர்போல் அமைத்துள்ளார்கள். நந்திகளின் சிற்பங்கள் தெளிவான வேலைப்பாடுகளைக் காணமுடியவில்லை. கடற்கரைக் கோயிலுள் சாஸனங்களிலிருந்து இராஜேந்திர சோழன் இலங்கை, கடாரம் முதலிய இடங்களை வென்றதாக, கடற்கோயிலுக்கு பல மான்யங்களை அளித்தான் என்றும் தெரிய வருகிறது.

முக்கியமாக இக்கோயிலின் ஒவ்வொரு மூலையும் தாங்கி நிற்கும் சிங்கத்தைப்பற்றிக் கூறவேண்டும். காஞ்சியில் உள்ள கைலாச நாதர் கோயிலிலிருப்பதைப் போல முன்னிரு கால்களையும் தூக்கிக்கொண்டிருக்கும் சிங்க உருவங்கள் பிராகாரச் சுவர் மூலையில் காணப்படுகின்றன. நரசிம்மன் காலத்துச் சிங்கங்கள் உட்காந்திருக்கும். ராஜசிம்மன் காலத்தில் அவை கம்பீரமாக எழுந்துவிட்டன. இக்கோயிலில் உள்ள கூடுகளில் விநாயக உருவம் காணப்படுகிறது. இக்கோயிலின் அருகே 3.5 அடி உயரமுள்ள சிங்கம் ஒன்று நிமிர்ந்து உட்கார்ந்துள்ளது. சிங்கத்தின் வலப்பாகத்தில் வீரப் பெண் ஒருத்தி உட்கார்ந்திருக்கிறாள். சிங்கத்தின் வயிற்றில் சதுரமான ஒரு மாடம் செதுக்கப்பட்டுள்ளது. விளக்கு மாடமாக இருக்கலாம்.

தமிழகத்தின் மகோன்னதத்தைச் சித்தரிக்கும் பண்டைய நாகரிகத்தையும் பெருமைப்படுத்தும் சின்னமாக மாமல்லபுரம் விளங்குகிறது.

Koviloor Digital Library

ஐவர் ரதம் – மாமல்லபுரம்

பிறநாட்டார் வணங்கி, புகழ்ந்து செல்கிறார்கள். இன்றும் மாமல்லபுர சிற்பங்களைப் பற்றி நிறைய விரிவாக எழுதலாம். அவ்வளவு விஷயங்கள் உள்ளதங்கே. இங்கே ஓரளவுதான் மாமல்லபுரத்தைப் பற்றி எழுதப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

# 8. காஞ்சியின் கலைப்படைப்புகள்

காஞ்சிபுரம், காஞ்சி, கச்சி, கச்சிப்பேடு, என்ற பல பெயர்களைப் பெற்ற ஒரு பெரும் நகரமாகத்திகழ்ந்தது. பல நூறு ஆண்டுகள் ஆண்டு வந்த பல்லவர்கள் காலத்தில் காஞ்சிபுரம் பல கலைகளில் சிறந்து விளங்கிற்று. தமிழ் இலக்கியங்கள், சமஸ்கிருத இலக்கியங்கள் எல்லாம் காஞ்சியின் புகழைப் பற்றி பேசுகின்றன. ஆன்மீகமும் அழியா கலைச் சின்னங்களும் காஞ்சிக்குப் புகழ்சேர்த்தன. பதஞ்சலியின் மஹாபாஷ்யத்திலும், தமிழ் காப்பியமாக உள்ள 'மணிமேகலை'யிலும் காஞ்சியைப் பற்றிய விவரம் உள்ளன.

பல்லவர் காலத்து ஆலயங்கள் எல்லாம் சிற்பக்கலை உடையவையாக இருக்கின்றன. அவர்களது ஆலயங்கள் மூலம் பல்லவர்களைப்பற்றி நன்கு அறிய முடிகிறது. பல கல்வெட்டுகள் அவர்களது ஆட்சியை, கலை ஆர்வத்தை காட்டுவதாக உள்ளன.

காஞ்சியில் பல்லவர் காலத்து அரசர்களும், அவர்கள் கட்டிய ஆலயங்களும்.

கி.பி. 700 –720 வரை ராஜசிம்ம பல்லவனால் கட்டப்பட்ட ஆலயம் கைலாச நாதர்கோயில்.

கி.பி. 720 – 735 வரை மகேந்திரவர்மனால் சிவனுக்காக கட்டிய ஆலயம் 'மகேந்திரவர்மனேஸ்வரகிருஹம்'

Koviloor Digital Library



கி.பி. 755 – 790 வரை பல்லவ மல்லனால் நிர்மாணிக்கப்பட்ட ஆலயம் 'வைகுண்ட பெருமாள் கோயில்.

கி.பி. 700 – 740 வரை ஒரு பல்லவ அரசனால் கட்டப்பட்ட 'வாலீஸ்வர' ஆலயம்.

கி.பி. 720 – 740 வரை ஒரு பல்லவ அரசனால் கட்டப்பட்ட 'ஐராவதேஸ்வர' ஆலயம்.

கி.பி. 730 – 773 வரை பல்லவ மல்லனின் அரசியினால் கட்டப்பட்ட 'முக்தேஸ்வர ஆலயம்'

கி.பி. 700 – 720 வரை ராஜ சிம்மனால் அமைக்கப்பட்ட 'மதங்கேஸ்வர ஆலயம்'

கி.பி. 710 – 720 வரை பல்லவ அரசன் நிர்மாணித்த 'ஐராவதேஸ்வர ஆலயம்'

கி.பி. 700 – 720 வரை பல்லவ மன்னன் கட்டிய 'திரி புராந்தகேஸ்வர கோயில்'

கி.பி. 700 – 720 வரை பல்லவ மன்னனால் கட்டப்பட்ட 'ஜலந்தரீஸ்வர கோயில்'

மேற்படி பல்லவ கோயில்களில் சிறந்ததாகக் கருதப்படும் கோயில்கள் இரண்டு. ஒன்று கைலாச நாதர் கோயில், மற்றொன்று வைகுண்டபெருமாள் கோயில். பிற கோயில்களிலும் சிற்பங்கள் உண்டு. ஆனால் சிறப்பாகக் கருதப்படுவது இவ்விரண்டு பல்லவ கோயில்கள்தான்.

6ஆம் நூற்றாண்டிலிருந்து, ஒன்பதாம் நூற்றாண்டுவரை, அப்போதைய சோழர்களை வென்று காஞ்சியை தலைநகராக ஆக்கிகொண்டு சிறப்பான ஆட்சியை செய்து வந்தார்கள் பல்லவ

Koviloor Digital Library



மன்னர்கள். காஞ்சியைச் சுற்றி பெரும் மதிள் சுவர்களை அமைத்தார்கள். நல்ல விஸ்தாரமான சாலைகள், அழகான கோயில்கள் இவைஎல்லாம் பல்லவர்காலத்து ஆட்சியில் ஏற்பட்டு, அதனால் புகழ்பெற்றனர்.

சிம்ம விஷ்ணு (575–600) மகேந்திரவர்மன்–1 (600–635) ராஜசிம்மன் என்ற இரண்டாம் நரசிம்மவர்மன் (680 – 722) மற்றும் நந்திவர்மன் பல்லவ மல்லன் கி.பி (725 – 790) இவர்கள் எல்லாம் பல்லவ மன்னர்களுள் சிறந்த அரசர்களாக விளங்கினார்கள்.

மகேந்திரவர்மன் கலைகள், சிற்பம், ஓவியம், கவி எழுதுதல், நாடகம் எல்லாவற்றிலும் சிறந்தவன். குடைவரைக் கோயில்களை முதலில் அமைத்தவன் இவனே. பல்லவ மன்னர்களுக்கு ஈடாக, சாளுக்கியர், கடம்பர், கங்கர் மற்றும் ராஷ்டிரகூடர் தென்னகத்தை ஆண்டுவந்தனர்.

300 ஆண்டு கால பல்லவ ஆட்சியில் காஞ்சியை சாளுக்கியர்கள் போர்தொடுத்து பாழ்படுத்தினர். இவற்றையெல்லாம் பொறுத்துக்கொண்டு ஒன்பதாம் நூற்றாண்டுவரை பல்லவர்கள்ஆண்டுவந்தனர். 9ம் நூற்றாண்டின் நடுவே பல்லவ ஆட்சி சிறிது சிறிதாக மங்கத் தொடங்கியது. இந்த தருணத்தை எதிர்பார்த்த சோழர்களும், பாண்டியர்களும், பல்லவர்களை எதிர்த்தார்கள். கடைசி அரசனான அபராஜித வர்மனை எதிர்த்தார்கள். பல்லவர்கள் போர் புரிந்து தோற்றனர். பல்லவ ஆட்சி முடிவுக்கு வந்தது. போரில் அபராஜிதவர்மன் தோற்றுப்போனான். பிறகு மரணம் அடைந்தான். இதுவே பல்லவர்களது வரலாறு. பிறகு காஞ்சி, சோழமன்னன் முதலாம் ஆதித்தன் வசத்திற்கு வந்தது. பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு சோழர்கள் காஞ்சியை ஆண்டனர். சோழர் காலத்து கல்வெட்டுகள் காஞ்சி கோயில்களில் அதிகமாகக்

Koviloor Digital Library



காணப்படுகின்றன. சோழர்களுக்கு பிறகு மாலிக்காபூர் படையெடுத்துவந்து காஞ்சியை கைப்பற்றினான். சிறிதுகாலமே முகமதிய ஆட்சியில் இருந்தது காஞ்சி. இரண்டு நூற்றாண்டுகளுக்குப்பின் முகமதியரிடமிருந்து விஜயநரக ஆட்சிக்குள் வந்தது. விஜயநகர ஆட்சியில் காஞ்சி பழைய பொலிவைப் பெற்றது. ஆலயங்கள் ஏற்பட்டன. பிறகு ஆங்கிலேய ஆட்சிக்கு வந்தது காஞ்சி. இது ஒரு சுருக்கமான காஞ்சியைப்பற்றிய வரலாறு.

கி.பி. முதலாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பௌத்த மதம் இங்கு குடியேறியது. யுவான்–சுவாங் என்ற சீன யாத்ரிகன் காஞ்சியைப்பற்றி எழுதும்போது 'புத்தர் காலத்திலிருந்தே காஞ்சி நகர் இருந்தது. இங்கு பல பௌத்த விஹாரங்கள் இருக்கின்றன, என்று குறிப்பிட்டுள்ளார். பல்லவ மன்னர்கள் ஜைனத்தையும், பௌத்த மதத்தையும் இந்து மதத்தையும் சமமாகவே கருதினர். சிறிது காலத்துக்குப்பிறகுபல்லவ அரசர்கள் இந்து சமயத்தையே பிரதானமாக ஏற்றுக்கொண்டு பல இந்து ஆலயங்களைக் கட்டி, ஒரு ஏற்றத்தைத்தந்தனர். இன்றும் புத்த காஞ்சி என்று சில இடங்களைக் குறிப்பிடுகிறார்கள். பல புத்த சிலைகள் அகழ்வாராய்ச்சியில் கிடைத்துள்ளன. அதுபோல ஜைனமதமும் காஞ்சியில் பரவியது. திருப்பருத்திக்குன்றம் என்ற பகுதியில் ஜைன ஆலயங்கள் இரண்டு இன்றும் வழிபாட்டில் உள்ளன. இந்து மதத்தில் பாசுபதர்கள், கபாலிகர்கள் என்ற தீவிர சிவனடியார்கள் இருந்தார்கள் அவர்களால் பல தொல்லைகள் ஏற்பட்டன.

காஞ்சியில் பௌத்தமதம் ஓங்கியிருந்த காலத்தில் அவர்களது தியானமுறைகளும், பௌத்த சன்யாசிகளின் புத்தமதக் கொள்கைகளும் மக்களிடையே பரப்பிவந்ததும், வியாபாரங்களும் பிரபலமாக இருந்தன. திக்நாகர், போதிதர்மர், தர்மபாலர் போன்ற

Koviloor Digital Library



பௌத்த மதத்தலைவர்கள் பிரபலமாக இருந்தனர். தர்ம பாலர் என்ற தலைவர் வடக்கே நாளாந்தா பல்கலைக் கழகத்திற்குச் சென்று ஆசிரியராக இருந்தவர். காஞ்சி வேகவதி ஆற்றங்கரையில் 'ஜீன காஞ்சி' என்ற பகுதியில் ஜைனர்கள் வசித்துவந்தனர். 7ம் நூற்றாண்டில் ஜைனரது கொள்கைகள் காஞ்சியில் பரவியிருந்தன. அந்த சமயத்தில் முதலாம் மகேந்திரவர்மன் ஜைனனாக இருந்தவன். பிறகு சைவனாக மாறினான். ஜைன மதத்தலைவர் மல்லிசேன வாமனசாசூரி' 4ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். ஜீனகாஞ்சியில் இவருக்கும் பெரும் மதிப்பு இருந்தது. பிறகு இவரது சிஷ்யரான 'புஸ்பசேனா' எனறவர் இலக்கிய ரசனை உடையவர். பல நூல்களை இயற்றியவர். குருவைவிட சிறந்த புலமையுடையவர். இப்படியாக காஞ்சியில் பௌத்தமும், ஜைனமும் சிறப்பாக இருந்தன.

இவைபோன்று இந்து மதமும் மிகச் சிறப்பாக விளங்கிற்று. சைவமும், வைணமும் வளர்ந்தன. காஞ்சி ஏகாம்பரநாதர் கோயிலை மையமாகக் கொண்டு காபாலிகர்களும், பாசுபதர்களும் தங்கள் தீவிர சைவ மதக் கொள்கைளை வளர்த்தனர். இந்த மதம் 9ம் நூற்றாண்டில் வளர்ந்த சைவமதப்பிரிவு. ஆதி சங்கரரால் ஸ்தாபித்த சைவ மத மடம் காஞ்சியில் உள்ளது. அத்வைத கொள்கையைக்கொண்டது காஞ்சிமடம். காஞ்சிக்கு அப்பர், திருஞான சம்பந்தர் சந்தரமூர்த்தி நாயனார் போன்ற சைவத் துறவிகள் 7ஆம் நூற்றாண்டில் வந்தனர். சுந்தரர் 9ஆம் நூற்றாண்டில் காஞ்சிவந்தவர். தேவாரப் பதிகங்கள் எல்லாம் காஞ்சியைப் புகழ்கின்றன. ஏகாம்பர நாதர் கோயில் இருக்குமிடம் சிவகாஞ்சி (பெரிய காஞ்சிபுரம்) என்றழைப்பார்.

விஷ்ணு காஞ்சியில் (சின்ன காஞ்சிபுரம்) வரதர் கோயில் இருக்கிறது. இக்கோயிலில் விஜய நகர கலைச் செல்வங்கள் நிறைய உள்ளன. இக் காஞ்சியில் வைணவ விசிஷ்டாத்வைத பிரிவை

Koviloor Digital Library



சார்ந்தவர்கள் இருந்தனர்; இருக்கிறார்கள். ஆழ்வார்கள் இங்குள்ள வரதரைப்பற்றி பல அழகான பாசுரங்களைப் பாடியுள்ளார்கள்.

சம்ஸ்கிருத மொழியில் வல்லவரான 'பாரவி' தண்டின்' போன்ற இலக்கியங்களில் பெயர் பெற்ற பண்டிதர்கள் பல்லவ அரசர்களால் ஆதரிக்கப்பட்டவர்கள். அப்பர்பெருமான் முதலாம் மகேந்திர வர்மனின் சமகாலத்தவர். காஞ்சியில் கல்விகற்றவர்கள் நிரம்ப உள்ளனர் என்று சீனயாத்திரிகர் யுவான்–சுவாங் தன் குறிப்பில் எழுதியுள்ளார். கடல் வாணிபத்தில் பல்லவர்கள் வல்லவர்களாகத் திகழ்ந்தவர்கள்.

## கைலாசநாதர் கோயில்

பல்லவ அரசன் ராஜசிம்மனால் 8ம் நூற்றாண்டின் முதல்பகுதியில், கட்டப்பட்டது. கைலாசநாதர் கோயில். இவ்வாலயத்துக்கு 'ராஜஸிம்மேஸ்வர கிரஹம்' என்ற ஒரு பெயரும் உண்டு. இந்த கோயில் ஊருக்கு சற்று ஒதுக்குப்புறமாக உள்ளது. கோயிலுக்கு எதிரே மண்டியிட்ட பெரிய நந்தி ஆலயத்தை நோக்கி உள்ளது. முன்பு நந்திக்கு தனி மண்டபம் இருந்தது. ஆலய முகப்பில் எட்டு சிறு ஆலயங்கள் இருக்கின்றன வடக்குத் தெற்காக. இச்சிறு ஆலயங்களில் லிங்கங்கள் உள்ளன. கருப்பு நிறத்தில் உள்ள கருங்கல் லிங்கங்கள். இக்கோயில்களின் அடிபாகத்தில் கல்வெட்டுகள் உள்ளன. இவ்வாலயங்களின் கருவறையில் சோமாஸ்கந்தர் உருவங்கள் உள்ளன. முதல் கோயிலில் காணும் கல்வெட்டு ஒன்றில் 'நித்யவிநீத' என்ற பெயர் உள்ளது. இது மகேந்திரவர்மனது விருதுபெயர்களில் ஒன்றாகும். ராஜசிம்மன் தன் தாத்தாவுக்காக கட்டிய ஆலயம். மூன்றாவது சிறு ஆலயத்தில் ரங்கபதாகை' என்ற கல்வெட்டு உள்ளது, தன் அரசிகளுள்

Koviloor Digital Library



ஒருவளான ரங்க பதாகையின் நினைவுக்காக கட்டிய ஆலயம். இன்னும் பல கல்வெட்டுகளில் பல்லவ அரசர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. கைலாச நாதர் கோயிலின் வெளியே காணும் யாளி சிற்பங்கள், வெளிசுவர்களில் சுற்றிலும் உள்ளன. எழுந்து பாயும் நிலையில் உள்ளன.

கோவிலின் கருவறையில் உள்ள லிங்கம் மகேந்திர வர்மனால் ஸ்தாபிக்கப்பட்டது. லிங்கத்திற்கு பின்னே சோமாஸ்கந்தர் காணப்படுகிறார். ஆலயத்தின் வெளிப்புறச் சுவர்களில் பல அற்புதமான சிற்பங்கள் உள்ளன. அவற்றுள் பெரும் பங்கு சிவபிரானின் லீலைகளைக் குறிப்பனவாகும். கோயிலின் மஹா மண்டபம் விஜய நகர காலத்தது. கர்ப்பகிரகத்துக்கு மேல் 'பிரமிடுகள் போல் விமானம் அமைந்துள்ளன. விமானத்திலும் பல சிற்பங்கள் உள்ளன.

வெளிச்சுற்று பிரகாரத்தில் நான்கு புறமும் சிறு சிறு ஆலயங்கள் அழகாக உள்ளன. இவற்றில் சிவன், துர்க்கை, விஷ்ணு போன்ற தெய்வ உருவங்கள் உள்ளன. தெற்கு பிரஹார சுவர்பக்கம் உள்ள ஒரு ஆலயம் பிரம்மாவுக்கு, மற்றொன்று விஷ்ணுவுக்கு சைவ கோயிலான இதில் எல்லா இந்து தெய்வங்களும் இடம்பெற்றுள்ளன. சற்றுச்சிறு ஆலயங்களில் சுவர்களில் பல்லவ ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளது. இப்போது எல்லாம் அழிந்து, ஏதோ ஒருசில துணுக்கு ஓவியங்கள்தான் உள்ளன. பல்லவ க்ரந்த எழுத்துக்களில் பல கல்வெட்டுகள் இவ்வாலயத்தில் காணப்படுகின்றன.

காஞ்சி பல்லவர் ஆலயங்களில் கைலாசநாதர் கோயில்தான் மிகப்பழமையான ஆலயம் அமைப்பிலும் பெரிது. பலரைக் கவர்ந்த ஆலயமாக இன்றும் விளங்குகிறது.

Koviloor Digital Library



# வைகுந்த பெருமான் கோயில்

நந்தி வர்மன் பல்லவ மல்லன் ஒரு விஷ்ணுபக்தன். இந்த அரசனால் கி.பி 755 – 790ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. இக்கோயிலும் புகழ்பெற்ற பல்லவக் கோயில். தன் இயற்பெயரான பரமேஸ்வர விண்ணகரம்' என்ற பெயரால் இவ்வாலயம் அழைக்கப்படுகிறது. கைலாச நாதர் கோயில் விமானம் போன்று இக்கோயில் விமானமும் உள்ளது. கருவறையைச் சுற்றி சிற்பங்கள் நிறைந்த மண்டபச்சுற்று உள்ளது. சுவர்களில் இரு வரிசையாக சிற்பங்கள் உள்ளன. இச்சிற்பங்கள் புராண கதையை தெரிவிப்பதாக டுப்ரெயில் என்ற ஆராய்ச்சியாளரின் கருத்து தவறானதாகும். இச்சிற்ப வரிசைகள் பல்லவ அரச வம்சாவளியைக் தெரிவிக்கும் சிற்பங்கள் ஆகும் என்பது பின்வந்த ஆய்வாளர்களின் கருத்தாகும். ஆரம்பத்திலிருந்து நந்திவர்மன் காலம் வரையுள்ள பல்லவ சிற்பவரிசைகளுக்கிடையே கும்பாபிஷேகம் போன்று சில காட்சிகள் உள்ளன. உடைகளும், ஆபரணங்களும், சிற்பங்களின் அமைதியையும் பார்த்தால் பல்லவரின் வம்சாவளியைத் தெரிவிக்கும் சிற்பத் தொகுதியாகத்தான் இருக்கும் எனத் தோன்றுகிறது. இரண்டு தள விமானம் கொண்ட ஆலயம் இது. முதல் தளத்தில் திருமாலின் சேஷசயனமும், இரண்டாவதில் நின்ற நிலையில் உள்ள திருமாலின் உருவமும் உள்ளன. இவ்வாலயம் அழியாமல் சிறப்பாகக் காணப்படுகிறது. வைகுந்த பெருமாள் கோயிலை அவசியம் காண வேண்டும். பல்லவ வம்சாவளியை தெரிவிக்கும் சிற்பங்களை காட்டுகிற ஆலயம் இது.

Koviloor Digital Library



## வாலீஸ்வரர் கோயில் மேற்கு

காஞ்சி ஏகாம்பரநாதர் கோவிலின் உள்ளே இருக்கும் குளத்தின் கரையில் மேல் உள்ள சிறு அழகிய ஆலயம். உள்ளே லிங்கம் – பின்னால் சிவபார்வதி சிற்பம் சேர்ந்தாற்போல் அமர்ந்திருக்கும் காட்சி, லிங்கத்திற்கு ஆவுடையார் இல்லை. கைலாசநாதர் கோயிலொத்த அமைப்புடன் கூடிய பல்லவக்கோயில். லிங்கத்தின் பின்னே சிவபெருமான் திரிசூலத்தை ஏந்தியுள்ளார் ஒரு கையில், மற்றொரு கையில் கபாலத்தைத் தாங்கியுள்ளார். பார்வதி தேவியும் ஒரு ஆலயத்தை கரத்தில் தாங்கியுள்ளாள். இது ஒரு அபூர்வமான கலைப் படைப்பு. 8ஆம் நூற்றாண்டின் முதல் பகுதியை சேர்ந்த கோயிலாக இருக்கும் எனக் கூறுகின்றனர் ஆய்வாளர்கள்.

முக்தேஸ்வரர் கோயில் மதங்கேஸ்வரர் கோயில் ஐராவதேஸ்வரர்கோயில், எல்லாம் பல்லவ காலத்து கோயில்களே. சிற்ப அம்சம் குறைவாகவே உள்ளது. பல்லவ ஆலயங்களுக்கான சின்னங்களுடன் இருக்கிறது.

## காஞ்சிபுரத்தில் சோழர் காலத்து ஆலயங்கள்

காஞ்சிபுரத்தில் பல்லவர்களை பின்பற்றிய சோழ ஆலய அமைப்புடன் சில சிறு கோயில்கள் உள்ளன. கைலாச நாதர்கோயில், வைகுந்த பெருமாள் கோயில் சிற்பங்களைப் போன்று சிறப்புடையதாக இல்லை. காலத்தையும் நிர்ணயிக்க முடியவில்லை.

## சொக்கீஸ்வரர் கோயில்

இன்றைய காமாட்சிகோயில் அருகில் உள்ளது. கல்லால் ஆன கோயில், சிற்பங்கள் ரதம் இல்லை. கட்டட அமைப்புதான்

Koviloor Digital Library



சோழர்காலத்ததாக இருக்கலாம் கோயில் சிறிது என்றாலும் அமைப்பு சிறப்பாக உள்ளது. இப்போது இது சீர்செய்யப்பட்டது.

## அநேகதந்தாவதம் கோயில்

இக்கோயில் ஒரு சிவன் கோயில். சுந்தரும், சம்பந்தரும் இக்கோயிலுக்கு விஜயம் செய்ததாகத் தெரிகிறது. முதலாம் குலோத்துங்க சோழனால் கட்டப்பட்டது. சோழர்கால கட்டட அமைப்புடன் 12ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. சிற்பம் ஏதும் இல்லை.

## பாண்டவப் பெருமாள் கோயில்

வைணவ ஆழ்வார்கள் 'திருப்பாடகம்' என்று தங்கள் பாசுரங்களில் குறிப்பிட்டுள்ளனர். இங்கு காணும் கல்வெட்டுகளிலும் திருப்பாடகம் என்றே குறிக்கிறது. 7ம் நூற்றாண்டைச் சார்ந்த கோயில். பின்னர் சோழர்காலத்து கட்டிடப்பணியை இங்கு காணமுடிகிறது. இக்கோயிலும் முதலாம் குலோத்துங்கனால் கட்டப்பட்டது. மஹா மண்டபம் மற்றம் சில பகுதிகள் பிற்காலத்தில் கட்டப்ட்டவை.

மகா விஷ்ணுவுக்காக கட்டப்பட்ட ஆலயம். ஏகாம்பரேஸ்வரர் கோயிலிருந்து நான்கு பர்லாங் தொலைவில் உள்ளது.

## ஜுரஹரேஸ்வரர் கோயில்

இது ஒரு சிவாலயம். ஜுரத்தை போக்குவாராம் இங்குள்ள சிவபெருமான். அதனாலே இக்கோயிலின் பெயர் ஜுரஹரேஸ்வரர் கோயில் என்று கூறப்படுகிறது. பிற்கால சோழர் கலையை இங்கு

Koviloor Digital Library



காணமுடிகிறது. விமானம் புதுமையாக உள்ளது நல்ல கட்டட அமைப்பு. மூன்றாம் குலேத்துங்கனால் கட்டப்பட்டது.

## அனந்தன் கோயில்

ஒரு பக்தன் அனந்ததாழ்வார் நினைவு சின்னமாக இக்கோயிலை அமைத்தான். இவ்வாலயம் காஞ்சி வரதராஜ கோவிலுக்குள் இருக்கிறது. மூன்றாம் குலோத்துங்கனால் கி.பி.1212ல் உருவாக்கப்பட்டது. சாதாரணமான சோழர் காலத்துக் கோயில்.

பொதுவாக சோழர்காலத்துக்கோயில் சொல்லும்படியாக சிற்பங்கள் ஏதும் இல்லை. கட்டுமானம் மாத்திரம் சோழர்காலத்தது.



வைகுந்தப் பெருமான் கோயில் – காஞ்சி

Koviloor Digital Library

# 9. ராஷ்டிரகூடர் சிற்பங்கள்

சுமார் கி.பி. 753ல் சாளுக்கியரிடமிருந்து தக்காணத்தை ராஷ்டிரகூடர்கள் கைப்பற்றினர். இவர்கள் 'மால்காட்'டைத் (மான்யகேடம்) தலைநகராகக் கொண்டு சுமார் 200 ஆண்டுகளுக்கு மேல் பேரரசாக திகழ்ந்தனர். மிகப் புகழ்வாய்ந்த எல்லோரா கைலாசநாதர் கோயில் ராஷ்டிரகூட மன்னனான முதலாம் கிருஷ்ணனால் தோற்றுவிக்கப்பட்டது. எல்லோரையும் கவரும் 'எல்லோரா' கலைசிற்பங்கள் உலகப் புகழ்பெற்றது என்பதை முன்பு பார்த்தோம்.

எலிபெண்டா என்ற இடத்து குகைக் கோயில் சிற்பமும் மகாராஷ்டிரர்களின் காலத்தைச் சார்ந்ததாகும். இங்குள்ள கோயில்களின் திருச்சுற்றுகளில் சிற்பங்கள் உள்ளன. இவையும் எல்லோரா சிற்பங்களைப் போன்றதாகும். படைத்தல், காத்தல், அழித்தல் இம்மூன்று தொழில்களின் தலைவனாம் திருமூர்த்தியின் சிலை மிகச் சிறப்பு வாய்ந்தது. பிரமிக்கும்படியான மாபெரும் சிற்பம். மும்பை போகிறவர்கள் கட்டாயம் எலிபெண்டா குகைகளின் சிற்பங்களைக் காணவேண்டும். எல்லா சிற்பங்களும் வனப்பு மிகுந்தவை. இக்குகைக் கோயில்கள் மனிதனின் பயங்கர வெறிக்குப் பலியாகிப் பெரும்பாலும் சிதைந்து கிடக்கின்றன.

Koviloor Digital Library





ராவணன் கைலாயத்தை அசைத்தல் – எல்லோரா

Koviloor Digital Library



# எழில் சிற்பங்கள் கொண்ட எல்லோரா

அஜந்தா என்று நினைத்தவுடனேயே எல்லோரா தான் நினைவுக்கு வரும் அந்த அளவுக்கு அஜந்தாவுக்கு நிகரான கலைச்செல்வங்கள் கொண்டது எல்லோரா.

8ஆம் நூற்றாண்டில் முற்கால சாளுக்ய அரசு முடிவுற்றதும் 'தண்டி துர்க்கன்' தலைமையின் கீழ் ராஷ்டிரகூடர் தங்கள் உரிமையை நிலைநிறுத்திக் கொண்டனர். தண்டிதுர்க்கனின் அரசுக்குபின் அவன் சிறிய தந்தை முதலாம் கிருஷ்ணன் அரசுகட்டில் ஏறினான். அவன் பேரரசன் மட்டுமின்றி தக்காணத்தின் ஒப்பற்ற கலைச் சின்னமான, பாறையினின்றும் வெட்டி எடுக்கப்பட்ட எல்லோராவில் உள்ள கைலாச நாதர் கோயிலைப் படைத்தவனும் கூட.

கைலாசநாதர் கோயிலின் புகழுக்கு கர்க்கா சுவர்ணவர்ஷனின் பரோடா பட்டயத்தில் ஆற்றலை விளக்கம் கிடைக்கிறது. அதாவது 'எலாபுர ம்லையில் (எல்லோரா) உள்ள இந்த அதிசயிக்கத்தக்க கோயிலைத் தங்கள் இரதங்களில் வான்வழிச் செல்கையில் வானவர்கள் பார்த்து உண்மையில் சுயம்பு சிவன் இருக்கும் இடம் இதுவே. இது செயற்கையாக செய்யப்பட்டதல்ல, இதைப் பார்க்கிலும் பேரழகு எப்பொழுதாவது கண்டதுண்டா' என வியப்படைகிறார்கள். இதை சிருஷ்டித்த சிற்பியும் உண்மையில் வியந்து சொன்னான். மிக அதிகமான விடா முயற்சியும் இதுபோன்ற ஒரு அமைப்பை திரும்பவும் செய்து முடிக்க இயலாது. இது என்னால் எப்படி அமைக்க முடிந்தது! இதனால் அவன் பெயரை அரசன் போற்றும்படி ஆயிற்று எனக் கூறப்பட்டுள்ளது.

எல்லோரா கைலாசநாதர் கோயிலைப்பற்றி பின்பு விரிவாகப் பார்க்கலாம்.

Koviloor Digital Library



ஔரங்காபாத்திலிருந்து சுமார் 80 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது எல்லோரா. அஜந்தாவைப்போல் எல்லா குகைகளும் பௌத்த சமயத்தைச் சார்ந்தவை அல்ல. இந்து, ஜைன, பௌத்த குகைகள் இங்கு உள்ளன. கி.பி. நான்காம் நூற்றாண்டிலிருந்து ஒன்பதாம் நூற்றாண்டுவரை குடையப்பட்டன எல்லோரா குகைகள். மொத்தம் 34 குகைகள்; எல்லாம் மலையின் சரிவில் கீழே குடையப்பட்டவை. பௌத்த குகைகள் எளிமையும், புனிதத்தன்மையும் கொண்டவை. இந்துமத குகைகள் 7ஆம் – 9ஆம் நூற்றாண்டுகளில் குடையப்பட்ட அழகுமிக்க சிற்பங்கள் கொண்டவை. ஜைன முறைப்படி ஏனைய குகைகள் உள்ளன.

வடக்கிலிருந்து தென்திசையில் சுமார் 3 கிலோமீட்டர் வரை மலைச் சரிவில் எல்லா குகைகளும் உள்ளன.

1ஆம் குகையிலிருந்து 12ஆம் குகை வரை தென்புறத்தில் அமைந்துள்ள பௌத்த குகைகள் அடுத்த 16 குகைகள் இந்து சமயத்தைச் சார்ந்த குகைகள். 30ஆம் குகையிலிருந்து 34 வரை ஜைன குகைகள். இவற்றுள் ஆரம்பகால குகைகள் பௌத்த குகைகள் ஆகும்.

எல்லோரா குகைகளைக் காண 16ஆம் குகை முன்னால் உள்ள வாகனங்கள் நிறுத்தும் இடம் உள்ளது. அங்கிருந்து குகைகளைக் காண பொருத்தமாக இருக்கும். பார்வையாளர்கள் ஒன்றாம் நம்பர் குகையிலிருந்து கலைச் செல்வங்களை காணப்புறப்படலாம். இக்குகைகளை நடந்து சென்று பார்ப்பதுதான் சிறந்தது. தென்புறம், நடுவில் உள்ள குகைகளைப் பார்த்துவிட்டு திரும்பி வந்து வாகனத்திடலிலிருந்து ஒரு மைல் சென்று வடபுறக் குகைகளைப் பார்வையிடலாம். இதனால் எல்லா குகைகளையும் பார்க்க வசதியாக இருக்கும்.

Koviloor Digital Library



இக்குகைக் கோயில்களில் அவசியம் பார்த்து ரசிக்க வேண்டியவை. 3–10–15–16–21–29–32ஆம் குகைகள் சிற்ப செல்வங்களின் கருவூலமான இவற்றின் கட்டிடக் கலையின் சிறப்பும் கண்டு மகிழத்தக்கவை.

குகை 1: இதுதான் பழமையான குகை. பௌத்த விஹாரமாக, எட்டு அறைகளுடன் குடையப்பட்டது.

குகை 2 : கனத்த தூண்களுடன் கூடிய சைத்திய குகை. சிம்மாசனத்தில் பெரிய அளவில் புத்தர் சிற்பம் உள்ளது. இரு மருங்கிலும் தாமரை மலர்களில் அமர்ந்த நிலையில் உள்ள தியான புத்தர் சிலைகள் உள்ளன. தவிர போதி சத்வர்களின் சிற்பங்களும் உள்ளன.

குகை 3 : இக்குகையிலும் தியான மண்டபத்தில் தாமரை மீது அமர்ந்துள்ள புத்தர் சிலை. இரு மருங்கிலும் நாகர்களின் சிற்பங்களும் உள்ளன.

குகை 5 : இந்த குகை பெரிய அளவில் அமைந்து 117 அடி நீளமும், 56 அடி உயரயமுள்ள குகை. 24 தூண்கள் மேல் தளத்தை தாங்கி இருக்கின்றன. எல்லா தூண்களும் மலையிலேயே குடையப்பட்டவை. விசாலமான இடம். வகுப்பு அறையாகவும் அல்லது விருந்தினர் தங்குவதற்கான இடமாகவும் இருக்கலாம். வழக்கம் போல் நடுவில் புத்தர் சிலை உள்ளது.

குகை 6 : குகையினுள் வியக்கும் படியான சிற்பங்கள் பல உள்ளன.

குகை 10. எல்லோராவில் உள்ள பௌத்த குகைகளில் இக்குகை ஒன்றுதான் சிறப்பான அம்சங்களோடு திகழ்கிறது. முகப்பு நல்ல கட்டிட வேலைப்பாடுடன் புதுமையாகக் காணப்படுகிறது.

Koviloor Digital Library


குகையின் மேல் விதானம் மரச்சட்டங்களைப்போல அமைக்கப்பட்டுள்ளது, அன்றைய வீடுகளில் காணும் விதானகூடம்போல் அமைக்கப்பட்டுள்ளது. இது ஒரு புதுமையான அம்சம். குகையில் உள்ள தூண்களின் உச்சியில் புடைப்புச் சிற்பங்கள் (Bas-reliefs) உள்ளன. இக்குகை 'விஷ்வகர்மா' குகை என்று அழைக்கப்படுகிறது. பல இந்து சமய ஆலயங்கள், அரண்மனைகள், சிற்பங்களை உருவாக்கியவர் விஷ்வகர்மா. ஏனோ இந்த குகைக்கு 'விஷ்வ கர்மா'வின் பெயர் சூட்டப்பட்டுள்ளது, பௌத்த சமயத்திற்கு ஒவ்வாத பெயராக உள்ளது. ஒருக்கால் ஹீனயானா முறை மறைந்து 'மஹாயானா' முறைக்கு மாறிய பௌத்தத்தைச் சார்ந்ததால் ஏற்பட்ட மாற்றமாக இருக்கலாம் என தோன்றுகிறது என்று கலை வல்லுனர்கள் கூறுகிறார்கள். இது ஒரு பார்த்து மகிழ வேண்டிய பௌத்த குகையாகும்.

குகை 11–12 : இவை இரண்டும் மிக முக்கியமான குகைகள். 11ஆம் குகையை விட 12ஆம் குகை பெரியது. இரண்டுமே பெரிய குகைகள்தாம். 12ஆம் குகைக்குப் பெயர் 'தீன் தள்' இந்த குகைக்கு முன் பெரிய முற்றம் உள்ளது. குகையின் முகப்பின் உயரம் 50 அடிகளாகும். ஆடம்பரமற்ற முகப்பு. ஆனால் குகையைப் பார்க்கும்போது ஒரு புனிதத்தன்மை தெரிகிறது. மூன்று தளங்கள் கொண்ட பெரிய குகை. கிழ்தளம் 115 அடி நீளம், 43 அடி உயரம். குகையின் உள்ளே மூன்று வரிசையாக தூண்கள் உள்ளன. இரண்டாவது தளத்தில் பெரிய அளவில் முற்றம் (Hall) உள்ளது. முற்றத்தின் நீளம் 115 அடி, அகலம் 70 அடி உயரம் 12 அடி. நான்கு, சதுர வடிவான தூண்கள் கூடத்தை ஐந்தாகப் பிரிக்கிறது. எந்த விதமான சிற்பங்கள் இல்லாமல் வெறும் தளமாக உள்ளது. ஒவ்வொரு தளத்திலும் பக்கச் சுவர்களில் சில சிற்பங்கள் உள்ளன. ஆனால் நடுநாயகமாக புத்தரின் சிலைகள் பெரிய அளவில் உள்ளன.

Koviloor Digital Library



எல்லா புத்தர் சிற்பங்களும் தியான நிலையில் தான் காணப்படுகின்றன. இதுவரை பௌத்த குகைகளைப்பற்றி ஓரளவு தெரிந்துகொண்டோம். குகைகளின் அமைப்புதான் வியக்கத்தக்கனவாக உள்ளன.

இனி இந்து சமயத்தைச் சார்ந்த குகைகளைப் பற்றி தெரிந்துகொள்வோம். இந்த குகைக்கோயில்கள் 7ஆம் நூற்றாண்டிற்கும் 9ஆம் நூற்றாண்டிற்கும் இடைக் காலத்தில் உருவானவை. பௌத்த சமய சிற்பங்களோ, புத்தரோ, போதி சத்வரின் சிற்பங்களோ இங்கு காண முடியாது. எல்லா குகைகளிலும் இந்து சமய தெய்வங்களின் சிற்பங்களே உள்ளன. அன்றைய மன்னர்கள் பொதுவாக பௌத்த, ஜைன இந்துசமயக் கலைகளை ஆதரித்து வந்தனர்.

இனி குகைகளைக் காணப் புறப்படுவோம்...

குகை 14 : இக்குகையில் துர்க்கைக்கு முக்யத்துவம் தரப்பட்டுள்ளது. இது முதல் பக்கமுள்ள சுவரிலே உள்ளது. அடுத்து பகுதியில் திருமகளுடன் விஷ்ணுவின் சிற்பங்கள். குகையின் மற்றொரு பக்க சுவர் சிவபிரானுக்கும், பார்வதிக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன. இதேபோன்ற சிவபார்வதி சிற்பங்களை எல்லா குகைகளிலும் காணலாம்.

குகை 15 : பல படிகளைத் தாண்டி உயரே சென்று இக்குகையை அடையலாம். நுழைவாயில் அலங்கார வாயிலாக அமைந்துள்ளது. இரு தளம் கொண்ட குகை குகைக்கு முன் முற்றம். இங்கு பல சிறு ஆலயங்கள் உள்ளன. குகைக்குள்ளே கீழ்தளத்தில் பூசாரிகள் தங்குவதற்கான இடம் உள்ளது. கிழ்தளத்தில் பார்க்கும் படி அதிக சிற்பங்கள் இல்லை. மேல்தளத்தில் இரு பகுதிகளாக உள்ளன. ஒரு பகுதியிலிருந்து மேற் பகுதிக்குச் செல்ல வாசல் உள்ளது. இங்கு

Koviloor Digital Library



வரிசை வரிசையாக சிற்பங்கள் உள்ளன. சிவ பிரானின் பல தோற்றங்களை இங்கு சிற்பங்களாகக் காணலாம். இவற்றுள் முக்கியமானது எட்டுகரங்களுடன் போருக்குச் செல்லும் காட்சி (சம்ஹார நடனத்தோற்றம்) பார்வதியுடன் அமர்ந்துள்ள சிவபிரான், பார்வதியுடன் தாயம் ஆடும் சிவனார், பார்வதி பரிணயம். இந்த சிற்ப வரிசையில் திரிபுர சம்ஹார தோற்றம், சிறப்புள்ள படைப்பு. போருக்குப் போகும் வேகம் எல்லாம் சிற்பி நன்கு வடித்துள்ளார். இங்கு நடுநாயகராக லிங்க வடிவில் சிவனார் உள்ளார். எதிரே நந்தி. எல்லா சிவாலயங்களிலும் நந்தி தேவன் நிச்சயம் இடம் பெறுவான்.

குகை 16 : எல்லோராவிற்கு புகழ்தேடி தந்த கைலாச நாதர் ஆலயம். இந்த கைலாசத்தைப் பார்த்து வியக்காதவரே இல்லை. ஒரு அற்புதமான வியக்கத்தக்க மாபெரும் படைப்பு. 8–9 ஆம் நூற்றாண்டில் உருவான குகைக்கோயில். பிற குகைகள் மலையைக் குடைந்து குடவரை கோயிலாக அமைத்தார்கள். ஆனால் இந்த குகை நூற்றுக்கணக்கான கட்டிட நிபுணர்கள், கைதேர்ந்த சிற்பிகளால் உருவாக்கப்பட்டது. உலகிலேயே இந்த மாதிரியான கலை படைப்பு எங்குமே இல்லை எனலாம்.

மலை உச்சியிலிருந்து கீழே தரைமட்டம்வரை பாறைகளை செதுக்கி உருவான படைப்பு. செதுக்கிய பாறைத் துகள் மட்டும் மூன்று கோடி சதுர அடிகள் ஆகும். பெரும்பள்ளம். உச்சியிலிருந்து 107 அடிகள் பள்ளம், 276 அடி நீளம் – 154 அடி அகலம். இந்த பரப்பில். உருவானது கைலாச நாதர் ஆலயம். இப்பரப்பின் நடுவே பிரகாரத்துடன் ஒரு தனி சிவாலயம் உள்ளது. மிக நுணுக்கமான வேலைப்பாடுடன் அழகிய சிற்பங்களுடன் அமைந்த இந்த கோயிலின் நடுநாயகமாக சிவலிங்கம் உள்ளது. எதிரே நந்தி. ஏதோ சுண்ணாம்பு, செங்கல் கொண்டு உருவானதைப்போல இந்த ஆலயம் புதுமையான படைப்பு. மொத்தமாக பார்த்தோமானால் மனிதனால்

Koviloor Digital Library



உருவாக்கப்பட்டதா என்ற வியப்பு ஏற்படும். மூன்று கட்டிடங்களுடன் திகழ்கிறது இந்த ஆலயம். இம்மூன்றுக்கும் போகும் வழியும் இந்த ஆலயத்துடன் சேர்ந்து அமைக்கப்பட்டுள்ளது. பெரிய ஆலயம் 25 அடி உயரமுள்ள மேடை மீது அமைக்கப்பட்டுள்ளது. மேடையைச் சுற்றிலும் பல யானை சிற்பங்கள் உள்ளன. கைலாசத்தை இந்த யானைகள் தாங்கி இருப்பதைப்போன்று அமைக்கப்பட்டுள்ளது. உயிருள்ள பெரிய யானையின் அளவுடன் எல்லா யானைகளும் உள்ளன. யானைகளின் அழகு மிகவும் ரசிக்கத்தக்கது.

இங்குள்ள சிற்பங்கள் எல்லாம் சிவமயமானவையே. கைலையை ராவணன் தூக்கி அசைக்க முயல்கிற சிற்பம் மிக அழகுவாய்ந்த சிற்பத் தொகுதி. கைலையை அசைக்கும்போது பார்வதி சிவபிரானை அணைத்துக்கொள்ளும் (பயத்தினால்) அழகுத் தோற்றம் ரசிக்க வேண்டிய கலை நயம் படைத்த சிற்பமாகும். கைலாச நாதர் கோயில் முழுதும் சிற்பக் களஞ்சியமாக உள்ளது. விஷ்ணுவும் இடம் பெறுகிறார். 51 அடி உயரமுள்ள துவஜஸ்தம்பம் (கொடிமரம்) கனமான, பல சிற்பங்கள் கொண்டதும், பூவேலைப்பாடுகளடன் அற்புத படைப்பாக விளங்குகிறது. இந்த சிறப்புத் தூண் மிக அழகுடன் காண்போர் மனத்தை வியக்கச் செய்கிறது. இதேபோன்று மற்றொரு தூணும் உள்ளது. இம்மாதிரியான தூண்கள் உலகில் வேறு எங்குமே காணமுடியாது. இந்த கைலாச மலைகுடைவரை கோயில் புதுமையான படைப்பு. இவ்வாலயத்தைப்பற்றி ஒருதனி புத்தகமே தயாரிக்கலாம். அவ்வளவு விவரங்கள், சிற்பங்கள், கட்டிடக்கலை படைப்புகள் உள்ளன.

குகை 21 : இது சிவசமயக் குகை. உயர்ந்த மேடையில் நந்தி சிற்பம் உள்ளது. பக்கவாட்டு குகையின் முகப்பின் இருபுறமும் கங்கை, யமுனை சிற்பங்கள் உள்ளன. கங்கையின் சிற்பம் மிக அழகாக உள்ளது. கங்கை கரத்தின்மீது நிற்கும்பாங்கு ரசிக்கத்தக்கது.

Koviloor Digital Library


தூண்களின் உச்சியில் பெண் சிற்பங்களும், தாவரக் கொடிகளும் சிறப்பாக வடிக்கப்பட்டுள்ளன. குகையின் உள்ளே பார்வதி – சிவன் திருமணக் காட்சி சிற்பங்கள், சுவர்முழுதும் பல சிற்பங்களோடு காட்சி தருகின்றன. இந்த கலைக்கூடத்தின் பக்கத்தில் இதே போல பல சிற்பத் தொடர்கள் உள்ளன.

குகை 29 : 150 அடிக்கு – 18 அடி உயரமுள்ள பெரிய குடைவரைக் கோயில், இக்குகை மும்பாய் அருகேயுள்ள 'எலிபெண்டா' குகை போன்ற பெரிய குகை. இக்குகைக்கு மூன்று வாசல்கள் உள்ளன. பல கனமான தூண்களுடன் குகை விசாலமான குகை. இரண்டு சிங்க சிற்பங்கள் படிகட்டுகளின் அருகில் கம்பீரமாக காணப்படுகின்றன. இக்குகையில் எல்லாமே பெரிய அளவில்தான் இருக்கின்றன. குகையின் வராந்தாவில் எட்டு கரங்களுடன் சிவபிரான் காட்சி தருகிறார். உக்கிர கோலத்தில் குகையின் முகப்பில் சிவபிரான் காணப்படுகின்றார். அவருடைய கோபம் உடல் முழுவதும் பரவியிருப்பதை இச்சிற்பத்தில் காணமுடிகிறது. நல்ல கலைப் படைப்பு வெளிப்பக்கம் யமுனா நதி பெண் வடிவில் அழகாக நின்று கொண்டிருக்கிறாள்; அழகான சிற்பம்.

அடுத்து சில கிலோ மீட்டர் தூரத்தில் ஜைன குகைகள் இருக்கின்றன. 30–34 வரை உள்ள குகைகள் ஜைன குகைகள்தான். கிருஸ்து பிறப்பதற்கு முன் 6ஆம் நூற்றாண்டில் ஜைன மதம் பிரபலமாக இருந்தது. இந்த ஜைன குகைகள் அந்த காலத்தில்தான் உருவாயின. ஆனால் கி.பி 9–11ஆம் நூற்றாண்டில் உருவான குகைகள் என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். மனத்தைக் கவரும் குகைகள் 32ம், 34ம் தான்.

குகை 32. இக்குகை 'இந்திரசபா' என்று அழைக்கப்படுகிறது இந்திரனின் சபை கூடும் விசாலமான கூடம் என்று கூறுகிறார்கள். அல்லது அவனது பெயருடன் கூடிய கூடம் என்றும் கூறுகிறார்கள்.

Koviloor Digital Library

திருமூர்த்தி – எலிபெண்டா

குகையின் முகப்பில் யானை சிற்பம் உள்ளது. 30 அடி உயரமுள்ள தூண் ஒன்று உள்ளது. கைலாசநாதர் கோயிலில் உள்ள துவஜஸ்தம்பத்தை நினைவுபடுத்துகிறது. குகையின் விதானத்தில் தாமரை மலர் மலர்ந்த இதழ்களுடன் காணப்படுகிறது. இக்குகையில்

Koviloor Digital Library

மஹாவீரரின் சிற்பம் (ஜைன மதத்தை ஸ்தாபித்த தலைவர். 25வது தீர்த்தங்கராவர்) உள்ளது. நாகராஜன் சிற்பத்தைக் காவல் தெய்வமாக வடித்துள்ளார் சிற்பி. தவிர ஆண், பெண் காவலர்கள் சிற்பங்களும் உண்டு. குகையில் நடுநாயகமாக மஹாவீரர் சிற்பம் சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பது போல் வடிக்கப்பட்டுள்ளது.

குகையின் மேல் தளத்தில் சிற்பத்தூண்களுடன் பெரிய கூடம் உள்ளது. நுணுக்கமான வேலைப்பாடுகளுடன் இங்குள்ள சிற்பங்கள் காணப்படுகின்றன.

குகை 33 : இந்திரசபா குகையினின்று இக்குகையை அடையலாம். தொடர்புள்ள பாதை உள்ளது. குகையின் முகப்பு அலங்கார சிற்பங்களுடன் காணப்படுகின்றது. ஜைன முனிவர்கள், காவலர்கள் வழக்கம் போல் இக்குகையிலும் உள்ளன. அழகான தோற்றங்கள், வேலைப்பாடுடன் கூடிய தூண்கள், எல்லாம் முதல்தரமான ஜைன சிற்பங்களாகும்.

கண்களுக்கும், மனத்திற்கும் இனிய குகைகளை எல்லோராவில் கண்டோம். இக்குகைகளை ஒரே நாளில் பார்த்துவிட முடியாது. குறைந்தது இரண்டு நாட்களாவது தங்கி இங்குள்ள சிற்ப அதிசயங்களைக் காண வேண்டும். அந்த அளவுக்கு சிற்பங்களும் குகைகளும் உள்ளன. என்னதான் சிற்பங்களைப் பற்றி எழுதினாலும், நேரில் சென்று காணும் ஆனந்தம் போல் இருக்காது. நீங்களும் ஒரு முறை எல்லோரா சென்று எல்லா சிற்பங்களையும் நேரில் காணுங்களேன்!

Koviloor Digital Library

# 10. கஜராஹோ

## முன்னுரை

உலக மக்களை கவர்ந்துள்ள 'கஜராஹோ' சிற்பக்களஞ்சியம்! ஒரு அற்புதமான கலைப்படைப்பு. கலாரசிகர்கள், குறிப்பாக வெளிநாட்டு கலாரசிகர்கள் இங்குள்ள சிற்பங்களைக் காணாமல் ஊர் திரும்ப மாட்டார்கள்.

வரலாற்றுச் சிறப்புள்ள கோயில்கள்நிறைந்த ஊர். மனத்தை ஈர்க்கும் சிற்பங்கள், ஆலயங்களின் அழகான தோற்றம், அமைப்பு எல்லாம் மனத்தை விட்டு அகலாத சிறப்பு அம்சங்கள் கொண்டவை.

விரிவாக எழுதும் அளவுக்கு சிறப்பு மிக்க தலம். பல கலை வல்லுநர்கள், ஆராய்ச்சியாளர்கள் எல்லோரும் இக்கூடங்களைப்பற்றி நிரம்ப நூல்களை எழுதியுள்ளார்கள்.

அழகான மங்கை ஒருத்தியைக் கண்டால் 'ஆஹா" அப்ஸரஸ் மாதிரி இருக்கிறாள் என்று கூறுவதை அறிவோம். 'அப்ஸரஸ்' என்றால் அழகு தேவதை என்று பொருள். அலங்காரப் பதுமைகள், கவர்ச்சிக் கன்னியர், கனவு நாயகிகள், நடன மணிகள், இசை வாணிகள், போன்ற பெண் மணிகளை 'கஜராஹோ' வில் காண்கிறோம். காளிதாசன் பெண்களைப் பற்றி தன் காவியங்களில் விவரித்துள்ளான்.

Koviloor Digital Library

விஸ்வநாதர் – கஜுராஹோ

Koviloor Digital Library



'காமசூத்ர'மும் தேவ மாதர்களின் எழிலை வியந்து பாராட்டுகிறது. சிற்ப கலைஞர்களுக்கு அணங்குகளை உருவாக்குவதில் ஒரு தனி ஆர்வம் உண்டு. காரணம் பெண்ணின் அழகான உருவம், மென் புன்னகை, கனிவான பார்வை, கவர்ச்சி நடை கொண்ட பெண்கள், போன்றவை சிற்பிகளுக்கு மட்டுமின்றி, ஓவியர்களுக்கும் ஆர்வம் உண்டு!

கஜூராஹோ கலைக் கோயில்களில் தேவமங்கையரின் உருவங்கள் நம்மைக் கவரும். காவியங்களும், இதிகாச புராணங்களும் கூறும் பல காட்சிகளை இங்குள்ள சிற்பங்கள் மூலம் பார்க்கலாம். சிற்பியின் கற்பனை, கைத்திறன் எல்லாம் நம்மை பரவசப்படுத்தும்.

'காம சூத்திரத்தில்' உள்ள காட்சிகளை, ஒற்றைக்காலை உயரே மடக்கி, பாதத்தில் ஏதோ ஒன்றை எடுப்பது போல உள்ள கருத்தையும், குளித்துவிட்டு கூந்தலை ஆற்றும் இன்னொரு கருத்தையும், பரபரப்புடன் ஆடை அணியும் அணங்கு பற்றிய கருத்தையும், நெற்றிப் பொட்டு வைத்துக்கொள்ளும் மங்கையின் கருத்தையும் சிற்பங்கள் மூலம், மங்கையரின் பல்வேறு நிலைகளை கஜூராஹோவில் காணலாம்.

நடன மணிகள், அவர்களது உடலில் காணும் சுழற்சி – இம்மாதிரி பற்பல சிற்பங்களை இங்குள்ள ஆலயங்களில் காணலாம். இவ்வரிய காட்சிகளைக் காண ஒருநாள் போதாது, நிதானமாகப் பார்த்து ரசிக்க வேண்டிய சிற்பங்கள். அவற்றைப் படைத்த சிற்பிகளுக்கு அதுவே நாம் தரும் மதிப்பாகும். எண்ணரிய வேலைப்பாடுகளைக் கண்டு ரசிக்கலாம். நாம் ரசிக்க வேண்டும் என்ற எண்ணத்தினாலேயேதான் சிற்பிகள் சிற்பங்களை படைத்துள்ளார்கள்! கல்லிலே கவிதை, கதை இவற்றைப் படைத்த சிற்பிகளின் கைவண்ணத்தைக் காண 'கஜூராஹோ செல்வோமா!

Koviloor Digital Library



# கலையை மதித்த காவலன்

கி.பி. 950ம் ஆண்டின் ஆரம்பம். ஓர் நள்ளிரவு சந்திரனற்ற வானத்தில், சிதறிய வைரங்களென கண்களைப் பறித்துக் கொண்டிருந்தன கணக்கற்ற தாரகைகள். சுவற்று கோழிகளின் சப்தமும், ஆங்காங்கு ஊளையிடும் நரிகளின் ஓலமும் அவ்விரவின் பயங்கரத்திற்குக் கை கொடுத்து உதவின. ஆனால் நகரைச் சுற்றி வரும் கன்னோஜ் பாராக் காரர்களின் குரல் அன்றிரவு ஏனோ ஒலிக்க வில்லை. பேய்களும் அஞ்சும்படியான அந்நேரத்தில் நகரமாந்தர் அனைவரும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தனர்.

திடீரென்று அமைதிக்குப் பங்கம்! நித்திரைக்கும் பங்கம்! கன்னோஜ் மக்கள் கலவரத்துடன் விழித்து எழுந்தனர்! நித்திரை கலைந்த பாராக்காரர்கள் நிலை தடுமாறினர். படை வீரர்களிடையே ஓர் பரபரப்பு ஏற்பட்டது! நகரின் இருபுறங்களிருந்த யுத்த பேரிகைகளின் ஒலி கன்னோஜைக் கலக்கியது. ஆம்! அந்த நடுநிசியில் சந்தேல தேசத்துப் படைகள் முன்னறிவிப்பின்றி திடீரென்று கன்னோஜை வளைத்தன! தங்கள் தங்கள் ஆயுதங்களை நாடினர் நகரக் காவலர்கள். இமைக்கும் நேரத்தில் படைகள் அணி வகுத்தன. வாளுடன் வாள் – வேலுடன் வேல் – வில்லுடன் வில் என்று பயங்கர யுத்தம் மூண்டது. குதிரைகளின் கனைப்பு – யானைகளின் பிளிறல் – ரதங்களின் ஒலி – அடியுண்டு அவதியுறும் வீரர்களின் அலறல்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஒரே பேரிரைச்சலை உண்டு பண்ணின. எங்கும் ஓலங்கள்.

அந்தபுரத்தின் மஞ்சத்தில் அன்பு அரசியுடன் ஆழ்ந்த உறக்கத்திலிருந்த மன்னன் தேவபாலனின் செவிகளில் யுத்த பேரிகைகளின் இடைவிடா முழக்கம் கேட்கவே பரபரப்புடன் எழுந்து உப்பரிகை மூலம் நகரை நோக்கினான். விஷயம் இன்னதென்று

Koviloor Digital Library



விளங்காத வேந்தன், தன் மனைவியை எழுப்பி, 'அன்பே! நகரத்தில் ஏதோ கலவரம் மூண்டுவிட்டது. கொள்ளைக் கூட்டத்தாரோ அல்லது அன்னிய நாட்டுப் படையினரோ நகரில் புகுந்து விட்டனர்போலும் பார்த்து வருகிறேன்' என்று கூறி உடையாளுடன் விரைவாகப் புறப்பட்டான்.

அந்தப்புர வாயிலை அடையும் முன் அவனடி பணிந்த சேனாதிபதி' அரசே! சந்தேல தேசத்துப் படைகள் அரண்மனையை நெருங்கிவிட்டனர். இவ்விரவில் எதிர்பாராத தாக்குதலைக் கண்ட நம் சேனைகள் திசைமாறி சிதறிவிட்டனர். அநேக வீரர்கள் சிறைப்படுத்தப்பட்டு விட்டனர். குறுகிய காலத்திற்குள் நம் படைகள் மறுபடியும் அணிவகுத்து இத்தாக்குதலை சமாளிப்பது மிகக் கடினம், எனவே, மன்னரே தேவியாரோடு தாங்கள் உடனே எங்கேயாவது தப்பித்துச் சென்று விடுங்கள் இதில் தாமதமே வேண்டாம் ! என்று கூறினான் மேல் மூச்சு, கீழ்மூச்சு வாங்க.

'யசோவர்மனிடமிருந்து இப்போது யாரும் தப்பித்து விட முடியாது. அப்படி முயன்றால் அவர்கள் தலைகள் துண்டிக்கப்படும் நில்லுங்கள் அப்படியே! எட்டு திக்குகளிலும் என் வீரர்கள் காப்பதைக் கவனியுங்கள்!'' என்ற கர்ஜனையைக் கேட்கவே மன்னன் திகைப்புடன் திரும்பிப் பார்த்தான். சந்தேல அரசன் யசோவர்மன் உருவிய வாளுடன், பல வீரர்களோடு அந்தப் புரவாயிலில் நிற்பதைக் கண்ட தேவபாலனின் முகம் சிவந்தது.

தப்பித்துச் செல்ல திட்டம் போடாதே தேவபாலா! கன்னோஜ் என் கையில். கப்பம் கட்டப் போகும் அடிமை அரசன் நீ!' என்று கூறிய யசோவர்மன் ஏளனமாக உரக்கச் சிரித்தான். அப்படியே பாய்ந்து அவனை கண்ட துண்டமாக வெட்டத்துடித்த தேவபாலன், "அடிமை! நானா அடிமை! எதிரியின் வாள் முன் இதுவரை வணங்காத என்

Koviloor Digital Library





கஜுராஹோ

சிரம் உன் வாள்முன் பணிய வேண்டுமா? முன்னறிவிப்பு ஏதுமின்றி திடீரென்று பெரும் படையுடன் இந்நள்ளிரவில் அதர்மமாக அமர் புரிந்து கன்னோஜ் என்கையில் என்று கொக்கரிப்பவன் ஒரு

Koviloor Digital Library



கயவனேயன்றி அவன் வீரனே அல்ல வலிமையிருப்பின் வா என்னுடன் வாளெடுத்து என்று சீறி யசோவர்மனை நெருங்கினான்.

மெய்க்காப்பாளர் தேவபாலனைத் தடுத்தனர். யசோவர்மன், தேவபாலா உன் வீரத்தைப் போற்றுகிறேன். உன் வலிமையைச் சோதிக்க வாளெடுத்துத்தான் சோதிக்க வேண்டுமா? உன் வீரந்தான் என் நாடறிந்த விஷயமாயிற்றே! நகரைக் கொள்ளை கொண்டு உன் நாட்டின் செல்வத்தை அள்ளிச் செல்லத்தான் இந்த நடு இரவை நாடினேனா! இல்லை! உள்ளம் உவகை கொள்ள உன் மக்களை மாய்த்து உன்னைக் கைதியாக்கி என் வீரக் கொடியை உன் கோட்டையின் மீது உயர்த்தத்தான் இப்போது வந்துள்ளேனா? இல்லை! இல்லை! உன் அரண்மனை, கோட்டை, நகரம், நாடு, பதவி, செல்வம் ஒன்றும் உன்னிடமிருந்து எனக்கு இப்போது வேண்டாம். ஆனால் உன்னிடமிருந்து நான் விரும்புவது ஒன்றே ஒன்று; அதுவும் உபயோகமற்ற பொருள் என்று நீ கருதும் கல்!” என்றான்.

‘என்ன! கல்லா!.... விஷயத்தை விளக்கவேண்டும்’ என்றான் தேவபாலன்.

யசோவர்மன், ‘ஆம்! உன் கண்களுக்கு அது வெறும் கல்லாகத்தான் காட்சி அளித்து வருகிறது, எனக்கோ தெய்வீகச் சிலையாகத் தோன்றுகிறது. பல ஆண்டுகளுக்கு முன் என் தந்தையாரோடு இங்கு வந்திருந்தேன் அல்லவா? அப்போது உங்கள் அரண்மனை நந்தவனத்திலுள்ள பாழடைந்த பரந்தாமன் கோயிலை பார்க்க நேரிட்டது. அக்கோயிலின் மூல மூர்த்தியையே இப்போது யாசிக்கிறேன். அளிக்க நீ சம்மதித்து விட்டால் நகரை விட்டு இப்போதே வெளியேறிவிடுகிறேன். அளிப்பாயா அதை?” என்று கேட்டான்.

Koviloor Digital Library



தேவபாலன் மிக்க ஆச்சரியத்துடன், 'மன்னாதி மன்னர் எனப் புகழ்பெற்ற நீங்கள் ஓர் சிலையின் பொருட்டு ஏன் இவ்வளவு சிரமப்பட வேண்டும். அச்சிலையைப் போல் ஆயிரம் சிலைகள் சிருஷ்டிக்கக்கூடிய சிற்பிகள் நிறைந்த நாடல்லவா உங்கள் நாடு! என்று வினவினான்!

"ஆம்! சிற்பிகள் நிறைந்த நாடாக இருப்பதால்தான் சிலையின் கலையும் சற்று அறிந்துள்ளேன். சிற்பிகளின் கைத்திறன் நசித்து விடாமலிருக்கவும் வருங்கால மக்கள் நமது கலைத்திறனை அறியவும் அச்சிற்பிகளைக் கொண்டு பெரும் ஆலயம் ஒன்று எழுப்பி வருகிறேன். அரிய பெரிய சிற்பங்களால் கலைக்கூடமாகத் திகழும் அக்கோயிலின் மூலஸ்தானத்திற்கான நாராயணன் சிலை ஒன்றல்ல, இரண்டல்ல – பத்து சிலைகள் செய்தும் பயனில்லாமல் போய்விட்டன. சிலையின் நயனங்களைத் திறக்கும்போது சிரத்தில் பிளவு எப்படியோ ஏற்பட்டு அப் பத்து சிலைகளும் பின்னமாகிவிட்டன. இதைக் கண்டு மனம் நொந்து இருக்கையில் என் கனவில் நாராணனனே நரஹரி உருவமாகக் காட்சி அளித்து, இச்சிலையை எடுத்து வந்து கோயிலில் பிரதிஷ்டை செய்யுமாறு கட்டளையிட்டார். இச்சிலையின் சிறப்பை நீ அறிந்திருக்கமாட்டாய் என்று எண்ணுகிறேன் என்றான் யசோவர்மன்.

'இதைவிட இன்னும் என்ன சிறப்பு உள்ளது? அதைப்பற்றி எனக்கு ஒன்றுமே தெரியது' என்றான் தேவபாலன்.

யசோவர்மன், இச்சிலையை திபேத்திலிருந்த போதநாதர் கையிலங்கிரியிலிருந்து பெற்றார். சின தேசத்து மன்னனின் நட்பு கொண்டு அதன் காரணமாக போத நாதரிடமிருந்து அவன் இச்சிலையைப் பெற்றான். ஒரு சமயம் உன் தந்தையார் ஹேரம்ப பாலதேவர் சீனநாடு சென்றபோது அவரது உள்ளத்தை இச்சிலை

Koviloor Digital Library



கவரவே, பல யானைகளையும், குதிரைகளையும் ஈந்து இதைப் பெற்று தன் அரண்மனை தோட்டத்தில் சிறு ஆலயம் எடுத்து அதை ஸ்தாபித்து மகிழ்ந்தார். இவையெல்லாம் நீ இதுவரை அறியவில்லை போலும். சாதாரணமாகக் கேட்டால் நீ அலட்சியம் செய்யலாம் என்றும், முடியாது என்று அசுபவார்த்தை உன் வாயிலிருந்து வெளிப்படாமலிருக்கவேண்டும் என்றும் எண்ணியேதான் படையெடுத்து வந்தேன். இப்படையெடுப்பால் உன் வீரர்கள் சிதறியடிக்கப்பட்டார்களே ஒழிய உயிர்ச்சேதம் உண்டாகாமல் கண்காணித்தேன்.... என்றான்.

'அப்படியா! மிக்க மகிழ்ச்சி! உண்மையாகவே அச்சிலை இன்றுவரை என் கண்களுக்குக் கல்லாகத்தான் தெரிந்தது. இவ்வளவு மகிமை வாய்ந்த சிலையை நான் பாதுகாத்து வழிபடாமல் பெரிய அபசாரம் செய்துவிட்டேன். இதற்கு மாற்று தங்கள் விருப்பத்தை பூர்த்தி செய்யத்தான் வேண்டும். என் அகக்கண்களைத் திறந்ததற்கு மிக்க நன்றி. மேலும் முகலாய மன்னர்களின் ஆதிக்கம் நாளுக்கு நாள் வடக்கே வலுவடைந்து வருகிறது. வெறும் விளையாட்டு பொம்மைகளாகக் கருதி சிலைகளை உடைத்து வரும் அவர்கள் பார்வையிலிருந்து பாதுகாக்க தாங்கள் தோற்றுவித்த ஆலயமே தலைச்சிறந்த இடமாகும். பொழுது புலர்ந்துவிட்டது. இன்றே தங்களுடன் அச்சிலையை அனுப்ப ஏற்பாடு செய்கிறேன். என்றான் தேவபாலன்.

யசோவர்மனின் உள்ளம் உவகை அடைந்தது. வாளைப் பிடித்திருந்த அவன் கரங்கள் அதைவிட்டு தேவபாலனை அன்புடன் அணைத்தன. குழப்பம் கொண்ட குடிமக்களுக்கு விஷயம் விளக்கப்பட்டது. சிலையை ஒப்படைக்கும் சுபதினத்தை திருவிழா போல் கொண்டாடினர் நகர மக்கள். சிலையைத் தயக்கமின்றி தந்த தேவபாலனுக்கு, யசோவர்மன் பல பரிசுகளை அளித்து சிலையோடு

Koviloor Digital Library



தன் நகரை அடைந்தான். அந்நகரின் இதய ஸ்தானத்திலிருந்த ஆலயத்தில் நரஹரி சிலையை ஸ்தாபித்து எல்லையற்ற இன்பம் அடைந்தான் என்று சரித்திர ஏடுகள் கூறுகின்றன. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் அவ்வரசன் மனம் கவர்ந்த நரஹரி சிலை சிறிது பழுதுபட்டாலும் இன்றும் காண்போர் கருத்தைக் கவரும் வண்ணம் மத்திய பிரதேசத்தில் 'கஜுராஹோ' என்ற இடத்தில் உள்ள லக்ஷ்மணன் கோயிலில் கம்பீரமாக நிற்பதைக் காணலாம்.

## கோயில் கட்டிய பேரரசர்கள்

மாமல்ல புரமும் அதனைச் சார்ந்த குடவரைக் கோயில்களும் எவ்வாறு பல்லவ பரம்பரையுடன் இணைந்துள்ளதோ, அவ்வாறே கஜுராஹோவும் அதன் கோயில்களும் சந்தேல பரம்பரையுடன் ஒட்டியுள்ளன. ஆகையால் அவர்களது வரலாற்றை அறிய வேண்டியது மிகவும் அவசியம்.

கிடைத்த கல்வெட்டுகளிலிருந்து சந்தேல மன்னர்கள் 'சந்திராத்ரேயர்' என்ற முனிவரின் வம்சம் என்று தெரிகிறது. முனிவர் அத்ரியின் புத்திரன்தான் சந்திராத்ரேயர். அத்திரியோ பிரம்மாவின் புதல்வர் ஆதலால் சந்தேல மன்னர்கள், தங்களை தேவ வம்சத்தினர் என்று சொல்லிக்கொள்வதும் உண்டாம். மத்திய இந்தியாவில் கேன் நதிக்கடுத்த மாணியாகாம் என்ற மலைப் பிரதேசத்தைத்தான் முதல் சந்தேல அரசன் 'நன்னுகன்' ஆள ஆரம்பித்தான். இங்கு ஓர் அழகிய கோட்டையும் இருந்தது. எட்டு தலைமுறையாக இம்மன்னர்கள் இக்கோட்டையிலிருந்தே அரசு செலுத்தி வந்தனர். மேலும் வடக்கே பேரரசனாக விளங்கிய ஹர்ஷ வர்த்தனன் இறக்கவே துரிதமாக இம்மன்னர்கள் தங்களது அரசை விரிவு படுத்தலாயினர்.

Koviloor Digital Library



ஒன்பதாம் நூற்றாண்டின் முடிவில் சந்தேல வம்சத்து ஆறாவது அரசனான 'ஹர்ஷன்' கன்னோஜியிலிருந்த பிரதிகார மன்னனான போஜன் ஆட்சியிலிருந்து தன் நாட்டை விடுவித்துக்கொண்டதோடு, கி.பி. 917ல் தட்சிணத்தில் ராஷ்டிரகூட மன்னன் மூன்றாம் இந்திரன் என்பவனின் ஆளுகைக்குட்பட்டிருந்த பிரதிகார மன்னனான 'ஷிதிபால தேவ்'னையும் விடுவித்தான். ஹர்ஷனுடைய ராஜ்ஜியம் வடக்கே யமுனை வரை வியாபித்திருந்தது. ஹர்ஷன் இறந்தவுடன் அவனது மகன் 'யசோவர்மன்' கி.பி. 925ல் பட்டமேறினான். இவனை லக்ஷ்மண வர்மன் என்றும் கூறுவர். இவனும் தன் தந்தையைப்போல மிக்க கீர்த்தி பெற்று சிறந்த வீரனாக விளங்கினான். வட இந்தியாவில் அப்போது ஆண்டு கொண்டிருந்த பல அரசர்களைத் தன்னடி பணிய வைத்து, இமயம் முதல் நர்மதை நதி வரை தன் அரசை விரிவு படுத்தினான். சேதி நாட்டு மன்னன் 'கல் சூரியை' வென்று 'கலிஞ்சர்' என்ற பலத்த கோட்டையையும் கைப்பற்றினான். இக்கோட்டை கைவசம் வந்த ஆண்டிலேதான் தன் தலைநகரில் முன்கூறிய கோயில் எடுத்ததோடு கூட மற்றும் பல கோயில்களை நிர்மாணித்து அழியாப் புகழ் எய்தினான்.

'தங்கன்' யசோவர்மனின் மகன். இவன் கி.பி. 950 லிருந்து 1002ம் ஆண்டு வரை பல போர்களைப் புரிந்து, கன்னோஜையும் வென்று சந்தேல சாம்ராஜ்ஜியத்தையும் ஸ்தாபித்தான். துருக்கிய அரசனான 'சபுக்டீனை' எதிர்க்க இந்து மன்னர்களை ஒன்று கூட்டி பெரும் சேனையும் தன் வசமாக்கி வைத்திருந்தான். யமுனையிலிருந்து நர்மதை நதி வரையிலும், காசியிலிருந்து பெட்டுவா நதி வரையிலும் இவனது ஆட்சி பரவி இருந்தது. இவனது காலத்திலும் பல ஆலயங்கள் கஜராஹோவில் கட்டப்பட்டன. 'சிவலிங்க'த்தைப் பிரதிஷ்டை செய்து வெண் முகிலொத்த சிகரங்கள் கொண்ட கோயில்களைத் தோற்றுவித்தவன் அரசன் 'தங்கன்' என்று

Koviloor Digital Library


அங்குள்ள விஸ்வநாதர் கோயிலின் கல்வெட்டு ஒன்றில் காணப்படுகிறது.

தங்கன் மகன் 'கண்டான்' கி.பி. 1003ல் பட்டமேறினான். கஜினி முகமதை எதிர்க்க பாஞ்சால அரசன் அனந்த பாலனுக்குப் பலவித்த்திலும் உதவிகள் செய்தான். ஆனால் கஜினி முகமது கஜராஹோவின் மீதே படை எடுத்தபோது கண்டனுக்கு துரதிருஷ்டவசமாக வெற்றி கிட்டவில்லை சந்தேல சாம்ராஜ்ஜிய எல்லையும் குறுகலாயிற்று. கண்டன் இறந்தபின்பு அவன் மகன் 'வித்யாதரன்' கி.பி. 1018' ல் பட்டமேறினான். இவன் ஒரு வீரனாக விளங்கியதோடு தந்தரசாலியாகவும் இருந்தான். கன்னோஜ் மன்னன் 'ராஜ்ய பாலன்' கஜனி முகம்மதுக்குக் கப்பம் கட்ட ஒப்புக் கொண்டபோது வெகுண்டு எழுந்து ராஜ்ய பாலனை வெட்டி வீழ்த்தினான். இரு தடவை கஜனி முகம்மதைப் புறங்காட்டி ஓடச் செய்த ஒப்பற்ற வீரன் இவன். மூன்றாவது யுத்தத்தில் வித்யாதரனின் மதுரகவியால் மயங்கிய கஜினி முகம்மது, அவனோடு ஓர் உடன்படிக்கை செய்து கொண்டதாகத் தெரிகிறது. தன் வசமிருந்த பதினைந்து கோட்டைகளைக் கஜனி முகம்மதுக்கு கி.பி. 1022ம் ஆண்டில் கொடுத்து, இனிமேல் தன்னாட்டின் மீது அவன் படையெடுக்காவண்ணம் வித்யாதரன் ஒப்பந்தம் செய்து கொண்டான்.

அக்காலத்தில் இந்தியாவிலேயே ஒப்பற்று விளங்கியதும், மிக்க பலத்த கோட்டையுமான கலிஞ்சர் கோட்டையையும் இவ்வுடன்படிக்கையின்படி வித்யாதரன் இழக்க வேண்டியதாயிற்று. பிறகு பட்டமேறிய சந்தேல அரசர்கள், அலைபோல் வந்துகொண்டிருந்த முஸ்லீம் படையெடுப்புகளிலிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்ள மஹோபா, அஜைகர், முதலிய கோட்டைகளிலேயே பதுங்கி விட்டனர். சந்தேல வம்சம்

Koviloor Digital Library



பிற்காலங்களில் அவ்வளவு கீர்த்தி பெறாவிடினும் அவர்கள் கட்டுவித்த கோயில்கள் அவர்களது கலைத்திறனுக்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

சந்தேல மன்னர்களைப் பற்றி 'மஹோபா' காண்டம் என்ற நூலில் ஒரு கதை உள்ளது. காசி மன்னன் இந்திர சித்தின் அவையை அலங்கரித்த 'அந்தணான்' மகள் 'ஹேமவதி' நற்குணங்கள் பெற்ற மங்கை. பதினாறு வயதினள் இந்த இளம் வயதிலேயே கணவனை இழந்து விதவையானாள். ஓர் வேனிற் காலத்து இரவில், இலைகளும், கொடிகளும் கற்கள் போல் சலனமற்றிருந்தன. புழுக்கம் தாங்காமல் வீட்டை விட்டு வெளியேறிய ஹேமவதி புனல் நீராடினாள். அவ்விரவிலேயே இதுகாறும் மேகத்திடையே மறைந்திருந்த சந்திரன் வெளிவரவே, நிலவின் ஒளியால் பளிங்கு போன்ற அவள் மேனி பன் மடங்கு மிளிர்ந்தது. அவள் உடலின் வனப்பைக் கண்ணுற்ற வான்மதியே மயங்கி, நானிலம் அடைந்து அவளை நாடி அணைத்தான். அயலார்கரம் காணாத அவள் மேனி சந்திரனின் அணைப்பால் புளகாங்கிதமாகியது. இரவு நெடுநேரம் வரை அக்காதலர்கள் வாழ்வின் இன்பத்தை நுகர்ந்தனர். பொழுது புலரும் முன் கிளம்ப யத்தனித்த சந்திரனை ஹேமவதி தடுத்தாள்.

தன்னைவிட்டு போகக்கூடாது என்று எவ்வளவோ சொல்லிப்பார்த்தாள். சந்திரன் செவி சாய்க்கவில்லை. முடிவில் சினம் கொண்டு 'என்னை விட்டுவிட்டுப் போனால் என் கற்பைக் களங்க மாக்கியதற்குச் சமம் என்று சாபம் இடுவேன். எச்சரிக்கிறேன்' என்றாள்.

"அன்பே! ஆத்திரம் வேண்டாம். உனக்குப் பிறக்கப்போகும் மகன் ஒரு பெரிய ராஜ்ஜியத்தை ஆளப்போகிறான். அவனது சந்ததி

Koviloor Digital Library



ஆயிரம் கிளைகளாகப் பிரியும். இதைக் கருத்தில் வை. என் கடமையைத்தவறினால் கடவுளின் கோபத்திற்கு ஆளாக நேரிடும். எனக்கு விடைகொடு" என்றான் சந்திரன்.

ஹேமவதி சாபமிடும் எண்ணம் தவிர்த்தாள். எனினும் விதவையான தான் கர்ப்பமுற்றிருப்பதை ஊரார் அறிந்துவிட்டால் பழி சுமத்தி தூற்றுவார்களே என பயந்தாள்.

'தாங்கள் எனக்கு எவ்வுதவி செய்ய தயாராக இருந்தாலும் என் வயிற்றில் சிசு வளர்வதை உலகோர் அறிந்துவிட்டால் நான் எப்படி அவர்களின் முன்னிலையில் வாழ்வேன்! இதற்குத் தாங்களே வழிவகுக்க வேண்டும்' என்றாள் அவள்.

"அஞ்சாதே! ஹேமவதி கர்ணவதி ஆற்றங்கரையில் மனித சஞ்சாரமற்ற இடத்தைத் தேர்ந்தெடுத்து வாழ்ந்துவா. எவ்வித துன்பமும் நேராவண்ணம் நான் காத்து வருகிறேன். மகன் பிறந்து மன்னனாவான்' என்றான் சந்திரன்.

"மகன் பிறந்து மன்னனாவான் சரி. ஆனால் நான் செய்த பாவம் என்னை விட்டு நீங்காவிடின் நரகம் செல்ல நேரிடுமே! இதற்கு என்ன பரிகாரம்' என்று கேட்டாள் ஹேமவதி.

ஹேமவதியின் உள்ளத்தில் வருங்கால இன்னல்களும், உலக அபவாதமும் ஓர் பயங்கர உருவாக எடுத்தன.

"உன் மகன் பதினெட்டு வயது நிரம்பியவுடன், பாண்டிய யாகம் புரியச் சொல். இவ்வேள்வியால் உன் பாபம் அகலும். ஹேமவதி! அச்சம் தவிர். உன் மகன் ஓர் வீரனாக விளங்கப் போவதை நீயே காண்பாய்!' என்றான் சந்திரன்.

சந்திரன் இவ்வாறு கூறிவிட்டு மறைந்தான். அவனது சொற்படி ஹேமவதி கர்ணவதி (இன்றைய பெயர் கேன்) நதியை

Koviloor Digital Library

அடைந்து, அதன் கரையில் குடிலமைத்து பல கடினமான நோன்புகளை நோற்றாள்.

காலம் கழிந்து வைகாசி மாதம், கிருஷ்ண பக்ஷத்தின் பதினோறாவது நாள், திங்கள் அன்று காலை சந்திர பிம்பம் போன்ற ஆண் மகவை ஈன்றாள். குழந்தைக்கு "சந்திரபிரம்மா" என பெயரிடப்பட்டது. ஓராண்டு கழிந்ததும் சந்திரன் மறுபடியும் ஹேமவதியின் முன் தோன்றி அக்குழந்தையின் சந்ததியார் 'வர்மன்' என்ற குலப்பெயரைப் பூண்டுள்ள வரை அவர்கள் ராஜ்ஜிய பரிபாலனம் செய்வார்கள் என்று கூறி, தேவகுரு பிரஹஸ்பதி கணித்த குழந்தையின் ஜாதகத்தையும் அளித்துவிட்டு மறைந்தான்.

பதினாறு வயதடைந்த சந்திர பிரம்மா எனும் சந்திரவர்மன் பல கலைகளில் நிகரற்று விளங்கினான். ஒரே கல்லால் புலியைக் கொன்றும், பன்னிரண்டு அடி வேலினால் சிங்கத்தை வீழ்த்தியும் அச்சிறுவன் தன் வீரத்தைக் காண்பித்தான். மகனின் மாபெரும் செயல்களைக்கண்டு களித்த அன்னை சந்திரனை நினைத்தாள். சந்திரன் மறுபடியும் தோன்றி, மகனை உச்சி மோர்ந்து மனமார்ந்த ஆசிகளைக் கூறி தன்னிடமிருந்த உறை கல்லையும் கொடுத்தான். தேவகுரு அவனுக்கு ஞானப் பாலூட்டி குபேரன் தன்னிடமிருந்த நாற்படைகளையும் கொடுத்தான்.

சந்திவர்மன் தன் படைபலத்தால் கலிஞ்சரைக் கைப்பற்றி, உறைகல்லின் உதவியால் அந்தணர்களுக்கும், ஏழை எளியவர்க்கும் அளவின்றி தானமளித்தான். நாட்டின் நில வளத்தைப் பெருக்க, முப்பதாயிரம் வீரர்களோடு வடக்கு சென்று காசி வரை வெற்றி கண்டு, காசி மன்னனின் மகளையும் மணந்தான். கலிஞ்சரில் பெரும் கோட்டை ஒன்றை எழுப்பி அதில் வாழ்ந்து வந்தான்.

தன் பால்ய வயதில் புரிந்த பாவத்தை ஹேமவதி அவனுக்குக் கூறி, அப்பாபம் தன்னைவிட்டு நீங்க சந்திரன் புகன்ற விவரத்யையும்

Koviloor Digital Library



தெரிவித்தாள். அவள் விருப்பப்படி சந்திரவர்மன் 85 யாககுண்டங்களை, எழுப்பி, பல முனிவர்களைக் கொண்டு விண்ணோர் வியக்கும் வண்ணம் 'பாண்டிய யாகம்' நடத்தி தன் தாயாரின் பாவத்தை நீக்கினான். அவளும் தோஷம் நீங்கி விண்ணுலகு எய்தினாள்.

இந்த 85 யாகக் குண்டங்கள் மீதுதான் பிற்கால சந்தேல அரசர்கள், தங்கள் பரம்பரை கொள்கைபடி 85 கோயில்களை எழுப்பினராம். சந்திர வம்சத்தினராதலால் சந்தேலர்கள் எனவும் பெயர் பெற்றனராம். 'மஹோபா காண்டம்' நூலில் காணப்படும் இக்கதை உண்மையென்று உரைக்க சான்றுகள் இல்லையெனினும் சந்தேல மன்னர்கள் தான் கஜராஹோ ஆலயங்களை அமைத்தவர்கள் என்பதற்காகவாது இந்நூல் சான்றாக இருந்து வருகிறது.

இவ்வம்சத்தில் முதலில் ஆண்ட சில மன்னர்கள் வைஷ்ணவர்களாகவும், பிற்காலத்து சில அரசர்கள் சைவர்களாகவும் இருந்திருப்பதாக இக்கோயில்களின் சின்னங்களிலிருந்து தெரிகிறது. எனினும் ஜைன கோயில்களை கட்டுவித்து ஜைன மதத்திற்கும் மதிப்பீந்தனர். இவர்களது கீர்த்தி பரவும் முன்பேயே புத்த மதம் இந்தியாவில் நசித்துவிட்ட போதிலும், புத்த உருவங்களை தோற்றுவித்ததன் மூலம் இம்மன்னர்கள் பௌத்தர்களையும் ஆதரித்திருப்பார்களெனவும் அறியலாம்.

கி.பி. 629ம் ஆண்டிலிருந்து 645 ம் ஆண்டுவரை இந்தியாவில் பிரயாணம் செய்து வந்த சீன யாத்ரிகர் 'யுவாங்–சுவாங்' பௌத்த மடங்களும், விஹாரங்களும் இருப்பதாகக் கேள்வியுற்று கஜராஹோவிற்கு விஜயம் செய்து ஏமாற்றமடைந்து சென்றதாகத் தெரிகிறது. இவ்விடத்திற்கு, 'சி.கி.மே' என்ற பெயர் வழங்கியதாக

Koviloor Digital Library



இவர் குறிப்பிட்டுள்ளார். அப்போதிருந்த 12 கோயில்களைப் பற்றிய விவரங்களும் இவரது குறிப்பில் உள்ளன. அக்கோயில்களில் 1000 அந்தணர்கள் இருந்தனரென்றும், அரசனும் அந்தணன்தான் என்றும் கூறியுள்ளார். கி.பி. 1002ம் ஆண்டில் கஜனி முகம்மதுடன் இந்தியாவிற்கு வந்த 'அவி–ரிஹான் அல்பிரூனி' என்ற யாத்திரீகரும் கஜராஹோவைப்பற்றி விளக்கமாக எழுதியுள்ளார். 'ஒரு மைல் நீளமும் கொண்ட (நினோரதால் என்று இப்போது அழைக்கப்படும்) ஏரியும், அந்த ஏரியைச் சுற்றி விக்ரகங்கள் கொண்ட கோயில்களும் இருந்தன, ஏரியின் நடுவில், மூன்று கோபுரங்களும், நான்கு மூலைகளில் கும்பங்கள் கொண்ட கட்டிடங்களும் இருந்தன என்று கி.பி. 1035ல் வந்த இபன் – இ – பட்டுட்டா என்ற யாத்திரீகரும் கஜராஹோவைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறார்.

## சிற்பங்களும், சிலைகளும்

கஜராஹோ மத்திய பிரதேசத்தில் சத்தர்பூர் ஜில்லாவில் உள்ளது. ஜான்ஸி – மாணிக்பூர் இருப்புப் பாதையில் உள்ள ஹர்பால்பூர் என்ற ஸ்டேசனில் இறங்க வேண்டும். அங்கிருந்து 61 மைல் தூரத்திலுள்ள கஜராஹோவை அடைய நவீன வசதிகள் கொண்ட பஸ்மூலம் பிரயாணம் செய்யலாம். இன்று பல வசதிகளும் உள்ளன.

இன்று குக்கிராமமாகக் காட்சி அளித்து வரும் கஜராஹோ சந்தேல மன்னர்கள் காலத்தில் எட்டு அல்லது பத்து சதுரமைல் கொண்ட தலைநகராக இருந்திருக்கலாம். ஏனெனில் இந்த விஸ்தீரணத்தில்தான் புதைந்த – சிதைந்த சிற்பங்களும், கிடைத்து வருகின்றன. பழைய நூல்களில் இந்த இடத்திற்கு ஸ்ரீ கருஜிருவாஹகா' என்ற பெயர் கொடுக்கப்பட்டுள்ளது.

Koviloor Digital Library



வளம் நிறைந்த சந்தேல மன்னர்கள் காலத்தில் இந்நகர் தலைவாயிலைப் பொன்னால் செய்த இரு பேரீச்ச மரங்கள் அலங்கரித்தனவாம். இந்தியில் 'கஜீர்' என்றால் பேரீச்சம் பழம் என்று பொருள். இச்சொல்லையே அடிப்டையாகக் கொண்ட பொன் பேரீச்ச மரங்கள் நகரின் வாயிலில் நிறுவப்பட்டதின் காரணமாக 'கஜராஹோ' என்ற பெயர் அமைந்திருக்கலாம் என்று தோன்றுகிறது. மேலும் இந்த இடத்தில் பேரீச்ச மரங்கள் காணப்படுவதால் மற்றொரு பெயரான, 'காஜிர்பூர்வாஹக் கஜராஹோ என்று மருவியும் இருக்கலாம் என்றும் சிலர் கருதுகின்றனர்.

'கஜேஸ்வரி' அம்மனின் ஆலயம் முதன் முதலில் இங்கு எழுப்பப்பட்டதால்தான் 'கஜராஹோ' என்ற பெயர் ஏற்பட்டது என்பது ஒரு சிலர் கருத்து.

காலத்தின் கடுந்தாக்குதலாலும், கஜனி முகமது – சிகந்தர் லோடி இவர்களது பல படையெடுப்புகளினாலும் இக்கோயில்களில் பல இடிந்து சிதைந்து, மறைந்துவிட்டன.

ஆனால் எஞ்சியுள்ள கோபுரங்களின் சிற்பங்களும், மூல விக்ரகங்களும் முழுவதும் சேதமடைந்துவிடாமல் வரலாற்றுச் சின்னங்களாக இன்றுவரை இருந்துவருகின்றன. என்பது நம் நாட்டின் பெரும்பேறு என்று கூறலாம். அசப்பில், உயிர்கொண்ட 2 உருவங்களெனத் திகழும் இச்சிற்பங்களில் அழகும், கலையும் கட்டிக்குலாவுகின்றன. அப்ஸரஸ்கள், தேவதைகள், அழகிய அணங்குகள், யுத்த வீரர்கள், தசாவதாரங்கள் போன்ற சிற்பங்கள் அநேகமாக எல்லாக் கோயில்களிலும் காணலாம்.

மையிடும் மங்கையும் மலர்கொய்யும் மங்கையும், வனத்தில் வசிக்கும் வனிதைகளும், ஆலிங்கண அணங்குகளும் நினைவில் நிற்கும் நடன மணிகளும், பெண்களின் சாமுத்ரிகா லட்சணத்தை

Koviloor Digital Library



உதடு அசையாமல் உபதேசிக்கிறார்கள். பெண் இனத்திற்கு உயர்ந்த ஸ்தானம் அளித்துள்ள இச் சிற்பங்கள் முன் அங்கலட்சணத்தை வெகு அழகாகக் காட்டும் இச்சிற்பங்கள் முன், இன்று நாம் மதிக்கும் மேலைய நாட்டு நாகரீகம் வெட்கித் தலைகுனியும். எந்த முயற்சியோடு, மிகுந்த உற்காசத்தோடு, எப்படி தைரியமாக இப்பேர்ப்பட்ட அருங்கலையை கற்களிலே சிற்பிகள் செதுக்கினார்கள் என்பதைக் கதை கதையாகக் கூறத்தயாராக இருப்பதுபோல் இச்சிற்பங்கள் அமைந்துள்ளன. உலகில் ரோமர், எகிப்தியர் ஆகியோரின் பண்டைய நாகரிகத்தைப் பற்றிப் பேசப்படுகிறது. ஆனால் அதே காலத்தில் நமது பாரத நாகரிகம், கலைகள், மக்களின் பண்பு இவை எள்ளளவும் பின்னடையவில்லை மின்னி மிளிர்ந்தன என்பதற்கும் இச்சிற்பங்களே தக்க சான்றுகளாகும்.

மேற்கண்ட சிற்பங்களைத்தவிர உணர்ச்சிகளைத் தூண்டும் சிற்பங்களுக்கும் கஜுராஹோவில் குறைவில்லை. திபேத், நேபாள், முதலிய நாடுகளில் காணப்படும் சிற்பங்கள் போல், காம லீலையை எடுத்துக்காட்டும் (Erotic Sculptures) சிற்பங்களும் கோயில்களில் ஏராளமாக இருக்கின்றன. கூர்ந்து ஆராயும் கண்களுக்குத்தான் இவற்றின் அமைப்பு தெரியவரலாம். சற்று சிந்தித்தால் அக்காலத்து மக்கள் காமலீலையைக் கூட ஓர் அருங்கலையாகக் கருதினரோ என்ற ஐயம் ஏற்படலாம். இம்மாதிரியான சிற்பங்களைக் கண்டு பலர் எள்ளி நகைக்கலாம். ஆஸ்திகர்கள் அருவருக்கலாம். நாஸ்திகர்கள் நாடறியப் பிரசாரம் செய்யலாம். ஆனால் இவற்றை அமைத்ததின் கார்ணத்தை உணர்ந்து அகக்கண் கொண்டு பார்த்தால் கலை விருந்தை அனுபவித்தவர்களாவோம் என்பதில் சந்தேகமில்லை. மின்னல்களிலிருந்து கோபுரங்களை மீட்கவே இச்சிற்பங்கள் உள்ளன என்பது ஐதீகம். உடையின்றி வாழும் மனிதரின் வாழ்வைக் கல்லிலே காட்ட, சிற்பிகளின் புதிய முயற்சி என்றும் கருதலாம். ஆத்மா

Koviloor Digital Library



ஆண்டவனுடன் கலப்பதைக் காட்டும் சிற்பங்களே இவை என்று சிலர் கூறுகின்றனர். திபெத்திய லாமாக்களுக்கு அவர்களின் புனிதத்தன்மையைச் சோதிக்க சில கோயில்களில் பல வருஷங்கள் வசித்து வரவேண்டுமாம். இக்கோயில்களில் காம நிலைச் சிற்பங்கள், நோக்கும் இடங்கள் எங்கும் அமைந்திருக்குமாம். லாமாவாக வாழ விரும்பும் திபெத்தியனை இக்கோயில்களில் வாழ்ந்து வரும்போது இவனது நடத்தைகளைப் பல லாமாக்கள் கண்காணித்து வருவார்களாம். இக்காம நிலை சிற்பங்களைக் கண்டும் அவனது உள்ளம் சிற்றின்பத்தைப் பற்றி சிந்திக்க மறந்து பேரின்பத்தை நாட விழைந்து விட்டால்தான் பௌத்த சன்யாசியாக ஏற்றுக்கொள்ளப்படுவான் என்று எச். போர்டேன் எழுதியுள்ள 'Through Forbidden Tibet' என்ற புத்தகத்தில்காணப்படுகிறது. இதைப் போலவே தவம் புரியும் முனிவர்களின் மனத்தைக் கலங்காமல் அழகிய அப்ஸரஸ்களை அனுப்பி அவர்களது தவ வலிமையைச் சோதித்திருப்பதாக நம் புராணங்களும் கூறுகின்றன; அம்மாதிரி ஆலயம் அடைந்து ஆண்டவன் அருளை நாடும் பக்தனின் மனம் காம நிலைச் சிற்பங்களால் கவரப்படாமல், களங்கமற்ற மனத்தோடு பகவானை வழிபட வேண்டும் என்பதற்காகவே கஜுராஹோ கோயில்களில் இச்சிற்பங்களை அமைத்திருப்பதாகப் பலர் கருதுகின்றனர். எப்படியாயினும் ஒவ்வொரு அங்கத்தையும் பல கோணங்களிலே அணுவணுவாக ஆராய்ந்து, அதை கலைவடிவிலே அமைத்து உள்ளுணர்ச்சிகளை முகங்களிலே வடித்து, இச்சிற்பங்களைப் பார்ப்போர் உள்ளத்திலும் உணர்ச்சியைத் தூண்ட செய்யும் கலைஞர்களின் கைத்திறனை எண்ணும்போது நம்முன் தோன்றி நிற்கும் அச்சிற்பங்களின் காமலீலைகள் கண்களிலிருந்து மறைந்து, சிற்பிகளுக்கும் கோயில் கட்டி கும்பிடலாம் என்று ஆசை எவர் மனத்திலும் எழும்பலாம்.

Koviloor Digital Library



# ஆலயங்களின் அமைப்பு

கஜுராஹோவின் கோயில்கள் கி.பி.950ம் ஆண்டிலிருந்து 1050ம் ஆண்டிற்குள் கட்டப்பட்டவை. இக்கோயில்கள் தங்கள் தங்கள் காலத்தைத் தெரிவிக்கின்றன. பாரதத்தின் கலைகளும், நாகரிகமும் என்றென்றும் நிலைபெற்றிருக்கும் என்பதை தக்க சான்றுகளோடு உலகுக்கு அறிவித்துக் கொண்டிருக்கின்றன. நம் நாட்டின் ஒரே ஒரு வைரச் சுரங்கம் கொண்ட 'பன்னா' என்ற இடத்திலிருந்து வெட்டப்பட்ட சற்று மஞ்சள் நிறம் கொண்ட கற்களினால் இக்கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. சுண்ணாம்பு, கான்கிரீட்டும், இரும்பு கம்பிகளும் அபரிமிதமாகச் சேர்க்கப்பட்டுள்ளன. ஆயிரம் ஆண்டுகள் ஆகிவிட்டதாம் இக்கோயில்களிலிருந்த அரிய வேலைப்பாடுகள் அமைந்த கதவுகளும் ஜன்னல்களும் அழிவு பெற்றிருக்கலாம்

கஜுராஹோ

Koviloor Digital Library



எல்லாம் ஒரே வித அமைப்பைக் கொண்டுள்ளதால் ஒரு கோயிலின் அமைப்பைக் கவனிப்போம்.

நீண்ட சதுரமான மேடை ஒன்றின் மீது கோயில் எழுப்பப்பட்டுள்ளது. கருவறை, மண்டபம், அர்த்த மண்டபம் என்ற பிரிவுகள் இருக்கின்றன. சற்று பெரிய கோயிலாக இருந்தால், மஹாமண்டபம் என்ற இடம் கருவறைக்கும் மண்டபத்திற்கும் இடையே இருக்கும். மேற்சொன்ன பெரிய மேடையில் பல கோணங்கள் கொண்ட அநேக அடுக்குகள் உள்ளன. இதன் மீதுதான் கோயிலின் புறச்சுவர்கள் எழுப்பப்பட்டுள்ளன. இந்த சுவர்களிலே

Koviloor Digital Library



இரண்டு அல்லது மூன்று வகைகளாக எல்லாப் பக்கங்களிலும் சிற்பங்கள் பொருத்தப்பட்டுள்ளன. ஆங்காங்கு சாளரங்களும் உண்டு. இவ்வாலயங்கள் மேலைய நாட்டு பொறியாளர்கள் வியக்கும் வணணம் கட்டப்பட்டுள்ன. கருவறையில் நிலவவேண்டிய அமைதிக்கேற்ப இந்த சாளரங்கள் தகுந்த வெளிச்சத்தைக் கொடுக்க உதவுகின்றன.

வேதாகமங்களில் கூறியபடியே கோயில்களின் உட்புறம் அமைந்திருக்கிறது. ஆலயத்திற்குள் நுழைய ஒரே ஒரு வாயில்தான்.

அதுவும் கிழக்குப் பக்கத்தில் தான் இருக்கிறது. இவ்வாயிலை அடைய பல படிகள் ஏற வேண்டும். வாயிலை அடைந்ததும் மலர்கள், பூத்துக்குலுங்கும் தோரணங்களும், கமல மலரின் இதழ்களொத்த விதானமும் நம்மை வரவேற்று பரவசப் படுத்துகின்றன. மஹாமண்டபத்தில் நான்கு மூலைகளிலும் சதுர வடிவமான தூண்கள் சாளரங்ளை இணைந்துள்ள பெரிய பெரிய உத்திரங்களைத் தாங்குகின்றன.

இங்குள்ள கோயில்களில் சிலவற்றில் ஐந்து முக்கிய விக்ரகங்கள் உள்ளன. கருவறையில் ஒன்றும், மேடையின் நான்கு மூலைகளில் ஒவ்வொன்றுமாக மொத்தம் ஐந்து விக்கிரகங்களைக் கொண்ட இக்கோயில்களை 'பஞ்சயாதனா' என்று கூறுகிறார்கள் கருவறை வெளிப்புறத்திலும், கோயிலின் புறச் சுவரிலும் இருக்கும் சிற்ப வரிசைகளிலே தெய்வ உருவங்கள் தேவதைகள், அஷ்டத்திக்கு பாலர்கள், இளம் தம்பதிகள், அப்ஸரஸ்கள், நாக கன்னிகள் படை வீரர்கள், ரதங்கள் முதலிய சிற்பங்கள் அலங்கரிக்கின்றன. உதாரணமாக அங்கு இருக்கும் கந்தாரிய மகாதேவன் கோயிலில் மாத்திரம் 872 சிற்பங்கள் இருக்கின்றன. சந்தேல மன்னர்கள் கஜுராஹோராவில் கட்டிய 85 கோயில்களில் இன்று 20

Koviloor Digital Library



கோயில்கள்தான் பலவித தாக்குதல்களிலிருந்து தப்பி இருக்கின்றன. அவற்றில் முக்கியமானவற்றைப் பார்ப்போம்!

## சிலைக் களஞ்சியங்கள்

### கந்தார்ய மஹாதேவன் கோயில்!

இக்கோயில் மற்ற கோயில்களை விடப் பெரிது. இதன் நீளம் 102–3 அடி, அகலம் 66 –70 அடி உயரம் 101 – 9 அடி ஆகும் . பஞ்சயாதானா முறைப்படி கட்டப்பட்ட இக்கோயிலில் மூல விக்ரகத்தைத் தவிர மற்ற நான்கு விக்ரகங்களும் காணவில்லை! அர்த்தமண்டபம், மண்டபம், மஹாமண்டபம், அர்ச்சனை இடம், பிரதக்ஷண பாதை, கருவறை என்று சாஸ்திர விதிப்படி ஆறு பிரிவுகள் உள்ளன. முகப்பில் அழகிய கல் தோரணங்கள் கொண்ட இக்கோயிலின் புறச்சுவர்களிலே பல தேவதைகள், தம்பதிகள், இசை வாணர்கள், வாத்யக் காரர்கள் முதலிய சிற்பங்களைக் காணலாம். அரிய வேலைப்பாடுகள் கொண்ட உத்திரங்கள் அர்த்த மண்டபத்திலும், கங்கண வட்டங்களாலான விதானம் மஹா மண்டபத்திலும் உள்ளன. உட்புறத்தில் பூங்கொடிகள் சூழ்ந்துள்ள சோலைகளிலே தவமுனிவர்கள் பலரைக் காண்கிறோம். கருவறை முகப்பில் முதலை வாகனமுடைய (மகரம்) கங்கா தேவியும் ஆமை வாகனமுடைய யமுனா தேவியும் காட்சி அளிக்கின்றனர். கருவறையில் சலவைக் கல்லால் செய்யப்பட்ட சிவலிங்கம் உள்ளது.

கருவறையின் எட்டு திசைகளிலும் அஷ்டதிக்பாலர்கள் அலங்கரிக்கின்றனர். கருவறையின் வெளிச்சுவர்களில் பலவித சிற்பங்கள் அடுக்கடுக்காக அழகு படுத்துகின்றன. இச்சிற்பங்களின் வதனங்களில் தெய்வீகம் குடிகொண்டிருக்கிறது. இவற்றைத்தவிர நாக கன்னிகைகள், அப்ஸரஸ்கள், மிதுனர்கள், அழகிகள் முதலிய சிற்பங்களையும் காணலாம். மஹா மண்டபத்தில் மலர்க்கொடிகளைத்

Koviloor Digital Library



தழுவும் மங்கையரின் வதனங்களிலே தோன்றும் பாவம் நம்மை வசீகரிக்கின்றது.

## 2. ஜெகதாம்பிகை கோயில்

இதற்குக் காளிகோயில் என்ற மற்றொரு பெயரும் உண்டு. கந்தார்ய மஹா தேவன் கோயிலுக்கு வலப்புறத்தில் உள்ள இதன் நீளம் 73–3 அடி; அகலம் 42–1 அடி இக்கோயிலின் வாயில் நிலையில் வைஷ்ணவச் சின்னங்கள் தென்படுவதால் முன்பு மூலஸ்தானத்தில் விஷ்ணு சிலை இருந்து மொகலாயர்களால் உடைத்து எறியப்பட்டிருக்கலாம். ஆனால் அவ்விஷ்ணு சிலையின் பக்கத்திலிருந்த லக்ஷ்மி சிலை தற்போது பழுதடைந்துள்ளது. அந்த விக்னத்தை மறைக்க அதன் மேல் கருப்பு வர்ணம் பூசப்பட்டிருப்பதால் அச்சிலையை 'துர்கை' என்றும், ஜகதம்பிகை என்றும் அழைக்கிறார்கள். இச்சிலை பஞ்சாபிலிருந்து கொண்டுவரப் பட்டதாகத் தெரிகிறது. 'பஞ்சயாதனா' முறைப்படி கட்டப்பட்ட இக்கோயிலிலும் மற்ற நான்கு விக்ரகங்கள் மறைந்துவிட்டன. கந்தார்ய மஹாதேவன் கோயிலில் இருப்பதைப் போன்ற சிற்பங்கள் கொண்ட இக்கோயிலில் மண்டபம் கிடையாது. கருவறையின் தென் சுவரிலே முகத்தில் கம்பீரம் தவழும் யமனது உருவமும், மேற்கு சுவரில் மூன்று தலைகள், எட்டு கரங்களுடன் தரிசனம் தரும் சிவன் சிலையும் நாம் முக்கியமாகப் பார்க்க வேண்டியவை.

## 3. சித்ர குப்தன் கோயில்

ஜகதம்பிகை கோயிலுக்கு வடக்கேயுள்ள இக்கோயில் கிழக்கு நோக்கியுள்ளது. இதன் நீளம் 74–9 அடி, அகலம் 51–9 அடி. இதன் விதானம் மற்ற கோயில்களின் விதானங்களைப் போல் இல்லை! சதுரமாக உள்ள மண்டபத்தின் மேல் எட்டு பட்டைகள் கொண்ட

Koviloor Digital Library


உத்திரங்கள் உள்ளன. இவற்றின் மேலே செல்லச் செல்ல வட்ட வடிவமாக மாறியுள்ளன. கருவறையில் பாதரட்சை அணிந்த, ஐந்து அடி உயரமுள்ள சூரிய தேவன், ஏழு குதிரைகள், பூட்டிய ரதத்தை ஓட்டுவது போல் காணலாம். கோயிலின் சுவர்களில் யானைச் சண்டை, ஊர்வலம், வேட்டையாடுதல் முதலிய காட்சிகள் கொண்ட சிற்பங்கள் அலங்கரிக்கின்றன. கோயிலின் தென் சுவற்றில் பதினோரு தலைகள் கொண்ட நாராயணன் சிலை ஒன்றுள்ளது. நடுத்தலை விஷ்ணுவையும், மற்ற பத்து தலைகள் அவர் எடுத்த அவதாரங்களையும் குறிக்கின்றன.

## 4. விஸ்வநாதர் கோயில்

89–1 அடி நீளமும், 45–10 அடி அகலமும் கொண்ட இக் கோயில் கந்தார்ய மஹா தேவன் கோயிலின் அமைப்பை ஒட்டியிருக்கிறது. இங்கு இரு கல்வெட்டுகள் உள்ளன. அரசன் 'தங்கன்' இறந்தபோது இக்கோயில் கட்டப்பட்டதென்றும், 'சம்பு மரகதேஸ்வரர்' என்ற மரகதலிங்கம் இருந்ததென்றும், கி.பி. 1002 03ம் வருடம் என்றும் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டு தங்கன் இறந்ததைக் குறிப்பிடினும், அவன் வாழ்நாளிலேயே இக்கோயில் கட்டி முடிக்கப்பட்டிருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர். ஆனால் மரகத லிங்கம் இருந்த இடத்தில் இப்போது வெறும் சாதாரண லிங்கந்தான் இருக்கிறது. கி.பி. 1001–02 என்று குறிப்பிட்டுள்ள மற்றொரு கல்வெட்டில் 'கோகலா' என்பவன் வைத்திய நாதன் கோயில் எழுப்பினான் என்றும், அந்தணர்கள் வசிக்க அனேக விடுதிகள் கட்டினான் என்றும் குறிப்பிட்ட போதிலும் அவற்றின் சின்னங்கள் கூட தற்போது அங்கு தென்படவில்லை. மண்டபத்தின் உட்புறம் சுவற்றில் சந்தேல முதல் மன்னன் 'நன்னுக் முதல் தங்கன் ஈறாக

Koviloor Digital Library


உள்ள மன்னர்களின் பெயர்களும், கி.பி. 1059 ம் ஆண்டு என்றும் செதுக்கப்பட்டுள்ளது. கூரையின் உட்புறங்களிலே எழில் ததும்பும் அணங்குகளின் உருவங்களும், காதலர்களின் களியாட்டங்களும் நம் கண்களுக்கு நல் விருந்தாக உள்ளன. மதலையை அணைத்த மங்கையைத் தெற்கு சுவரிலும், இடக்கையில் கிளியும், வலக்கையில் கனியும் கொண்டுள்ள கன்னியை மேற்குச் சுவரிலும் பார்க்கலாம் கருவறையின் லிங்கத்திற்கு வலப்புறம் பிரம்மாவும், இடப்புறம் விஷ்ணுவும் காட்சி தருகின்றனர்.

வாயில் படிக்கட்டில் உள்ள இரு கல் யானைகள் நமக்குக் கட்டியம் கூறி வரவேற்கின்றன. வெளியே செல்லும் படிகளிலுள்ள இரு சிங்கங்கள் நமக்கு பிரியாவிடை கொடுக்கின்றன.

இக்கோயிலின் முன்புறத்தில் நந்திக்காக சிறு கோயில் உள்ளது. அதன் நீளம் 31–3 அடி, அகலம் 30–9 அடி ஆகும். சதுர வடிவமுள்ள பன்னிரண்டு தூண்களால் கட்டப்பட்ட இக்கோயிலில் 7–3 அடி நீளமும் 6 அடி உயரமும் உள்ள ரிஷபம் கம்பீரமாகப் படுத்துள்ளது. மிருதுவான தன்மை கொண்ட இந்நந்தி, தஞ்சை பெரிய கோயிலின் நந்தியையே நமக்கு ஞாபகப் படுத்தும்.

## 5. லக்ஷ்மணன் கோயில்

ஏறக்குறைய விஸ்வநாதர் கோயிலைப் போன்ற இதன் நீளம் 98–அடி, அகலம் 45–3 அடி. இது ராமசந்திரன் கோயில் என்றும் அழைக்கப்படுகிறது. கோயிலின் வாசற்படி முகப்பில் வலப்புறம் பிரம்மாவும், மேற்புறம் சிவனும் கொண்ட லக்ஷ்மியின் உருவம் உள்ளது. இதைக்கடந்து உள்ளே சென்றால் நவக்கிரகங்களின் உருவமும், தேவர், அசுரர்கள் திருப்பாற்கடலைக் கடைவதையும், தசாவதாரங்களையும் காணலாம். கருவறையில் 4–1 அடி உயரமுள்ள

Koviloor Digital Library


கண்ணையும் கருத்தையும் கவரும் விஷ்ணு சிலை இருக்கிறது. தேவமுகம், மையத்திலும், நரசிம்ம முகம் வலப்புறத்திலும் அமைந்த இச்சிலையை அவசியம் பார்க்க வேண்டும். நடு முகத்தைத் தவிர மற்ற இரு முகங்களும் பழுதடைந்தும், ஆயிரம் ஆண்டுகள் ஆன போதிலும் இன்று சமைத்த சிலை போல் விளங்குவது நம் நாட்டு சிற்பக்கலையின் உயர்வையே உணர்த்துகிறது. 1843ஆம் ஆண்டு இக்கோயிலை சந்தர்பூர்மன்னர் பழுது பார்த்தபோது, கி.பி. 955ல் பொறிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்று கிடைத்தது. அதைக் கோயில் சுவரிலேயே பதித்திருக்கிறார்கள். கன்னோஜை ஆண்ட தேவபாலனிடமிருந்து பெற்ற விஷ்ணு சிலையை யசோவர்மன் இக்கோயிலில் பிரதிஷ்டை செய்தான் என்ற வாசகத்தை அதிலே காணலாம். யசோவர்மன் கட்டிய இக்கோயில் அவனது விருது பெயரான லக்ஷ்மணன் என்ற பெயரையே தாங்கியுள்ளது. இக்கோயில் புறச் சுவர்களிலே பள்ளி வகுப்பும், யானை, குதிரைகள் கொண்ட ஊர்வலமும், யுத்த வியூகங்களும் நம் கவனத்தைக் கவருகின்றன. சூரியனுடைய புத்திரன் 'ரேவந்தா' குடை பிடிக்கும் தன் பணியாளுடன் குதிரைமேலிருந்து காட்டுப்பன்றி வேட்டை ஆடுவதையும் இங்கே காணலாம்.

## 6. துலா தேவன் கோயில்

மிகவும் அழகாக அமைக்கப்பட்டிருக்கும் கோயில்களில் ஒன்றான இது நீலகண்டன் கோயில் என்றும் அழைக்கப்படுவதுமுண்டு. இதன் நீளம் 69–2 அடி; அகலம் 40–3 அடி. உடைந்த பழைய லிங்கம் இருந்த இடத்தில் புதிய லிங்கம் வைக்கப்பட்டுள்ளது. ஒரு காலத்தில் இக்கோயிலின் அருகாமையில் மண ஊர்வலம் ஒன்று வந்துகொண்டிருந்ததாம். ஊர்வலம் கோயிலுக்கு எதிரில் வரும்போது குதிரை மேலிருந்த மணமகன்

திடீரென்று கீழே விழுந்து இறந்து தேவரூபமெடுத்து மறைந்து விட்டானாம். இந் நிகழ்ச்சியிலிருந்துதான் இக்கோயிலுக்கு துலா தேவன் கோயில் என்ற பெயர் ஏற்பட்டதாம். இந்தியில் 'துலா' என்பதற்கு 'மண மகன்' என்று பொருள். மற்ற கோயில்களிலே காணப்படும் சிற்பங்கள்தான் இங்கும் காணப்படுகின்றன. கல்வெட்டுகள் ஏதும் இக்கோயிலில் தென்படாவிட்டாலும், வாஸலா என்று எங்கும் பொறிக்கப்பட்டுள்ளது. இது ஸ்தபதியின் பெயராக இருக்கும் என்று ஆய்வாளர்களின் முடிவு. ஒரு மரத்தின் கீழ் காதலன் வழி நோக்கி நிற்கும் காதலியை மகாமண்டபத்திலும், பல வித்தைகள் காட்டும் ஆடவர்களை புறச்சுவர்களிலேயும் பார்க்கலாம்.

## 7. ஜைன கோயில்கள்

இவை மேற்கண்ட கோவில்களிலிருந்து கிழக்கே 1.2 மைல் (சுமார் 3 கிலோமீட்டர்) தூரத்தில் உள்ளன. இக்கோயில்களின் அமைப்பும் மாறுபட்டிருக்கிறது. சுற்றி மதில்சுவர்கள் எழுப்பட்டிருக்கின்றன. "ஆதிநாதர், பார்ஸவநாதர், சாந்திநாதர். கோயில்களோடு நவீன கோயில்கள் பலவும் இங்கு உள்ளன. தீர்த்தங்கரர்களுடைய விவரங்களைப்பற்றி கோயில் சுவர்களில் காணலாம். சதுர்புஜங்களோடு ஜைன அம்மன் மற்ற தேவதைகளுடன் ஆதிநாதர் கோயில் முகப்பில் தரிசனம் தருகிறாள். ஜைன மதக் கொள்கையின் பதினாறு சின்னங்கள் உத்திரத்தில் செதுக்கப்பட்டுள்ளன. கருவறையில் இருந்த தீர்த்தங்கரரின் சிலை சேதமடைந்துவிட்டதால் ஆதிநாதரின் உருவம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. வெளிச்சுவற்றில் மூன்று வரிசைகளாக சிற்பங்கள் உள்ளன. பார்ஸ்வநாதர் கோயில்தான் மற்ற கோயில்களை விட மிக அழகுபொருந்தியது. இக்கோயிலின் வாயில் நிலையில் பத்து ஆயுதங்கள் கொண்ட ஜைன அம்மன் கருட வாகனத்தில் காட்சி

Koviloor Digital Library


தருகிறாள். சிம்மாசனமாக மூலஸ்தானம் அமைந்துள்ளது. இதன் கீழே காளை மாட்டின் உருவம் தென்படுவதால் முன்பு தீர்த்தங்கரின் விக்ரகமோ, ரிஷபநாதரின் உருவமோ அல்லது ஆதிநாதரின் சிலையோ இருந்திருக்க வேண்டும். இப்போது இருக்கும் பார்ஸ்வநாதரின் விக்ரகம் 1860ம் ஆண்டு பிரதிஷ்டை செய்யப்பட்டதாகும். இக்கோயிலின் புறச்சுவர்களிலே அழகிய பெண்களைப் படைத்த சிற்பிகளுக்குள் பெரும் போட்டி இருந்திருக்க வேண்டும். அவ்வளவு அழகான சிற்பங்களில் குழந்தையை அணைத்த குணவதியும், வாசனாதிகளை உபயோகிக்கும் வனிதையும், கடிதம் எழுதும் கலாவல்லியும் பாதத்திலே முள் காட்டும் பாவையும் நம் மனத்தைக் கவருகின்றனர். இக்கோயிலின் தெற்கில் சமீபத்தில் கட்டிய சாந்தி நாதர் கோயில் உள்ளது. அதில் 14 அடி உயரமுள்ள தீர்த்தங்கரர் சிலை இருக்கிறது.

## 8. இதர கோயில்கள்

மேற்கண்ட கோயில்களைத் தவிர 'சௌஸன்ட் யோகினி கோயில்', லால்குவன்' மஹா தேவன் கோயில், பார்வதி கோயில், மதங்கேஸ்வரர் கோயில், பிரம்மன் கோயில், வாமனன் கோயில், ஜவாரி கோயில், சக்ரா மார்க் என்னுமிடத்தில் உள்ள பல கோயில்களும் கஜரோஹோவில் உள்ளன.

சௌஸன்ட் கோயில் ஒன்றுதான் கஜராஹோவில் கருங்கல்லால் கட்டப்பட்ட கோயிலாகும். கி.பி. 900ம் ஆண்டில் கட்டப்பட்ட இக்கோயிலின் மூல விக்ரகம் காளி அம்மன் என்றும், கருவறையைச் சுற்றி அரைவட்ட வடிவமாக அமைந்த 64 அறைகளில் அம்மனின் படைத்தலைவிகளின் உருவங்கள் இருந்ததாகவும் சொல்லப்படுகிறது. பாதி சந்தன கற்களாலும், பாதி கருங்கற்களாலும் கட்டப்பட்ட லால்குவன் மகாதேவன் கோயில்,

Koviloor Digital Library



லால்குவன் ஏரிக்கரையில் உள்ளது. இது மிகப் பழுதடைந்துவிட்டது. விஸ்வநாதர் ஆலயத்தையொட்டி அமைந்துள்ள பார்வதி கோயிலின் விதானங்களில் வைஷ்ணவச் சின்னங்கள் இருப்பதால் மூலஸ்தானத்தில் வைஷ்ணவ விக்ரகம் இருந்திருக்க வேண்டும். ஆனால் தற்போது முதலை வாகனம் கொண்ட கங்கை அம்மன் சிலை மூலஸ்தானத்தை அலங்கரிக்கிறது. தவறாக பார்வதி கோயில் என்று அழைக்கப்படுகிறது. பிரம்மன் கோயில் நினோதால் ஏரிக்கரையில் உள்ளது. லால்குவன் மகாதேவன் கோயில் போல் கட்டப்பட்ட இந்த ஆலயத்தின் கருவறையில் இன்றலர்ந்த கமலமலரில் நான்முகக் கடவுள் வீற்றிருக்கிறார்.

புத்தர், சிவ–பார்வதி மணக் காட்சிகள், ஐந்து அடி உயரமுள்ள வாமன மூர்த்தி இவற்றை வாமனன் கோயிலில் காணலாம். தஞ்சை பெரிய கோயிலில் உள்ளது போன்ற பெரும் லிங்கம், மதங்கேஸ்வரர் கோயிலின் மூலஸ்தானத்தில் உள்ளது. இதன் மொத்த உயரம் 12–9அடி. நாகரி லிபியும், பராசீக எழுத்துக்களும் அழிவுறாதமையினால் இந்த லிங்கத்தின் மேல் எழுதப்பட்டுள்ளது. இந்த ஒரு கோயிலில்தான் தற்போதும் பூஜை நடந்து வருகின்றது. ஜவாரி கோயில் சிறிய ஆலயமாக இருந்தும் வெகு அழகாகக் கட்டப்பட்டுள்ளது. அர்த்த மண்டபம், மஹாமண்டபம், கருவறை கொண்ட இக்கோயிலில் சங்கு சக்ர கதாதாரியாக நாராயணன் காட்சி அளிக்கிறார்.

சதுர்புஜன் கோயில் என்று மற்றொரு பெயர் கொண்ட ஜட்காரி கோயிலில் ஒன்பது அடி உயரமுள்ள விஷ்ணு சிலை ஒன்றுள்ளது. தலையில் அழகிய கிரீடமும், உடலில் பலவித நகைகளும் இச்சிலையை அலங்கரிக்கின்றன. கீழிரண்டு கைகள் உடைந்துவிட்டன. உள்ளங்கையில் சக்ரம் கொண்ட அபயஹஸ்தமாக

Koviloor Digital Library

ஒன்றும், நூலால் கட்டப்பட்ட வேதநூலும் தாமரை மொட்டும் பிடித்தவண்ணம் மற்றொன்றுமாக, மேலிரு கைகள் அமைந்துள்ளன.

புறச்சுவரிலே சிங்க முகம் கொண்ட பெண் உருவம் ஒன்றுள்ளது. நரஹரிக்கேற்ற நங்கை இல்லை என்ற குறையைத் தீர்க்க இதை சிற்பி சிருஷ்டித்தான் போலும். கிழக்குச் சுவரில் நான்கு கரங்களோடு ரிஷபாரூடராய் ஈஸ்வரன் தரிசனம் தருகிறார். தெற்கு சுவரிலுள்ள அர்த்த நாரீஸ்வரரின் அமைப்பைக் கண்டு யாவரும் ஆச்சரியமடைவர். மாபெரும் மணிகளையும், சங்கிலிகளையும் கொண்ட பல தூண்களை கந்தார்ய கோயிலில் காணலாம். இக்கோயிலின் மூல விக்ரகமான புத்தர் சிலை இங்குள்ள காட்சி சாலையில் வைக்கப்பட்டுள்ளது. கோயிலின் உட்புறத்தில் பல ஜைன முனிவர்களையும், நவகிரகங்களையும் சந்திக்கலாம்.

புந்தேல்காண்ட் சமஸ்தானங்களுக்கு ஆங்கில பிரதிநிதியாக இருந்த W. E. ஜார்டைன் ஞாபகார்த்தமாக இங்கு ஒரு அருங்காட்சியகம் உள்ளது. 1910ஆம் ஆண்டில் தொடக்கப்பட்ட இக்காட்சியகத்தில் மதிப்பற்ற பல சிலைகளையும், கதை கூறும் சிற்பங்களையும் காணலாம்.

## 6. கஜுராஹோவின் இன்றைய நிலை

இவ்வளவு சிறப்புகளைக் கொண்ட கஜுராஹோ சந்தேல மன்னர்களின் தலைநகராகப் பல ஆண்டுகள் விளங்கியது. கஜுராஹோ இன்று சுமார் 400 மண் வீடுகள் கொண்ட கிராமமாக இருப்பது பரிதாபக் காட்சியாகும். ஆலயங்களில் ஒளி வீசும் பண்டைய நாகரிகத்தையும் கூட அறிய இயலாத அக் கிராம மக்களிடையே நவநாகரிகத்தின் நிழலைக்கூடக் காண்பதரிது. அச்சிற்பங்களையும், சிலைகளையும், கோயில்களையும்

Koviloor Digital Library



பாதுகாப்பதிலோ, இவற்றை ஆவலுடன் காண விழையும் அன்பர்களுக்கு வழிகாட்டிகளாக இருந்து உதவி புரிவதிலோ இக்கிராம மக்கள் இதுகாறும் முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை. இவற்றின் வரலாற்றைக்கூட அறியாதவர்களாக இக்கிராம மக்கள் இருக்கிறார்கள் என்பதில் மிகையில்லை. நம் நாடு சுதந்திரம் பெற்றதும் கஜராஹோவின் பெருமை குன்றிலிட்ட விளக்கெனவாயிற்று. புதை பொருள் ஆராய்ச்சியாளர்கள் இங்கு வந்து கோயில்களைப் பழுது பார்த்து, அவ்வப்போது சிற்பங்களைச் சுத்தம் செய்து பாதுகாப்பதில் மிகுந்த சிரத்தை காட்டி வருகின்றனர். சிற்ப ஆராய்ச்சியாளர்களும், வரலாற்றை எழுதுபவர்களும் இந்த அரிய கலைப் பொக்கிஷத்தைக்காண உலகின் பல பாகங்களிலிருந்தும் வந்த வண்ணம் இருக்கின்றனர். அரசாங்கத்தாரால் இளைப்பாறும் விடுதியும் கட்டப்பட்டுள்ளது. 'ஜார்டைன்' அருங்காட்சியகத்தில் இட நெருக்கடி ஏற்பட்டுள்ளதால், மற்றொரு காட்சியகம் கட்டப்பட்டு வருகிறது. அயல் நாட்டுத் தலைவர்கள், நம் நாட்டின் எழிலைக்காண வரும்போது, சிற்பக்கலையில் சிறந்து விளங்கும் கஜராஹோவையும் காணத்தவறுவதில்லை. டெல்லியிலிருந்து நேரே இங்கு வர விமான வசதியும் ஏற்பட்டுள்ளது. நவீன வசதிகளைக் கொண்ட விடுதிகளைக் கட்டி, பார்வையாளர்க்கு வேண்டிய எல்லா வித சௌகரியங்களையும் எல்லோரா, அஜந்தா முதலிய இடங்களில் ஏற்படுத்தியிருப்பதைப்போல் கஜராஹோவிலும் அவ்வித வசதிகளை நிறுவ மத்திய சர்க்கார் சில லட்ச ரூபாய்கள் ஒதுக்கி இருக்கிறது. இன்று மேற்சொன்ன வசதிகளோடு விடுதிகளை கட்டியிருப்பார்கள் என நினைக்கிறேன். நான் கஜராஹோவிற்குச் சென்று ஐந்தாறு வருடங்கள் ஆகிவிட்டன. இப்போது பல வசதிகள் இருப்பதாக அறிகிறேன். கோயில்களையும் அழகான சூழ்நிலையில் வைத்துள்ளார்கள்.

Koviloor Digital Library



கஜராஹோவில் தோண்டும் இடங்களில் எல்லாம் சிற்பங்களும், சிலைகளும் கிடைத்த வண்ணமாகவே இருக்கிறது.

ஒவ்வொரு கோயிலும் தங்கள் தங்கள் காலத்து மக்களின் பண்பை உணர்த்துகின்றன. கலைஞர்களும், கலைகளை ஆதரித்தவர்களும் தாங்கள் வாழ்ந்த வாழ்வையே கற்களில் காட்டியுள்ளனர். அருங்கலை, மக்கள், அவர்களின் வாழ்வை ஒருவாறு அறிந்து கொள்ளும் படியான இச்சிற்பங்களைச் சமைத்த சிற்பிகளைச் சந்தேல மன்னர்கள் ஒப்பற்ற நிலையில்தான் வைத்து ஆதரித்திருக்க வேண்டும். ஆம் மன்னர்களும், அக்காலத்து மக்களும் கொண்ட இன்ப வாழ்வு இன்று நம்மிடையே இல்லையெனினும், அவ்வின்பத்தின் சாயலைத்தான் உள்ளங்கைக் கனிபோல் காட்டுகின்றன, கஜராஹோ ஆலயங்கள்.

சிற்றுளியின் ஓசை, அழகிய அணங்குகளின் மெட்டிகளின் தாளம், குதிரைகளின் கனைப்பு, குமரிகளின் சிரிப்பு. வேடுவர்களின்



Koviloor Digital Library



கூக்குரல்கள், வேய்ங்குழலின் இனியகானம், காட்டுமிருகங்களின் பேரிரைச்சல் காதலர்களின் கனி மொழிகள், படைவீரரின் போர் முழக்கம், பக்தர்களின் பாடல்கள், கடலின் அலை ஓசைகள் கூறும் கதைகள் – கவிதைகள் இவை கஜராஹோ சென்று பார்த்துத் திரும்புகிறவர்களின் செவிகளில் என்றென்றும் கேட்டுக்கொண்டிருக்கும் என்பதில் ஐயமே இல்லை!



கஜுரஹோ கோயிலின் பிராகார அமைப்பு

Koviloor Digital Library

# 11. சோழர் காலம் கலைகளின் பொற்காலம்

சோழர்காலத்து சிற்பங்களின் எழிலைப் போன்று பாரதத்தில் வேறு எங்குமே காணமுடியாது. சிற்பங்கள் எழிலை எழுத்தில் வடிக்க இயலாது. நேரே சென்று சோழர் காலத்து ஆலயங்களைக் காணவேண்டும். அவர்களது வரலாறு கலைகளோடு இணைந்தவை. வரலாற்றை சிறிது தெரிந்துகெண்டு பிறகு சில பிரபல கோயில்களில் காணும் சிற்ப அழகை ரசிக்கச் செல்வோம்.

சிற்பம், அழகு காணகண்கோடி வேண்டும், சிற்பங்களின் பெயர் மற்றும் பல விவரங்களை எழுத்துலே எழுதலாம். இங்கு சோழர்காலத்து சிற்ப அழகு உலகப் புகழ்பெற்றவை. செப்புத் திருமேனிகளில் சோழர்களுக்கு இணையாக வேறு எந்த அரசையும் கூற முடியாது. நடராஜர் செப்புத் திருமேனி ஒன்றே போதும்! இனி சோழர்களின் வரலாற்றைப் பார்ப்போம். தமிழகத்தில் ஆலயங்கள் மூலந்தான் தமிழக வரலாற்றை அறிய முடியும்.

ஒன்பதாம் நூற்றாண்டில் விஜயாலயச் சோழன் தஞ்சையைச் சுற்றியுள்ள பரப்பில் அரசு நிறுவினான். அப்போது, சோழர் தங்கள் அதிகாரத்தை மீண்டும் பெற்றனர். விஜயாலயனின் மகனும், பேரனுமான ஆதித்தனும், பராந்தகனும் பல ஆலயங்களைக் கட்டினர்.

சிதம்பரத்தில் பொன் வேய்ந்த அம்பலத்தை நிறுவினான். அவன் மகனான கண்டராதித்தனின் தேவி செம்பியன் மாதேவி பல

Koviloor Digital Library

கங்கைகொண்ட சோழபுரம்

Koviloor Digital Library



கோயில்களைக் கட்டியும், அறக்கட்டளைகள் செய்த இவள் சோழ வரலாற்றில் மிக முக்கியமான அரசிகளுள் ஒருவள்.

பிரஹதீஸ்வரர் கோயில் எனக் கூறப்படும் தஞ்சை பெரிய கோயில்தான் சோழர்காலத்தின் மிகவும் கம்பீரமான நினைவுச் சின்னமாகும். சோழ அரசர்களுள் அதிகம் புகழ்பெற்ற அரசன் இராஜராஜ சோழனே ஆவான். போர்க்கள வெற்றியிலும் கலை, இலக்கியம் இவற்றுக்கு ஆதரவு காட்டிய வகையிலும், சமய சமரசப் பான்மையிலும் அவன் உயர்ந்து விளங்கினான். அவனது 25ம் ஆண்டு ஆட்சி ஆண்டில் ராஜராஜேஸ்வர முடையார்' என்று அவன் பேர்கொண்ட ஒரு பெரும் சிறப்பு வாய்ந்த சிவாலயம் கட்டி முடிக்கப்பட்டது. சிவபெருமானிடம் பெரும் பக்தி உடையவன். அதனால் அவன் சிவபாதசேகரன் என்ற விருதுபெயர் பெற்றான். 'நித்திய வினோதன்' என்ற மற்றொரு பட்டப் பெயரால் அவனது கலை ஆர்வத்தைக் காண முடிகிறது.

வீரத்தில் ராஜராஜ சோழனை விட அவன் மகன் இராஜேந்திரன் சிறந்து விளங்கினான். அவன் ஒரு புகழ்பெற்ற போர் மேதை. தனது வெற்றியுடன் வடக்கே தோற்க்கடிக்கப்பட்ட அரசர்களிடமிருந்து பெறும் ஒரே கப்பமான கங்கை நீரை தன் நாட்டுக்கு கொண்டுவந்து, அவனது புகழை அதிகரித்த சம்பவமாகும். அவனால் உருவாக்கப்பட்ட புதிய தலைநகரமான கங்கை கொண்ட சோழபுரத்தில் ஜலமயமான ஜயஸ்தம்பமாக ஒரு ஏரியை அமைத்தான்.

தஞ்சைபெரிய கோயிலை ஒத்த ஒரு மாபெரும் கோயிலையும் கட்டினான் இராஜேந்திரச் சோழன்.

இரண்டாம் குலோத்துங்கன் மகன் இரண்டாம் ராஜராஜன் காலத்திலும் கோயில் திருப்பணிகள் செவ்வனே நடந்தன. இவன் காலத்தில் கட்டப்பட்ட தாராசுர கோயிலின் அழகிய மண்டபத்தில்

Koviloor Digital Library

ஐம்பொன் பார்வதி சிலை

'இராஜ கம்பீர' எனும் விருது பொறிக்கப்பட்டிருந்தது.

பெரிய கட்டிடங்கள் கட்டிய கடைசிச்சோழன் மூன்றாம் குலோத்துங்கனே! திரிபுவனம் கம்பஹரேஸ்வரர் கோயில் போல பல கோயில்களைக் கட்டியதுடன், காஞ்சிபுரம், மதுரை, சிதம்பரம், திருவாரூர், திருவிடைமருதூர் தாராசுரம் கோயில்களையும் திருப்பணி செய்து புதுப்பித்தான். இக் கோயில்களுக்கு புதுகட்டிட அமைப்புகளையும் சேர்க்கவும் செய்தான்.

நார்த்தாமலை, மலையடிப்பட்டி, முதலிய இடங்களில் முற்கால சோழர்களின் கோயில்கள் உள்ளன.

திருச்சி மாவட்ட சீனிவாச நல்லூரில் உள்ள குரங்கார்கோயில் சிற்பங்கள் மிகவும் அழகானவை. தஞ்சை பெரிய கோயிலில் உள்ள

Koviloor Digital Library



சிற்பங்களும் கங்கை கொண்ட சோழபுரத்து கோயில் சிற்பங்களும் சோழசிற்ப கலைக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. உமையொருபாகனாய் அமர்ந்த சிவன் சண்டேசனை ஆட்கொள்ளும் கங்கை கொண்ட சோழபுரத்து சிற்பம் மிகவும் உன்னதமான கலை படைப்பு. பெரிய அளவில் கம்பீரமாகத் திகழ்கிறது இச்சிற்பம். குடந்தை நாகேஸ்வரஸ்வாமி கோயிலின் திருச்சுற்றில் அழகான சோழசிற்பங்கள் அலங்கரிக்கின்றன. நார்த்தாமலை, கொடும்பாளூர் மூவர்கோயில், தாராசுரம் முதலிய இடங்களில் உள்ள சிற்பங்கள் நேரில் கண்டுகளிக்க வேண்டியவை.

விஜயாலயச் சோழன் வழிவந்த, சோழ பேரரசர்கள் காலத்தில் தென்னாடு முழுதும் நூற்றுக்கணக்கான கோயில்கள் தோன்றின. வழிபாட்டுக்குமன்றி, அறிவை வளர்க்கும் கலாசாலைகளாகவும், கலைக்கூடங்களாகவும், மாடங்களாகவும் இவை திகழ்ந்தன. மன்னர்களும், சேனைத் தலைவர்களும் அரசாங்க அலுவலர்களும், பல மானியங்களை மக்களுக்குக் கொடுத்துப் புகழ்பெற்றனர்.

முதலாம் ஆதித்த சோழன் காவேரி ஆற்றங்கரை ஓரங்களில் முழுதும் வானளாவும் கோபுரங்களைக் கட்டியுள்ளான் என்று ஒரு கல்வெட்டு கூறுகிறது. முதலாம் பராந்தகச் சோழன் தில்லை கோயிலின் மாடத்தைக் தங்கம் கொண்டு போர்த்தி அதை பொன்னம்பலமாகச் செய்தான். கண்டராதித்தன் மனைவியும், உத்தம சோழனின் அன்னையுமான செம்பியன் மாதேவி பக்தி பூண்ட பல ஆலயங்கள் தோன்ற உதவினாள். இராஜராஜ சோழனின் உடன் பிறந்த குந்தவை பிராட்டியார் பல கோயில்களுக்கு பொருள்வாரிக் கொடுத்தாள். இப்படியாக சோழர் காலத்துக் கோயில்கள் மக்களின் வாழ்விலே சுடராகத் திகழ்ந்தன.

Koviloor Digital Library



கி.பி. 10ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பல்லவர் பலம் குன்றி, சோழர் கை ஓங்கத் தொடங்கியது. பல்லவ கோயில்களைப் போன்று சிறு கோயில்கள் கல்லினால் கட்டப்பட்டன.

புதுக்கோட்டை நகரத்தைச் சுற்றியுள்ள திருக்கட்டளை சுந்தரேஸ்வரர்கோயில், நர்த்தாமலை விஜயாலயக் கோயில், கொடும்பாளூர் மூவர் கோயில் முதலியவை முக்கியமானவை. மிக நேர்த்தியாகச் செதுக்கப்பட்ட கற்களினால் அமைந்த கோயில்கள். இவை பல்லவ கால சாயல்களுடன் கூடிய சோழ கற்றளிகள்.

முந்திய கால சோழர் கோவில்களில் மிக முக்கியமானவை திருச்சி மாவட்டதில் உள்ள சீனிவாச நல்லூரில் உள்ள குரங்கார் கோயிலாகும். கோயில் கட்டி முடித்தவுடன் குரங்கு ஒன்று அசுத்தம் செய்ததின் பலனாக அபிஷேக ஆராதனை எல்லாம் நின்றுவிட்டது. அங்கு வழங்கி வரும் கதையாகும். கோயிலுக்கு குரங்கு நாதர் கோயில்' எனப் பெயர் வழங்கி வருகிறது. இன்றும் வழிபாடு ஏதுமின்றி மூடிக்கிடக்கிறது. முதல் பராந்தகன் காலத்து கோயில் இது. பல தூண்களைக் கொண்ட மண்டபம், விமானத்தோடு கூடிய கருவறை. இதைச் சுற்றிலும் சோழர்காலத்து சிற்பங்கள் எழிலுடன் காணப்படுகின்றன. முந்திய சோழர்காலத்து கலைக்கோயிலுக்கு எடுத்துக்காட்டாக உள்ளது, சீனிவாச நல்லூர் கோயில்.

கி.பி. 1000ல் தோற்றுவிக்கப்பட்டது 'பிரஹதீஸ்வரர்' எனப்படும் தஞ்சை பெரிய கோயில் ஆகும். மிகவும் புகழ்பெற்ற இந்த ஆலயத்துக்கு வெளிநாட்டு பயணிகள் வந்து மகிழ்வடைந்து போகிறார்கள். இராஜராஜனால் கட்டப்பட்ட கலைக்கோயிலாகும். 190 அடி உயரமுள்ள விமான உள்ள ஆலயம் வேறு எங்குமே காணமுடியாது. சுமார் 50அடி நேராக மேலே செல்லும் விமானம்

Koviloor Digital Library



பின்னர் மேலே மேலே செல்ல சிறுத்து கலசத்துடன் விளங்குகிறது. பல கிலோ மீட்டர் தூரத்திலிருந்தே ஆலய விமானம் தெரியும்.

'தஞ்சை' என பெயர்க் குறிப்பை முதன் முதலாக அழகுத் தமிழில் (6ஆம் திருமுறை) நமக்கு காட்டுபவர் திருநாவுக்கரசர் எனும் அப்பர் பெருமான் ஆவார். அவருடைய காலம் 7ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும்.

பெரிய கோயிலின் விமானத்தின் பெயர் தக்ஷிணமேரு' என்பது. இக்கோயிலில் ஆன்மீகம் வளர, கலைகள் செழிக்க, சோழநாட்டு பொருளாதாரம் சிறக்க ஆண்டவன் இராஜராஜ சோழனே.'

இக்கோயிலை கட்ட கருங்கற்கள் புதுக்கோட்டை மாவட்டத்து குன்னான்டார் கோயில் பகுதியாகும். கருங்கல் இல்லாத ஒரு இடத்திற்கு ஆயிரக்கணக்கான டன் எடையுள்ள கற்களை, ஏறத்தாழ 75 கி.மீட்டர் தொலைவிலிருந்து கொணர்ந்து வந்து கோயிலை கட்டியுள்ளனர்.

18அடி உயரமுள்ள பிரம்மாண்டமான துவாரபாலகர் உருவங்கள் பல டன் எடையுள்ள கற்பாறைகளால் உருவானவை. ஒவ்வொரு துவாரபாலகரும் ஒரே கல்லால் ஆனது.

இக்கோயிலுக்கு முன்புள்ள மண்டபத்தில் இருக்கும் பெரிய நந்தி மிக அழகுடன் விளங்குகிறது. கருவறை லிங்கமும் பெரிது. இதை உருவாக்கியவர் விஜயநகர பேரரசராகும். சோழர்காலத்தைச் சேர்ந்ததல்ல. இச்செய்தி ஒரு கல்வெட்டு மூலமாக அறிந்து கொண்டது. கோவிலைச் சுற்றி அகழி, கோட்டை, மதில்கள், கொத்தளங்கள், ஆகியவை நாயக்க மன்னர்களால் கட்டப்பட்டவையாகும்.

Koviloor Digital Library



## கேரளாந்தகன் திருவாயில்

பெரிய கோவிலுக்கு நுழைவாயிலாக அமைந்துள்ளது 'கேரளாந்தகன் திருவாயில்' ஐந்து நிலைகள் கொண்ட கோபுரம். ராஜராஜன்காலம் வரை சோழர் காலத்து கோபுரங்கள் உயரம் குறைந்ததாக உள்ளன. தமிழகத்தில் எழுந்த உயரமான முதற் கோபுரம் தஞ்சை கேரளாந்தகன் கோபுரமே! பிற்காலச் சோழர்களும், விஜயநகரப் பேரரசு மன்னர்களும் நாயக்கர்களும் உயர்ந்த கோபுரங்களை அமைத்தனர். ஸ்ரீவில்லிப்புத்தூர், ஸ்ரீரங்கம், திருவண்ணாமலை, சிதம்பரம், போன்ற தலங்களின் ஆலய கோபுரங்கள் உயரமானவை.

கேரளாந்தகர் கோபுர வாயில் உயர்ந்திருப்பதால், இக்கோபுரத்தின் முன்னும், பின்னும் சிற்பங்கள் நிறைய உள்ளன. எல்லாமே எழிலானவை. சிவபெருமான், உமையாள், பிரமன், திருமால், கணபதி, ஊர்த்துவதாண்ட நடராசன், காளிதேவி, தட்சிணாமூர்த்தி ஆகியோரின் சிற்பங்கள் கதை சொல்லும் பதுமைகளாக விளங்குகின்றன. கோபுரத்தின் உட்பகுதியிலும் சிற்பங்கள் காணப்படுகின்றன.

பெரியகோயிலின் சுற்றுப்புற மாடங்களில் பல சிற்பங்கள் இருக்கின்றன. உட்பிரகாரச் சுற்றுகளில் சோழர்காலத்து ஓவியங்கள் அஜந்தா ஓவியங்கள் போன்று திகழ்கின்றன. அதிஷ்டான பகுதியின் படிகட்டுகளிலும் சிற்பங்கள் உள்ளன. அவற்றுள் போதி மரத்தடியில் புத்தராக திருமால் அமர்ந்த நிலையில் காணப்படும் சிற்பம் கணபதி, முருகன், தேவி ஆகியோர் முறையே பெருச்சாளி, மயில், சிங்கம் வாகனங்களில் விரைவாக செல்லுதல், தலையில் சிவலிங்கம் சுமந்த அரக்கர் ஆகிய சிற்பங்கள் சிதைவுகளக்கிடையே தெளிவாகக் காணப்படுகின்றன.

Koviloor Digital Library



தஞ்சை பெரிய கோயிலைப் பற்றி விரிவாக எழுத பல பகுதிகள் கொண்ட நூல்கள் எழுதவேண்டும். அவ்வளவு விஷயங்கள் உள்ளன. ஆனால், ஆய்வாளர்கள், வரலாற்று பேராசிரியர்கள் இக்கோயிலைப்பற்றி விரிவாக எழுதியுள்ளார்கள். இங்கு கோயிலைப்பற்றி ஓரளவே எழுத முடிந்தது. இம்மாதிரி பல கலைக் கூடங்கள் பாரதத்தில் உள்ளன. ஒவ்வொன்றுக்கும் ஒரு பெரிய நூல் எழுத வேண்டிவரும். இதை இங்கு நான் பலமுறை குறிப்பிட்டுள்ளேன்.

சுருக்கமாக பெரிய கோயிலில் பார்க்கவேண்டியவைப் (விடுபட்ட) பற்றி சிறு குறிப்பு தருகிறேன். சில விவரங்களுடன்.

ஆய்வாளர் பார்வையில் தஞ்சை நிசும்பசூதனி சிற்பம், கரூவூர் தேவரைப்பற்றிய விவரங்கள், தஞ்சை கோட்டை அரண்மனைப்பற்றிவிரிவாக, உக்கிரமாகாளி பெரிய கோயில் கட்டுமானம் பற்றி, கோயில் அருகேயுள்ள கலைக்கூடம், பெரிய கோயில் கல்வெட்டுகளைப்பற்றி, காலகால மூர்த்தி சிற்பம், மகாசதாசிவ சிற்பம், பெரிய நாயகி கோயில் (பெரிய கோவிலுக்குள்ளேயே இருக்கிறது) கோபுர சிற்பங்கள் கங்காதரர் சிற்பம், இராஜராஜனின் செப்புத் திருமேனி, நடராசர் செப்புத் திருமேனி, தஞ்சை சரஸ்வதி மகாலின் அருகில் உள்ள கலைக்கூடம் (ஏராளமான சோழச்சிற்பங்கள் உள்ளன) நாவுக்கரசர் எழுதிய 6ஆம் திருமுறை, மற்றும் தஞ்சை கோயிலைப்பற்றிய நூல்கள்.

இவையெல்லாம் தஞ்சை பெரிய கோவிலைப்பற்றி நன்கு தெரிந்துகொள்ள உதவும்.

Koviloor Digital Library



## கங்கை கொண்ட சோழபுரம்

இக்கோயில் இராஜேந்திர சோழனால் கட்டப்பட்டது என்பதை முன்பே அறிந்தோம். தஞ்சைபெரிய கோயிலைப் போன்ற அமைப்பு கொண்டது. இங்குள்ள சிற்பங்கள் மிக அழகானவை. சண்டேச மூர்த்தி, சரஸ்வதி, இலக்குமி, நடராஜர், கணபதி போன்ற சிற்பங்கள் எழிலுற விளங்குகின்றன. அரியலூரிலிருந்தும், கும்பகோணத்–திலிருந்தும் இத்தலத்தை அடையலாம். அவசியம் பார்க்க வேண்டிய கலைக்கோயில்.

## தாராசுரம்

கும்பகோணத்தருகே தஞ்சைபோகும் வழியில் ஊருக்குப் புறமாக உள்ளது. அழகான சிற்பங்களைக் கொண்டது.

## திரிபுவனம்

தஞ்சை பெரிய கோயில் விமானம் போன்றே இக்கோயிலின் விமானமும் உள்ளது. நல்ல சிற்பங்களுடன் விளங்கும் இக்கோயில் சரபேஸ்வரர் சந்நிதியில் உள்ள இருபெண்சிற்பங்களின் அழகே தனி! அவசியம் சென்று பாருங்கள் இதுவும் பெரிய ஆலயந்தான்.

## திருவிடைமருதூர்

ஸ்டேசன் அருகேயுள்ள பெரிய கோயில். இங்குள்ள விளக்கு ஏந்திய மங்கையின் செப்புத் திருமேனி அழகான கலைப்படைப்பாகும்.

## புள்ளமங்கை

தஞ்சைக்கு அருகேயுள்ள 'பசுபதிகோயில்' என்ற தலத்தில் ஊருக்கு சற்று தள்ளி புள்ளமங்கை கோயில். சிறு கோயில்தான்.

Koviloor Digital Library





சோமாஸ்கந்தர் – சிதம்பரம் – நன்றி ஆனந்தவிகடன்

Koviloor Digital Library



ஏகப்பட்ட சிற்பங்கள். சோழர்காலத்து கலையை இங்கு கண்டு ரசிக்கலாம். மொத்தத்தில் இச்சிறு ஆலயம் சிற்ப கூடம்தான்.

தென்னகத்தில் இன்னும் பல ஆலயங்கள் சோழர்காலத்தைச் சேர்ந்தவை. எழில்மிக்க சிற்பங்கள் கொண்ட ஆலயங்கள் ஆங்காங்கே உள்ளன.

சோழர்கால செப்புத் திருமேனிகள் மிகச் சிறப்புவாய்ந்தவை குறிப்பாக நடராஜர் திருமேனி படிமங்கள் மிக அழகுடையவையாகும். தஞ்சை மாவட்டமே கலைகள் வளர்ந்த, வளர்ந்துகொண்டிருக்கும் மாவட்டமாகும்.

கலைமகள் – கங்கை கொண்ட சோழபுரம்
(சோழர் காலத்து சிற்பம்)

Koviloor Digital Library

# 12. ஆந்திரர் கலைச் செல்வங்கள்

இரண்டாம் புலிகேசிக்குப் பின்னர், குப்ஜ விஷ்ணுவர்த்தனன் வேங்கியைத் தலைநகராகக் கொண்டு கீழசாளுக்கியப் பேரரசை ஏற்படுத்தினான். இவ்வரசர்களும் சாளுக்கியக் கலையையே போற்றி வளர்த்தனர். இவர்களது சிற்பங்களுக்கும் பல்லவர்களது சிற்பங்களுக்கும் மிகுந்த ஒற்றுமை காணப்படுகிறது. கிருஷ்ணா, கோதாவரி கரைகளில் ஏற்படுத்திய இவர்கள் கோயில்களில் இக்காலச் சிற்பங்களையும் காணலாம். 'பிக்காவல்' என்ற இடத்துள்ள சிற்பங்கள் மிகப் புகழ்பெற்றவை.

## காகதீயர் சிற்பங்கள் - (கி.பி. 11-13 நூற்றாண்டு)

வாரங்கல் காகதீயர் தொடக்கத்தில் மேலை சாளுக்கியரின் சிற்றரசர்களாக இருந்தனர். பிறகு அவர்கள் சுதந்திர அரசர்களாயினர். ஆனால் பிற்காலக் கல்யாணி மேல சாளுக்கியரின் கலை மரபையே அவர்கள் பின்பற்றினர். கலையில் அவர்களுக்கு மிகுந்த ஈடுபாடும், சிவனிடம் உள்ள பக்தியும் நாடு முழுதும் இக்கடவுளர்க்கு அவர்கள் கட்டிய பல கோயில்களின் தோற்றத்தை தெளிவாக விளக்குகின்றன. வாரங்கல், பாலமபட்டு, அனக்கொண்டா, திரிபுராந்தகம், மாசேர்வா முதலிய இடங்களில் காகதீயர் ஆலயங்கள் இருக்கின்றன. இங்கெல்லாம் சிற்பங்கள், ஒவியங்கள் சிறப்பாகக் காணப்படுகின்றன.

Koviloor Digital Library

அமராவதி ஸ்தூபம்

Koviloor Digital Library



# அமராவதி

கிருஷ்ணா நதியின் தென்கரையில் அமராவதி என்ற நகரம் மிகப் புகழ்கொண்டு விளங்கிற்று. அசோக பேரரசனால் மதப்பிரசாரம் செய்ய அனுப்பப்பட்ட ஓர் பிக்ஷு இங்கு வந்தாதாகச் சரித்திரம் கூறுகிறது. கி.பி. முதலாம் நூற்றாண்டின் இறுதிவரை இது ஆந்திரர்களின் தலைநகராக இருந்து வந்தது. அக்காலத்தில் இந்நகரம் 'தான்ய கடகம்' என்ற பெயர் பூண்டு விளங்கிற்று. இவ்விடத்தில் புத்தரின் புனித எலும்பு ஒன்று புதைக்கப்பட்டு அதன்மேல் மகாசைத்யம் என்ற ஒரு ஸ்தூபம் கட்டப்பட்டது. இதன் காலம் சரியாக கணிக்க முடியவில்லை. மிகப் பழமையான சிற்பங்களில் உள்ள எழுத்துக்கள் கி.மு. 200ல் வழங்கிய பிராம்மி எழுத்துக்களாகக் காணப்படுகிறது. அடுத்துள்ள தொகுதியில் உள்ள சிற்பங்களில் உள்ள எழுத்துக்கள் கி.பி. முதலாம் நூற்றாண்டில் வழங்கிய எழுத்துக்களாகும். இந்த ஸ்தூபத்தைச் சுற்றிலும் கி.பி. 150 லிருந்து 200 க்குள்ளாக பௌத்த குருவான நாகார்ஜுனர் சுற்றுச் சுவர்களை அமைத்தார். கி.பி. 200 லிருந்து 250 வரை ஆண்ட பிந்திய ஆந்திர அரசர்காலத்திலும் சில சிற்பங்கள் சேர்க்கப்பட்டன. இவை வழிபாட்டு ஸ்தூபங்களின் புறத்தை மூட உபயோகப் படுத்தப்பட்டன. ஆக அமராவதி சிற்பக் கலையின் வளர்ச்சியை நான்கு பகுதிகளாகக் கொள்ளலாம்.

கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்த முதல் பகுதி சிற்பங்கள் பெரும்பாலும் உருவத்திற்கொத்த ஆழமின்றி (Depth) மிகப் பழமையாகவும் வளைவுகளற்றவைகளாகவும் காணப்படுகின்றன. இவை மௌரியகாலத்து சிற்பங்களை ஒத்து இருக்கின்றன. நான்கு யானைகளை உடைய கல்தூணும், ஜக்கய்யப் பேட்டைச் சார்ந்த உலகப் பேரரசின் சிற்பமும் இக்காலத்தவையாகும். பட்டிப்ரோலு என்ற இடத்தில் கிடைத்த புதைப்பெட்டிகளும் இக்காலத்தவை.

Koviloor Digital Library



இவற்றின் ஒன்றில் ஸ்படிகத்தாலான சிமிழ்கள் காணப்பட்டன. இத்துடன் தங்கத்தினாலான மலர்களும், கற்களினாலான மணிகளும் காணப்பட்டன. ஒரு சிமிழில் புத்தரின் புனித எலும்பு கிடைத்தது. அது தற்போது மகாபோதி சங்கத்தில் உள்ளது.

இரண்டாவது பகுதி சிற்பங்கள் ஸ்தூபத்தின் புறத்தை மூடச் செதுக்கப் பட்டவையாகும். இவை பெரும்பாலும் புத்த சரித்திரத்தின் நிகழ்ச்சிகளைச் சித்தரிக்கின்றன. பார்குத், சாஞ்சி, போன்று இங்கும் சில இடங்களில் புத்தர் சின்னமாகவே சித்தரிக்கப்பட்டார். ஆயினும் முதல் முறையாக இச்சிற்பங்களில் புத்தர் மனித உருவிலும் படைக்கப் பெற்றார். இவ்வுருவங்கள் வட நாட்டில் வழங்கிவந்த உள்நாட்டு சிற்பங்களை ஒத்திருக்கின்றன. இக்காலத்தில்தான் மதுராவில் புத்தர் மனித உருவத்தில் உருவகப் படுத்தப்பட்டார். எனவே இப்பண்பாடு சமகாலத்தில்பாரதமுழுதும் பரவிற்று எனலாம்.

மூன்றாவது காலத்தில் தான் ஸ்தூபத்தைச் சுற்றிலும் கைச்சுவர்கள் எழுப்பப்பட்டன. நேராக நிறுத்தப்பட்ட கல்தூண்களின் இரு பக்கங்களிலும் குவிந்த இடைவெளிகளைச் செய்து குறுக்கிலும் கற்கள்ளைப் பொருத்தி சுற்று வேலிகளைப் போன்று செய்யப்பட்டுள்ளன. இந்தச் சுவற்றின் வெளிபுற ஓரங்களில் அழகிய வேலைப்பாடுடைய தாமரைப் புஷ்பங்கள் செதுக்கப்பட்டன. மேல் விட்டங்களில் வளைந்து செல்லும் மாலைகளை விண்ணவர் தாங்கிச் செல்லும் காட்சி சித்தரிக்கப்பட்டுள்ளது. மக்கள் சுற்றிவரும் பக்கமான உட்புறத்தில் வட்ட வடிவமான கற்களிலும் மேல் விட்டங்களிலும் ஜாதகக் கதைகள் சித்தரிக்கப்பட்டன.

புனிதமான புத்தரின் புகழ் தேவதத்தனின் மனத்திலே புயலைக் கிளப்புகிறது. புத்தரைத் தொலைத்துவிட பல வழிகளைக் கையாளுகிறான் தேவதத்தன். எல்லா வகைகளும் தோற்கவே மதம்

Koviloor Digital Library



பிடித்தஅரசாங்க யானையை புத்தர் வரும் வழியில் அவிழ்த்து விடுகிறான். வழிப்பட்டோரை மதயானையின் வெறி சூரையாடுகிறது. துதிக்கைக் கொண்டு ஒருவரைத் தூக்கி எரிகிறது; ஒருவரை காலடியில் போட்டு வதை செய்கிறது. இந்நிலையைக் கண்டு மக்கள் பயந்து ஓடுகிறார்கள். இப்பயங்கர நிலையைக்கண்டு நடுநடுங்கி அருகில் நின்ற ஆடவரை அணைத்து ஆதரவு வேண்டிய ஆரணங்குகள் பலர், மாளிகையின் சாரலிலிருந்து இக் காட்சி கண்டு பொறுமியவர் பலர் இவ்விதம் கொடு நடம் புரியும் யானையின் எதிரே தோன்றுகிறது அருள் வடிவாம் புத்த ஜோதி. சூழ்ந்து வந்தனர் சீடர்களும் பிட்சுகளும் மனித குலத்தின் மாசு போக்கத் தோன்றிய ஜோதியின் காலடியில் மண்டிபோடுகிறது மதங்கொண்ட களிறு; பின்பு தலை வணங்கியது. இக்காட்சியை சிற்பமாக வடித்து அதிலே சீற்றம் பரபரப்பு, அமைதி இவையனைத்தையும் படைத்து அழியா காவியமாக்கினான் அமராவதியில் உள்ள ஓர் சிற்பி. அற்புதமான படைப்பு.

புத்தர் பரிநிர்வாண மடைந்துவிட்டார். வறுமை, செல்வம், இறப்பு, பிறப்பு இவையெல்லாம் இனி அவருக்கு இல்லை. இவற்றுக்கெல்லாம் அப்பாற்பட்டு விட்ட அச்செய்தி மக்களைக் குதூகலத்தில் ஆழ்த்துகிறது. இசை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. பெண்களிடத்தில் ஓர் அழகியயாழின் தந்திகளிலிருந்து இனிமையான கீதத்தை தன் மென்மையான விரல்களினால், கொடி போன்ற உடல்களை வளைத்துத் தளிர்போன்ற கரங்களை நெளித்து ஆடினர் நாட்டிய மகளிர்கள். புத்தரின் புனித எலும்புகளை எட்டுப் பகுதிகளாக்கி உலகின் எட்டுத் திக்குகளுக்கும் பேழைகளில் வைத்து யானை மேல் வைத்து ஊர்வலமாகச் சென்றனர் வீரர்கள். இப்படியாக சித்தரிக்கிறது மற்றோர் சிற்பம்.

Koviloor Digital Library



ஆரணங்குகள் புடைசூழ கம்பீரமாக ஒரு அரசன் அமர்ந்திருக்கிறான், ஒரு சிம்மாசனத்தின்மீது. அன்பளிப்பாக தூதுவர் இரு மலர் மாலைகளை அளிக்கின்றனர். இதுபோன்று பல காட்சிகளை உயிருள்ள ஓவியங்களாகச் சிற்பங்களில் வடித்து மகிழ்ந்தனர். அமராவதியில் அல்லும் பகலுமாக உழைத்த சிற்ப கலைஞர்கள், மிகவும் நுட்பமாகவும், அழகாகவும் கொண்ட ஒரு பெரிய சிற்பம் அமராவதி ஸ்தூபத்தைச் சித்தரிக்கிறது. இது நான்காவது காலத்தைச் சார்ந்த சிற்பமாகும்.

## சென்னை அருங்காட்சியகத்தில் அமராவதி சிற்பங்கள்

சென்னை அருங்காட்சியகத்தில் அருமையான சிற்பக் கூடம் உள்ளது. அங்கு பல பழங்கால அரசுகளின் சிற்பங்கள் இருக்கின்றன. இச்சிற்பங்கள் பல பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று 'அமராவதி சிற்பப்பகுதியாகும். இப்பகுதியின் முகப்பில் ஆந்திராவில் 'கோலி' என்ற இடத்திலிருந்து கொண்டவரப்பட்ட பௌத்த சிலைகள் உள்ளன. கருங்கல்லினால் ஆன சிம்மநாதர், அமராவதியில் கிடைத்த புத்த சிற்பங்கள் எல்லாம் கி.பி. 9ம் நூற்றாண்டைச் சார்ந்தவை. அடுத்த பகுதியில் உள்ள பௌத்த சிற்பங்கள் எல்லாம் அமராவதி சிற்பங்களே. அமராவதி ஸ்தூபத்தின் மாதிரி உருவம் ஒன்றும் இங்கு உள்ளது. ஸ்தூபத்தைச் சுற்றிலும் நான்கு காலங்களில் தோன்றிய சிற்பங்களையும் இங்கு காணலாம். பெரும்பாலும் அமராவதி சிற்பங்கள் வெள்ளை சலவைப் பாறையில் உருவாக்கப்பட்டவை. நுண்ணிய வேலைப்பாடுகளுக்கு அமராவதி சிற்பங்கள் புகழ்பெற்றவை

Koviloor Digital Library



# நாகார் ஜுன கொண்டா
## சமயங்களும், தெய்வங்களும்

ஆந்திர மாநிலத்திலுள்ள குண்டூர் மாவட்டத்தைச் சேர்ந்த 'பல்நாடு' தாலுக்காவின் வட கிழக்கே பரவிக்கிடக்கும் கண்ணுக்கினிய பள்ளத்தாக்குதான் நாகார்ஜுன கொண்டா. சுற்றிலும் குன்றுகளின் சங்கிலித் தொடர் ஒருபுறம், பலவளைவுகளில் வேகமாய்ப் பாய்ந்து ஓடி,அப்பள்ளத்தாக்கினை மூன்று சமபாதிகளாகப் பிரித்து, அகழியும், ஆற்றுப் படுகையும் அமைத்துக்கொடுத்து ஆதரித்து நிற்கும் கிருஷ்ணா நதி ஒருபுறம், இவ்விதமாக தனிச் சிறப்புடன் இயற்கை எழில் பூரித்து நிற்கும் நாகார்ஜுன கொண்டா, சமயப் பற்றுள்ளவர்கள் முதல் பாமர மக்கள் வரை, அத்தனை மானிடர்களையும் தன்னகத்தே வசீகரித்ததில் வியப்பென்ன இருக்கிறது?

இப்பள்ளத்தாக்கில் புத்த மதமும், ஆந்திர சிறப்புக் கலைகளும் செழித்து வளர்ந்திருந்தன என்பதை அறியமுடிகிறது. புத்த மதத்தின் மாத்யமிகப் பிரிவை ஸ்தாபித்த ஆசாரியர் நாகார்ஜுனா இங்கேதான் வாழ்ந்தார் என்பதும் நமக்குத் தெரிந்த விஷயமே. தவிர, இப்பள்ளத்தாக்கில் செய்யப்பட்ட புதைபொருள் ஆராய்ச்சி களிலிருந்து வெளியான நினைவுச் சின்னங்களும், பண்டைய பொருள்களும், இதே நாகார்ஜுன கொண்டாவில் இந்து மதமும் தன் கட்டடக் கலையும், சிற்பக்கலையும், மற்றும் மதச் சடங்குகள் ஆகியவற்றில் தழைத்திருந்தது என்பதை வெளிப்படுத்துகின்றன. மேலும் பழைய கற்காலம், புதிய கற்காலம் ஆகியவற்றைச் சேர்ந்த நினைவுச்சின்னங்களும் இப்பள்ளத்தாக்கிலே காணக் கிடைக்கின்றன. கற்கால மனிதர்கள் பயன்படுத்திய பாறைகளால் செய்யப்பட்ட பொருள்களும், மட்பாண்டங்கள் மணிகள் போன்றவை, அப்போதைய குடிமக்கள் வாழ்ந்த விதத்தை அறிவிக்கிறது.

Koviloor Digital Library



இக்ஷ்வாகு வம்சத்தினர் காலத்திலும் இந்தப்பள்ளத்தாக்கு பட்டினத்து பாங்கிலே அமைந்திருந்ததையும், அப்போது புத்த மதமும், இந்து மதமும் இன்பகரமான சூழ்நிலையில் பரஸ்பரம் ஒன்றை யொன்று ஊக்குவித்து ஒத்தவாறு வளர்ந்து பரவலாயின என்பதையும் உணரலாம், உதாரணமாக ஸ்தூபிகள் எனப்படும் வட்ட வடிவில் அமைந்த கட்டிடங்களும், யானை முதுகு போன்ற தோற்றத்தை உடைய சைத்தியங்களும், பௌத்த விஹாரங்களும், இந்து மதத்தைச் சார்ந்த சடங்குகள், செய்யும் இடங்களும், ஆலயங்களும் தெளிவாக வரையறுக்கப்பட்டுத் தனித்தனியான பிரதேசங்களில் விளங்கியதைக் காணலாம். இதைத்தவிர ஸ்நான கட்டிடங்கள், (படித்துறைகள்) எரிக்கும் துறைகள், படகுத் துறைகள் போன்ற ஆற்றங்கரைக் கட்டிடங்களையும் காணலாம். புதைபொருள் ஆராய்ச்சியின் மூலமாக வாணிபமும், பொருளாதார நிர்வாகமும், தங்கம், வெள்ளி செப்பு ஈயம் ஆகிய உலோகங்களினால் செய்யப்பட்ட நாணயங்களும், நகைகளும் சுட்ட மண்ணாலான கலைப் பொருள்களும், கைத்தொழில் பொருள்களும், மரித்தவர்களுக்கு ஞாபக சின்னமாக தூண்களும் வெளிக்கொணரப்பட்டன.

இந்த விதமாக இப்பள்ளத்தாக்கிலே ஆறு சதுரமைல் விஸ்தீரணத்தில் வியாபித்திருக்கும் புராதன இடிபாடுகள், அந்தகாலத்து நாகரிகத்தையும் இந்துமதம், பௌத்தமதம் இவைகளின் மேன்மையையும் காட்டுகின்றன.

கற் சிலைகள், விக்கிரகங்கள், ஓவியங்கள், முத்திரைகள் (Seals) இவையாவும் உள்ளுணர்ச்சிகளைப் பிரதிபலிக்கும் வெளித்தோற்றங்களேயாகும்.

எழுத்திலும், பேச்சிலும் எப்படியோ, அவ்விதமே கலைகளில் வெளிப்படுத்திக் காட்டுவதற்கு என்று சில விதிமுறைகளும்

Koviloor Digital Library



தோன்றின. அவற்றில் தொன்றுதொட்டுப் பழக்கத்தில் இருக்கும் மூன்று முறைகளாவன:

1. சின்னங்களால் (சங்கேதங்களினால்) அறிவித்தல்; 2. சுருக்கமாகத் தெரிவித்தல்; 3. விஸ்தாரமாகக் காட்டுதல்.

இப்பள்ளத்தாக்கின் நாகரீகத்திலே கலையை வெளிப்படுத்தும் இந்த மூன்று முறைகளும் காணப்படுகின்றன.

இங்கே வாழ்ந்து சிறப்படைந்த சிற்பிகள், 'போதிசத்துவர்', 'சித்தார்த்தர்', என்று அழைக்கப்படும் புத்தபிரானின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை தெளிவாகவும், நளினமாகவும், வசீகரத்தோடும் உருவாக்கினார்கள்.

அஸ்வகோஷர் என்னும் சமஸ்கிருத கவி 'புத்த சரிதம்' என்னும் ஒரு நூலை எழுதியுள்ளார். இந்நூல் அழகான தொரு சொற்சித்திரமாகும். சுலோகத்தைப் படிக்கும் போதே குதிரையின் கனைப்புக் குரலைக் கேட்பது போன்று பிரமை தட்டும்படி சொற்களை அமைத்துள்ளார்.

அஸ்வகோஷரின் இந்த சொல்லோவியத்தைக் கல்லோவியமாக — கவினுறு காட்சியாகக் காண்கிறோம் நாகார்ஜுன கொண்டாவிலே.

தேவ சேனையோடு கூடிய சிவகுமாரன் காத்திகேயனின் பெருமைகளையும் சித்தரித்து காண்பித்துள்ளார்கள், சிற்பிகள். ஆனால் கானகத்தே கண்ட முருகனை மணம் புரிந்து கொண்ட வள்ளியோ, இப்பள்ளத்தாக்கில், கார்த்திகேயர் அருகில் காணப்படவில்லை. இங்கே திருமாலும், நாராயணர் அஷ்டபுஜ சுவாமி, திரிவிக்ரமர் என்ற முத்திரைப் பெயர்களோடு விளங்குகிறார். தவிர ஆட்சிபுரிந்த அரச பரம்பரையினர் ஒவ்வொருவரும்

Koviloor Digital Library

அமராவதி

தங்களுக்கென தனிப்பட்ட பெண்குலத் தெய்வங்களை வழிபாடு செய்து வந்துள்ளனர்.

இவ்விதமாக, புராதன இந்தியாவின் பெருமையை விளக்கும் வகையில் நாகார்ஜுன கொண்டாபள்ளத்தாக்கிலே பௌத்தம், சைவம், வைணவம் சாக்தம், வீரவழிபாடு ஆகிய எல்லா சமயப்பற்றுகளும் ஒன்றையொன்று அடுத்து இன்பகரமான வளர்ச்சியடைந்து தழைத்து நின்றதைக் காண்கிறோம்.

Koviloor Digital Library



நாகார்ஜுன கொண்டாவில் பௌத்தமதத்தைச் சார்ந்த இடத்தில் கிடைத்த சிற்பங்களில் முதன்மையாது 'புத்தர் பாதம்' ஆகும். சிற்பி பௌத்த நூல்களில் சொல்லப்பட்ட புத்தருக்கே உகந்த மகா புருஷ லக்ஷணங்களை வெகு அமைவாக வடித்துள்ளார்.

மற்றொரு அருமையான சிற்பம் புத்தரின் அஸ்தி அடங்கிய புத்தஸ்தூபியை அரச குடும்பத்தினர்கள் பூர்ண கும்பத்துடன் வணங்கி வலம் வருகிற காட்சி, அற்புதமான சிற்பங்களின் படைப்பு, இங்கு புத்தரின் வாழ்க்கையை சித்தரிக்கும் தூண்களில் காணும் சிற்பங்கள் நுணுக்கமான வேலைப் பாடுடையவையாகும்.

பிற மத கலைப்படைப்புகளை விட புத்தர் சம்பந்தமான சிற்பங்களே அதிகமாக உள்ளன.

அமராவதி – நாகார்ஜுனகொண்ட சிற்பம்

Koviloor Digital Library

# 13. பாண்டியர் காலக் கலைப் படைப்புகள்

பாண்டியர், நாயக்கர் காலத்து கலை படைப்புகளைப்போன்று சேரர்களின் கலைகள் அதிகம் இல்லை. அவர்களது கலைப்படைப்புகளைப் பார்ப்போம். வரலாறு படைத்த சிற்பக்கலை பாண்டியர், நாயக்கர் காலத்தில் சிறப்பாகவே இருக்கின்றன. நளினம், சிற்பங்களில் காணும் தீர்வு, ஆடை, ஆபரணங்கள் எல்லாம் மிகைப்படாமல் அளவுடன் சிறப்பாக விளங்குவது தான் காரணம்.

கழுகுமலை

Koviloor Digital Library



பாண்டிய நாயக்கர் காலத்து கலை சிற்பங்களில் ஒரு முரட்டுத்தன்மை, பெரிய அளவுள்ளவையாக இருப்பது, அதீதமான ஆபரணங்கள், ஆடைகள் எல்லாவற்றிலும் மிகையாக காணப்படுகின்றன.

எனினும் அவர்களது மாபெரும் சிற்ப வேலைப்பாடுகள் உடைய சிற்பங்களை, ரசிக்காமல் இருக்க முடியாது. நுண்ணிய வேலைப்பாடுகள் கண்டு பிரமிக்கிறோம். பிற அம்சங்கள் மறைந்து விடுகின்றன. இம்மாபெரும் சிற்பங்களை அமைக்க ஒரு தனித் திறமை வேண்டும். இச்சிற்பங்களைப் படைத்த மன்னர்களைப் பற்றி சிறிது தெரிந்து கொள்வோம். வரலாற்றைக் கூறும் போதே சிற்பங்கள் பற்றிய விவரங்கள் ஆங்காங்கே எழுதப்பட்டுள்ளன.

கிபி. 1100 முதல் 350 வரை தென்னாட்டில் பாண்டியரின் கை ஓங்கி இருந்தது. இக்காலத்து சிற்பக்கலை பிந்திய சோழர்காலத்ததாகவும் கொள்ளலாம். தில்லை, திருவண்ணாமலை, ஸ்ரீரங்கம் முதலிய இடங்களில் இவர்களது சிற்பப் படைப்புகளைக் காணலாம். சிற்பங்கள் உயரமாகவும், நளினம் இல்லாதவை யாக இருக்கும்.

சங்க காலம் முதல் முப்பெரும் மன்னர்களிடையே அடிக்கடி சண்டை ஏற்பட்டு நாட்டை சீர்குலைந்தது. பாண்டியன் சேரனை தோற்கடித்தான். சேரன் சோழனுடன் போர் புரிந்தான். சோழன் பல்லவனை வெற்றி கொண்டான். இவை வரலாறு கூறும் சம்பவங்களாகும். எனினும் தென்னகத்து வேந்தர்களிடையே ஒரு பண்பு இருந்தது வந்தது. மாற்றானான போதிலும் ஒரு மன்னன் தோற்றுவித்த கலைச்செல்வங்களை மற்றவன் அழிக்கவில்லை. இறுமாப்பும் எய்தவில்லை.

Koviloor Digital Library



சோழன் பொருள் கொடுத்த கோயில்களுக்குத் தான் நிலம் கொடுத்து பூரிப்படைந்தான் பாண்டியன். இதனால் கலைச் செல்வங்கள் பயங்கரமான யுத்த வெறியின் காலடியில் பட்டு சிதறவில்லை. ஆனால் இதற்கு மாறாக வடபாரதத்தில் கலைச் செல்வங்கள் அழிக்கப்பட்டன. சோமநாதர் ஆலயத்தின் மீது 18 முறை படையெடுத்து அந்த ஆலயத்தை தரைமட்டமாக்கி களித்தான் கஜினி முகமது. இந்துக்கள் ஆலயங்கள் எல்லாம் சிதைந்து அழிக்கப்பட்டன. மசூதிகளாக மாற்றப்பட்டன. கிருஷ்ணதேவராயர் காலத்தில் புகழும் அழகும் கொண்ட நகரம் விஜயநகரம். நூறு ஆண்டுகளுக்குள்ளாக பேயும், கோட்டான்களும் வசிக்கும் இடமாக மாற்றப்பட்டது என்று வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

தங்கள் நலனுக்காகப் போர் கூட்டிய தமிழ் வேந்தர்கள் கலைச் செல்வங்களை வளர்த்துப் போற்றி தமிழகத்தின் பண்பைத் தழைக்கச் செய்தனர்.

கி.பி. 1100லிருந்து சுமார் 250 ஆண்டு காலம் தென்னாட்டில் பாண்டியர் கை ஓங்கியிருந்தது. இதை 'பாண்டியர்காலம்' எனலாம் பாண்டிய மன்னர்கள் முன்பு இருந்த கோயில்களைப் பெரிதாக்குவதில் தங்கள் கவனத்தை செலுத்தினர் எனலாம். அதன் பலனாக கோயிலைச் சுற்றிலும் மதில் சுவர்கள் எழுப்பப்பட்டன. வாயிலும், வாயிலை அலங்கரிக்க சிறிய கோபுரமும் தோன்றியது. எனவே இக்காலம் தொட்டு தென்னாட்டில் கடவுளறையின் மேலே விமானம் ஒன்றும், கோபுரவாயில் ஒன்றும் ஆக இரு அமைப்புகள் தோன்றலாயின. முதலில் சிறியதாகத் தோன்றிய கோபுரவாயில்கள் பின்னர் பெரிதாகி விமானத்தை மங்கச் செய்துவிட்டது.

திருவானைக் காவலில் உள்ள சுந்தரபாண்டியன் கோபுரம் சிதம்பரம், திருவண்ணாமலை, கும்பகோணம் முதலிய இடங்களில்

Koviloor Digital Library



உள்ள கோபுரங்களும் இக்காலத்தவையே. சிதம்பரம் கோபுரத்தில் சுந்தரபாண்டியனின் கல்வெட்டு ஒன்று உள்ளது. இக்கோபுரம் நீளம் 90 அடிகளும், 60 அடி அகலமும் உள்ள நீண்ட சதுர அமைப்புடன் கூடிய அடிப்பகுதியை உடையது. 35 அடி உயரம் வரை நேராகவும் கருங்கல்லாலும் கட்டப்பட்டது. இக்கோபுரம் 135 அடி உயரமுள்ளது. கோபுரத்தின் மேல் பகுதி சிறிது சிறிதாகச் சென்று சிகரத்தில் முடிகிறது. சிகரம் வளைந்து கூரைப் போன்று உள்ளது.

தாராசுரக் கோயில் இக்காலத்தில் கட்டப்பட்டது. இக்கோயில் பல நூற்றாண்டுகளாக மறைந்திருந்த, பல்லவர்காலத்து தூண்களின் அடிப்பகுதியில் காணும் சிம்மங்கள் மறுபடியும் தோற்றமளிக்கின்றன. இந்த அமைப்பு தொடர்ந்து பின்னர் குதிரையும், ஈகா மிருகங்களும் அடிக்கடி சித்தரிக்கப்படுவதை விஜயநகர் காலத்திலும் காணலாம்.

## முற்காலப் பாண்டியர் (கி.பி. 7-9ம் நூற்றாண்டு)

திருஞான சம்பந்தரின் காலத்தரான அப்பர் பெருமானால் மதம் மாற்றப்பட்ட பல்லவ மன்னர் மகேந்திர வர்மனைப்போல 7ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பாண்டிய அரசனான அரிகேசரி பராங்குசன் சமண மதத்திலிருந்து சம்பந்தபெருமானால் மீட்கப்பட்டான். மதம் மாற்றப்பட்டவனின் உணர்ச்சி வெறியுடன், தன் அரசியின் ஆர்வத்துணையுடனும் இவ்வரசன் தன் மதத்தை முன்னேற்றம் அடையச் செய்தான்.

பாண்டியர்களை வெற்றிக்கொண்ட சிம்ம விஷ்ணு, அவன் மகன் மகேந்திரவர்மன், மேலை சாளுக்கிய மன்னன் புலிகேசியையும் வென்று அடக்கிய அவன் பேரன் நரசிம்மவர்மன் ஆகியோர் காலத்தில் தெற்கில் பல்லவ செல்வாக்கு விஞ்சியிருந்தது.

Koviloor Digital Library

கழுகு மலை ஜைனச் சிற்பம்

Koviloor Digital Library



நெடுங்குடையன் மாறன் அல்லது மதுரகவி தலைமை அமைச்சனாக இருந்தான். அவன் மதுரைக்கு அருகில் ஆனைமலையில் விஷ்ணுவுக்கு ஒரு கோயில் கட்டி அந்த செய்தியை ஒரு கல்வெட்டில் பொறித்தான்.

பாண்டியர்களின் குகைக்கோயில்களும், பாறையிலே வெட்டப்பட்ட கோயில்களும் முற்கால பல்லவ காலத்தவைகளை ஏன் நெருங்கி ஒத்திருந்து, அவற்றை நினைவூட்டுகின்றன என்பதை நாம் உணர முற்கால பாண்டியரின் இந்த வரலாறுதான் உதவும்.

சாளுக்கியரைப் போன்று பாண்டியர் பல்லவருடன் அடிக்கடி போரிட்டு கொண்டிருந்தனர். எனினும், அவர்கள் மனத்தில் பல்லவக் குகைக்கோயில்கள் தந்தையான கோச்சடையனைப்போன்று அவர்கள் பல்வர்களுடன் திருமண உறவு கொண்டிருந்தனர். காஞ்சிபுரத்தில் அழகிய ஆலயங்களைக் கட்டுவதில் பல்லவ இராஜசிம்மனின் மனைவி ரங்கபதாகை தன் கணவருடன் சேர்ந்து உழைத்தாள்.

பல்லவர்காலத்தில் சேர அரசு பலமிழந்ததைக் கருதும் போது கட்டிடக்கலை, சிற்பம், ஓவியம், போன்ற கலைகளில் பாண்டியர்கள் பல்லவரின் கருத்துக்களை ஏற்றுக்கொண்டனர் என்பதில் வியப்பில்லை.

திருமலைபுரம் குகைக்கோயில் மகேந்திரவர்மன் காலத்து பல்லவ குகைகளை மிகவும் ஒத்திருக்கிறது.

சித்தன்னவாசல் குகை சமீபகாலம்வரை பல்லவர்காலத்தது என்று கூறினார்கள். உண்மையில் கி.பி. 9ம் நூற்றாண்டு பாண்டியர் குகை என்று தெளிவுறுத்தும், அங்குள்ள கல்வெட்டு ஒன்றினால் இக்கருத்து ஏற்கப்பட்டது.

Koviloor Digital Library

# 14. ஹொய்சாளர் காலத்து சிற்பங்கள்



சோமநாதபுரம் கோயில்

யாதவர்களிடமிருந்து வம்சபாத்தியதை கொண்டாடி மேற்கத்திய மைசூரை ஆண்ட அரச வம்சத்தினர் ஹொய்சாளர். அவர்களுடைய குல முதல்வரான சாலனிடம் ஒரு முனிவர் புலியைக் கொல்ல 'போய்சாலா', 'சாலா, புலியைச் சாடு' என்று கூறினார். இதிலிருந்து அவர்கள் தங்கள் குலப் பெயராகக் கொண்டனர். அவர்களது கல்வெட்டுகளில் 'துவாரபதிபுரம்' எனப்படும், துவார சமுத்திரம் தான் அவர்களது பழைய தலைநகரம். தொடக்கத்தில் ஹொய்சளர் மேலை சாளுக்கியரின் சிற்றரசர்களாக இருந்தனர்.

Koviloor Digital Library



வினயாதித்தன்தான் முக்கியமான அரசனாக இருந்தான். அவன் பேரன் பிட்டி தேவன் அல்லது பிட்டிகன் ஆற்றல்மிக்க அரசன். அந்த அரச வம்சத்தைச் சுதந்திரமுள்ளதாக ஆக்கினவன் அவனே! ஆரம்பத்தில் சமணனாக இருந்த அவனைப் 12 ம் நூற்றாண்டில் இராமானுஜர் வைணவனாக மதம் மாற்றினார். அதன் பின் விஷ்ணுவர்த்தனன் என்ற பேர் தரித்த அவன், அந்த சமயாச் சாரியரின் அகத்தூண்டுதலினால் ஆர்வத்துடன் அழகிய ஆலயங்களைக் கட்டி அக்காலத்து மிகச் சிறந்த கலையால் அலங்கரித்தான். ஹோய்சலக் கலையின் வைரமாகக் கருதப்படும் பேலூர் கோயில் அவனது படைப்பாகும். அறிவாளியான அவன் சமண அரசி 'சாந்தலா' அருகே நிற்க, அழகிய அரசனின் சிற்பம், ஒரு கல் திரையிலே காணப்படுகிறது. மதம் மாறினாலும் அரசன் சமயசமரச மனோபாவம் உடையவனாக இருந்தான். சமண சமயம் அவன் காலத்திலும் பின்னரும் செழித்து வளர்ந்தது. தங்கள் அரசிகள் பௌத்த மதத்தில் ஈடுபட இக்ஷவாகு மன்னர்கள் இந்து மதத்தினராக எவ்வாறு இருந்தனரோ, அவ்வாறே இந்த அரசன் தன் தேவி தீர்த்தங்கரர்களின் மதத்தில் ஈடுபட்டிருக்க, பக்தி நிறைந்த வைணவனாக இருந்தான். கங்கராஜன், ஹூல்லி தண்டநாயகன் போன்ற இவனது மந்திரிகளும், படைத்தலைவர்களும் சமண மதத்தில் ஆழ்ந்த பற்றுடையவர்களாக இருந்தனர்.

பிறகு ஹொய்சள அரசு அழிவுறத் தொடங்கியது. அலாவுதின் கில்ஜியின் படைத் தலைவன் மாலிக்காபூர்தான் அந்த அரசின் முடிவுக்குக் காரணம்.

மைசூர் முழுதும் உள்ள கட்டட, சிற்ப கலைச் சான்றுகள் ஹொய்சளரின் சிற்பச் செல்வத்தைக் காண்பிக்கின்றன.

Koviloor Digital Library



## சோமநாதபுரம்

மைசூரிலிருந்து 24 கி.மீட்டர் தூரத்தில் ஒரு சிறு கிராமமாக உள்ளது. ஆனால் இங்குள்ள விஷ்ணுகோயில் 13ம் நூற்றாண்டைச் சேர்ந்த கோயில். சோம என்ற அரசனால் உருவாக்கப்பட்ட இந்த ஆலயம், ஒரு சிற்பக் கூடமாக விளங்குகிறது. ஹொய்சளரின் கலைத்திறனை இங்குள்ள சிற்பங்கள் மூலம் தெரிந்துகொள்ளலாம். இக்கோயிலுக்கு அடுத்துதான் பேலூர், ஹளபேடு ஆலய சிற்பங்களைப்பற்றிக் கூறலாம். நுண்ணிய வேலைப்பாடுடன் கூடிய கும்குமச் சிமிழ்போன்ற அமைப்பைக் கொண்டுள்ளது.

## தலைக்காடு

காவிரி ஆற்றங்கரையில் அமைந்துள்ள கோயில் – மைசூரிலிருந்து 64 கி.மீ. தூரம் உள்ளது. ஒரு காலத்தில் தலைக்காடு, கங்கர், சோழர் தலைநகராக இருந்தது.

இன்று 30 ஆலயங்கள் இருக்கின்றன. முக்கியமான ஆலயம் பஞ்சலிங்க ஆலயம்தான். இவ்வாலயங்கள் மணல் குன்றுக்குள் புதைந்துள்ளன. 3 கோயில்கள் வெளிகொணரப்பட்டுள்ளன. இவற்றுள் கீர்த்தி நாரணர் ஆலயம் அழகான கட்டட அமைப்பு கொண்டது. ஹொய்சால மன்னன் கீர்த்திவர்த்தனனால், சோழர்களை போரில் வென்றதின் நினைவாக கட்டப்பட்டது. சிவசமுத்திரத்திற்கு 17 கி.மீட்டர் தூரத்தில் ஒரு தீவில் ரங்கநாதசுவாமி ஆலயம் உள்ளது. திராவிட கலை அம்சத்துடன் இக்கோயில் மிக அழகானது.

Koviloor Digital Library



## மேலக் கோட்டை

மைசூரிலிருந்து 54 கி.மீட்டர் தூரத்தில்ஒரு குன்றின்மீது மேலக் கோட்டை கிராமம் உள்ளது. வைணவதலங்களில் முக்கியமான தலமாகும். வைணவப் பெரியார் இராமானுஜர் இங்கு தங்கிய 12 வருட காலத்தில் நாராயண ஆலயத்தை உருவாக்கினார். 11ஆம் நூற்றாண்டைச் சார்ந்த ஆலயம். அருகே ஸ்ரீ நரசிம்ம சுவாமி கோயில் உள்ளது. திராவிட கலை அமைப்பு கொண்ட கோயிலில் காணும் சிற்பங்கள், செப்புப்படிமங்கள் மிக அழகானவை.

## சரவண பெலகோலா

மைசூருக்கு வடக்கிழக்கு திக்கில் 80 கி.மீட்டர் தொலைவில் ஒரு குன்றுமீது உள்ளது. உலகப் புகழ்பெற்ற ஜைன தீர்த்தங்கரரின் சிலை நின்ற நிலையில் (மஹாவீரர்) உள்ளது. அசோகனது பேரனாகிய சந்திரகுப்த மௌரியன் ஜைன மதத்தைத் தழுவியவன்; அதுவும் வயோதிகனாக இருக்கும் போதே. பிறகு சரவணபலகோலா தலத்திற்கு வந்து தன் கடைசி காலத்தைப் போக்கினான் என்று ஆதாரங்கள் கூறுகின்றன. இத்தலத்தைச் சுற்றி பல பழைய சின்னங்கள் உள்ளன. இந்திரகிரி என்ற குன்று மீது உயரமான சிற்பமாக நின்று கொண்டிருக்கிறார் கோமதேஸ்வரர். குன்றின் உயரம் 3350 அடிகள். 500 படிகட்டுகள் ஏறி இந்த மிக உயரமான ஜைன தீர்த்தங்கர் சிலையைக் காணலாம். சிலையின் உயரம் 57 அடி (17 மீட்டர்).

கி.பி 983 ல் கங்க அரசனின் மந்திரியாகவும், தலைவனாகவும் இருந்த சாமுண்டராயா என்பவன் மலையை குடைந்து ஒரேகல்லால் உயரமான இந்த ஜைன சிலையை வடித்துள்ளான். தினமும் ஜைன ஆச்சாரியர்களால் பூஜைகள் நடைபெறுகின்றன. இந்த

Koviloor Digital Library



கோமதசிலையை பல மைல் தூரத்திலிருந்தும் காண முடியும். அவ்வளவு பெரிய சிலை. 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை மஹாமஸ்தகாபிஷேகம்' என்ற விழா கோலாகலமாக நடைபெறும். நிர்வாண சிலையாக இருந்தாலும் விரசம் இல்லாத ஒரு தெய்வீக அமைப்புடன் விளங்குகிறது. அவசியம் பார்க்க வேண்டிய கலைப்படைப்பு.

## பேலூர் - ஹளபேடு சிற்பக் கூடங்கள்

பேலூர் – ஹளபேடு இக் கோயில்கள் இரண்டும் மாபெரும் ஹோய்சாள கலைக் கூடங்கள் என்று கூறலாம். 12ஆம் நூற்றாண்டைச் சார்ந்த ஆலயங்கள். சுற்றுலாப் பயணிகள், குறிப்பாக வெளிநாட்டு பயணிகள் இவ்விரு கோயில்களைப் பார்த்து பிரமித்து போகிறார்கள். பேலூர் யாகசி ஆற்றங்கரையில் உள்ள ஆலயத்திற்கு பங்களூரிலிருந்து செல்லலாம்.

பேலூர் கோயிலின் பெயர் சென்ன கேசவர் கோயில்; ஹொய்சாள மன்னன் விஷ்ணுவர்த்தனன் என்பவனால் கி.பி. 1116ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. அழகு சிற்பங்கள் கொண்ட இக்கோயிலில் ஒன்றல்ல, நூற்றுக்கணக்கான சிற்பங்கள் பெரிதும், சிறிதுமாக உள்ளன. நுண்ணிய வேலைப்பாடுகளுடன் உள்ள கோயில் சுற்றுப் பிரகாரத்திலும், உள்ளே உள்ள மண்டபம், விதானம், கருவறைச் சிற்பம் எல்லாமே நுணுக்கமான வேலைப்பாடுகளுடன் பார்ப்போரை வியக்கவைக்கும் சிற்பங்கள் கொண்டதாகும்.

"அழகு என்பது என்ன?" எதனுடைய பயனைப்பற்றி நாம் சிந்திக்காமல் அது குறித்து மகிழ்கிறோமோ அது கலை என்கிறார் ரவீந்திரநாத் டாகுர். அழகு உணர்வால் ஏற்படும் மகிழ்ச்சி வேறெந்தப் பொருளாலும் ஏற்படக் கூடிய மகிழ்ச்சியைக் காட்டிலும் வேறுபட்டதாகும்.

Koviloor Digital Library





கோமட்டேஸ்வரர் – ஜைன சிற்பம்

Koviloor Digital Library



அழகு என்பதைக் கலையோடு தொடர்புபடுத்திப் பார்ப்போமானால் டாகூர் கூறியதை நாம் புரிந்து கொள்வது அவசியம்.

'அழகு என்பது உண்மையாகும். உண்மை என்பதே அழகாகும்' என்ற ஆழ்ந்த பொருளில் பார்க்க வேண்டும் என்று மேலும் டாகூர் கூறுகிறார்.

டாகூர் கூறியது போன்று பேலூர் சிற்பங்களை கூர்ந்துபார்த்து, அவற்றின் அழகை ரசிக்கவேண்டும்.

பேலூர் உள் மண்டபத்திற்கு மூன்று வாசல்கள் உள்ளன. மண்டபத்திற்கு 'நவரங்க மண்டபம்' என்று பெயர். ராமாயண, பாரதகாவியங்களிலிருந்து பல காட்சிகளை சிற்பங்களாக வடித்துள்ளார்கள். துர்கை, கண்ட பேருண்ட பறவை சரபரைத்தாக்க, இரண்டும் ஒரு சிம்மத்தை தாக்கும் சிற்பம், இதே தொகுதியில் யானையும், பாம்பும் இந்த தாக்குதலில் இடம் பெறும் சிற்பத்தொகுதி காண வேண்டியசிற்பம். தவிர விஷ்ணு, திருவிக்ரமர், வாமனர், நரசிம்மர், ரங்கநாதர், சிவன், மஹிஷாஸுரர் மர்த்தனி இன்னும் பல தெய்வ சிற்பங்கள் சிற்ப வேலைப்பாடுகளுடன் காணப்படுகின்றன. கூர்ந்து பார்க்க ஒருநாள் போதாது. கலாரசிகர்களுக்கு சிறந்ததொரு விருந்தாகும். நடனமாதுகளின் ஒய்யார நிலைகள் எல்லாம் வனப்புடைய சிற்பங்களே. இப்படியே எழுதிக்கொண்டே போகலாம். இச்சிற்பங்கள் நேரில் கண்டு ரசிக்க வேண்டியவை.

ஹளபேடு பேலூரிலிருந்து 9 மைல் தூரத்தில் அமைந்துள்ளது இந்த ஆலயம். ஒருகாலத்தில் ஹோயசாளரின் ஊர் பெருமை தாங்கிய ஊராக இருந்தது. இவ்வூருக்கு துவார சமுத்திரம் என்ற ஒரு பெயரும் உண்டு. இதேபெயரில் கோயிலின் அருகே ஒரு பெரிய

Koviloor Digital Library





பேலூர் – சென்னை கேசவர் கோயில்

Koviloor Digital Library



குளம் உள்ளது. பேலூர் போன்றே இக்கோவிலும் சிற்பக்களஞ்சியமாக உள்ளது. இவ்வூருக்கு அருகே உள்ள ஹோய் சாளேஸ்வரா, சாந்தாலேஸ்வரா, கேதாரேஸ்வரா கோயில்களும் அழகுள்ள கலைப்படைப்புக் கோயில்கள். ஹளபேடு மாதிரி இக்கோயில் சிற்பங்களும் நுண்ணிய வேலைப்பாடுகளுடன் காட்சி தருகின்றன.

சிக்மகளூர் அருகே உள்ள சிருங்கேரி சாரதா ஆலயமும் சிற்பங்களுடன் துங்கபத்ரா நதிக்கரையில் கம்பீரமாக காட்சி தருகிறது. இக்கோயிலும் ஹோய்சாளரின் கலைப்படைப்பாகும்.

நம் பாரதக் கலைகள் எல்லாமே இந்திய பண்பாட்டைத் தெரிவிக்கும் கருவூலமாகத் திகழ்கின்றன. நம்நாடு ஆலயங்கள் நிறைந்த நாடு. இவ் வாலயங்கள் இல்லாவிடில், நம் நாட்டு வரலாறே யாருக்கும் தெரியாது. எத்தனை கல்வெட்டுகள் எவ்வளவு விதமான ஆலயங்கள், சிற்பங்கள், பாரத நாட்டு நாகரிகத்தை விளக்கும் வரலாற்று களஞ்சியங்களாக நம் ஆலயங்கள் உள்ளன. அவற்றை போற்றி பாதுகாக்க வேண்டும். பேலூர் ஹளபேடு ஆலயங்கள் மூலம் கர்நாடகத்தின் வரலாற்றை நன்கு அறிய முடிகிறது.

கலை படைப்புகளைப் படைத்த ஹோய்சளார்களை போற்ற வேண்டும். அவர்களது ஆலயங்கள் கர்நாடகத்தில் இங்கும் அங்குமாக நிறைய இருக்கின்றன. அவற்றைப் பார்த்து இன்னும் பல விவரங்களை எழுதலாம்.

போலூர் சிற்ப வரிசை

Koviloor Digital Library

# 15. கங்கர்களது சிற்பங்கள்



பூரிஜகன்னாதர் ஆலயம்

கடைசி மௌரிய அரசனுக்குப் பின்னர் கி.மு. 185ல் புஷ்யமித்ரசுங்கன் அரியணை ஏறினான். இக்காலத்தில் பெரும் படைகொண்டு பஞ்சாபின் பெரும் பகுதியையும் தனதாக்கி, பாடலிபுத்திரத்தின் மீது படையெடுத்தான். யவன அரசன் 'மிளிந்தன்' இவனைப் புற முதுகிட்டு ஓடச் செய்தான். புஷ்யமித்ரன் இந்துமதத்தில் தீவிர நம்பிக்கை உடையவன். இவ்வரசன் கி.மு. 161 ல் காரவேலனால் தோற்கடிக்கப்பட்டான். மௌரியர் காலத்திலிருந்தே மிகப் பலம் பெற்ற

Koviloor Digital Library



பேரரசாக ஆந்திரர்கள் கிருஷ்ணா கோதாவரி கரையில் ஆண்டனர்; இந்துக்களேயாயினும் இவர்கள் பௌத்த மதத்தை ஆதரித்து வந்தனர். பூனேக்கருகே 'நாநாகாட்' என்ற இடத்தில் இவ்வம்சத்தின் மூன்றாம் அரசனான 'சாதாகர்ணி' என்பவனின் சிலை உள்ளது. ஆந்திர அரசர்கள் தான் மேலைப்பகுதிகளில் உள்ள குகைக் கோயில்களையும், 'கண்டசாலா', 'பட்டிப்ரோலு, அமராவதி முதலிய இடங்களில் பௌத்த ஸ்தாபனங்களையும் தோற்றுவித்தனர். சாஞ்சி ஸ்தூப வாயில்களும் இக்காலத்தே தோற்றுவிக்கப்பட்டன.

இக்காலத்தில் வடமேற்கு பகுதியில் நடந்த அரசுகளைப்பற்றி வரையறுத்து கூறுதல் கடினம். பாக்டீரியா, காபூல், பஞ்சாப் இவற்றை இரண்டு அரசக் குடும்பங்கள் ஆண்டு வந்தன. இவர்களில் மிளிந்தன் (மினாண்டார்) முக்கியமானவன். புத்த மதத்தைத் தழுவிய இம்மன்னன் காபூலையும், தக்ஷசீலத்தையும் ஆண்டான். அவனுக்குப் பின்னர்ஆண்டியல்கிடஸ் என்ற மன்னன் தக்ஷசீலத்தை ஆண்டான்.

சாகர்கள் பாக்டீரியத்தை தோற்கடித்தனர். ஆயினும் சிலகாலம் வரை மிளிந்தனின் வழிவந்ததோர் க்ஷத்ரபர்கள் என்ற பெயரில் பஞ்சாபை ஆண்டனர். இவர்கள் முதலாம் ஆஸஸ், இரண்டாம் ஆஸஸ், கொண்டாபோரஸ் முதலானோர் முக்கியமானவர்கள். சாகர்கள் மதுராவையும், தக்ஷசீலத்தையும், மேலை க்ஷத்ரபர்கள் என்ற பெயரில் ஆண்டனர். கங்கர் வளர்ச்சிக்கு மேலே உள்ள வரலாறு பின்னணியாக இருக்கிறது.

இக்காலத்தில் சில முக்கியமானவையும், மிகத் தொன்மை யானவைகளுமான சிற்பங்கள் 'பாஜா' என்ற இடத்தில் உள்ளன. இது புத்த விஹாரமாகக் குடையப்பட்ட குகையாகும். வெளி தாழ்வரையில் தூண்களின் மேல் பகுதிகளில், சிம்மம் போன்ற உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. குகை வாயிலின் இரு மருங்கிலும் உள்ள

Koviloor Digital Library


சிற்பங்கள் அபூர்வமானவை. கதிரவன், இந்திரன் யானை மீது அமர்ந்துள்ள சிற்பம் இன்னும் பல அழகான சிற்பங்கள் உள்ளன. இச் சிற்பங்கள் பெரும்பாலும் 'பார்குத்' ஸ்தூப சிற்பங்களை ஒத்திருக்கின்றன. இங்குள்ள சிற்பங்களில் காணும் தலைப்பாகைகளும், ஆடைகளும் பெரியனவாகவும், சிற்ப அழகுடன் விளங்குகின்றன.

'பார்குத்' என்ற இடத்துச் சிற்பமும், 'சாஞ்சி' ஸ்தூப வாயில்களும் இந்திய சிற்பங்களில் மிக முக்கியமானவை. அழகு நிரம்பியவையாகும்.

இவை கங்கர் காலத்தவையாகும். பார்குத் ஸ்தூபம் செங்கல்லினாலும் அதன் சுற்றுகளும், வாயில்களும் கல்லினாலும் ஆனவை.

காலத்தின் மாறுபாட்டால் அழிந்து பட்டவை போக எஞ்சியவைகள் கொல்கத்தா (கல்கத்தா)வில் உள்ள இந்திய அருங்காட்சியகத்தில் காணலாம். இங்கு சுற்று வேலிகளாக அமைக்கப்பட்டுள்ள இடங்களில் உள்ள கல் சிற்பங்களும், தோரண வாயில்களும் மிக அழகு வாய்ந்தவை. இவை பெரும்பாலும் ஜாதகக் கதைகளையும், புத்தரின் வாழ்க்கை வரலாற்று காட்சிகளையும் குறிக்கும்.

மலர்களின் பளுவால் வளைந்து நிற்கிறது சால மரத்தின் கிளை. அதைப் பிடித்துக்கொண்டு நின்றனர் புத்தரின் அன்னையாம் மாயாதேவி. அருகில் பணிப்பெண்கள் நீண்ட துணி ஒன்றைத் தாங்கி நிற்கின்றனர். இது போல பல காட்சிகளை பர்குத் சிற்பங்களில் காணலாம்.

Koviloor Digital Library



புத்த கயாவில் உள்ள போதி மரத்தின் கீழ் அமர்ந்தார் புத்தர். ஞான ஒளி அவருள் ஐக்கியமாயிற்று. தன்னை மறந்த நிலையிலே எழுந்து நடந்தார் புத்தர். அவ்விடத்தில் ஓர் சுற்றுவேலி, அசோகனால் ஏற்படுத்தப்பட்டது. இங்குள்ள சிற்பங்களில் இந்திரனின் சிற்பம் மிக அழகுவாய்ந்தது.

சிற்பக்கலையில் தலை நிமிர்ந்து நிற்பவை 'சாஞ்சி' ஸ்தூபம் வாயில்கள். சாஞ்சியில் அசோகனின் கல் தூணைத் தவிர மூன்று ஸ்தூபங்கள் உள்ளன. இவற்றுள் சாஞ்சி பெரிய ஸ்தூபமான முதல் ஸ்தூபம், மௌரியர் காலத்தது. செங்கல்லால் கட்டப்பட்டது. கங்கர் காலத்தில் இரண்டாவது, மூன்றாவது ஸ்தூபங்கள் எழுப்பப்பட்டன. முதல் ஸ்தூபம் பெரிதாக்கப்பட்டது. கி.மு. 72லிருந்து 25க்குள்ளாக ஆந்திரர் காலத்தில் தான் முதல் மூன்று ஸ்தூபங்கள் எழுப்பப்பட்டன. தோரண வாயில்களும், இரண்டாம் ஸ்தூபத்தின் சுற்று வேலிகளிலும் உள்ள சிற்பங்கள் மிக அழகு வாய்ந்தவை.

சாஞ்சி தோரண வாயில்களில் உள்ள சிற்பங்கள் ஜாதகக் கதைகளையும் புத்தரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் தொடர்ச்சியாகவும், தெளிவாகவும் சித்தரிக்கின்றன. அன்றைய சமுதாய அமைப்பை தெளிவாகக் காணமுடிகிறது. யக்ஷர்களின் சிற்பங்கள் திசைக்காவலர்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. தோரண வாயில்களின் மேல் உள்ள குறுக்கு விட்டங்களின் நுனி பாகத்தில், ஆடை அணியா அரணங்குகள் மரங்களின் கிளைப் பிடித்து நிற்றல் கண்கவர் காட்சியாகும். இங்கெல்லாம் நேரில் சென்று சிற்பங்களை ரசிக்க வேண்டும்.

Koviloor Digital Library

'அலஸ கன்யா' – லிங்கராஜர் கோயில் புவனேஸ்வர்

Koviloor Digital Library



## ஒரிசா நாட்டு சிற்பங்கள் - கலிங்கர்கள்

கலிங்கம் மௌரிய காலத்திற்கு முன்னரே புகழ்பெற்ற நாடாக விளங்கிற்று. அசோகன் கலிங்கத்தை வெற்றி கொண்ட போதுதான் அவனைப் புத்தமதம் வெற்றி கொண்டது. இதன் பழமையான தலைநகரம் விசாகப்பட்டினம், மாவட்டத்து வட எல்லையில் உள்ள 'முகலிங்கம்' என்ற ஊராகும். கலிங்கரது சிற்பக் கலை சுமார் கி.பி. 1100ல் மிக உன்னத நிலையை அடைந்தது. மிகப் பெரிய கோயில்கள் இக்காலத்தில் புவனேஸ்வரில் கட்டப்பட்டன. 'பரசுராமர்' கோயில், முக்தேஸ்வரர் கோயில், லிங்கராஜர், ராஜாராணி முதலிய ஆலயங்களில் மிகப் புகழ்பெற்ற சிற்பங்கள் உள்ளன. உணர்ச்சியிலும், உருவிலும் குற்றமற்ற சிற்பங்களைக் கலிங்க நாட்டின் சிற்பிகள் தோற்றுவித்தனர். உலகில் மிகப் புகழ்பெற்ற சிற்பங்களுடன் 'ராஜாராணி' கோயில் சிற்பங்களை ஒப்பிடலாம். மனமும் உடலும் ஒன்றாகத் தங்கள் நிலை மறந்து அணைத்து நிற்கும் காதலர்களின் சிலைகள் கலிங்கக் கலையின் தனிப் பெருமையாகும். உதட்டில் புன் சிரிப்புத் தவழ ஒயிலென நிற்கும் இவர்கள் சிற்பங்கள் உள்ளம் கவர் ஓவியங்களாகும்.

## கோணரக் - ஆதவன் கோயில்

கலிங்கத்துச் சிற்பங்கள், கோணரக் ஆதவன் கோயிலில் உன்னத நிலையை அடைந்து சிறப்பாக உள்ளன. இங்கும் காதலர் சிற்பங்கள் வனப்புமிக்கவை. உலகப் புகழ்பெற்றவை. எல்லாமே பெரிய அளவில் உள்ளன. கீழ் வாசலில் இரு சிம்மங்கள் யானைகளின் மேல் தங்கள் பாதங்களை ஊன்றி நிற்கின்றன. அருகில் அடிபட்டு வீழ்ந்த ஆடவரின் உடல்கள் காணப்படுகின்றன. அதுபோல தென்வாயிலில் மிகப் பெரும் இரு குதிரைகளின் காலடியில் சிக்கித் தவிக்கும்

Koviloor Digital Library



வீரனின் நிலை, பயங்கரத் தோற்றத்துடன் உருவாக்கப்பட்டுள்ளன. இவ்வூர் சிறு கிராமமாக வங்கக் கடல் ஓரத்தில் இருக்கிறது. கொணரக் என்றால் 'அர்க' என்றால் சூரியன் 'கோணா' என்றால் மூலை ஐரோப்பிய கடல் வாணிபர்கள் இக்கோயிலை 'ப்ளாக் பகாடா' (கருப்பு சிகரம் கொண்ட கோயில் என்று சொன்னார்கள். கங்க வம்சத்து அரசனான நரசிம்ம தேவன் (கி. பி. 1238 – 64) தனது அபார கற்பனையில் இக்கோயிலைக் கட்டினான். ஆதவன் கோயிலின் இருபக்க சுவர்களில், பக்கத்து 12 சக்கரங்கள் வீதம், 24 பெரிய சக்கரங்கள் உள்ளன. கோயிலின் முகப்பில் 7 குதிரைகள் உள்ளன. இவ்வளவு பெரிய சூரியன் கோயிலை வேறு எங்கும் காண முடியாது. உள் மண்டபத்தில் (போக மண்டபம் அல்லது நடமந்திர்) வேலைப்பாடுகளுடன் கூடிய தூண்கள் அலங்கரிக்கின்றன. நடன, இசை சம்பந்தமான சிற்பங்கள் இங்குள்ளன.

கோணரக், புவனேஸ்வர், பூரி – இம்மூன்று இடங்கள் கலிங்கத்தின் சிற்ப கலைக்கும், கட்டிடக் கலைக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. இவ்விடங்களில் காணும் சிற்ப கட்டிட அமைப்புகள் கீழ்காணும் அம்சங்களைக் கொண்டதாக இருக்கும்.

தெய்வங்கள் – பாடகிகள் – சிற்ப அமைதிகள் – சிருங்கார காதலர்கள் பறவைகள் – மிருகங்கள் – நீர் வாழ் உயிரினங்கள் – பல உருவங்கள் கொண்ட தெய்வீக சிற்பங்கள் (Composit & Mythological) கட்டட அமைப்புகள் – சிற்பச் சின்னங்கள் (அடிவகைகள்) – வேலைப்பாடுகளுடன் கூடிய மலர்கள் – கொடிகள் மற்றும் பலதரப்பட்ட வேலைப்பாடுடன் கூடிய தூண்கள்.

கோணரக் கோயிலே ஒரு பெரிய ரதம் போன்ற அமைப்பில் கட்டப்பட்டுள்ளது. மேல் கோபுரங்களின் மூலைகளில் மாபெரும்

Koviloor Digital Library



சங்கீத சிற்பங்கள் உள்ளன. இம்மாபெரும் சூரிய கோயிலின் அருகே சிறு கோயில்கள் இரண்டு உள்ளன. எல்லா கோயில்களுமே ஒரே பகுதியில் உள்ளன. ஒரு கோயிலில் விஷ்ணு பிரதானமான தெய்வசிற்பமாக உள்ளது. வராக, திரிவிக்ரம, நரசிம்மர் எல்லாம் இக்கோயிலின் அருகே உள்ள அருங்காட்சியகத்தில் உள்ளன.

சூரியனின் தேர் சக்கரங்கள் ஒவ்வொன்றும் பெரிய அளவில் உள்ளன. அபாரமான வேலைப்பாடுகளுடன் விளங்குகின்றன. நுண்ணிய சிற்பங்கள் கொடிகள் எல்லாம் அந்த பெரிய சக்கரங்களில் காணப்படுகின்றன. சக்கரம் முழுதும் அபாரமான வேலைப்பாடுகள் வேறு எங்குமே இம்மாதிரியான சிற்ப சக்கரங்களைப் பார்க்க முடியாது. கோணரக் கோயிலைப்பற்றி எழுத நிறைய விஷயங்கள் உள்ளன. ஒரிசாவிற்கு புகழ்தரும் சூரியக் கோயில் ஊரிலிருந்து 18 மைல் தொலைவில் உள்ளது. பிரமிப்பு தரும் ஆதவன் கோயிலை நீங்களும் ஒரு தடவை போய் பாருங்களேன்!

## ஆலயங்களின் கட்டட அமைப்பு

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் யயாதி என்ற அரசன் (705 – 810 கி.பி) கலை ஆர்வமிகுதியால் பௌத்த ஆதிக்கத்திற்குப் பிறகு ஆயிரக்கணக்காண கோயில்களை எழுப்பினான். இப்போது எஞ்சியிருப்பது 500 ஆலயங்கள் மட்டுமே! இவ்வாலயங்கள் புவனேஸ்வரைச் சுற்றி கட்டப்பட்டவையாகும்.

யயாதியால் கட்டப்பட்ட லிங்கராஜா ஆலயம் புவனேஸ்வரில் மாபெரும் ஆலயமாகும். முழுதும் இந்து சமயத்தைச் சார்ந்து கட்டப்பட்டது.

லிங்கராஜா ஆலயத்துக்கு ஆறு மைல் சுற்றுப்புறத்தில், பௌத்த, ஜைன சைவ, வைணவ ஆலயங்கள், 3ஆம் நூற்றாண்டு

Koviloor Digital Library



முதல் (கி.மு) 16ஆம் நூற்றாண்டு (கி.பி) வரை கட்டப்பட்ட ஆலயங்களாகும்.

புவனேஸ்வரை கோயில் நகரம் என்று அழைக்கிறார்கள். அருகே உள்ள பிற இடங்களில் காணும் ஆலயங்களுக்கு நடு நாயகமாக லிங்கராஜா ஆலயம் விளங்குகிறது. கம்பீரமான ஆலயம். இவ்வாலயத்தைச் சுற்றி சிறு ஆலயங்கள் உள்ளன. சிறு கோயில்களையும் சேர்த்து லிங்கராஜா ஆலயம் 520 அடி – 465 அளவு பரப்பளவில் உள்ளது. 127 அடி உயரமுள்ள விமானம் 'ஜகன்மோகன்' எனப் பெயரைப் பெற்றது. ஒரிசாவின் சிறந்த வேலைப்பாடுகளுடன் விளங்கும் சிற்பங்கள் மிக அழகுடையவை.

கலிங்கத்துக் கலை ஒரு தனிப்பாணியாக 'ஒரிசா கலாச்சாரத்தின் கலைகளாக விளங்குகிறது. இந்து கலாசாரத்தை மட்டும் பிரதிபலிக்கும் கலைக் கோயில்களாகத் திகழ்கின்றன. பௌத்த மத விஹாரங்கள் சைத்தியங்கள் எல்லாம் பிரார்த்தனைக் கூடங்களாகவும் பயன்படுத்தப்பட்டன. கலிங்க ஆலயங்களில் உள்ளே எந்த விதமான பிரார்த்தனைக் கூடங்களும் கிடையாது. ஒரிசா ஆலயங்களில் பூஜைகள்தான் நடக்கும். பிரார்த்தனைக்காக தனி இடமேதும் இல்லை! ஆலயங்களுக்கு வெளியே மண்டபங்கள் அமைத்து அங்கு பிரசங்கம், பிரார்த்தனை, சமய சொற்பொழிவும், நடனம் எல்லாம் நடக்கும். நம் தென்னகத்துக் கோயில்களின் உள்ளேயே நடன மண்டபம், பிரார்த்தனை, சமயத்தைப் பற்றிய பல நிகழ்ச்சிகள் நடக்கும். இதற்காகவே நம் கோயில்களின் உள்ளேயே பெரும் மண்டபங்களை அமைத்தார்கள்.

கலிங்கத்துக் கோயில்களின் உட்பகுதிகளில் குளம் கூட கிடையாது. வெளியேதான் இருக்கும். புவனேஸ்வரர் கோயில் இறைவனை வணங்குவதற்கு மட்டுமே பயன்பெறும் வகையில், அதன்

Koviloor Digital Library



கட்டடக்கலை அமைந்துள்ளது. ஆனால் சிற்பங்களுக்குக் குறைவே இல்லை. இந்து சமயத்தைச் சார்ந்த காட்சிகளை சிற்பங்களாக வடித்துள்ளார்கள். புவனேஸ்வரர் ஆலயத்து சிற்பங்களில் பெண்கள் சம்பந்தமான காட்சிகளே அதிகமாக உள்ளன. எல்லாமே அழகு வாய்ந்தவை. கடவுளின் சிற்பங்கள் சிறப்பாகவும் அழகாகவும் காணப்படுகின்றன. புவனேஸ்வரர் கோயில் ஒரு சிற்ப களஞ்சியமாகவே திகழ்கிறது எனக் கூறலாம்.

## ராஜா ராணி ஆலயம்

புவனேஸ்வரர் கோயிலுக்கு எந்த விதத்திலும் குறைபாடில்லாத கோயில் 'ராஜா ராணி' ஆலயம். ஒரிசா கலைக்கு ஒரு வைரக்கல்லாக பல கோயில்களைக் கொண்டது ராஜா ராணி ஆலயம். மஞ்சள் நிறமுள்ள மணற்பாறைகளால் (Yellowish Sandstone) உருவான ஆலயம். ஒரு காலத்தில் இவ்வாலயத்தைச் சுற்றி 7000 சிறு ஆலயங்கள் இருந்ததாகவும், இன்று பல இயற்கை சீற்றம் போர் முதலிய காரணங்களால் அழிந்து 500 ஆலயங்களே எஞ்சியுள்ளன. ஆலயங்கள் அளவில் சிறியதாக இருந்தாலும் எல்லாமே அழகுவாய்ந்தவை. இவற்றுள் 'முக்தேஸ்வரர் ஆலயம் முதன்மைச் சிற்ப அழகில் விளங்குகிறது. கேதாரேஸ்வர் கோயிலில் துர்கை சிம்மத்தின் மீது நின்று காட்சிதருவது, ஒரு புதுமையான படைப்பாகும். மற்றொரு கோயில் பரமேஸ்வரர் கோயில் சிவபார்வதி, கிராதார்ஜுனர், மற்றும் மகாபாரத காவியத்திலிருந்து சில காட்சிகள் எல்லாம் சிறந்த சிற்பப் படைப்புகளாகும்.

## தௌலி பாறை சிற்பங்கள்

புவனேஸ்வருக்கு தென் கிழக்கே 4 மைல் தூரத்தில் அசோகனது கல்வெட்டு உள்ளது. கலிங்கத்தை அசோகன் வென்ற

Koviloor Digital Library



வீரத்தைக் கூறும் கல்வெட்டு இங்கு உள்ளது. இங்குள்ள சிற்பங்கள் சிதைந்துள்ளதைப் பார்க்கும் போது கலிங்கப் போர் ஒரு காரணமாக இருக்கலாம் என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

## ஜைன குகைகள்

புவனேஸ்வருக்கு அருகேயுள்ள உதயகிரி, கண்டகிரி மலைகளில் 30 ஜைன குகைகள் உள்ளன. சில குகைகளில் தான் ஓரளவு சிறப்பான ஜைன சிற்பங்கள் காணப்டுகின்றன. மற்ற குகைகளும் அவ்வளவு சிறப்பு வாய்ந்ததாக இல்லை.

உதயகிரி குன்றின் மீது 110 அடி உயர குகை ஒன்று உள்ளது. பிற குகைகளில் கல்வெட்டுகள்தாம் உள்ளது. இங்குள்ள ஒரு குகையின் முகப்பிலே பாறை சிற்பம் அழகாக இருக்கிறது.

## ராணி கும்பா

கி. மு. 2ம் ஆம் நூற்றாண்டில் கரவேலா என்ற அரசன் தன் மனைவிக்காக இரண்ட டுக்கு மாளிகை கட்டினான். இங்குள்ள சிற்பங்கள் பௌத்த குகைகளின் கட்டிட அமைப்பும், பர்குத், சாஞ்சிஸ்தூபத்தை நினைவு படுத்தும் வகைகளில் இந்த இரண்டு அடுக்கு மாளிகை உள்ளது.

## கணேச கும்பா

குன்றின் மீது ஒரு தளத்துடன் பெரிய குகையாக உள்ளது. பிக்ஷுக்கள் வாழ்வதற்கான இரண்டு அறைகள் இருக்கின்றன. குகைக்கு முன் முற்றம் இருக்கிறது. தூண்களில் பெண் சிற்பங்கள் அழகுற உள்ளன. படிகளின் இருபுறமும் யானைகள் உள்ளன. இக்குகை போன்று அருகில் ஜயவிஜயா, கைகூண்ட குகைகள்

Koviloor Digital Library



சின்னங்களுடன் காட்சி தருகின்றன. இங்கு அசோகனது கல்வெட்டுகள் உள்ளன. மௌரியருக்குப் பிறகு அசோகனின் மரணத்தை பற்றி கல்வெட்டு ஒன்று உள்ளது. கரவேலரின் அரசின்போது நடந்த சம்பவங்களை பற்றிய கல்வெட்டுகள் இங்கு காணப்படுகின்றன.

கரவேலரின் காலத்து குகைகள் பல பௌத்த சமயத்தை சார்ந்தவை. சில ஜைனத்தைச் சார்த்த குகைகள்.

## புரி

புவனேஸ்வரிலிருந்து 12 மைல் தூரத்தில் இருக்கிறது புரி என்ற தலம். ஜகந்நாதர் கோயில் இத்தலத்தில் புகழ்பெற்ற பெரிய ஆலயம். மிகவும் புனிதமான கோயிலாகவும் விளங்குகிறது. இக்கோயிலை கட்டி முடிப்பதற்கு 12 அம் நூற்றாண்டின் இறுதியில்தான் முடிவு பெற்றது. அப்போது முதலாம் அணங்க பீமா, என்ற அரசன் ஆண்டுவந்த காலம். இவன் கங்க அரசவம்சத்தைச் சேர்ந்தவன்.

ஜகந்நாதர் கோயிலின் அமைப்பே தனித்தன்மை வாய்ந்தது. நான்கு ஆலய கட்டிடங்கள் கொண்ட பெரிய கோயில். இக்கட்டிடங்களில் படையல், நடன அரங்கம், பெரும் சபை, மற்றும் இந்துமத நிகழ்ச்சிகள் என்று நான்கு கட்டிடங்கள் உள்ளன. ஆலய விமானம் 192 அடி உயரமுள்ளது, இது மூலவரின் விமானமாகும்.

இந்த ஆலயத்தில் மூன்று பிரதான தெய்வங்களை மக்கள் வழிபட்டு வருகிறார்கள். ஒன்று ஸ்ரீஜகந்நாதர், இரண்டாவது ஜகந்நாதரின் சகோதரர் பலபத்ரா, மூன்றாவதாக சகோதரி சுபத்ராவிற்கும் தனித் தனி உருவங்களை தெய்வமாக பல காலமாக வழிபட்டு வருகிறார்கள்.

Koviloor Digital Library



புரி ஜகந்நாதர் ஆலயம் 652 அடி 620 அடி பரப்பில் அமைந்துள்ளது. சுற்றுச் சுவர் 20 அடி உயரமுள்ளது. கிருஷ்ண பகவானின் லீலை காட்சிகள் கோயிலுக்கு நுழைவாயிலில் அழகுற அமைந்துள்ளது. கோயிலுக்கு ஒரு மைல் தூரத்தில் இந்திரதூம்னா என்ற இடத்தில் ஜகந்நாதரின் தேர் உள்ளது. ஆலயத்திலிருந்து ஜகந்நாதரை தேரில் புறப்படுவதற்காக எடுத்துச் செல்கிறார்கள்.

ஜகந்நாதரைப்பற்றி பல புராண கதைகள் உள்ளன. அவற்றில் ஒன்று புரி ஜகந்நாதரைப்பற்றியது. புரி ரதயாத்திரை உலகப் புகழ்பெற்றது. தேர் சுமார் 4000 பேர்களால் இழுக்கப்படுகிறது இன்றும் ரதயாத்திரை விழா சிறப்பாக கொண்டாடப்படுகிறது. வெளிநாட்டு பயணிகள் இவ்விழாவைக் காண வருகிறார்கள்.

தேரின் உயரம் 45 அடிகள் – 35 அடிகள் அகலம் – 16 சக்கரங்கள் கொண்டது. ஒவ்வொரு சக்கரமும் 7 அடி குறுக்களவு கொண்டது. ஜகந்நாதரின் சகோதர, சகோதரி தேர்கள் சற்று சிறியனவாக இருக்கும்.

புரி ஜகந்நாதர் கோயில் சிகரம், சிற்ப அமைதி எல்லாம் ஒரிசா கலையை நன்கு அறிய அற்புதமான சின்னங்கள்.

கலிங்கத்து மூன்று வைரங்களாக ஜொலிக்கும் புவனேஸ்வர், புரி, கொணாரக், இம்மூன்று கோயில்களும் உலகப் புகழ்பெற்ற ஆலயங்கள். ஒரிசாவின் முக்கோணத்தில் (மூன்று திசைகளில்) சமதூரத்தில் அமைந்துள்ளன. இன்றைய ஒரிசாவின் தலைநகரம் புவனேஸ்வர் ஆகும். இத்தலம் பாரதத்தின் கோயில் நகரம் என்று அழைக்கப்படுகிறது. ஒரிசாவிற்கு புகழ்தருபவை ஜன குகைகள், அசோகனது கல்வெட்டுகளாகும். ரத்னகிரி என்ற இடத்தில் பௌத்த பல்கலைக்கழகம் ஒன்று உள்ளது. அங்கு கி.பி. 8ஆம் நூற்றாண்டைச் சார்ந்த தந்திர சாஸ்திரத்தை

Koviloor Digital Library



கற்றுக்கொடுக்கிறார்கள். ஒடிசி நடனம் ஒரிசாவின் ஆரம்ப கலையாகும். மற்றும் கலை வேலைப்பாடுகளுடன் நிரம்பி வளர்ந்து வருகின்றது. பொதுவாக ஒரிசா (கலிங்கம்) ஒரு கலை மாவட்டம் என்று கூறலாம். அங்கு சென்று கலைச் செல்வங்களைப் பார்த்துவருவது நமக்கு ஒரு இன்பமான மனநிறைவாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.



சூரியன் கோயில் கோணாரக்

Koviloor Digital Library

# 16. விஜய நகர ஆட்சி

*(கி.பி. 14–17 ம் நூற்றாண்டுகள்)*

பதினான்காம் நூற்றாண்டில் விஜய நகரப்பேரரசு நிறுவப்பட்டுத் தெற்கு தீபகற்பத்தின் முதன்மையான வல்லரசாக ஆயிற்று. வித்யாரண்யர் ரிஷியின் ஆசி பெற்று ஹரிஹரன், புக்கன் என்ற சகோதரர்களால் முகமதிய படையெடுப்பைத் தடுக்க நிறுவப்பட்டதே விஜயநகரப் பேரரசாகும். 1379 ல் இரண்டாம் புக்கன் விஜயநகரைத் தோற்றுவித்தான். கிருஷ்ணதேவராயரது (1509–1529) விஜயநகரம் பேரரசு மிகப் புகழ்பெற்ற அரசாக இருந்தது. விஜயநகர காலத்தை கி.பி. 1350 முதல் 1600 வரை கொள்ளலாம். இக்காலத்து சிற்பங்கள் நிறைந்த கல்தூண்களை உடைய பல மண்டபங்கள் கோயிலில் எங்கும் எழுப்பப்பட்டன – வேலூர் சிறப்பு மிகும் கல்யாண மண்டபத்திலும், காஞ்சி வரதர் கோயிலிலும் காணலாம். விஜயநகரத்தில் உள்ள வித்தலஸ்வாமி கோயிலிலும் காணலாம் கிருஷ்ண தேவராயர் தொழுது வந்த 'ஹசார ராமர்' கோயிலில் ராமாயணச் சிற்பங்கள் மிக ஆழமாகச் செதுக்கப்பட்டுள்ளன. இக்காலத்துச் சிற்பங்களின் ஆடையிலும், நிலையிலும் மாறுபாடு என்பது இல்லாமல் ஒரே நிலையாகக் காணப்படுகின்றன. பெண் சிற்பங்களின் வயிற்றின் அடிப்பாகம் உருண்டையாக முன்னோக்கிக் காணப்படுகின்றது. இக்காலம் தொட்டுத்தான் சிற்பங்களில் நாமம் போன்ற சின்னங்கள் தோன்றலாயின.

கட்டடக்கலை, சிற்பம், ஓவியம் இவற்றில் உள்ள விஜயநகரப் பாணி பிற்கால சோழ, பாண்டிய மரபின் தொடர்ச்சியாக இருந்தது.

Koviloor Digital Library



கன்னட, தெலுங்கு மாவட்டங்களில் அதற்கு முன்பிருந்த சாளுக்கிய மரபுகளைச் சில வகையில் இது இணைத்துக்கொண்டது. கிருஷ்ண தேவராயர், ஒரு சிறந்த அரசியல் ஞானி, அரசர், போர் வீரர்மட்டும் அல்லர் அவர், தலைசான்ற புலவரும், ஒவியரும், அருங்கலைகளின் ஆதரவாளரும் கூட. பெருங்கோபுரங்களும்,மண்டபங்களும், இக்காலத்தில் கட்டப்பட்டன. லேபாக்ஷி வீரபத்திரர், காஞ்சி வரதர், ஹம்பிவிட்டலர், வேலூர் ஜலகண்டேசுவரர் கோயில்களின் மண்டபங்கள் எல்லாம் சிறந்த சான்றுகளாகும்.

இந்திய வரலாறு, பண்பாட்டின் கடைசி பெரிய கட்டத்தை விஜயநகர பேரரசு காட்டுகிறது. கலைகளுக்கு ஊக்கம் அளிக்கப்பட்டது. எண்ணற்ற கோயில்கள் தென்னிந்தியாவில் உள்ளன.

ஹம்பியின் அருகே 'ஆனகொந்தி', தாட்டுப்பத்திரி', காஞ்சிபுரம், 'காளஹஸ்தி', 'திருப்பதி', 'திருவண்ணாமலை', 'சிதம்பரம்', 'திருவாரூர்', 'கும்கோணம்', 'ஸ்ரீரங்கம்' இன்னும் மற்ற இடங்களிலும் விஜயநகரப் பாணிகலைகள் காணப்படுகின்றன. லேபாக்ஷியில் கோயிலுக்கு அருகே ஒரு பெரிய நந்தியின் சிற்பம் ஒரே கல்லாலான படைப்பு, காண வேண்டிய சிற்பம். வீரபத்திரர் கோயிலின் உள்ளே பல சிற்பங்கள் உள்ளன.

## ஹம்பி

ராபர்ட் ஸ்யூவல் (Robert Sewell) என்ற வரலாற்று பேரறிஞர் மறைந்த மாநகரம் (A Forgotten Empire) என்ற நூலில் ஹம்பியைப் பற்றி விரிவாக எழுதியுள்ளார்.

ஹம்பியின் வரலாற்றை சிறிது தெரிந்து கொள்வோம். விஜயநகர பேரரசின் முதல் அரசன் முதலாம் ஹரிஹரன். இவன்

Koviloor Digital Library



காலத்தில் அரசு பலமுள்ள அரசாக இருந்தது. மூரிஷ் பயணி இபன் படுடா 1334–1342 வரை பாரதத்தில் பயணித்தபோது, முதலாம் ஹரிஹரன் காலத்தில் சில முஸ்லீம் தலைவர்களும் இருந்தார்கள். பிறகு இவனுக்கு பின்வந்த 'புக்கராயன் காலத்தில் விஜயநகரப் பேரரசு இன்னும் சிறப்பாக புகழுடன் இருந்தது. இவன் ஆண்ட 33 ஆண்டுகளில், பல அரசுகளை வென்று, தெற்கேயும் வடக்கே ஒரிசா வரை தன் அரசை விரிவாக்கி ஆண்டுவந்தான். இவனுடைய மகன் இரண்டாம் புக்கராயன் பாமினி சுல்தான்களை வென்றான். பாமினி அரசு, விஜயநகர அரசுக்கு 20 வருடங்களுக்குபின் உருவான அரசு. குல்பர்காவை தலைநகராகக் கொண்ட சுல்தான் அரசு இரண்டாம் ஹரிஹரனுடைய அரசுடன் சேர்ந்தது. இந்து, முஸ்லீம் அரசுகளுக்கிடையே அவ்வப்போது சிக்கல்கள் ஏற்பட்டன. கிருஷ்ணதேவராயர் விஜயநகரத்து பேரரசனாக சிங்காதனம் ஏறியவுடன், 1509–1529 வரை விஜய நகர பேரரசு உச்ச நிலையில் இருந்தது. கிருஷ்ண தேவராயனின் புகழ் எங்கும் பரவி, அவருடய அரசுநிர்வாகம் சிறப்பாக இருந்தது. கலைகளுக்கெல்லாம் ஆதரவுகாட்டி, கலைஞர்களுக்கு ஊக்கம் அளித்தது சிறப்புத்தான். அதனால்தான் ஆந்திரம், தமிழகம் எங்கும் விஜய நகர கலையம்சம் பரவியது. ஆலயங்கள், பெரியகோபுரங்கள், கட்டங்கள், எல்லாம் பல ஊர்களில் தோன்றின. அவ்வூர்களின் எண்ணிக்கை மிக அதிகம்.

தேவரின் ஆட்சியின் கீழ் இஸ்மைல் அடில்ஷா' என்ற அரசனின் பீஜபூர் ராய்சூர்கோட்டை எல்லாம் வந்தது. 1520ல் ராய்சூரை வென்றதால் கிருஷ்ண தேவராயரின் புகழ் ஓங்கியது.

கிருஷ்ண தேவராயர் காலத்தில் விஜயநகருக்கு பல வெளிநாட்டு பயணிகள் வந்தார்கள். குறிப்பிடும்படி, இத்தாலியிலிருந்து வந்த நிகலோ கோண்டி' (1420), அப்துல் ரசாக் என்ற பயணி சமர்க்கண்டிலிருந்து 1440ல் வந்தார்.

Koviloor Digital Library



போர்சுகலிலிருந்து டோமிங்கோ பயஸ் (1520), சீசர் பெடரிக் என்பவர் இத்தாலியிலிருந்து 1567ல் வந்தார். இவர்கள் எல்லாம் விஜயநகருக்கு விஜயம் செய்து கிருஷ்ணதேவராயரது ஆட்சியைப் புகழ்ந்து சென்றவர்கள்.

## விஜயநகர வீழ்ச்சி

கிருஷ்ணதேவராயரின் மரணத்திற்குப் பிறகு 'அச்சுத ராயன்' என்ற அரசன் விஜயநகரை ஆண்டுவந்தான். இவன் காலத்தில் தலைக்காடு யுத்தம். முஸ்லீம் படைகளுடன் மோதித் தோல்வியை அடைந்தது. இதிலிருந்து விஜயநகர ஆட்சி வீழ்ச்சி அடைய ஆரம்பித்தது. பெரிய பேரரசாக கிருஷ்ணா நதிக்கு அருகேயுள்ள தலைக்காட்டிலே நடந்தது. கிருஷ்ணராஜாவினால் தாக்கு பிடிக்க இயலவில்லை. வயதோ 90க்குமேல் இவனுக்கு முன் ராமராஜன், அச்சுதராயன், சதாசிவராயன் போன்றவர்கள் அரசை நிர்வகிக்க முடியவில்லை. இவர்களுக்குப்பின் வந்த கிருஷ்ண ராஜாவும் அரசை முஸ்லீம் மன்னர்களிடமிருந்து காப்பாற்றமுடியவில்லை. தலைக்காடு யுத்தம் மிகவும் பயங்கரமான யுத்தம். பல ஹிந்துக்கள் கொல்லப்பட்டனர். கோயில்கள் பாழாக்கப்பட்டன. விஜய நகர மன்னனான கிருஷ்ணராஜா தோல்வி அடைந்தான். பிறகு ஒரு படைக்கு தலைமை வகித்த ராம ராஜாவினாலும் சமாளிக்க முடியவில்லை. அவனும் தோல்வி அடைந்தான். தலைமை வகித்த ராமராஜாவினாலும் சமாளிக்க முடியவில்லை. அவனும் தோல்வி அடைந்தான். தப்பிக்க முயன்ற ராமராஜனை, கைது செய்து பிறகு அவனது தலையை துண்டித்தார் முஸ்லீம் விரர்களால் கட்டப்பட்டது, யுத்தத்திற்குப்பிறகு விஜயநகர ஹம்பி சூரையாடப்பட்டது. கலைப்பெட்டகமாக இருந்த ஹம்பி முஸ்லீம்களால் சின்னா பின்னமாக்கப்பட்டது. இந்த அவல நிலையை 'ராபர்ட் ஸ்யூவல்'

Koviloor Digital Library



விரிவாக தன் நூலில் எழுதியுள்ளார். இவ்வளவு கொடுமைகளும் அராஜகமும், நடந்தும் ஹம்பி நகரத்தில் இன்றும் விஜயநகர கலை அம்சத்தைக் காண முடிகிறது.

சீசர் பெடரிக் என்ற பயணி விஜயநகர் (ஹம்பி) பாழ்படுத்தப்பட்ட இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அங்கு வந்தார். அவர் எழுதுகிறார். வீடுகள் மனிதர் இல்லா இல்லங்களாக உள்ளன. அழிவுப்பட்ட நகரத்தில், பக்கத்தே உள்ள குன்றுகளில் வசிக்கும் புலி மற்றும் காட்டு விலங்குகள் திரிகின்றன. பக்கத்தே உள்ள நதி நிதானமாக, மௌனமாக ஓடிக்கொண்டிருக்கிறது என்று வருத்தத்துடன் எழுதியுள்ளார். நல்ல நிலையில் இருந்தபோது வந்தவர் இவர்.

இன்று ஹம்பியில் எஞ்சியுள்ள கலைச் செல்வங்களைப் பார்ப்போம். அன்றைய மகோன்னதமாக இருந்த ஹம்பி நகரம் இன்று ஒரு கிராமமாக உள்ளது. ஒன்பது சதுரமைல் விஸ்தீரணமுள்ள நிலப்பரப்பில் அங்கும் இங்குமாக பல கலைச் சின்னங்கள் பின்னப்பட்டு கிடக்கின்றன. மதில்கள் எல்லாம் நாசமாக்கப்பட்டுள்ளன. இருப்பினும் அன்றைய மக்களின் வாழ்க்கையை அரசின் உன்னத நிலையை உணரமுடிகிறது. ஆலயங்கள் கலைத் தூண்கள், கூடங்கள் பாழ்பட்ட அரண்மனையின் எஞ்சியுள்ள பகுதிகள் அகன்ற வீதிகள் எல்லாம் இன்றும் பார்க்கமுடிகிறது.

கிருஷ்ண தேவராயரால் கட்டப்பட்ட 'தசராமண்டம்' ராயர் ஒரிசாவை வென்று வந்தபோது, இங்கு வெற்றி விழா கொண்டாடப்பட்ட மண்டபம். மண்டபத்துக்கு முன்னால் பெரிய மேடை உள்ளது. அங்கு மக்கள் வந்து கூடுவார்கள். பல திருவிழாக்கள் நடக்கும். ஸ்ரீராமநவமி போன்ற விசேஷ நாட்கள் அங்கு நடத்துவார்கள்.

Koviloor Digital Library



பாழடைந்த அரண்மனைக்கு சற்று தூரத்தில் பெரிய மேடையுள்ளது. மேடையைச் சுற்றி கீழே சிற்ப வரிசைகள் உள்ளன. இராமாயண காவிய காட்சிகள், நடன காட்சிகள் எல்லாம் சிற்ப வடிவில் அழகாக உள்ளன.

பாழடைந்த நிலையிலும் அரண்மனையின் கம்பீரத் தன்மையைக் காண முடிகிறது. இவ்வரண்மனையில் புகழ்பெற்ற கல்ரதம் ஒன்று உள்ளது. விட்டல ஸ்வாமி ஆலயமும் கிருஷ்ணதேவராயரால் கட்டப்பட்டது. ரதத்தின் அழகை இங்கு எழுத்தால் வர்ணிக்க முடியாது. ஒரே சிற்பமயம். சக்கரங்களிலும் சிற்பங்கள் இவற்றையெல்லாம் நேரில் காணவேண்டும். ரதத்துடன் கூடிய விட்டல ஸ்வாமியின் கோயில் நீளம் 500 அடிகள் அகலம் 310 அடிகள். எங்கு நோக்கினும் சிற்ப கட்டிடங்கள்தாம். ஆனால் பாழ்படுத்தப் பட்டவை.

மற்றொரு ஆலயம் ஹசார ராமர் கோயில் இங்கு ராமாயண காட்சிகள் நுணுக்கமான சிற்ப வேலைப்பாடுகள். இரண்டாம் விருபாக்ஷ அரசனால் (1465–85) கட்டப்பட்டது. இங்கு பல சுரங்க பாதைகள் இருக்கின்றன. ஒரு சிலவற்றைத்தான் கண்டு பிடித்துள்ளனர். முகப்பில் சிங்க உருவம் பொறிக்கப்பட்டுள்ளது.

ஆலயத்தின் அருகேயே யானை கொட்டடி பல உள்ளன. உயரமான நுழைவாயில்களைக் கொண்டவை. அதிசயமான கட்டிட அமைப்பு. பக்கத்தே அழகான கட்டிடங்கள் அவசியம் பார்க்க வேண்டியவை. ஹம்பியில் மகாவிஷ்ணுவுக்கு ஒரு கோயில் உள்ளது. கருங்கல்லினால் உருவான கோயில். இக்கோயில் அருகே துங்கபத்ரா நதி ஓடுகிறது. கோயிலில் பெரிய சிற்பத் தூண்கள் உள்ளன. கிருஷ்ண தேவராயரால் 'ரங்கமண்டம்' என்ற பெரும் முற்றம் கட்டப்பட்டது. இது பம்பாபதி கோயில் அருகேயுள்ளது. இக்கோயில்

Koviloor Digital Library



விருபாக்ஷருக்காகக் கட்டப்பட்டது. விஜய நகர மன்னர்களின் குலதெய்வமாக விருபாக்ஷர்விளங்கினார். ரங்க மண்டபம் அருகே யோக நரசிம்மர் பெரிய சிற்ப வடிவில் காட்சி தருகிறார். நல்ல கலை படைப்பு. இங்கு நடந்த போரினால் இந்த சிற்பம் பின்னப்பட்டிருந்தது. அது முறையாக சீர்செய்யப்பட்டது சமீப காலத்தில். சாளுக்கிய அரச சின்னமாக வராகம் விஜயநகர அரசுக்கும் சின்னமாக இருந்தது. விஜய நகர அரசு முஸ்லீம் கட்டடக் கலைஞர்களைக்கொண்ட தங்கள் கட்டிடங்களிலும், அவர்களது கட்டிடக்கலையை பின்பற்றி சில அரண்மனை, கூடங்களையும் கட்டினார்கள். ஹம்பியில் சில கட்டிடங்களில் இந்து முஸ்லீம் முறைகளைப் பின்பற்றி எழுப்பியதைக் காண முடிகிறது.

ஒரு குன்றின் மீது (மதங்கபர்வதம்) சிறு ஆலயம் இருக்கிறது. அக்குன்றின் மீது ஏறி ஹம்பியின் இன்றைய நிலையைக் காணமுடியும். பாழடைந்த நகரத்தை பறவை நோக்கில் (Birds Eye View) பார்க்கும்போது மனத்துக்கு தாபம் ஏற்படுகிறது. ஹாஸ்பெட்டிலிருந்து ஏழு மைல் தூரத்தில் உள்ள கமலாபுரம். அங்கும் சிதைந்து விஜயநகர சின்னங்களைக் காணலாம்.

ஹாஸ்பெட் நகரம் கிருஷ்ணதேவராயரால் (1509–1520) தன் தாயார் நாகலா தேவியை பெருமைப்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட நகரம். இந்நகரை நாகலாபுரி என்று முன்பு அழைத்தார்கள். இந்நகரில் அரசர்கள் வந்து தங்குவது உண்டு. வெளி நாட்டு பயணிகள் விஜயநகருக்கு நுழைவாயிலாக உள்ள இந்த ஊரை பயன்படுத்தினர்.

ஹாஸ்பெட்– கமலாபுரம் என்ற இரு ஊர்களுக்கிடையே பல சிதைந்த கலை சின்னங்கள் பரவலாக உள்ளன. பாழடைந்த கோயில்கள், மண்டபங்கள் எல்லாம் செல்லும் வழியில் உள்ளன.

Koviloor Digital Library



'அநுகுண்டி' என்றும் இடத்தில் ஒரு குளம் உள்ளது. அதற்குப் பெயர் 'பம்பாசரஸ்' அல்லது 'பம்பாதீர்த்தம்', 'பம்பா' என்பது துங்கபத்ரா நதியின் பழைய பெயராகும். இங்கு சில குன்றுகள், ருஷ்யமுகக்குன்று என்றும், மதங்கபர்வதம், 'மலய வந்தா பர்வதம்' என்ற பெயர்களுடன் உள்ளன.

இவ்வளவு அருமையான கலைச் சின்னங்கள் உடைய ஹம்பியைப்பற்றி எழுத இன்னும் நிறைய இருக்கிறது.

தமிழகத்தில் கிருஷ்ணதேவராயரால் பல பெரிய கோபுரங்கள் பல கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. ராயகோபுரங்கள் என்று பல பெரிய கோபுரங்களுக்கு பெயரிட்டுள்ளார்கள். இனிவரும் கட்டுரைகளில் விஜய நகர பாணியில் அமைந்த கலைச் சின்னங்களைப்பற்றி எழுதவேண்டிவரும். ஏனெனில் ஒரே கோயிலில் பல்லவ, சோழ, பாண்டிய, நாயக்க பாணி கலைப் படைப்புகள் கலந்து உள்ளன. இவை அரசுகளின் மாற்றங்கள், திருப்பணிகள் மூலம் கோயிலின் அமைப்புகளில் கலந்துவிட்டதுதான் காரணமாகும்.

Koviloor Digital Library



## விஜய நகர அரசு காலத்து கோயில்கள்

விஜய நகர அரசு புதிதாக எந்தக் கோயிலும் கட்டவில்லை. அவர்கள் இருக்கும் கோயில்களுக்கு திருப்பணிகள் செய்துள்ளார்கள். பல உயரமான கோபுரங்களை அமைத்தார்கள். ஏகாம்பரேஸ்வரர் கோயிலின் தெற்கு கோபுரம் கிருஷ்ணதேவராயரால் கட்டப்பட்டது. இக்கோபுரம் ஹம்பி விட்டல ஸ்வாமி கோயிலை ஒத்திருக்கிறது. சிதம்பரம் ராயகோபுரக் கட்டட அமைப்பும் இதில் காண முடிகிறது. ஏகாம்பர நாதர் கோயிலின் கருவறை எதிரே உள்ள கிருஷ்ணராய கோபுரம் விஜயநகர காலத்தது. தெற்கு கோபுரம் ராயர் காலத்து பெரிய கோபுரங்களில் ஒன்று. இங்குள்ள மண்டபமும் விஜயநகரகாலத்தது. ஆலயத்தின் விமானமும் விஜயநகரமுறையில் அமைக்கப்பட்டுள்ளது. அந்த விதமாக காமாட்சி அம்மன் கோயில் விமானமும் விஜயநகர வம்சத்தில் வந்த ஹரிஹரனால் அமைக்கப்பட்டது. மண்டபமும் விஜயநகர காலத்தது. ஆலய திருப்பணிகள் எல்லாம் விஜயநகர காலத்தில் செய்யப்பட்டவையாகும்.

## காஞ்சி வரதராஜப்பெருமாள் கோயில்

இங்குள்ள நூற்றுக்கால் மண்டபம் விஜயநகர மன்னர்களால் அமைக்கப்பட்டது. தூண்கள் எல்லாம் அற்புதமான சிற்பங்களால் அலங்கரிக்கப்பட்டவை. நுணுக்கமான வேலைப்பாடுகளுடன் பலவித சிற்பங்கள் காணப்படுகின்றன. குதிரை, பெண்மணிகள், மரங்கள், செடிகள் உயிரினங்கள் எல்லாம் சிறப்பான வேலைப்பாடுகள்.

ஏகாம்பரநாதர் கோயில், காமாட்சி அம்மன் கோயில், வரதராஜர் கோயில் மூன்றும் காஞ்சிபுரத்துக்கு புகழ் சேர்ப்பவையாகும்.

காமாட்சி அம்மன் கோயிலைப்பற்றி பல்லவ கல்வெட்டுகளில் எந்த குறிப்பும் காணப்படவில்லை. ஒரு சிலபுத்தர் சிலைகள் கண்டு

Koviloor Digital Library

விஜயநகரம் – நரசிம்மர்

Koviloor Digital Library



பிடிக்கப்பட்டது. கோபிநாதராவ் என்ற ஆராய்ச்சியாளர் காமாட்சி அம்மன் கோயில் ஒரு காலத்தில் தாராதேவியின் ஆலயமாக இருந்திருக்கும் என்று கருத்து கூறுகிறார். தாராதேவி புத்த மதத்தைச் சேர்ந்த தேவியாகும் தாந்திரீக தேவதை. சில பௌத்த கோயில் ஹிந்து கோயிலாக மாற்றப்பட்டுள்ளது என்று கோபிநாத் ராவ் கருதுகிறார். மகான் சங்கரர் பௌத்த மதத்தலைவர்களுடன் வாதாடி வென்று இந்து மதத்தை இங்குஸ்தாபித்தார். காமகோடி பீடத்தையும் காமாட்சி அம்மன் கோயிலில் ஸ்தாபித்தார். இங்கு சிற்பங்கள் குறைவாகவே உள்ளன.

வரதர் கோயிலில் சோழ, விஜயநகரப் பணிகள் நிறைய உள்ளன. மிக அழகான ஆலயம் வரதராஜப்பெருமாள் கோயில்.

## ஜைன, பௌத்த சின்னங்கள்

காஞ்சியில் பௌத்த விஹாரங்கள் இருந்தன. இங்கு 2 அடி நீளமுள்ள புத்த சிற்பம் கிடைத்துள்ளது. இச்சிற்பம் பரிநிர்வாண நிலையில் உள்ளது. இது ஏகாம்பரநாதர் கோயில் வெளிப்பிரகாரத்தில் உள்ளது. இங்கேயே நந்தவனத்தில் அருகே ஏழு புத்தர் சிலைகள் பிரகார சுவரில் செதுக்கப்பட்டுள்ளன. இச்சிற்பங்கள் கோயில் அருகே இருந்த புத்த விஹாரத்தில் இருந்தவையாக ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். இக்கோயிலின் அருகே உட்கார்ந்த நிலையில் உள்ள அழகான சிலை ஒன்று இருந்தது, தியான நிலையில் பத்மாசனத்துடன் காணப்படும் இப்புத்தர் சிலை காண வேண்டிய சிற்பமாகும்.

காமாட்சி அம்மன் ஆலய பிரகாரத்தில் நின்ற கோலத்தில் எட்டு அடி உயரமுள்ள புத்தர் சிலை இருந்தது. கைகள் பின்னமடைந்துள்ளன. மேலும் தலையற்ற சிலை. புத்த சிற்பங்களும்

Koviloor Digital Library



இருந்தன என்று கூறுகின்றனர் இவ்வூர் மக்கள். இந்த விதமாக காஞ்சிபுரத்தில் பல புத்த சிலைகள் பூமியிலிருந்து வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளன.

ஜைன மதமும் பௌத்தத்திற்கு இணையாக காஞ்சியில் புகழுடன் இருந்தது. 24 தீர்த்தங்கரர்கள் உள்ள மதம். அவர்களுள் ஒருவரான எட்டாவது தீர்த்தங்கரருக்கு திருப்பதிக் குன்றத்தில் ஒரு ஆலயம் இருக்கிறது. அவருடைய பெயர் 'சந்திரபிரபா'. கோயிலின் தோற்றம் சிவவிஷ்ணு ஆலயங்களைப் போல் காணப்படும். கி.பி. 700 ஆண்டில் உருவான ஆலயம். இங்குள்ள ஜைன மூர்த்தங்கள் மிக அழகுடையவை. வர்த்தமானர் கோயிலுக்கு இருபுறமும் இரு ஆலயங்கள் உள்ளன. ஒன்று 'புஷ்பதந்தருக்காகவும் மற்றொன்று தர்மா தேவிக்காகவும் உள்ளன.

ஜைன கோயிலின் சஞ்சித மண்டபத்தின் விதானத்தில் அழகான ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. இவ்வோவியங்கள் விஜய நகர காலத்தைச் சேர்ந்தவை. ஜைன மத தீர்த்தங்கரர்களான மூன்று பேர்களுடைய வாழ்க்கை சித்தரிக்கப்பட்டுள்ளன. அவர்கள் வர்தமானர், ரிஷப தேவர், நேமிநாதர் ஆவர்.

ஆக காஞ்சிபுரத்தில் பல்லவ, சோழ, விஜயநகர ஆட்சியும், மதங்களில் பௌத்தம் ஜைனம், இந்து போன்றவை எல்லாம் சிறப்பாகவே விளங்கின.

பல்லவ கலைகளுக்கு மாமல்லபுரமும், காஞ்சிபுரமும் இரு கண்களாகத் திகழ்ந்தன.

விரிவாக எழுத வேண்டிய நகரம் காஞ்சிபுரம். இங்கு வாசகர்களுக்கு ஓரளவுக்கு பல்லவ காலத்து சிற்பக்கலைப்பற்றி விளக்கப்பட்டது.

Koviloor Digital Library


அவர்களது சிற்பங்களைப் பற்றி எழுதும்போது, அவர்களது வரலாறையும் தெரிந்து கொள்ள வேண்டியதாகிறது. பொதுவாக தமிழகத்து கோயில்கள் எல்லாமே கலைகள் மட்டுமின்றி வரலாற்று கருவூலங்களாக விளங்குகின்றன.

ஸ்ரீவைகுணடம பாறைச ச'றபம – நனற', ஆனநதவ'கடன.

Koviloor Digital Library

# 17. நாயக்கர்

கி.பி. 1600 க்கு மேல் விஜய நகர ஆட்சி வீழ்ந்த பின்னர் அவர்களின் பிரதிநிதிகளான நாயக்கர்கள் பாண்டியர்களைப் போன்று கோயில்களை பெரிதாக்கினார்கள். இக்காலத்தில் கோபுரங்கள் அமைக்கும் கலை மிக உன்னத நிலையை அடைந்தது. சிற்பங்கள் நிறைந்த மண்டபங்களும் அதிகமாகத் தோன்றின.



கிருஷ்ணாபுரம்

ஸ்ரீரங்கத்தில் சுமார் பத்து திருச்சுற்றுகள் உள்ளன. நாயகர் காலத்து கோயில்களை மதுரை, ராமேஸ்வரம், ஸ்ரீரங்கம், திருநெல்வேலி, தென்காசி, ஸ்ரீ வில்லிபுத்தூர் முதலிய இடங்களில் காணலாம். இங்கெல்லாம் சிற்பங்கள் நிரம்ப உள்ளன.

Koviloor Digital Library



மதுரை மீனாட்சி அம்மன் கோயில் மிகவும் புகழ் வாய்ந்தது. இங்குள்ள நான்கு கோபுரங்களும் மேலே செல்லச் செல்ல நேராக செல்லாமல், குவிந்த அமைப்புடன் கண்கவர் வனப்புடன் திகழ்கின்றன. திருமலை நாயக்கர் அமைத்த வசந்த மண்டபமும், ஆயிரம்கால் மண்டபமும் நாயக்கரின் கலைச் சிறப்பு வாய்ந்தவை.

பல தூண்களை உடைய ராமேஸ்வரம் கோயிலின் திருச்சுற்று மிகப் புகழ்வாய்ந்த அமைப்புடையது. நாயக்கர் கால கட்டிடக் கலைக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. சேதுபதிகளின் திருப்பணிகளும் இங்கு புகழ்பெற்றவை.

## பாண்டிய நாட்டுக் கோயில்கள்

சிதம்பரம் கோயிலின் கோபுரம் 13ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பட்ட பாண்டிய நாட்டு கலைப்படைப்பாகும்.

## திருபரங்குன்றம்

மதுரைக்கு அருகேயுள்ள திருபரங்குன்றத்தில் உள்ள குகைக்கோயிலில் பல அழகிய பாண்டியரின் சிற்பங்கள் உள்ளன. சுப்பிரமணியர் குகை, இங்கு சிவபெருமானின் நடனமும், அருகே நின்ற கோலத்தில் உள்ள பார்வதி தேவியின் அழகான உருவமும், நரசிம்ம சிற்பமும், வராஹ சிற்பமும் அநந்தன் என்ற பாம்பின் மீது அமர்ந்துள்ள திருமால் சிற்பமும் மிக அழகான சிற்பப்படைப்புகள். முற்கால பாண்டியர்காலம்.

## திருவெள்ளாறை

குகைக்கோயில், சிவபெருமாள் சிற்பம் கொண்ட குகை.

பிள்ளையார்பட்டி குகைக்கோயில் மிகவும் பிரம்மாண்டமான குகை. இங்கு கணபதிக்கு இரு கரங்கள். பலருக்கு குல தெய்வமாக

Koviloor Digital Library



விளங்கி வருகிறார். சிற்ப அமைதியும் அழகுமுடையது பெரிய புடைச் சிற்பம்.

பிரான்மலை இங்குள்ள கல்யாண சுந்தரரின் செப்புத்திருமேனி மிக அழகுடையது.

## நாயக்கர் காலம்

விஜய நகர அரசுக்குப் பின் நாயக்கர் ஆட்சி தமிழகத்தில் ஏற்பட்டது. (1565) தஞ்சை, மதுரை, செஞ்சி, வேலூர், போன்ற இடங்களில் உள்ள நேர்த்தியான சிற்பங்கள் நாயக்கர் காலத்தவை. தஞ்சை நாயக்கர், மதுரை நாயக்கர், செஞ்சி நாயக்கர்கள் புகழ்பெற்ற அரசர்கள் ஆவர்.

பொம்மி நாயக்கரால் உருவாக்கப்பட்ட வேலூர் ஜலகண்டேசுவரர் ஆலய கல்யாண மண்டப சிற்பத்தூண்கள் புகழ்பெற்றவை. ஒவ்வொரு தூணும் எழில் மிக்க பல சிறு சிற்பங்கள் கொண்டது. விதானத்தில் காணும் வேலைப்பாடு மனத்தைக் கவரக்கூடியது.

செஞ்சி வெங்கடரமணர் ஆலயம், தஞ்சை பெரிய கோயில் உள்ளே பிரகாரத்தில் அமைக்கப்பட்ட சுப்பிரமணியர் கோயில் எல்லா பக்கங்களிலும், படிகட்டுகளிலும் சிற்பமயந்தான். நுண்ணிய வேலைப்பாடுகளுடன் கூடிய இக்கோயிலை அவசியம் பார்க்கவேண்டும்.

தருமபுரி அருகேயுள்ள அதியமான் கோட்டை என்ற இடத்தில் உள்ள சென்னராயர் கோயில் சிற்பங்களும் எழிலுடையவை.

நாயக்கர் காலத்தில் சிற்ப, கட்டிடங்கள் பற்றிய சிற்ப நூல்கள் நிரம்ப உள்ளன. இன்றும் அந்நூல்களைப் பயன்படுத்தி கோயில் கட்டி வருகிறார்கள்.

Koviloor Digital Library



பாண்டியர் (கி.பி 700–750) காலத்து மலைக்கோயில் நாமக்கல் என்ற தலத்தில் சிறப்புடன் விளங்குகிறது. வைகுண்ட நாராயணன் கோயில். இங்குள்ள நரசிம்ம சுவாமி உருவிலும் பெரிது, சிற்பத்திறனும் அழகுள்ளது. கோயிலுக்கு எதிரே நின்ற நிலையில் உள்ள ஹனுமான் சிற்பம் மிகப் புகழ்பெற்ற கலைப்படைப்பு. இன்றும் மக்கள் வந்து இங்கு ஹனுமானை வழிபட்டுச் செல்கிறார்கள்.

புதுக்கோட்டை அருகேயுள்ள திருமெய்யம் என்ற தலத்தில் குகை கோயில் இருக்கிறது. பாண்டியர் காலத்தது. சத்திய கிரீஸ்வரர் குகைக் கோயில் உள்ள துவாரபாலகர் புடைச்சிற்பம் மிக அழகுள்ளது. பல்லவர் படைப்பை ஒத்துள்ளது.

இன்னும் சில ஆலயங்கள் பாண்டியர் காலத்தவை. அவை, மதுரை, திருவாப்பனூர் திருப்பரங்குன்றம், திருவேங்கடம், திருக்கொடு குன்றம், திருப்பத்தூர், திருப்புனைவாயில், ராமேஸ்வரம், திருவாடானை, திருப்புவனம், திருச்சுழியல் குற்றாலநாதர் கோயில் (குற்றாலம்) திருநெல்வேலி போன்ற ஊர்கள் முக்கியமானவை.

தலைக்கோட்டைப் போருக்குப் பிறகு விஜயநகர பேரரசின் ஆட்சி நலிவுறத் தொடங்கியதும் அதன் சிற்றரசர்கள் சுயாட்சி நிறுவினர். கலைக்கு அளித்த ஆதரவில், மதுரையில் திருமலை நாயக்கர் புகழ்பெற்றார். அவரால் கட்டப்பட்ட பெரிய கோபுரங்களும், புதுமண்டபமும் (வசந்த மண்டபம்) மிகப் புகழ்பெற்றவை. இதுபோல தஞ்சை ரகுநாத நாயக்கர், தஞ்சாவூரிலும் கும்கோணத்திலும் முதல் தரமான கலை வடிவங்களை அமைத்தார். மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயிலும், அழகர் கோயிலும், தென்காசி, சங்கர நாயனார் கோயில், பேரூர் மற்றும் பல இடங்களில் உள்ள ஆலயங்களிலும் நாயக்கர் காலத்து சிற்பத்திருமேனிகளை அமைத்து புகழ்பெற்றனர் நாயக்க மன்னர்கள்.

Koviloor Digital Library



தஞ்சை பெரிய கோயிலுள் காணப்படும் சுப்பிரமணியர் ஆலயம் நாயக்கர் காலத்து கோயிலாகும். நுணுக்கமான வேலைப்பாடுகளுடன் உள்ள அழகான ஆலயம். பெரிய கோயிலுள் காணும் சோழர்காலத்து ஓவியங்கள் மீது நாயக்கர்கால ஓவியங்கள் தீட்டப்பட்டன. தமிழகத்தில் நாயக்கர் கால சிற்பங்கள் பெரியவை. அழகுள்ளவை, புகழ்பெற்றவை. இனி சேரர் நாட்டுக்குச் செல்வோம்.



மதுரை – பாண்டியர் சிற்பம்

Koviloor Digital Library

# 18. சேர நாட்டுச் சிற்பக்கலை

சேரர் நாடு நல்லவளமும், சிறந்த கலைச் செல்வங்களுமுடைய நாடு. இன்று கேரளா என்று கூறப்படும் இந்நாடு அரபிக் கடலோரமாக 555 கி. மீட்டர் தொலைவுக்கு தெற்கிலிருந்து வடக்கே வரை உள்ள நிலப்பரப்பில் நீண்டு குறுகலாக உள்ளது. அதிகப்படியான அகலம் உள்ள நிலபரப்பு 120 கி. மீட்டராகும். மலபார் என்றும் அழைக்கப்பட்ட சேரநாடு, தமிழில் 'மலைநாடு' என்று அழைக்கப்படுகிறது. 'மலையாழம்' என்ற மலையாள சொல்லுக்கு, மலை என்றும் ஆழம் என்ற பதம் ஆழத்தைக் குறிக்கும் சொல்லாக உள்ளது. மலைகள் நிறைந்த நாடு என்று பொருளுடையது 'மலையாழம்' (மலையாளம்).

முன்பு கேரளா என்று அழைக்கப்படும் பகுதியை முன்பு சேரர்கள் ஆண்டு வந்தனர். அங்கு காணும் குன்று ஒன்றில் அசோகனது கல்வெட்டு உள்ளது. அதில் 'கேரளபுத்ரா' என்ற குறிப்புடன், சோழர்கள், பாண்டியர்கள், சத்தியபுத்ரா (கொங்கு நாட்டு அதியமான்கள் என்றும் கூறலாம்) இவர்களைப்பற்றிய குறிப்புகளும் உள்ளன. கொங்கு நாடும், மௌரிய அரசின் எல்லைகளாக உள்ள நாடு சேரநாடு. ரோமநாட்டுடன் வாணிகத் தொடர்பு உண்டு. திருச்சூர் மாவட்டதில் உள்ள திருச்சூர் நகர கடற்கரையில் பல வணிக கப்பல்கள் வந்து போகும்.

Koviloor Digital Library


தமிழ் இலக்கியங்களில் கேரளாவை 'சேரர் நாடு' என்று குறிக்கப்பட்டுள்ளது. சோழர்களுடனும், பாண்டியருடனும் தொடர்பு கொண்டவர்கள் சேர மன்னர்கள். மூன்றாம் நூற்றாண்டில்தான் தமிழ் இலக்கியங்களில் சேரர்களைப் பற்றிய விவரம் உள்ளது. கி.பி. 130ல் உதியன் சேரன்தான் சேர நாட்டை தோற்றுவித்தவன். அதுசமயம் ரோமருடன் வாணிபம் செழித்து வளர்ந்தது. அதன் மூலமாக சேரநாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி பெற்றது.

சேரர்கள் ஒரு சமயம் கரூரை தலைநகராகக் கொண்ட கொங்கு நாட்டை தங்கள் அரசுடன் இணைத்துக் கொண்டார்கள். கொங்கு நாடு என்பது இன்றைய சேலம், கோயம்புத்தூர் மாவட்டங்களுடன் சேர்ந்த பகுதியாகும். இன்றைய கரூர் அன்றைய 'வஞ்சி' என்று அழைக்கப்பட்டது.

கொடுங்களூர் அருகே திருவஞ்சிக் குளம் என்ற ஊர் பிரபலமான வரலாறு பெற்ற தலம். முந்திய சேரர் ஏதோ ஒரு மலை குகைப் பகுதியிலிருந்து வந்தவர்கள் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இப்பகுதி புகலூர் (கரூர் அருகே உள்ளது) என்னும் இடத்தில் உள்ளது. சேரர் நாட்டில் உள்ள குகைக் கோயில்கள் இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை எனச் சில கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இக்கல்வெட்டுகள் சேர அரசர்களான மூன்று பேர்களை குறிப்பிடுகின்றன. 'கோ ஆதன் சேரல் இரும்பொறை, பெருங் கடுங்கோன், இளங்கடுங்கோன், இம்மூவரும் புகழ்பெற்ற சேர அரசர்கள் ஆவர்.

4ஆம் நூற்றாண்டிலிருந்து எட்டாம் நூற்றாண்டின் இறுதிவரை சேரர்களைப்பற்றி அதிக விவரங்கள் தெரியவில்லை. அப்போது களப்பிரர்களின் ஆட்சி இங்கு நீடித்து உள்ளது என்று ஆய்வாளர்களின் கருத்தாகும்.

Koviloor Digital Library


சேரர்கள் கி.பி. 800ல் குலசேகர வர்மனின் ஆட்சியின் கீழ் இருந்தார்கள். இந்த அரசனே பின்னால் 'குலசேகர ஆழ்வார்' என்று அழைக்கப்பட்ட வைணவப் பெரியார் ஆவார். 'மஹோதயபுரம்' அல்லது திருவஞ்சிக்குளம் என்றழைக்கும் ஊர் குலசேகரனின் தலைநகராக விளங்கிற்று. இவனது 20 ஆண்டுகால ஆட்சிக்குப்பிறகு ராஜசேகர வர்மன் ஆண்டான். இவன் ஒரு சிவபக்தன் என்பதை ஒரு கல்வெட்டு தெரிவிக்கிறது. சேரமான் பெருமாள் நாயனர் என்று அழைக்கப்படுபவன் இவனேயாகும். குலசேகர பெருமானும், ராஜசேகர பெருமானும் அத்வைதப்பிரிவை சேர்ந்தவர்கள். சங்கரரால் அத்வைத பிரிவு ஏற்படுத்தப்பட்டது என்று யாவரும் அறிவர். ஏறக்குறைய பன்னிரண்டு சேர அரசர்கள் கி.பி. 1102வரை கேரளாவை ஆண்டு வந்ததாகத் தெரிகிறது.

சேரர்களின் அரசியல் சோழர்களுடன் போர். விஜயாலயச் சோழன் முதன்மையானவனாக இருந்தான். முன்பு சோழர்களுடன் ஒற்றுமையாக இருந்த சேரன் தன் மகளை முதலாம் பராந்தகனுக்கு (907–55) மணம் செய்து வைத்தான். முதலாம் பராந்தகன் முதலாம் ஆதித்தனின் மகனாவான். வெளிநாட்டு வாணிகம் சேரர் காலத்தில் ஓங்கி இருந்ததால் சேர நாட்டை தன் வசமாக்கிக் கொள்ள நினைத்தனர் சோழர்கள். ஆனால் முதலாம் ராஜர்ாஜனுக்கு சேரர்களுக்கு எதிராக இருப்பதற்கு போதிய அவகாசம் கிடைக்கவில்லை.

சோழர்களுடன் அடிக்கடி சேரர் போரிட்டுவந்தனர். குலசேகரன் காலத்துவரை இந்த தொல்லை சேரர்களுக்கு இருந்து வந்தது. சேரன் தலைநகர் திருவஞ்சைக்களம் கொல்லத்திற்கு மாற்றப்பட்டது. பிறகு சேரன் அரசு கொஞ்சம் கொஞ்சமாக பல பேர்களுடன் போர்கள் நடத்தியதால் அழிவு நிலையை அடைந்தது. கேரளாவில் கொச்சி அரசு ஏற்பட்டது. சமோரியன் (டச்சு) ஆட்சியில்

Koviloor Digital Library


சிறிது கொச்சி இருந்தது. பிறகு அயல் நாட்டவரான போர்ச்சுகீயர்கள் வந்து தங்களது வாணிபத்தையும், ஆட்சியையும் அமைத்துக்கொண்டனர். திருவாங்கூர் என்று பெயர் சேரநாட்டுக்கு வந்தது. திருவாங்கூர் மன்னர்கள் சேர நாடான கேரளாவை ஆண்டு வந்தனர். இப்படியாக சேரநாட்டு வரலாறு அமைந்தது கேரளாவிலே.

இனி சேரர்களில் சிற்ப, கட்டிடக் கலைகளைப்பற்றி தெரிந்துகொள்வோம். ஒரு நாட்டு வரலாற்றை ஓரளவாவது தெரிந்து கொண்டால்தான் அவர்களது கலைப் படைப்புகளையும் நன்கு அறிந்துகொள்ள முடியும் எல்லா நாட்டு வரலாறுகளையும் இங்கு சுருக்கமாகவே எழுதப்பட்டு வருகிறது.

கேரள மாநிலத்தில் கற்காலச் சின்னங்கள் உள்ளன. ஈமச்சடங்குகளின் சின்னங்கள் ஆங்காங்கு கிடைத்துள்ளன. பௌத்த மதச் சின்னங்களும், புத்தர், ஜைன சிலைகளும் பல இடங்களில் உள்ளன. எல்லாம் 9–10 நூற்றாண்டைச் சேர்ந்தவை. கன்யாக்குமரிக்கருகே உள்ள 'திருச்சரான் நாட்டு மலை' என்னுமிடத்தில் தீர்த்தங்கரர்களின் சிலைகள் உள்ளன. எர்ணாகுளம் அருகேயுள்ள 'பெரும்பாவூர்' என்னும் ஊரின் அருகே 'கள்ளில்' என்ற இடத்தில் உள்ள குகையில் மகாவீரரின் சிற்பம் உள்ளது. பின் காலத்தில் இக்கோயில் பகவதி கோயிலாக மாறியது. திருச்சூர் அருங்காட்சியகத்தில் சில ஜைன சிலைகளைக் காணலாம்.

குகைக்கோயிலை அமைக்க பல்லவர்காலத்து குகைகளின் அமைப்பை சேரர்கள் எடுத்துக்கொண்டார்கள். சிவபெருமானுக்குரிய குகைகள் தான் அதிகம். ஒரே ஒரு குகை விஷ்ணுவிற்காக உள்ளது. தென்பக்கத்து சேரநாட்டில் 'ஆயர்' பகுதியில் சில குகைகளும், மற்றவை வட பகுதியிலும் உள்ளன. கோட்டக்கல், ஆயூப்பாரா,

Koviloor Digital Library



கவியூர் என்ற இடங்களிலும், கன்யாகுமரி மாவட்டதில் உள்ள திருநந்திக் கரை, பூதப்பாண்டி, துவரங்காடு, சிவகிரி, அழகிய பாண்டியபுரம், இங்குள்ள குகைகள் தென்புறத்துக் குகைகளாகும்.

கவியூர் குகைமட்டும்தான் முற்றுபெற்ற அழகான குகையாகும். உள்ளே லிங்கம் உள்ளது, அர்த்த மண்டபம், தூண்கள் அமைந்த கூடம் கூடிய குகையாகும். அர்த்தமண்டபத்து சுவர்களில், குகைக்கு மானியம் அளித்த தலைவனின் சிற்பம், ஒரு ரிஷி நான்கு கரங்களுடன் காணும் கணபதி, மற்றும் துவாரபாலகர்களுடன் விளங்குகிறது. சிற்ப அமைதியைக் காணும்போது பாண்டியர் சிற்பங்களைப் போன்று உள்ளது. சேரர்கள் தமிழகத்து அரசரான சோழர் பல்லவர், பாண்டியர், போன்ற சிற்பக்கலைகளை பின்பற்றினர்.

திருநத்திக் கரை குகைக்கோயில் திருப்பரங்குன்றம், திருமயம் குகைக்கோயிலை ஒத்திருக்கிறது.

நீண்ட சதுர வடிவில், படிகட்டுகளுடன், கிழக்குப் பார்த்து, அர்த்த மண்டபத்துடனும், தூண்களுடைய குகைக்கோயில் பல கல்வெட்டுகள் தூண்களில் பொறிக்கப்பெற்றுள்ளன. எட்டாம் நூற்றாண்டை சேர்ந்த கல்வெட்டுகள். பாண்டியர் குகைகளைப் போன்ற அமைப்பு.

தெற்குப் பகுதியில் உள்ள குகைக் கோவில்களில் ' விளிஞம்' (கோட்டுகல்) என்னும் இடத்திலுள்ளது. சிவபார்வதி சிற்பங்கள் முடிக்கப்பெறாத சிற்பங்கள். வீணாதர தக்ஷிணாமூர்த்தி சிற்பம் தனி சிலையாக உள்ளது. இக்குகை பல்லவ காலத்து குகை போன்ற சாயலில் காணப்படுகிறது. சிவபெருமானின் சிறப்பு பாண்டியர் காலத்து சிற்பம் போன்று காணப்படுகிறது. குகைகள் எல்லாமே சிவமயமானவை. இந்த தென்புறத்து குகைகள் எல்லாம் குலசேகரர் காலத்தைச் சேர்ந்தவை.

Koviloor Digital Library



சேரர்கள் எல்லோரும் விஷ்ணு, ஸ்கந்தர், கொற்றவை (துர்கை) போன்ற தெய்வங்களை வழிபட்டு வந்தனர். பகவதி ஆலயங்கள் நிரம்ப உள்ளன. கூரை இல்லா சில ஆலயங்கள் துர்கைக்குத்தான் அதிகமாக உள்ளன. சங்ககாலத்திலிருந்தே இங்கும் கொற்றவை வழிபாடு இருந்து வருகிறது. குருவாயூருக்கு அருகே கூரை இல்லாத கோயில் ஒன்றில் துர்க்கை அல்லது பகவதி கோயில் கொண்டுள்ளாள்.

குல சேகரரால் உருவாக்கப்பட்ட கோயில் திருவஞ்சிக்குளம் ஆலயம் புகழ்பெற்ற ஆலயம். 11ஆம் நூற்றாண்டு கல்வெட்டுகள் கோயிலின் நுழைவாயிலில் உள்ளன.

கேரளா கோயில்கள் உள்ள மாநிலம், தமிழகத்து கோயில்களை பின்பற்றி எழுந்த கோயில்களும் உண்டு. ஆனால் கேரளநாட்டு, அதாவது சேரர்களது கோயில்கள் பல தனித்தன்மையுடன் விளங்குகிறது. சதுர வடிவிலும், வட்ட வடிவிலும் அமைந்த கோயில்கள் பல உண்டு சில ஆலயங்களில் உயரமான கொடிக் கம்பமும், பலி பீடமும் உள்ளன. நமஸ்கார மண்டபம் பல கோயில்களில் உள்ளன. இறைவனை காலாற வணங்கிச் செல்ல இம்மண்டபங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

நான்கு தூண்களுடைய பெரிய சதுர மண்டபங்களை 'நாலம்பலம்' என்று கூறுகின்றனர். கொடுங்களூர் பகவதி அம்மன் கோயில், சோற்றாணிக்கரை பகவதி கோயில் இரண்டும் புகழ்பெற்ற சேரன்காலத்து சத்தி கோயில்கள். கன்யாகுமாரி மாவட்டதில் உள்ள பார்வதி புரம் என்ற ஊரில் உள்ள பார்த்தசாரதி கோயில், புகழ்பெற்ற கோயில். ஆய் அரசர் கருணானந்தகனால் கட்டப்பட்டது. திருவனந்தபுரத்திலுள்ள வலியசாலை,' காந்தளூர் சாலையில் உள்ள ஆலய அமைப்பில் உள்ளது. இரிஞ்சாலகுடா என்னும் ஊரில் உள்ள

Koviloor Digital Library


'பரதர் கோயில்' பெரிய கோயிலாகும். திருச்சூர் மாவட்டத்தில் உள்ள பெருவானம் சிவன் கோயில் வட்ட வடிவமைப்பில் உள்ள அழகான கோயில் 11–12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கோயில். இதே மாவட்டத்தில் புகழ்பெற்ற திருப்பறையார் ராமர் கோயிலும் வட்ட வடிவில் அமைந்த அழகான ஆலயம்.

யானை முதுகு அல்லது பின்புறம் (கஜபிருஷ்டாகாரம்) போன்ற அமைப்புடன் கிழ வெல்லூர் என்ற இடத்தில் வாமனர் கோயில் உள்ளது. ராஜசிம்மன் சேர அரசுகட்டிலில் அமர்ந்தபோது (1028–43) உருவான கோயில்.

திருச்சூர் வடக்குநாதன் கோயில் மிகப் புகழ்பெற்ற கோயில் ஆடிப்பூரவிழா மிகவும் விசேஷமாக நடக்கும். இங்கு ஒரு நடன அரங்கம் பெரிதாக உள்ளது. வடக்குநாதர் அல்லது தென்கைலாச நாதர் என்னும் பெயர். இக்கோயிலில் உள்ள சிவபெருமானுக்குப் பெயர். சங்கரநாராயணர் கோயிலும் (7ம் நூற்றாண்டு) இக்கோயில் வளாகத்தில உள்ளது. 10 சிறு ஆலயங்களைக் கொண்ட கோயில் இது. இங்கு ஐயப்பனுக்கும் ஒரு ஆலயம் உண்டு. நடன அரங்கத்திற்கு கூத்தம்பலம்' என்று பெயர். பெரிய ஆலயங்களாக சுசீந்திரம் தாணுமாலேஸ்வரர் ஆலயம், திருவனந்தபுரம் பத்மநாபர் கோயில் எல்லாம் திராவிட கோயில் கலையை பின்பற்றி எழுந்த சேரர்காலத்து கோயில்கள் ஆகும். திருவட்டாறு என்னும் இடத்தில் ஆதிகேசவபெருமாள் பெரிய அளவில் உள்ளது. வைக்கம் சிவன்கோயில் வர்கலா வில் உள்ள ஜனார்த்தனன் கோயில்கள் புகழ்பெற்ற சேரர்காலத்து ஆலயங்கள்.

சேர கட்டிட கலைக்கு எடுத்துக்காட்டாக பத்மநாபபுரம் அரண்மனை, கொச்சியில் உள்ள மட்டஞ்சேரி அரண்மனை. இங்கு மர வேலைப்பாடுகள் அதிகம் உள்ளன. கேரள கேயில்களில் மர வேலைப்பாடுகள் நிறைந்த சிற்பங்கள் நிறைய இருக்கின்றன.

Koviloor Digital Library



குகைக்கோயில்களில் புடை சிற்பங்கள் மாமல்லபுரம் போல் காணப்படுகின்றன. பாண்டிய சிற்பங்களையும், பல்லவ சிற்பங்களையும் போன்று உள்ளன. கி.பி 11ஆம் 12ஆம் நூற்றாண்டில் சோழர் காலத்து கலை அமைப்பு இங்குள்ள கோயில்களில் நுழைந்தது. கிடங்கூர் ஆலயமும், திருவிக்கிரம மங்கலம் (திருவனந்தபுரம் அருகில் உள்ளது) ஆலயமும் மற்றும் சில கோயில்களும் சோழர்பாணியில் அமைந்த ஆலயங்களாகும். சிற்பங்கள் பல விஜய நகரம், நாயக்கர் காலத்து சிற்பங்களை ஒத்துள்ளன. சேரர்கள் ஹோய்சாளர்களிடமிருந்தும் கலையம்சத்தை பெற்று ஆலயங்கள் அமைத்தனர். திருவனந்தபுரத்து அருங்காட்சியகத்தில் பல சேரநாட்டு செப்புத்திருமேனிகளை கண்டு களிக்கலாம்.

கேரளா மரச்சிற்பங்கள் மிக அழகுடையவை. மரச்சிற்பங்கள் இல்லாத ஆலயங்களே இல்லை எனலாம். கோயில்களில் மண்டப விதானங்களிலும் நுணுக்கமான மரவேலைப்பாடுகளைக் காணலாம். மேலே கூறிய ஆலயங்களில் மரச்சிற்ப வேலைப்பாடுகள் அதிகம்.

பொதுவாக ஆலயங்களில் தமிழக ஆலயங்களில் உள்ள சிற்ப அமைதியை பின்பற்றி அவர்களது சிற்பங்களை அமைத்தனர். இதனால் தமிழகம் பெருமை அடைகிறது. அவர்களும் பெருமை பெறுகிறார்கள்.

கேரளாவில் இந்து சமயத்துக்கு ஈடாக கிருத்துவ மதமும் உள்ளது. அதனால் அம்மாநிலத்தில் கிருத்தவ ஆலயங்கள் அதிகமாக உள்ளன. அடுத்து மசூதிகளும் உண்டு. இவ்வாலயங்களில் சிற்பச் சிறப்பு இல்லாவிடினும் கட்டிட அமைப்புகள் அழகாகவும் சிறப்பாகவும் உள்ளன.

Koviloor Digital Library



திருவனந்தபுரம், வர்க்கலை, திருநந்திக்கரை, கொல்லம், கொச்சி, போன்ற பல இடங்கள் உள்ளன. உங்களுக்கு சமயம் கிட்டும் போது நேரில் சென்று சேரர்களது கலை படைப்புகளை கண்டு களிக்கலாம்.

இதுவரை மோஹஞ்சதாரோவிலிருந்து கன்யாகுமரி வரை உள்ள பல மாநில கலைப்படைப்புகளைப்பற்றியும், வரலாற்றையும் எழுதிவந்தேன். இன்னும் எழுத வேண்டிய சிற்பக்களஞ்சியங்கள் இருக்கின்றன..

இப்போது விடுபட்டுப்போன சில முக்கியமான சிற்பங்களை கொண்ட ஊர்களை பட்டியலிட்டு, சுருக்கமாக எழுத உள்ளேன்.



நாகராஜன் கோயில் – கேரள கட்டிட அமைபபு

Koviloor Digital Library

# 19. எழுத விடுபட்ட கலைக் கூடங்கள்

பாரத நாட்டு கலைக்கோயில்கள் ஏராளமாக உள்ளன. அவற்றுள் முக்கியமான கலைக்கூடங்களைப்பற்றி எழுதப்பட்டுள்ளது. முழுமையாகவும் விரிவாகவும் எழுத முன்னே எழுதியபடி பல பாகங்கள் கொண்ட நூல்களாக ஆகிவிடும். இருப்பினும் இங்கு இன்னும் சில முக்கிய கலைக்கூடங்களைப்பற்றி எழுதப்படுகிறது.

அபு ஆலயங்களின் அற்புதச் சிற்பங்கள் – தில்வாரா ஜைன ஆலயங்கள்.

ராஜஸ்தானின் சுகவாசஸ்தலாகவும் உள்ளது அபுமலை. அங்குள்ள ஜைன ஆலய சிற்பங்கள் எழிலை எழுத்தில் வடிக்கமுடியாது. அகமதாபாத்திலிருந்து அபு மலையை அடையலாம். இங்குள்ள கல்வெட்டுப்படி ஒருகாலத்து இந்து ஆலயங்களாக இருந்ததாகத் தெரிகிறது. கி.பி. 1030ல் ஆதிநாதர் தீர்த்தங்கரருக்காக ஏற்பட்ட ஆலயம் சிற்பச் சிறப்புடையது. இங்கு எல்லா ஆலயங்களுமே சிற்பக் கூடங்கள் தாம். ஆலயத்தின் விதானப்பகுதியை மட்டும் பார்க்க பலமணி நேரமாகும். கூடத்திலுள்ள தூண்களில் முழுதும் நுண்ணிய வேலைப்பாடுகளுடன் சிற்பங்கள் காணப்படுகின்றன. பெண் உருவங்களின் சிறப்பான அம்சம், அவர்களின் நிற்கும் நிலை. நேரில் காண வேண்டிய சிற்பக் களஞ்சியங்கள் அபு மலையில் உள்ளவை.

Koviloor Digital Library



## கர் லா குகைகள்

ஹீனயானா பகுதியைச் சார்ந்த பௌத்த குகைக்குள் புனே – மும்பாய் பெரும் சாலையில், லோனா வலா ஸ்டேஷனுக்கு சில கிலோமீட்டர் தூரத்தில் உள்ளன. பிரம்மாண்டமான குகைகள். பிரமிக்கும் படியான காதலர் சிற்பங்கள் மேல் விதானத்தின் அழகிய கட்டுமானம், யானை வரிசைகள், யானைமீது காதலர்கள், பலவிதமான புத்த சிலைகள் கொண்ட குகைகள். இங்குள்ள படங்கள் மூலம் அறியலாம்.

## அவுரங்காபாத் குகைகள்

அவுரங்காபாத் மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள கலைநகரம். இங்குள்ள ஒரு குன்றில் எல்லோரா, அஜந்தாப்போல, அதே காலத்தில் உருவான பௌத்தவிஹார ஆலயக் குகைகள் உள்ளன. குன்றின மீது உள்ள குகைகளை அடைய, ஏறி செல்வதற்கு கொஞ்சம் சிரமாக இருக்கும், ஆனால் அங்கு சென்றுவிட்டால் குகை சிற்ப அழகில் நாம் நம்மை மறந்துவிடுவோம். விஹாரங்கள், சைத்தியங்களுடன் விளங்குகின்றன. 7ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த குகைகள். அஜந்தா குகைகளைப் போன்றே இக்குகைகளின் அமைப்பும் உள்ளன. ஏழு பௌத்த குகைகள் உள்ளன.

## பர் குத் கலைச் சிற்பங்கள்

சாஞ்சியைப் போல் பர்ஹுத் ஸ்தூபமும் காணப்படுகிறது. அலகாபாத்திலிருந்து தென்கிழக்கில் 3 மைல் தூரத்திலுள்ள இந்த ஸ்தூபம் மௌரியர், அசோகர் காலத்தது. இந்த ஸ்தூபத்தின் சுற்றுப்புற கல்வேலிகளில் கவினுறு சிற்பங்கள் உள்ளன. புடைப்புச் சிற்பங்கள்தாம். வேலிக்குமுன் அலங்காரமான வாயில் பல

Koviloor Digital Library



சிற்பங்களுடன் திகழ்கிறது. மகான்புத்தரின் வாழ்கையிலிருந்து பல ஜாதகக் கதைகளை சித்தரிக்கின்றன இங்கு காணப்படும் சிற்பங்கள். மஹாயான பிரிவைச் சேர்ந்த பௌத்த சிற்பங்கள்.

மற்றும் நடனப் பெண்மணிகள், போதி மரத்தடியில் உள்ள புத்த பிரான், சிற்பக் கூடுகள், பல அரசசிற்பங்கள், உயர்ந்து நிற்கும் தூண்களில், மேலும் கீழுமாக அமைந்திருக்கும் ஜாதகக்கதை சிற்பங்களும் வட்டவடிவில் இருக்கும் சிற்பங்கள், யட்சர்கள், யட்சினிகள், இப்படி பலதரப்பட் உருவங்களை சிற்பவடிவில் காணலாம், இன்று எழுத நிரம்ப விஷயங்கள் உள்ளன பர்ஹூத் ஸ்தூபம் பாரத நாட்டு மற்றொரு சிற்பக் கலைக்கூடம்.

## ஆந்திராவிலுள்ள ஸ்ரீசைலம் ஆலயம்

மல்லிகார்ஜுன ஸ்வாமி கோயில் 12 ஜோதிலிங்க தலங்களில் இதுவும் ஒன்று. விஜயநகர சிற்பக் கலைப்படைப்புகள் கொண்ட ஆலயம் கிருஷ்ணா நதியோரம் ஒரு குன்றின் மீது உள்ளது. அழகான சூழ்நிலையில் இந்த ஆலயத்தில் பல சிற்பங்கள் உள்ளன.

மற்ற கோயில்களான 'மஹாநந்தி', அஹோபிலம், பத்ராசலம், சிம்மாசலம் (அழகான விமானம் உடையது) ராமப்பா கோயில் பாலம்பட்டில் உள்ளது (இக்கோயில் கி.பி. 1234ல் கட்டப்பட்டது) அழகான சிற்பங்கள் உடைய ஆலயமும், ஸ்ரீமுகலிங்கம் கோயிலும் (விமானம் நல்ல கலை படைப்பு) திராக்ஷராமா ஆலயமும் (கட்டிட கலையில் சிறப்பான ஆலயம் . இங்குள்ள பீமேஸ்வர சுவாமியின் உயரம் 6 மீட்டர் உள்ள அழகான திருமேனி) ஆந்திராவின் சிறந்த சிற்ப ஆலயங்களாகும்.

Koviloor Digital Library



# சிதம்பரம் நடராஜர் கோயில்

சிதம்பரம் நடராஜர் ஆலயம் நான்கு கோபுரங்களுடனும், நான்கு திருச்சுற்றுகளுடன் விளங்குகிறது. இவ்வாலயத்தன் நடுமையமாக 'பொன்னம்பலம்' விளங்குகிறது. இங்குதான் நடனமாடியபடி நடராஜர் திருவுருவம் கர்ப்பகிருஹ தெய்வமாக விளங்குகிறது. நடராஜனின் நடன வீச்சு ஆலயத்தை விட்டு ஆகாயத்திலும் பரவியுள்ளது. பூலோக கைலாசம் என்ற பெயரும் தில்லைக்குண்டு.

இங்குள்ள நடராஜ பெருமானை 2ஆம் நூற்றாண்டை சேர்ந்த பதஞ்சலியும், ஆதிசங்கரரும், அப்பர் பெருமானும், இன்னும் பல மகான்களும் போற்றி வணங்கியுள்ளனர். பல மண்டபங்களுடனும், அழகான குளமுடனும் திகழ்கிறது நடராஜ ஆலயம். தொன்மையான ஆலயம்.

கிழக்கு கோபுரமும், நிருத்ய மண்டபமும் இரண்டாம் குலோத்துங்கன் (கி.பி 1133 –1243) காலத்தில் கட்டப்பட்டது. கிழக்கு கோபுரத் திருப்பணிகள் (13ம் நூற்றாண்டு) கோப்பெருஞ்சிங்கனாலும், தெற்கு கோபுரம் ஒரு பல்லவ அரசனாலும், மேற்கு கோபுரம் ஜடாவர்மன் சுந்தர பாண்டியனாலும், வடக்கு கோபுரம் கிருஷ்ணதேவராயரால் கட்டப்பட்டது. ஒரிசா போரில் வெற்றி பெற்றதற்காக, அதன் வெற்றிச் சின்னமாக ராயரால் உருவான கோபுரம், ஆயிரம் கால் மண்டபம் ஒரு பெரும் கலைக்கூடமாகும். தெற்கு கோபுரந்தான் பழமையான கோபுரம். தில்லை தீட்சதர்கள் கோயில் நிர்வாகத்தை நடத்தி வருகிறார்கள்.

ஏராளமான நடன சிற்பங்கள் உள்ள ஆலயம். பரதமுனிவரின் நாட்டிய சாஸ்திரத்தை பின்பற்றி இங்குள்ள நடன சிற்பங்கள் உள்ளன.

Koviloor Digital Library



தஞ்சைபெரிய கோயிலின் உட் பிரகாரத்தில் உள்ள முதல் மேல் அடுக்கில் சிவபெருமானின், 108 கரணங்கள் கூடிய சிற்பத் தொகுதி மூன்று பக்கசுவர்களில் உள்ளன. தாராசுரத்திலுள்ள ஆலயத்திலும் நடன சிற்பங்கள் உள்ளன.

தில்லை ஆலயத்தின் தெற்கு கோபுர வாயிலினுள்ளே, 108 கரணங்களுடன் கீழே, மேலாக உள்ள வரிசைகளில் நடன பெண் மணிகளின் சிற்பங்கள் உள்ளன. ஒரு முக்கியமான கோபுரமாகும். சிவகாமி ஆலயத்தின் சுற்றுப்புற மண்டபத்தின் கீழே வரிசையாக நடன சிற்பங்கள் உள்ளன. மூன்று சிற்பங்களாக உள்ள தொகுதி, வரிசையாக காணப்படுகின்றன. தில்லை நடராஜ ஆலயத்தைப் பற்றி நிரம்ப எழுதலாம். நீங்கள் நடராஜனை தரிசித்துவிட்டு இவ்வாலய நடன சிற்பங்களையும் காணுங்கள். இவ்வாலயம் முழுதும் நடன சிற்பங்கள்தாம் .

குடந்தை சாரங்கபாணி நுழைவாயில் கோபுரத்தின் உட்பகுதியில் சில நடன சிற்பங்கள் காணப்படுகின்றன. பல சோழர்காலத்து ஆலயங்களும், விஜயநகர ஆலயங்களிலும் நடனச் சிற்பங்கள் இல்லாமல் இருக்காது.

சிதம்பரம் அருகேயுள்ள 'மேலக்கடம்பூர்' என்னும் தலத்தில் உள்ள சோழர்காலத்து கோயில் சிற்பங்கள் அழகுடையவை. ஆலயம் சிறிதாயினும் சிற்பங்கள் அதிகம் உள்ள ஆலயமாகும்.

## கிருஷ் ணாபுரம்

திருநெல்வேலியிலிருந்து கிழக்கே எட்டு மைல் தூரத்தில் திருச்செந்தூர் செல்லும் சாலையில் இந்த சிற்பக் கூடம் அமைந்துள்ளது. அமைதியான சூழ்நிலை. இங்குள்ள ஆலயத்திற்குள்ளே சென்றால் ரங்க மண்டபத்தை அடையலாம்

Koviloor Digital Library



மண்பத்தின் முகப்பில் ஆறு தூண்களில் ஆறு அற்புத, அழகிய சிற்பங்களைக் காணலாம் – வீரன் ஒருவனின் தோளில் ராஜகுமாரி அமர்ந்துள்ள அழகும், வெய்யிலை மறைக்கத் தன் முந்தானையைத் தலைக்கு மேலே விரித்திருக்கும் பண்பும், நேர்த்தியும் காண்போர் மனத்தை நிச்சயம் கவரும். பிற தூண்களில் அர்ஜுனன், கர்ணன், மற்றும் இளவரசனைச் சுமந்து நிற்கும், குறப்பெண், இரண்டு அழகான சிற்பங்களைக் காணலாம். ரங்க மண்டபத்தை கடந்து மஹாமண்டபத்திற்குள் சென்றால் கருப்பு வண்ணத்தில் உள்ள பெரும் சிற்பங்களைக் காணலாம். ரதி, மன்மதன் சிற்பங்கள், கையில் கண்ணாடி ஏந்தி அழகு பார்க்கும் பெண்சிற்பம் எல்லாம் அற்புதக் கலைப்படைப்புகள் நுண்ணிய வேலைப்பாடுகளை நேரில் கண்டு மகிழ வேண்டும்.

## ஸ்ரீ வைகுண்டம்

தாமிரவருணி ஆற்றின் வடகரையில் அழகாக அமைந்துள்ளது. இக்கோயில் மண்டபத்தில் தங்க மஞ்சத்தில் நில மகளும், திருமகளும் இருபுறமும் இருக்க கண்ணபிரான் கையில் கதையுடன் நிற்கிறார். கருவறையில் அழகிய கோலத்துடன் வைகுண்டநாதர் காட்சிதருகிறார். அகோர வீரபத்திரர் சுக்கிரசக்யம் போன்ற சிற்பங்கள் பெரிய அளவில் உள்ள அழகான சிற்பப் படைப்புகள்.

## கழுகு மலை

இங்குள்ள குன்று ஒன்றின் சரிவிலே மேலிருந்து கீழ்த்தரைவரை குடைந்த வேட்டுவன் கோயில் ஒரு சிற்ப பெட்டகம். எல்லோரா கைலாச நாதர் போன்று இக்கோயிலும் அமைந்துள்ளளது. அற்புதச் சிற்பங்களைக் கொண்ட இக்கோயிலின் அருகே ஜைன

Koviloor Digital Library



சிற்பங்களும் உள்ளன. காண வேண்டிய கலைக்கூடம், பண்டைய பாண்டியர்காலத்து கலை படைப்பு.

## திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில்

சிவபெருமானுக்கு ஒரு கோயிலும், உமையாளுக்கு ஒரு கோயிலும் சேர்ந்துள்ள பெரிய கோயில், இதைச்சுற்றி உயரமான நீண்ட மதிள்கள் அழகான கட்டிட அமைப்பு. பாண்டியர் காலத்து கோயில், ஏகப்பட்ட சிற்பங்கள். இங்குள்ள ஆறுமுகங்களுடன் காணும் முருகன் மயில் மீது அமர்ந்துள்ள சிற்பம் தனிச்சிற்பமாக பெரிய அளவில் காணப்படுகிறது. காணவேண்டிய சிற்பம்.

இப்படி இன்றும் ஆலயங்கள் சிற்ப கலைச் சிறப்போடு விளங்குகின்றன நம் பாரதநாட்டில். கூடியவரை இங்கு முக்கியமான சில கலைக்கூடங்களைப்பற்றி எழுதியிருக்கிறேன்.

ஆலயங்கள், விஹாரங்கள், கோட்டை கொத்தளங்கள், அரண்மனைகள், எல்லாம் கலையம்சத்துடன் விளங்குகின்றன. இந்நாளில் தஞ்சை பெரிய கோயிலைப் போன்று இன்னொரு கலைக்கோயிலைக் கட்டமுடியுமா?

## உத்திர மேரூர்

உத்திர மேரூர் அமைப்பையும், அது வளர்ந்த, சிறப்பையும், கல்வெட்டு மூலமும் ஆலயங்களின் வாயிலாகவும், சிற்பங்கள் மூலமாகவும் எடுத்து இயம்புகிறது இச்சிறு கட்டுரை.

பல்லவ அரசன் நந்திவர்மன் என்பவனால் முதன்முதலில் ஒரு பெரிய கிராமமாக உத்திரமேரூர் சதுர்வேதி மங்கலம் என்னும் பெயரில் 1200 வைணவ வேதம் வல்ல அந்தணர்களுக்கு தானமாக

Koviloor Digital Library



அளிக்கப்பட்ட ஊர். அம்மன்னனது 'உத்திரமேரு'- என்ற பட்டப் பெயர்களில் ஒன்று இவ்வூரின் பெயராகும்.

பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சோழப்பெரும் அரசன் பராந்தகன் காலத்தில் குடியாட்சி முறையில் ஊர்கள் ஆளப்பட்டன என்பதையும், மக்களை எவ்வாறு தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதையும், தேர்தலுக்கு நிற்பவர்களின் கல்வி, கேள்வி, ஆகிய தகுதிகள் யாவை என்பதும், தகுதியற்றவர்கள் யார் என்பதையும் விரிவாக எடுத்துக்கூறும் 'குடவோலை' முறையைப் பற்றிய மிக விரிவான கல்வெட்டு ஒன்று இங்கு உள்ளது.

எட்டாம் நூற்றாண்டில் இவ்வூர் அமைக்கப்பட்டபோது, ஆகம சாஸ்திரப்படி திட்டமிட்டு அமைக்கப்பட்டது.

விஜயநகரப் பேரரசர்கள், நாயக்கர்கள், இவர்களைப்பற்றிய வரலாறும் கிடைக்கப்பெறும் ஊர் உத்திரமேரூர்.

தொன்மையான வரலாற்றுச் சான்று கி.பி. 750 ல் ஆண்ட மன்னன் நந்தி வர்மனுடையதாகும். இவனே முதன்முதலில் அமைத்த ஊர் இதுவேயாகும்.

10ஆம் நூற்றாண்டின் முதல்பகுதயில் பராந்தக சோழனின் ஆட்சியிலும், பிற்பகுதியில் பார்த்திவேந்திரன் ஆட்சியிலும், உத்திரமேரூர், உன்னத நிலையை அடைந்தது.

14ஆம் நூற்றாண்டின் இறுதியில் அருணகிரிநாதர் இவ்வூர் முருக பிரானைப் போற்றி பாடியுள்ளார். இவ்வூரை மேரு மங்கை எனப் பாடியுள்ளார்.

16ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் விஜயநகரப்பேரரசர் கிருஷ்ணதேவராயர் இவ்வூருக்கு, வருகைதந்ததுள்ளார். அவர்

Koviloor Digital Library



இங்குள்ள சுந்தரவரதர், சுப்ரமண்யர், கைலாசநாதர் ஆலயங்களுக்கு தானங்கள் அளித்ததாக கல்வெட்டு செய்தி கூகிறது.

## சுந்தரவரதராஜ பெருமாள் கோயில்

உத்தரமேரூருக்கு நடுநாயகமாகத் திகழ்கிறது இந்த கோயில். இக்கோயிலுக்கு தொன்மையான பெயர், ஸ்ரீவேலி விஷ்ணுக்ரஹம்' என்பதாகும். கீழ்த்தளம், நடுத்தளம், மேல்தளம் என மூன்று தளங்கள் கொண்டதாக உள்ள கோயில். அதாவது ஒன்றின் மேல் ஒன்றாக மூன்று கருவறைகளைக் கொண்டது. கீழ்த்தளத்தில் நின்ற திருக்கோலமும், நடுவில் அமர்ந்த திருக்கோலமும், மேல்தளத்தில் கிடந்த கோலத்தில்திருமால் விளங்குகிறார்.

மேல் தளத்தில் அனந்த சயனமாக கொண்ட திருமால், கீழ்த்தளத்தில் நான்கு, நடுத்தளத்தில் நான்கு, மேல் தளத்தில் ஒன்று என மொத்தம் ஒன்பது திருமால் மூர்த்தங்கள் உள்ளன. கலைஅழகுடன் விளங்கும் இம்மூாத்திகளை நவமூர்த்தி பிரதிஷ்டை என அழைப்பர். மேல் தளத்திற்குச் செல்ல படிக்கட்டுகள் உள்ளன. தெற்கு கைப்பிடிச்சுவரில் சரஸ்வதியின் உருவம் 'கஜலட்சுமி' போன்று காணப்பட்டாலும், மேலிருகைகளில் கலசமும், மாலையும், இடது கரத்தில் புத்தகமும், வலதுகரம் அபயவரஹஸ்தமாகக் காணப்படுவதால் இச்சிற்பம் கஜலட்சுமி அல்ல, கலைமகள் சிற்பம்தான். மேற்குபுறப்படி சுவற்றில் ரதியும் மன்மதனும் நின்ற கோலத்தில் காணப்படுகின்றனர். வடக்குப்புறச் சுவரில் பிருகு மகரிஷி அமர்ந்த நிலையில் காணப்படுகிறார். இதன் விமானத்தின் தென்புறம் தட்சிணாமூர்த்தி சந்திரசேகரர், உமா மகேசுவரர், துர்கை, கணபதி ஆகிய சைவ உருவங்கள் உள்ளன. பிற திசைகளில் திருமால் கோலங்கள் உள்ளன. பல அரசர்களின் கல்வெட்டுகள் இங்கு

Koviloor Digital Library



உள்ளன. எல்லா சிற்பங்களும் அழகு வாய்ந்தவை. கோயில் விமானம் அழகான படைப்பாகும்

## பாலசுப்ரமணியர் கோயில்

சுந்தர வரதர் கோயிலுக்கு அருகில் உள்ளது இக்கோயில். 8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இக்கோயிலில் காணப்படும் மூலவர் முருகன் தன் மேலிரு கரங்களில் வஜ்ரமும், கமண்டலமும், வலக்கரம் அபயமும், இடக்கரம் தொடை மீது சுமந்தும் உள்ளன. பெரும்புகழும், அழகும் உடைய இப்பெருமானின் திருவுருவம் மிக அழகான கலைப்டைப்பாகும்.

## ஸ்ரீ கைலாய நாதர் கோயில்

ஊரின் ஈசான்ய மூலையில் அமைந்துள்ள இப்பெருங் கோயிலும் தொன்மையான கோயில் ஆகும். இக்கோயிலும் மூன்று தளக் கோயில் ஆகும். பழுதடைந்த நிலையில் இக்கோயில் இருந்தாலும் வழபாடு தொடர்ந்து நடைபெறுகிறது. ராஜராஜன், பொம்மு நாயக்கர், கிருஷ்ண நாயக்கர், கிருஷ்ண தேவராயர் போன்ற அரசர்கள் நிறைய மானியங்களைக் கொடுத்துள்ளார்கள்.

## பிற ஆலயங்கள்

வடகிழக்குத் திசையில் சற்றுத் தள்ளி உள்ளது சப்த மாதர்கள் கோயில், துர்கையம்மன் கோயில் இக்கோயிலில் காணும் துர்க்கை எண் கரத்தாள் வில்லும் அம்பும், கத்தியும், கேடயமும், தரித்துள்ளாள். வலக்கரத்தில் அபயம் அளித்து மறுகரத்தில் கிளியை ஏந்தி காட்சி தருகிறாள். அழகான திருமேனி, நல்ல கலைப்படைப்பு.

Koviloor Digital Library


## மாசாத் தான்கோயில்

அய்யன் மகா சாஸ்தா என்று அக்காலத்து மக்கள் இக்கோயிலை அழைத்தார்கள். பேரரசன் போல் வீற்றிருக்கும் இந்த சிலை இப்போது ஊரின் வடக்கே ஒரு தோப்பில் உள்ளது. இங்கு ஐயனார் கோயில் உள்ளது.

## மகாபூம் பேச் வரர் கோயில்

12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கோயில் மற்றும் பல சிறு கோயில் இங்குள்ளன.

சுந்தரபெருமாள் கோயில் திலகமாக ஊரின் நடுப்பகுதியில் விளங்குகிறது.

## ஆவுடையார் கோயில் - திருப்பெருந்துறை

ஆவுடையார் கோயில் என்றழைக்கப்படும் திருப்பெருந்துறை தலம் ஒரு காலத்தில்பாண்டிய நாட்டின் கிழக்கு எல்லைப்பகுதியாக இருந்து பின்பு சோழ நாட்டுடன் இணைந்து தஞ்சை மாவட்டதின் தெற்குக் கடைசிப்பகுதியாக விளங்கி வருகிறது. இப்போது புதுக்கோட்டை மாவட்டதில் உள்ள தாலுகா தலைநகராக இருந்து வருகிறது.

அறந்தாங்கி புகைவண்டி நிலையத்திலிருந்து தெற்கே 15 கி.மீ. தூரத்தில் உள்ளது. இத்தலத்திற்கு கோகழி, சிவபுரம் என்ற பெயர்களும் இருந்திருக்கின்றன.

இத்தலத்தில் கோயில் கொண்டிருக்கும் சிவபெருமானும், அம்பிகையும் முறையே ஆவுடையிலும் பீடத்திலும் அருபமாக அமர்ந்திருப்பதால், இத்தலம் ஆவுடையார் கோயில் என்ற பெயராக

Koviloor Digital Library



விளங்கி வருகிறது. இத்தலத்தில் அம்மையும் அப்பனும் அரூபமாக இருப்பது தலத்தின் சிறப்பாகும்.

அருள் மிக மாணிக்க வாசகர் வருகையால் திருபெருந்துறையாக மாறி இருக்கவேண்டும். அதற்கேற்ப கடற்கரைக்கருகே உள்ளது இத்தலம். அர்த்த மண்டபத்தையும், கருவறையையும் கற்களால் அடுக்கி மாணிக்கவாசகர் கட்டுவித்தார். அவர் காலத்திய அரிமார்த்தன பாண்டிய மன்னனாலும் மற்றும் பிற்கால சிறுசிறு மன்னர்கள் பலராலும் அம்மண்டபத்தைச் சுற்றிப் பலவித மண்டபங்களை கலைச் சிற்பங்களோடும் திருவாசகத்து விளக்கமாகவும் திருப்பணிகளாகக் செய்திருக்க வேண்டும் அதனால்தான் இன்று இத்தலம் ஒரு ஆன்மீக ஆய்வாளர்களுக்கு ஞானக் கோயிலாகவும், கலைப்பெட்டகமாகவும் திகழ்ந்து வருகின்றது.

இராமநாதபுரம், சிவகங்கை, குறுநில மன்னர்கள் மற்றும் பல ஜமீந்தார்களும் இத்தலத்திற்கு மான்யங்கள் பல தந்து போற்றினர்.

மதுரைக்கு வடகிழக்கில் 25 கி.மீ. தூரத்தில் வைகையாற்றங்கரையில் இருப்பது திருவாதவூர், இங்கு பிறந்தவர் வாதவூரர் எனப்படும் மாணிக்கவாசகப்பெருமான். பாண்டிய மன்னன் அரபு நாட்டு குதிரைகள் வாங்க வாதவூரரைப் பணித்தார். அவர் சிவபக்தர் ஆனதால், இவர் திருபெருந்துறை அடைந்து அங்கு கோயில் கொண்டிருக்கும் சிவபிரான் பால் மிக்க ஈடுபட்டு, குதிரைவாங்க வேண்டிய தொகையை அக்கோயில் திருப்பணிக்கே செலவிட்டார். குதிரை வாங்க மறந்துவிட்டார். மன்னன் கோபங்கொண்டான். வாதவூரார் தான் துறவரம் மேற்கொண்டதை மன்னனுக்கும் தன் சுற்றத்தாருக்கும், நண்பர்களுக்கும் செய்தி அனுப்பி விடுகிறார். குதிரைகளை வாங்கி வந்தேயாகவேண்டும்

Koviloor Digital Library


என்று மன்னன் உத்தரவிடுகிறான். வாதவூரர் அப்போது தான் தன்னை இறைவனிடத்தில் ஒப்படைத்து, சிவபுராணம் பாடினார். இறைவேண்டினார். இறைவன் வாதவூரரின் நிலையைக்கண்டு மரியாதைக் காக்க நரிகளை, குதிரைகளாக ஆக்கினார். குதிரைகளோடு வந்தார் வாதவூரர். பின் குதிரைகள் நரிகளாயின. வெகுண்டான் மன்னன். அவனது நிலையில் இறைவன் காட்சிதந்து உண்மையை உணர்த்தினான். பிறகு மன்னர் வாதவூரரைப் போற்றி வணங்கினான். இது புராணக்கதை.

வாதவூரர், அருள்மிகு மாணிக்க வாசகராக ஆனார். 'திருவாசகம்' என்ற பதிகத்தை ஆவுடையார் கோயிலில் பாடத் தொடங்கினார். இது அருள்மிகு மாணிக்க வாசகரின் திருவாசகப் பதிகம் பாடிய தலம்.

இத்தலம் பல சிற்பச் சிறப்புகளையுடையது. கல்லையும் கலைவண்ணமாக பரிணமிப்பது தமிழகத்திற்கு புதிதல்ல. தமிழக ஆலயங்கள் எல்லாம் நுண்கலைகளுக்கு இருப்பிடமாக இருந்து வளர்ந்து வந்தன என்பது வரலாற்றச் செய்தி.

சிற்பக்கலையின் இருப்பிடமாக பல கோயில்கள் இருந்தாலும், திருபெருந்துறை கோயிலின் கொடுங்கைகள் உலக மக்களை வியப்படையச் செய்துள்ளன. ஒன்றரை அங்குல கனத்திற்குக் கருங்கல்லைப் பலகையாகச் செதுக்கி, வடிவமைத்து உருட்டு கம்பி, முறுக்குக்கம்பி போன்று கல்லினால் உருவாக்கப்பட்ட கம்பிகளால் கோத்து அலங்கரித்திருக்கும் அருமை, உலகச் சிற்ப அதிசயங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டு இன்றைக்கும் போற்றப்பட்டு இத்தலத்தைப் பெருமைப் படுத்திக்கொண்டிருக்கின்றன.

ஒரே கல்லில் பிரம்மாண்டமாகவும், அதிநுட்பமாகவும் கல்லிலே செதுக்கிய சிற்பங்களை உருவாக்கிய சிற்பிகளின் திறமையை என்ன

Koviloor Digital Library



வென்று போற்றுவது! திருப்பெருந்துறை சிற்பி தன்நாயக நாயகிகளின் கூந்தலை தன் உளிகொண்டு, அனாயாசமாக வாரிமுடிந்து அலங்கரித்திருப்பதை சிற்பக் கலையின் அற்புதமாகக் கருதலாம். அதி நுட்பமான வேலைப்பாடுகளுடன் சிற்ப நகைகள் பார்க்க பரவசமாகிறது.

கருங்கல் குதிரைகள் பற்கள் வெளுத்துத்தான் காணப்படுகின்றன. குதிரைகளின் மிடுக்கு பணிவாக மாறிய விந்தையைக் காணவேண்டுமா? கல்லிலேயே கயிறு பின்னிய நிகழ்வுக்கு சாட்சி வேண்டுமா? அது மட்டுமா இத்தலத்து சிற்பி கல்லிலேயே கயிறு திரித்து, வளையங்கள் செய்து சங்கிலியாக தொங்க மட்டும் விடவில்லை தன் குதிரைகளுக்கும் கடிவாளக் கயிறாகப் பயன்படுத்தியுள்ளான். சிற்பி தன் படைப்புகளுக்கு தேவையான வெண்மை மற்றும் கருமை நிறக்கற்களைத் தேர்ந்து எடுத்தது விந்தையிலும் விந்தையாகும்.

கண்டு களிக்கப்பட வேண்டியவற்றை விண்டு விண்டு விளக்குவதில் பயன் குறைவு. இத்தலத்து சிற்பி கருங்கற்களைத் தன் கற்பனையுடனும் எதார்த்தத்துடனும் கரைத்துக் குழைத்து கலைப்படைப்புகளை நம் கண்களுக்கு விருந்தளித்து மகிழும் தலம் திருப்பெருந்துறை என்ற ஆவுடையார் கோயிலே எனலாம்.

Koviloor Digital Library

# 20. இந்தியக் கலையின் சிறப்பு

சிறப்புடைய இந்திய நாகரிகம் உச்ச நிலையை பல ஆண்டுகளுக்கு முன்பே அடைந்துவிட்டது, மனித சமுதாயத்தின் வளர்ச்சிக்காக பரதம் ஆற்றிய பரந்த கலைத்தொண்டு பொருள் பொதிந்ததும், போற்றத்தக்கதும் ஆகும். இந்திய பண்பாட்டின் அடிப்படையே இந்தியக் கலையாகும். அதுபோல் இந்தியக் கலையின் அடிப்படையும் இந்திய பண்பாடாகும்.

கலைகள் 64 என்பது வாத்ஸ்யாயனரின் கூற்று. ஜைன நூல்களோ அவற்றை 72 என்கின்றன. மகான் புத்தரின் வாழ்க்கை வரலாற்றை வர்ணிக்கும் 'லதிவிஸ்தாரம்' கலைகளின் எண்ணிக்கை 86 என்கிறது.

பரந்த உணர்ச்சி, அறிவு, விவேகம் இவைமீது எழும்பிய 'மனிதப் படைப்பே' கலை என்று ஹேமசந்திரர் கூறுகிறார். 'அமர கோசத்தில்' கலை என்பது சிற்ப சாஸ்திரத்தைக் குறிக்கும் என்கிறது. வாத்ஸ்யாயனர் தம்முடைய காம சூத்திரத்தில் கலை என்பது கல்வி அறிவு என்கிறார். ரிக்வேதத்தின்படி வேதத்தில் காணப்படும் கலை எனும் சொல் கல்வி, அறிவு என்பதன் பல அம்சங்களையே குறிக்கும் என்று திட்டவட்டமாக சொல்லலாம்.

சிவபெருமான் கங்கைக்கு ஆய கலைகள் 64ஐயும் கற்பித்தார் என்று மகாபாரதம் கூறுகிறது. பாகவதத்தின் 10வது அத்தியாயம், கிருஷ்ணனும், பலராமனும் சாந்தீபன்' என்ற முனிவரின் கீழ் பயின்ற

Koviloor Digital Library



நாட்களில் 64 கலைகளையும் கற்று முடித்தனர் என்று தெரிவிக்கிறது. இங்கு குறிப்பாகக் கட்டடக்கலை, சிற்பக்கலை, சித்திரக்கலை இவற்றை சிறிது தெரிந்து கொள்வோம்.

இந்தியக் கலைகளின் வரலாறு, பாரத நாட்டின் வரலாற்றைவிடத் தொன்மையானது. பாரதநாட்டின் மிகப் பழமையானதை நமக்கு அறிவிக்க மொகஞ்சதாரோ, ஹரப்பா நாகரிகம் இந்தியக் கலையின் பொற்காலமே என்று கருதப்படுகிறது. அன்று அந்தக் கலை பெற்றிருந்த முழுமை அதற்குப்பல நூற்றாண்டு காலத்துக்கு முற்பட்ட கலை உணர்வின் பலனாக இருக்கக்கூடும்.

வாழ்வின் முழுமையை மனிதன் உணரும் பொருட்டு, வாழ்க்கையின் மறைந்த உட்பொருளை உணர்த்துவது கலையே ஆகும்.

உணவு உடை, உறைவிடம் இம்மூன்றும் தான் மனிதனின் அடிப்படை தேவையாகும். கலை இன்றி மனிதன் வாழமுடியும் என்பது உண்மைதான்! ஆனால் அதுவும் ஒரு வாழ்வா! உயிர் வாழ்தல் என்பதற்காக மனிதன் இடையிடையே கலையை மறக்கலாம்; துறக்கவும் செய்யலாம். ஆனால் மனிதனை மனிதனாக வாழவைப்பது கலைதான்; கலையேதான்.

ஆதிகால மனிதனின் கலையைப்பற்றி அவனுடைய கருவிகளைக்கொண்டு நாம் அறிகிறோம்.

சித்திரக்கலை, சிற்பக்கலை, கட்டிடக்கலை எத்துறையிலாகட்டும், இந்தியக் கலைஞரின் கலை வண்ணங்கள் சுடர்விட்டு பிரகாசிக்கின்றன. இந்தியக் குடிமகனின் கலை நோக்கு தனித்தன்மையுடையதாய் ஒளிர்கின்றது. பாரதத்தின் பரம்பரைப் பண்பாடு யாவும் பாரதக்கலைகளினின்று தோன்றியவைதான்.

இந்திய கலைஞன் தன்னுடைய நாட்டின் அடிப்படைத் தர்மங்களைப் பூர்த்தி செய்ய வேண்டிய ஒப்பற்ற கலை வடிவங்களைப் படைத்தான். அவனைப் பொறுத்த வரை கலை புனிதமானது. அது ஒரு வழிபாட்டு வடிவம், அது அறத்தின் வழிபாடு; கடமை காட்டு பயணம், யோகத்தின் பாதை; முக்தியை அடையும் வழியும் அதுவே.

எனவே இந்தியனுக்குக் கலைப்பற்று, உணவுபோல் இன்றியமையாததாகும். வயிற்றுப் பசியைப் போக்கிக் கொள்ள அவன் உணவைத் தேடுகிறான். அதுபோல் ஆன்மிகப் பசியைப் போக்கிக்கொள்ளக் கலையை நாடுகிறான். உண்மையில் இறைவனை தேடி அலையும் மனிதனோடு கலையானது நெருங்கி பிரிக்கமுடியாத தவிர்க்கமுடியாத அளவுக்கு உறவு கொண்டுவிட்டது. அந்த நெருக்கமானது, கலையே கடவுளை நாடும் வழிகளில் ஒன்றாக அமைந்துவிட்டது.

அருகில் இருந்த நாடுகளிலிருந்து பாரதத்தின் மீது படையெடுத்து வந்தார்கள். அப்படி வந்தவர்கள் எல்லாம் தம்முடைய எண்ணங்களையும், புதிய சமூகப் பழக்கங்களையும் கொண்டு வந்தார்கள். அவர்களுடைய எண்ணங்களும், பழக்கங்களும் இந்தியரின் வாழ்க்கையுடன் இரண்டறக் கலந்து, புதுமெருகிட்டன. மேல்வாரியாகப் பார்க்கும் போது மற்றப் பண்பாட்டை பாரதம் பின்பற்றியதாகத் தோற்றமளித்தாலும் உண்மை அதுவல்ல. இந்தியக் கலை இவற்றையெல்லாம் தன்னுள் ஈர்த்து உள்ளடக்கிக்கொண்டது. எனினும் அதன் அடிப்படைத் தத்துவங்கள் மாறாதிருந்தன.

கலைஞன் தான் படைக்கபோகும் உருவத்தைப்பற்றிய உட்பொருள்களை ஆராய வேண்டும். அதன் உணர்ச்சிகளைப் புரிந்துகொண்டு ஆழ்ந்து சிந்திக்கவேண்டும் என்று 'சுக்ரநீதிசாரம்'

Koviloor Digital Library



என்ற கலை நூல் தெரிவிக்கின்றது. அதன் பிறகே தான் நினைத்த உருவத்தை அவன் உருவாக்க முடியும்.

கலைஞன் ஒன்றைப் படைக்கும் முன் ஒரு யோகி போல் சமாதியில் இருக்கவேண்டியது அவசியம்' என்று ஆனந்த குமாரஸ்வாமி மேற்கோள் காட்டி உரைக்கிறார்.

கலைப்டைப்பின்போது கலைஞன் கண்ணால் பார்க்கக்கூடிய காட்சிகளை மனத்தில் ஏற்றுக் காப்பாற்றிப் பயன்படுத்துவதோடு, காதால் கேட்டு உணரக்கூடிய ஒளி உருவங்களையும், ஓசை நயங்களையும் கூட நினைவில் கொண்டு பாதுகாக்க வேண்டும். பிறகு காட்சி பொருளாக வடித்துத் தரவேண்டும் என்று கலைநூல் கூறுகிறது. மேலும் கலைஞனுக்கு இருக்க வேண்டிய முக்கியமான இயல்புகளைக் கூறுகிறது. அதாவது: இயற்கையின் இயக்கம், விலங்கின் வாழ்க்கை, உயிரற்ற ஜடப்பொருள்கள் அனைத்தையும் கூர்ந்து கவனிக்கும் திறனுடையவனாக இருத்தல் வேண்டும். அதுமட்டுமல்ல; தன் படைப்புகளை எளிதாக வெளிப்படுத்தும் ஆற்றல் பெற்றுத் திகழ வேண்டும். கலையின் மொழி, அது எந்த சிக்கலான தத்துவத்தையும் வெளிப்படுத்தும் வகையில் இலகுவாக வளைந்து கொடுக்கக்கூடியது. அந்த மொழியைத் திறம்படக் கையாளக் கூடியவனாக கொடுக்க கூடியவனாகக் கலைஞன் இருக்கவேண்டும். தன் கருத்துக்களைக் கொடுக்கும் எந்த எண்ணங்களுக்கும் இடம் தரக் கூடாது. மனத் தூய்மை அடையாவிட்டால் அவனால் தியானத்தில் முழுமனத்துடன் இறங்கித் தன் மனத்தில் நினைத்த எண்ணத்துக்கு உருகொடுக்க முடியாது.

ஒரு சிற்பத்தைக் காணும்போது மனித மனம் நெகிழ்கிறது என்றால் அந்த சிற்பம் அவனையும் மகிழ்விக்கிறது.

Koviloor Digital Library



'அழகு என்பது எதனுடைய பயனைப் பற்றி நாம் சிந்திக்காமல், அது குறித்து மகிழ்கிறோமோ அதுவே' என்கிறார் ரவீந்திரநாத் டாகூர். அழகு உணர்வால் ஏற்படும் மகிழ்ச்சி வேறெந்தப் பொருளாலும் ஏற்படக் கூடிய மகிழ்ச்சியைக் காட்டிலும் வேறுபட்டதும், மாறுபட்டதும் ஆகும்.

அழகு என்பதைக் கலையோடு தொடர்புப்படுத்திப் பார்போமானால் டாகூர் கூறியதை நாம் புரிந்துகொள்வது அவசியம்.

'அழகு என்னும்போது அதன் சாதாரணப் பொருளைப் பற்றி எண்ண வேண்டாம் அழகு என்பது உண்மையாகும். உண்மை என்பதே அழகாகும் என்ற ஆழ்ந்த பொருளில் பார்க்க வேண்டும்' என்கிறார் டாகூர்.

அழகு ரசனை மகிழ்ச்யளிக்கிறது. மகிழ்ச்சியின் அடிப்படை உண்மை; அந்த உண்மைதான் அழகு, ரசிகன் இந்த அழகை உணர்கிறான். யோகி இதனை மனக்கண்ணால் காண்கிறான்; பரம பக்தனோ அழகுடன் ஒன்றாக இணைந்தேவிடுகிறான்.

இதுகாறும் இந்திய கலை தத்துவத்தையும், ஒரு கலைஞனுக்கு இருக்கவேண்டிய பண்புகளைப்பற்றியும், 'அழகு' என்பது என்ன, என்பது பற்றியும் பார்த்தோம்.

இந்த நூல் அமைய பல கலை வல்லுநர்களின் கருத்துக்கள் மிகவும் உதவின.

இந்திய சிற்பக்கலையைப்பற்றி உருவான நூல் இது. எதிர்காலத்தில் வாய்ப்பு கிடைக்கும் போது இன்னும் கலைபற்றிய நூல்கள் எழுதலாம். வாழ்க பாரத சிற்பக் கலை. வணக்கம்.

•••※•••

Koviloor Digital Library

ஓவியர் 'ஸுபா' (என். சுப்ரமணியன்) சுமார் ஐம்பது ஆண்டுகாலமாக ஓவியப்பணி செய்து வந்தவர் இன்றும் தொடர்ந்து செய்கிறார். பலபத்திரிகைகளின் மலர்களில் இவரது ஓவியங்கள் இடம்பெற்றுள்ளன. மேலும் 'சாந்தினி' என்ற புனைப் பெயரில் பல கலைக் கட்டுரைகளை எழுதியவர். இவரது 'அமர ஓவியங்கள்' என்ற நூல் பலரால் பாராட்டப்பட்டது. பின்பு திரு. சித்தார்த்தன் அவர்களோடு இணைந்து 'அக்னி' என்ற நூலை படைத்துள்ளார். பாரத நாட்டில் உள்ள பல கலைக் கூடங்களுக்குச் சென்று பல அனுபவங்களைப் பெற்றவர்.

'இந்தியச் சிற்பங்கள்' என்ற இந்நூலை பல சுவையான விவரங்களுடனும், பாரத சிற்பங்களின் அழகையும், அவற்றின் அமைப்பையும் பற்றியும் சுருக்கமாகவும், அதேநேரத்தில் சுவை குன்றாமல் எழுதியுள்ளார். இந்தியாவிலுள்ள எல்லா முக்கிய ஆலயங்கள், குகை மண்டபங்கள், பல்லவ, சோழ, பாண்டிய, சேரர் காலத்து கலைப் படைப்புகளையும், வடக்கே குப்தர், சாதவாகனர், ராஷ்டிரகூடர் மற்றும் விஜயநகர், ராஷ்டிரகூடர் இப்படிப் பல அரசுகளின் கலைப்படைப்புகளை இந்நூலில் சுவைபாக எழுதியுள்ளார் ஓவியர் ஸுபா.

Koviloor Digital Library